வெளியீடு—24—2—1968]
[Issued—24—2—1968]

675

# தமிழகச் சட்டப் பேரவை நடவடிக்கைகள்
# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு
## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, 1967 ஜூன் 26
**Monday, 26th June 1967**

தொகுதி II—எண் 7
**Volume II—No. 7**

©
தமிழக அரசு
1968
©
GOVERNMENT OF MADRAS
1968

*சட்டப் பேரவைத் துறை*
*சென்னை-9.*
*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-9*

31 N67
N67.2.7

65005

## உள்ளடக்கம்.


| | பக்கங்கள். |
|---|---|
| 1 வினாக்கள், விடைகள் .. .. .. .. .. | 699-727 |
| 2 அறிவிப்புகள்— | |
| (அ) பேரவை அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டம் .. | 727-728 |
| (இ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல் .. .. .. | 765 |
| (உ) பேரவையின் பிற்பகல் கூட்டம் .. .. .. | 770 |
| 3 1967–68-ம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம் (தொடர்ச்சி) .. .. | 728–841 |
| 4 பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. .. | 841 |

# தமிழகச் சட்டப் பேரவை

திங்கட்கிழமை, 1967 ஜூன் 26.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப்பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. சி. பா. ஆதித்தனர்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது. கூடியது.

## 1. வினுக்கள், விடைகள்.

### உடுக்குறியிட்ட வினுக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போவைக் கூட்டத்தின் முதல் அலுவல் வினுக்கள், விடைகள்''. மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கின்ற வினுக்களுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் பதில் அளிப்பார்கள்.

### பெட்ரோலியம்—ரசாயனத் தொழிற்சாலை ஏற்படுத்தல்

***73 வினு.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் தனியார்த் துறையிலாவது அரசாங்கத் துறையிலாவது பெட்ரோலியம்—இரசாயனத் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) & (இ) தமிழகத்தில் பெட்ரோலியம்-இரசாயனத் தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு தற்போதைக்கு ஏதுமில்லை. ஆயினும், சென்னை எண்ணெய்த் துப்புரவுத் தொழிற்சாலையிலிருந்து Madras Refineries ) கிடைக்கும் பெட்ரோலியப் பொருள்களை அடிப்படையாகக் கொண்ட பல்வேறு வகையான பொருள்களை உற்பத்தி செய்வதற்குப் பின்வரும் நிறுவனங்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன :—

| | | |
|---|---|---|
| 1) சென்னை உர வகைகள் கம்பெனி லிமிடெட், சென்னை. (M/s. Madras Fertilizers Limited). | 1 அமோனியா<br>2 யூரியா.<br>3 கூட்டு உரங்கள். | 243,000 டன் (ஆண்டிற்கு)<br>210,000 ,,<br>360,000 ,, |
| (2) கே. யு. அத்வானி அண்டு கம்பெனி. | கறுப்பு கார்பன் (Carbon Black) | 3 கோடி (30 மில்லியன்) ராத்தல்—ஓராண்டிற்கு. |
| (3) எஸ். ஆர். நாக்பால், பம்பாய். | 1 டிரான்ஸ்பார்மர் எண்ணெய்.<br>2 சிறப்பு வகை எண்ணெய். (Speciality Oil ), | 15,000 டன் ஓராண்டிற்கு.<br>8,000 டன் ஆண்டிற்கு. |

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** இதைச் சர்க்கார் துறையிலே நடத்துவதற்கு ஏதாவது முறை இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இதிலே இருக்கக் கூடிய விவரப்படி சர்க்காரே ஏற்று நடத்துவதற்கான விவரம் ஒன்றும் இல்லை. மூன்று தனிப்பட்டவர்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

**திரு. நா. காசிராமன்:** தஞ்சை ஜில்லாவிலே பெட்ரோலியம் இருப்பதாகத் தெரியவருகிறதா? இதைப்பற்றி முடிவு ஏதாவது எடுக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இப்பொழுது விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** சென்னை, தஞ்சை தவிர மற்ற ஜில்லாக்களில் பெட்ரோலியம் இருப்பதாக ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறதா? அப்படியென்றால், ஆராய்ச்சியின் விவரம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இதைப்பற்றிய விவரம் இல்லை. தனிக்கேள்வி போட்டால் விவரம் அளிக்கப்படும்.

THIRU T. MARTIN : May I know from the Hon. Minister whether State-wide survey for finding out petrol deposits will be made by the State Government?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** ஏற்கெனவே இதைப் பற்றி சர்வே ஒன்று செய்யப்பட்டது. சில இடங்களில் பெட்ரோலியம் கிடைப்பதாகவும் சில இடங்களில் போதுமான அளவு இல்லையென்றும் விவரம் கிடைத்திருக்கிறது. முழு விவரங்களுக்குத் தனிக் கேள்வி போடவும்.

THIRU R. PONNAPPA NADAR : May I know whether foreign collaboration is available for starting these Petro-Chemical factories?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இதைப்பற்றிய குறிப்பு எதுவும் இல்லை.

**திரு. கே. பி. எஸ். மணி:** இந்த ஆராய்ச்சி செய்வதிலே மாநில சர்க்காருக்கும் செலவிலே ஏதாவது பங்கு இருக்கிறதா? ஆராய்ச்சி செய்துவிட்டு, பிறகு நம்மிடத்திலே பங்கு கேட்பார்களா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** பெட்ரோலியம் கிடைக்கிறதா இல்லையா என்பதைப்பற்றிய ஆராய்ச்சி இந்திய சர்க்கார், மாநில சர்க்கார் இரண்டும் சேர்ந்து செய்து கொண்டிருக்கிறார்கள். அமோனியம் போன்ற உரங்கள் உற்பத்தி செய்வதற்கு குறிப்பிட்ட மூன்று தனியார் நிறுவனங்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.





**திரு. வி. கே. கோதண்டராமன்:** தனியார்த் துறையிலும் பொதுத் துறையிலும் உற்பத்தி செய்யக்கூடிய ரசாயன உரங்கள் 30 சதவிகிதம் எந்த விலைக்கு வேண்டுமானாலும் விற்பனை செய்து கொள்ளலாம் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதை இந்தச் சர்க்கார் அறியுமா? இதன் விளைவாகக் கள்ள மார்க்கட் அதிகமாக இருக்கிறதே, இதைப் போக்குவதற்கு மத்திய சர்க்காரை இந்த அரசு கேட்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் சொல்லுவதுபோல் இது பரிசீலிக்கக்கூடியது இதைப் பரிசீலனை செய்து சரிப்படுத்த முடியுமானால் சரிப் படுத்தலாம்.

### துருவற்ற உருக்குத் தகடு உற்பத்தி

* 74 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன்:** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) காட்பாடி அருகே ஸ்டெயின்லஸ் ஸ்டீல் கம்பெனி ஆரம்பிக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(இ) அதற்காக எத்தனை ஏக்கர் நிலம் எப்போது வாங்கப் பட்டது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆண்டிற்கு 7,000 டன் துருவற்ற உருக்குத்தகடு Stainless Steel Plates உற்பத்தி செய்வதற்காக வட ஆர்க்காடு மாவட்டம் காட்பாடியில் ஒரு தொழிற் கூடத்தை நிறுவுவதற்காக மெஸர்ஸ் சென்னை அலாய் அண்டு ஸ்டெயின்லஸ் ஸ்டீல் லிமிடெட்டுக்கு உரிமம் வழங்கப் பட்டது. அக் கம்பெனியின் தொழில் தலைமை முனைவர் திரு. பாண்டுரங்கையா அவர்கள் திடீரென இறந்ததன் காரணமாக, இத் திட்டம் தடைப்பட்டது. திட்டத்தை நிறைவேற்றுவதற்காக இப்போது முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கு அரசும் இயன்ற உதவியை அளித்து வருகிறது.

(இ) 1963-ம் ஆண்டு 133.36 ஏக்கர் பட்டா நிலங்கள் கைவசப் படுத்தப்பட்டன. 51.61 ஏக்கர் பரப்புள்ள புறம்போக்கு நிலங்கள் 1965-ம் ஆண்டு நவம்பர் திங்களில் கம்பெனியிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** இதற்காகச் சர்க்கார் புறம் போக்கு நிலங்களையும் மற்ற நிலங்களையும் வழங்கிய பிறகும் கூட, அது இன்னும் ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறதே? அதை ஆரம்பித்தால் வேலையில்லாமல் இருக்கக்கூடிய குறைந்தது 5 லட்சம் பேர்களுக்கு வேலை கிடைக்கும். ஆகையால் அதை உடனடியாக ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் துரித ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இதற்கு 1963-ம் ஆண்டு ஜூலை திங்களில் உரிமம் வழங்கப்பட்டது. நான் முன்பு கூறியதுபோல், இதற்காக முயற்சி எடுத்துக்கொண்ட

திரு. பாண்டுரங்கையா அவர்கள் இறந்து விட்டதினால் சுணக்கம் ஏற்பட்டது. இதை மறுபடியும் நடத்துவதற்கு டி. எஸ். நாராயணசாமி if India Cement Group Industries முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே இந்திய அரசாங்கம் இந்தத் திட்டத்தை ரத்து செய்தால் என்ன, என்று கேட்டது. அதற்கு இந்த அரசாங்கம் செப்டம்பர் 30-தேதிவரை நீட்டிப்பு வேண்டுமென்று கேட்டிருக்கிறது. அரசாங்கம் இதைப்பற்றிய நடவடிக்கைகளெல்லாம் எடுத்துக்கொண்டு வருகிறது.

THIRU K. VINAYAKAM : Apart from this proposed stainless steel factory at Katpadi, are there any other stainless steel factories in the State? If there are any, may I know by whom they are managed? Are they in the private sector or the public sector? Is it a fact that in the matter of distribution of the stainless steel quota, lot of malpractices have crept in? What steps do the Government proposes to take to see to the justdistribution amongst the various dealers?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : வட ஆர்க்காட்டிலுள்ள காட்பாடியைப் பொறுத்தது இந்தக் கேள்வி. தனிக் கேள்வி போட்டால் மற்ற விவரங்கள் அளிக்கப்படும்.

திரு. மு. ச. சிவசாமி : ஸ்டெயின்லஸ் ஸ்டீல் உருக்குத் தகடு உற்பத்தி செய்யும் வியாபாரம் லாபகரமாக இருப்பதால் அதை மாநில சர்க்காரே ஏற்று நடத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இதுபற்றி உத்தேசம் இல்லை. அது தனியாக ஆராயப்பட வேண்டிய ஒன்று.

DR. H. V. HANDE : Sir, we are given to understand that it is very difficult to get nickel which is the most important ingredient for stainless steel. Especially in the last few months, in view of the Viet Nam War, the industry was finding it difficult to get adequate quantities of nickel. Because of its shortage, a number of manufacturers of stainless steel, are reported to have stopped the manufacture. In view of this, will the Government be pleased to re-examine this question and see that adequate quantities of the scarce material are made available to the manufacturers?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் சொல்லுகின்ற குறைபாடுகள் இருக்குமானால், அது பரிசிலனை செய்யப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்தத் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கான உரிமங்கள் கொடுக்கப்பட்டு இதற்கான ஏற்பாடுகள் செய்த்தற்குப் பிறகு மத்திய சர்க்கார் இந்த யோசனையைக் கான்சல் செய்ய வேண்டுமென்று சொல்வதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 1963 ஜூலை திங்களில் தான் உரிமம் வழங்கப்பட்டது. அதைத் தொடங்குவதற்கான முயற்சிகள் நிறுத்தப்பட்டதன் காரணமாக அதை ரத்து செய்தால்



என்ன, என்று கேட்டார்கள். ஆகவே, இந்த அரசு, செப்டம்பர் 30-ம் தேதி வரை காலவரையறையை நீட்டிக்கவேண்டுமென்று மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறது.

திரு. ப. மகாதேவன் : மேலை நாடுகளில் ஆகாயவிமானம் போன்றவற்றைச் செய்வதற்கு இந்த ஸ்டெயின்லஸ் ஸ்டீல் உபயோகப் படுத்தப்படுகிறது. ஆனால், நம்முடைய நாடுகளிலே வீட்டுப் பாத்திரங்கள் செய்வதற்கு இதைப் பயன்படுத்துகிறார்கள். அந்தப் போக்கை மாற்றுவதற்கு முயற்சி செய்வார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நம்முடைய நாட்டில் விமானம் போன்றவைகள் செய்வதற்குத் தேவைப்படுகின்ற நெருக்கடி நிலைமை ஏற்படும்போது அதைத் தடுக்க ஏற்பாடு செய்யலாம். இப்போது அந்த நிலைமை ஏற்படவில்லை.

திரு. ஆலடி அருணா: ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் மூலம் உற்பத்தியாகும் பொருள்களுக்குக் கோட்டா முறை இருப்பதனால் உற்பத்திச் செலவு அதிகமாகிறது. ஆகையால் கோட்டா முறையை ரத்து செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: உற்பத்திச் செலவு அதிகமாக இருப்பதற்குக் காரணம் என்ன என்று கண்டுபிடிக்கப்பட்டு அதைப் போக்குவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும்.

THIRU T. MARTIN : May I request the Hon. Minister to state whether it is not better to include a condition in the licence even at the time of issuing it, regarding the time-limit for starting the industry?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இதைப் பொறுத்த வரை விவரம் இல்லை. கனம் உறுப்பினர் கருத்து நடைமுறையில் இல்லை. அப்படி இருப்பதற்கான வழி ஏதாவது இருக்கிறதா என்று ஆராயப்படும்.

திரு. எம். சண்முகம் : ஸ்டெயின்லஸ் ஸ்டீல் கம்பெனி ஆரம்பிக்கும் திட்டத்திற்கு அனுமதி வழங்கும் அதிகாரம் மத்திய சர்க்காருக்குத்தான் உண்டா அல்லது மாநில அரசாங்கத்திற்கு உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஸ்டெயின்லஸ் ஸ்டீல் கம்பெனி துவங்குவதற்கு அத்தகைய அனுமதி வழங்கும் அதிகாரம் மத்திய அரசாங்கத்திற்குத்தான் இருக்கிறது. ஏனென்றால், இந்தியா முழுவதற்கும் இருக்கிற நிலைமையைப் பார்த்து, லைசென்ஸ் வழங்க வேண்டுமென்ற காரணத்தினால் அந்த அதிகாரம் மத்திய அரசாங்கத்தினிடம் இருக்கிறது.

*Starting of Machine Tool Plant*

* 75 Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether the Government have proposed to set up a Machine Tool Plant in the State?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆம், ஐயா. சென்னை மாநிலத்தில் மெஷின் டூல் பிளாண்டு ஒன்று துவக்குவதற்கான பிரபோசல் இருந்து வருகிறது.

திரு. ஏ. எம். ராஜா : தமிழ் நாட்டில் எவ்வளவு இயந்திரக் கருவிகள் தொழிற்சாலைகள் உள்ளன? அவைகளில் பொதுத் துறையில் எவ்வளவு, தனியார் துறையில் எவ்வளவு என்று அரசாங்கம் அறிவிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றி விவரம் இல்லை. இந்த அரசாங்கமே ஒரு மெஷின் டூல் பிளாண்டு ஆரம்பிக்க வேண்டுமா என்பதைப்பற்றி ஆராய்ந்து 1966 டிசம்பரில் கூடிய மகாநாட்டில் மெஷின் டூல் பிளாண்டு ஒன்றை சென்னையிலே நிறுவத் திட்டமிடப்பட்டது. அதை ரூ. 2 கோடி செலவில் நிறுவலாம் என்றும் திட்டமிடப்பட்டது. ஜப்பான் மெஷின் டூல் கம்பெனியின் கொலாபரேஷனுடன் இதை நிறுவலாமா என்று முயற்சிக்கப்பட்டு, இதற்கென்று நியமிக்கப்பட்ட குழு ஒன்று பல இடங்களைப் பார்வையிட்டு, இதற்கேற்ற இடங்களான சென்னை, மதுரை, திருச்சி, ராணிப்பேட்டை ஆகிய நான்கு இடங்களையும் பார்வையிட்டு ஒரு அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள். அது பரிசீலனையில் இருக்கிறது. அதுபற்றி முடிவு எடுக்கப்பட்டவுடன் இந்த அரசாங்கம் இந்த முயற்சியில் இறங்கும்.

DR. H. V. HANDE : Have the Government any intention to start any other industrial enterprise in the public sector, apart from this Machine Tool Plant, during this year?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றி சில வகைகளில் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. தனிக் கேள்வி போட்டால் விவரம் அறியலாம்.

திரு. கா. வேழவேந்தன் : கும்மிடிப்பூண்டியில் இருந்த ஆயுதக் கிடங்கை மாற்றிய பிறகு இம்மாதிரி மெஷின் டூல் பிளாண்டு ஒன்றை அங்கே அமைக்கலாம் என்று நீண்ட நாட்களாகப் பேசப்பட்டு வருகிறது. அரசாங்கத்தில் அதைப்பற்றி ஏதேனும் பரிசீலனை இருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றிக் கருத்து ஏதுமில்லை.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : டூல் ரூம்கள் பல இடங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. ஏதாவது சர்க்காரால் லாபகரமாக நடத்தப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றி விவரம் இல்லை. அவைகளை லாபகரமாக நடத்த வேண்டும் என்பதுதான் இந்த அரசாங்கத்தின் நோக்கம்.

THIRU K. VINAYAKAM : Sir, as the Hon. Minister has stated that it requires about two crores of rupees to be invested in this Machine Tool Plant, are the Government getting any aid from the Centre? In case the Centre refuses to give the aid asked for, will the State Government come forward to start this Plant out of their own finances with the collaboration of the Japanese? And even if the Japanese do not come forward to help us, will the State Government take it up singly in our State?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இப்பொழுது மெட்ராஸ் ஸ்டேட் இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்டு கார்ப்பரேஷன் தான் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறது. இதற்கு முதலில் லைசென்ஸ் வழங்க வேண்டுமென்று இந்திய அரசாங்கத்தாரிடம் விண்ணப்பம் செய்யப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி பதில் இந்திய அரசாங்கத்தினிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. மெட்ராஸ் ஸ்டேட் இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்டு கார்ப்பரேஷன் ஜப்பானுடன் கொலாபரேஷன் சேர்ந்து இதை ஆரம்பிக்கலாம் என்ற நிலைமை இருக்கிறது. ஜப்பான் கொலாபரேஷன் இல்லை என்ற நிலைமை ஏற்படும்பொழுதுதான், கனம் உறுப்பினர் அவர்கள், தெரிவித்ததுபோல் இந்திய அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டு, அதனுடைய உதவி பெற்று ஆரம்பிக்க வேண்டிய அவசியம் இருக்கும்.

திரு. எம். பூபதி : தமிழ் மாநிலத்தில் தனியார்கள் எத்தனை மெஷின் டூல் பிளாண்டுகளை உருவாக்கியிருக்கிறார்கள்? அதைப் பற்றிய விவரத்தை அமைச்சர் அவர்கள் சொல்லுவார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றி விவரம் இல்லை. தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. எம். சண்முகம் : தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டும் என்று மத்திய அரசாங்கத்திற்கு எப்பொழுது விண்ணப்பம் போடப்பட்டது? இதுவரையில் காலதாமதம் ஆவதற்கு காரணம் என்னவென்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றிய நாள் விவரம் இல்லை. இந்திய அரசாங்கத்தினிடமிருந்து பதில் எதிர் பார்க்கப்படுகிறது.

திரு. கே. சகாதேவ கவுண்டர் : இயந்திரக் கருவிகள் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு மிகவும் அவசியம். ஆகவே, 1967–68-ல் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்குத் தீவிர நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றிய யோசனை இப்பொழுது இல்லை. அது பிறகு ஆலோசிக்கப்படும்.

[1967 ஜூன் 26

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இந்த லைசென்ஸுக்காக அப்ளிகேஷனை இந்த அமைச்சரவை தாக்கல் செய்ததா, அல்லது முன்பிருந்த அமைச்சரவை தாக்கல் செய்ததா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** முன்பிருந்த அமைச்சரவை எடுத்த முயற்சியை, விட்ட இடத்திலிருந்து தொடுத்து இந்த அரசாங்கம் பணியாற்றி வருகிறது.

**திரு. என். வரதராஜன்:** இயந்திரக் கருவி தொழிற்சாலைக்கு வேண்டிய மூலப் பொருள்கள் கிடைக்கவில்லை என்ற நிலையை சர்க்கார் அறியுமா? அவை என்னென்ன பொருள்கள் என்று அறிவிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** மூலப்பொருள்கள் கிடைக்கவில்லை என்ற நிலைமை இல்லை. இதற்கு வேண்டிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்ற காரணத்தினால்தான், இந்தத் தொழிற்சாலை ரூ. 2 கோடி அளவிலே உருவாக்கப்படும் என்ற முடிவுக்கு அரசாங்கம் வந்திருக்கிறது. இந்திய அரசாங்கத்திலிருந்து அனுமதி கிடைக்கப் பெற்ற பிறகு இதைத் துவக்குவதற்கான முழு முயற்சியையும் எடுத்துக் கொள்ளலாம்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்:** இதற்கான மூலதனம், முதல் போடவேண்டியது எவ்வளவு இருக்க வேண்டியிருக்கும்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இப்பொழுது ரூ. 2 கோடி என்று திட்டமிடப்பட்டிருக்கிறது.

### *Cauvery water for Madras City*

* 76 Q.—THIRU K. VINAYAKAM:
DR. H. V. HANDE: } Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to bring Cauvery water to Madras City for drinking purposes?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** சென்னை நகருக்குக் குடி தண்ணீர்த் தேவையை நிறைவு செய்வதற்கான திட்டம் பரிசீலனையில் இருக்கிறது.

DR. H. V. HANDE: Sir, for the past several years we have been told that we are getting the Cauveri water for the Madras City. In fact, both in this House and in the other House whenever we raised this question, we have been given empty promises that we are getting water. As happened during the olden days when Bagiratha brought the Ganges, will the Government also come forward to bring the Cauveri water to the Madras City and if so, what are the concrete plans that they have got in the matter of bringing the Cauveri water to the Madras City?



1967 ஜூன் 26]

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இது கங்கையைக் கொண்டு வருகிற கதையல்ல. நிச்சயமாகக் காவேரியைக் கொண்டுவருகிற வரலாறு என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டம் பெரும்பாலும் வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குத் தண்ணீர் கொண்டுவருகிற திட்டம்தான். அநேகமாக இந்தத் திட்டம்பற்றி முடிவு பெறும் நிலை இருக்கிறது.

**திரு. கே. விநாயகம்:** இந்தக் குடி தண்ணீர்ப் பிரச்சினை ஒரு பெருத்த அத்தியாவசியமான பிரச்சினையாகிவிட்டது. சென்னை நகரத்தைப் பொறுத்த அளவில், நம்முடைய அமைச்சர் தொகுதியில் குடிதண்ணீர் இல்லை, ப்ரொடெக்டட் வாடர் சப்ளை இல்லை. ஆதலால், இந்தப் பிரச்சினை வரும்பொழுதெல்லாம்—'ஐ ஆம் கமிங் டு தி குவெஸ்சின்'—சோமசீலம் பிராஜெக்டிலிருந்து தண்ணீர் கொண்டுவருவதாக ஒரு யோசனை இருந்து கொண்டிருக்கிறது. வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் கொண்டு வருவதைப்பற்றி இப்பொழுது சொல்லப்படுகிறது. கடைசியாக, காவேரியிலிருந்து தண்ணீர் கொண்டுவருவதாகச் சொல்லப்படுகிறது.

MR. SPEAKER: The hon. Member can now come to the question.

**திரு. கே. விநாயகம்:** இப்படி இரண்டு ராஜ்யங்களுக்குமிடையே இந்தப் பிரச்சினை தீருவது கஷ்டமாக இருப்பதினால், நமது ராஜ்யத்தின் பகுதியிலேயே இருக்கிற வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் கொண்டுவருகிற திட்டம் அல்லது காவேரி ப்ராஜெக்டுக்கு எவ்வளவு செலவு ஆகும்? இந்தச் செலவுக்கான பணத்தை சர்க்கார் ஒதுக்கி வைத்திருக்கிறார்களா? இல்லையென்றால் கார்ப்பரேஷனுக்கு எந்த விதமான உதவியைத் தந்து இதை முடிப்பது என்ற ஆலோசனை இந்த அரசாங்கத்தினிடம் இருக்கிறது?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வீராணம் வேறு, காவேரி வேறு என்று கருதிக் கொண்டிருக்கிறார்கள். வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் கொண்டுவருவது என்பது காவேரி நதித் திட்டம்தான் என்பதை அவர்கள் முதலில் உணர்ந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் கொண்டு வருகிற இந்தத் திட்டத்திற்கு ரூ. 21 கோடி செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. வி. டி. அண்ணாமலை:** இதற்கு முன்பிருந்த அரசினர் எந்த முறையிலும் சென்னை நகரத்திலுள்ள மக்களுடைய தாகவிடாயைப் போக்குவதற்கு ஏற்ற திட்டத்தை செயல்படுத்தாததனால்தான் இந்த மாதிரி நிலை ஏற்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

(விடை இல்லை)

[1967 ஜூன் 26

**திரு. நா. காசிராமன் :** காவிரி நதித் தண்ணீரை வீராணம் ஏரிக்குக் கொண்டு வருகின்றபோது, வழியில் இருக்கக்கூடிய ஊர்களுக்கு எல்லாம் குடிநீர் வழங்குவதற்கு வகை செய்யப்படுமா? அப்படிச் செய்வதின் மூலம் எத்தனை ஊர்கள் பயன் பெறும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மதிப்பிற்குரிய உறுப்பினர் கூறுவதைப்போல் தண்ணீர் வசதி செய்ய முடியாது. தண்ணீர் வீராணத்திற்குக் கொண்டுவருவது கால்வாய் மூலமாக இருந்தால், இடையே அங்கங்கே வருகின்ற தண்ணீர் வீணாகிவிடக்கூடிய நிலைமை ஏற்படும். அதன் மூலம் சென்னைக்குக் கொடுக்க வேண்டிய குடிநீரைக் கொடுக்க முடியாமல் போய்விடும். தண்ணீரைக் குழாய் மூலமாகக் கொண்டுவருவதாக இருந்தால் அங்கங்கே உள்ள இடங்களுக்குத் தண்ணீர் கொடுக்கக்கூடிய நிலைமை இருக்குமானால் அந்த நிலைபற்றி ஆராயப்பட்டு அது கவனிக்கப்படலாம்.

**திரு. ஆர். நாகசுந்தரம் :** இந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதால் காவிரிமூலம் பாசனம்பெறும் நிலங்களுக்கு ஏதேனும் பாதகம் ஏற்படுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஒரு நாளைக்குச் சென்னைக்கு வீராணம் ஏரித் திட்டத்தின்மூலம் 40 மிலியன் காலன் அதிகப்படியாக தண்ணீர் கிடைக்கக்கூடும். ஒரு நாளைக்கு 75 க்யூசெக்ஸ் தண்ணீர் குடிநீருக்காக எடுக்க வேண்டியிருக்கும். ஜனவரி மாதத்திலிருந்து ஜூன் மாதம் வரையில் பாசன காலத்தில் 10 ஆயிரம் முதல் 20 ஆயிரம் க்யூசெக்ஸ்வரை பாசனத்திற்காகத் தண்ணீர் கொடுக்க வேண்டும். ஒரு நாளைக்கு 75 க்யூசெக்ஸ் குடிநீருக்காக எடுத்துக்கொள்வதால் பாசனம் எதுவும் கெட்டுவிடாது. ஆனால், குள்ளக்கார் பயிர்செய்யும்பொழுது இதனால் 20,000 ஏக்கர்வரை பாசனம் பாதிக்கப்படும் என்று அங்கேயுள்ளவர்கள் பயப்படுகிறார்கள். அந்தத் தொகுதியினுடைய சட்ட உறுப்பினரும் மற்றவர்களும் இதைப்பற்றி முதலமைச்சர் அண்ணா அவர்களைச் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். பிப்ரவரியிலிருந்து ஜூன் வரைதான் இந்தச் சங்கடங்கள் ஏற்படும். அதற்காக மேட்டூரிலிருந்து 1,300 கன அடி தண்ணீர் வீராணத்திற்குக் கொண்டுவரக்கூடிய திட்டம் இருக்கிறது.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** காவிரியிலிருந்து ஜேடர் பாளையம் வழியாகவும், வீராணம் வழியாகவும் தண்ணீர் கொண்டு வரக்கூடிய இரண்டு திட்டங்கள் இருந்தன. இப்பொழுது ஜேடர் பாளையத் திட்டத்தைக் கைவிட்டதற்கு என்ன காரணம் ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஜேடர்பாளையத்தின் மூலமாகக் கொண்டுவரும் திட்டம் 460 மைல் நீளமுள்ளது, வீராணம் வழியாகக் கொண்டுவரும் திட்டம் 135 மைல் நீளம் உள்ளது. இந்த 460 மைல் நீளமுள்ள திட்டத்தைக் கொண்டுவருவதால் செலவு இரண்டு மடங்கு ஆகும். நிலவுடைமையாளர்கள் நிலங்களை



1967 ஜூன் 26]

ஆர்ஜிதம் செய்வதற்கு ஆட்சேபித்தால் 10 வருஷங்கள் அளவுக்கு அந்தத் திட்டத்தையே தள்ளிப்போடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிடும். இதனால் சென்னை நகர மக்களுக்குத் தண்ணீர் கிடைக்காமல் சென்னை நகர மக்களின் தாகத்தைப் போக்க முடியாத சூழ்நிலைதான் ஏற்படும். எனவே, உடனடியாக இந்தத் திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்ற எண்ணத்துடனும் இப்பொழுது இருக்கின்ற அரசியல் சூழ்நிலையையொட்டியும் அந்தத் திட்டம் வேண்டாமென்று கருதப்பட்டு, வீராணம் திட்டம் கொண்டுவரப்படுகிறது.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்:** இந்தத் திட்டத்தைக் கொண்டு வரும்பொழுது குழாய் மூலமாகக் கொண்டுவருகின்ற திட்டம் வந்தால் அப்பொழுது எந்த எந்த ஊர்கள் வழியாக அந்தக் குழாய்த் திட்டம் கொண்டுவரப்படும் ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அந்த வழிகள் எல்லாம் இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை.

**திரு. பெ. சீனிவாசன் :** தலைவர் அவர்களே, இந்த சென்னை நகரக் குடிநீர்த் திட்டம் பல ஆண்டுகளாகவே இருந்து வருகிறது. இதற்கு முன்னால் இருந்த அரசாங்கம் இதைச் செய்யாமல் இருந்ததற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. சென்னை நகரசபையின் நிர்வாகம் எதிர்க்கட்சியினரிடம் இருந்த காரணத்தாலேதான் இதற்கு முன்பு இருந்த அரசாங்கம் நிறைவேற்றவில்லையா அல்லது வேறு காரணங்கள் என்ன ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதற்கான காரணம் கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் இல்லை. இப்பொழுது இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் போதுமான பொறுப்பை ஏற்றுக்கொண்டு அதை நிறைவேற்றவேண்டுமென்று அரசு கருதுகிறது.

**திரு. பு. செ. முத்துச்செல்வன்:** முசிறி காவிரிக் கரையில் இருக்கிறது. அப்படியிருந்தும் அங்கே குடிநீர்த் திட்டம் கொண்டுவருவதை இதற்கு முன்னால் இருந்த அரசு புறக்கணித்துவிட்டது. அதை நிறைவேற்ற வேண்டுமென்ற முறையில் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கோரிக்கை கொடுத்திருக்கிறார்கள். இந்த அரசு அதைப்பற்றிக் கவனிக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கேள்வி சென்னையைப் பற்றியது. இந்தக் கேள்வியுடன் தொடர்புடையது அல்ல.

**திரு. எஸ். முருகையன் :** இதற்கு முந்தைய அரசு 20 ஆண்டுக் காலமாக இதைப் பரிசீலனை செய்து கொண்டேயிருக்கிறோம் என்று சொல்லி குடிநீர் கிடைக்காமலே செய்துவிட்டது. இதை நிறைவேற்றுவதில் மத்திய சர்க்கார் அனுமதி கிடைப்பதிலே ஏதாவது தகராறு இருக்கிறதா ? இந்தத் திட்டத்தை நிறைவேற்றும் முறையில் இந்தப் பிரச்னை உடனடியாகக் கவனிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எந்தத் தொல்லைகள் இருந்த போதிலும் இந்த ஆண்டு இந்தத் திட்டத்திற்கான வேலைகள் மேற்கொள்ளப்படும் என்று உறுதியாகத் தெரிவித்துக்கொள் கிறேன்.

**திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனார் :** கோடையில் காவிரியில் தண்ணீர் இல்லை. அந்த நோக்கிலே சென்னைக்கு தட்டு இல்லாமல் தண்ணீர் கொடுக்க முடியுமா என்று அரசாங்கம் பரிசீலனை செய்ததா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தண்ணீர் எப்பொழுது வற்றும் என்பதை முன்கூட்டியே தெரிந்து அதைத் தேக்கி, பிறகு தேவையான தண்ணீரைக் கொடுக்க இந்தத் திட்டத்தில் வழி யிருக்கிறது.

**திரு. ஆலடி அருணா :** காவிரித் தண்ணீரைக் குழாய் மூலம் கொண்டுவந்து சென்னைக்குக் கொடுப்பதைப்போல் இடையிலே உள்ள மற்ற நகரங்களுக்கும் குழாய் மூலம் குடிநீர் கொண்டு வருகின்றபொழுது தண்ணீர் வழங்க இந்தத் திட்டத்திலே வழியிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நான் முன்னமேயே சொன்னேன் அவையெல்லாம் பரிசீலிக்கப்படும்.

**திரு. கே. விநாயகம் :** இந்தத் திட்டம் உத்தேசமாக எத்தனை நாட்களுக்குள் முடியுமென்று அமைச்சர் அவர்கள் கருதுகிறார்கள்? இதை ஆரம்பம் செய்வது இந்த ஆண்டிலே இருப்பினும் கூட, இதைப் பூர்த்தி செய்வதற்கு எத்தனை ஆண்டுகள் ஆகும்? உங்களுடைய காலத்திலேயே முடியுமா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எங்களுடைய காலம் நீடிக்கு மென்று கருதுகிறோம். ஆகவே, இந்தத் திட்டத்தையும் வேறு பல திட்டங்களையும் நிறைவேற்றிவிட்ட பிறகுதான் நாங்கள் அகலுவ தாக இருக்கிறோம்.

**Dr. H. V. HANDE :** Will the Hon. Minister tell us the practical difficulties involved and give an indication to this House as to exactly how many years—two years or three years—that the Government may take to finalise the supply of water to Madras City?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** குறைந்தது ஓர் ஆண்டுக் காலத்தில் முடிவுறும் என்று கருதுகிறேன்.

**திரு. கா. வேழவேந்தன்:** இருபது ஆண்டுகளுக்குப் பின்னால் காவிரித் திட்டம் கொண்டுவரப்படுகிறது. இதைப் பார்த்து அண்ணாவின் அரசாங்கம்தான் இதைக் கொண்டு வருகிறது என்று சொல்லக்கூடிய முறையில், 'கங்கை கொண்ட சோழன்' என்று





வரலாற்றில் சிறப்பிப்பதைப்போல், 'காவிரி கொண்ட அண்ணா', என்று இந்தத் திட்டத்திற்குப் பெயரிட ஏற்பாடு செய்யப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

(விடை இல்லை)

**திரு. எம். பூபதி :** தலைவர் அவர்களே, மாநில சர்க்கார் சென்னை நகர மக்களுக்குக் குடிநீர் கொடுக்க எவ்வாறு நடவடிக்கை எடுத்துக்கொள்கிறதோ அதைப்போன்று மற்ற நகர மக்களுக்கும் குடிநீர் கொடுக்கின்ற திட்டத்தைப் பரிசீலிக்கிறதா? கோவை நகர மக்களுக்குச் சிறுவாணித் திட்டத்தை உருவாக்க என்ன திட்டம் தீட்டியிருக்கிறார்கள்? இதற்கான வேலையிலே நடவடிக்கை எடுத் துக் கொள்ளப்படுமா? இதற்கான நிதியை பட்ஜெட்டில் ஒதுக்க நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இதிலே மாண்புமிகு உறுப் பினருக்கு இருக்கின்ற அக்கறையை உணர்கிறேன். இதைப்பற்றித் தனிக் கேள்வி போட்டால் நல்லது என்பதைக் குறிப்பிட விரும்பு கிறேன்.

**திரு. கே. பி. எஸ். மணி :** வீராணத்திலிருந்து தண்ணீர் கொடுக்கும்பொழுது அதனால் 3 போகப் பயிர்களுக்கு நஷ்டம் வராது. மேலேயிருந்து தண்ணீர் கொண்டுவருவதாகச் சொன்னார் கள். அதற்குப் பதிலாக வீராணம் ஏரியிலேயே ராட்சசக் கிணறு களை அமைத்துத் தண்ணீரைப் பம்ப் செய்தால் கஷ்டம் ஏற்படாது. ஆகவே, இந்தத் திட்டத்தைப் பரிசீப்பார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** வீராணத்து ஏரியில் கிணறுகள் அமைப்பதைப்பற்றிய சாத்தியக் கூறுகள் இருப்ப தாகத் தெரியவில்லை. மேட்டூரிலிருந்து தண்ணீரைப் பெற்றுச் சென்னைக்குத் தருகின்ற ஒரு பாத்திரமாகத்தான் வீராணம் ஏரி இப்பொழுது கருதப்படும்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் ஏற்கனவே பரிசீலிக்கப்பட்டது. எனவே, இந்தக் காவிரித் திட்டத்தைவிட அந்தத் திட்டத்தின் செலவு குறைவாக இருந்தால் அந்தத் திட்டத்தையே மேற்கொள்ளலாம் அல்லவா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** குறைந்த செலவிலே ஏற்படக் கூடிய திட்டத்தைத்தான் இப்பொழுது அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

**திரு. என். வரதராஜன்:** ஒரு கோடி ரூபாய் செலவு செய்யப் பட்ட திண்டுக்கல் குடிநீர்த் திட்டத்தில் சிலர் சொந்த உபயோகத் திற்காகத் தண்ணீர் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற தகவல் அரசாங்கத்திற்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இந்தக் கேள்விகளை யெல்லாம் தனிக் கேள்விகளாகப் போட்டால் பதில்களை அமைச்சர்கள் கூற இயலும்.

[1967 ஜூன் 26

**திரு. ஏ. எம். ராஜா:** சென்னை நகரக் குடிநீர்த் திட்டத்திற்கு ஏற்படும் செலவின் ஒரு பகுதியை மத்திய சர்க்கார் வழங்க வேண்டுமென்று மாநில சர்க்கார் மத்திய சர்க்காரைக் கேட்டு இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அதைப்பற்றிய விவரம் இல்லை.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்:** இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றக்கூடிய முறையில் (பைலட்) ஸ்கீம் ஒரு முன்னோடித் திட்டமாக ஏதாவது வைத்திருக்கிறார்களா? ஐந்தாண்டுகளுக்குள்ளாகவே குடிநீர் கொடுப்பதற்கான திட்டங்கள் வைத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** வீராணம் திட்டத்தைப் பொறுத்தவரையில் முன்னோடித் திட்டத்திற்கு இடமில்லை. ஆனால், சென்னைக்கருகாமையில் இருந்து தண்ணீர் எடுக்கப்படுகிறது. எங்கெல்லாம் அந்த அளவை அதிகப்படுத்த முடியுமோ அவை யெல்லாம் கவனிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மு. ப. 9-30 **திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** வீராணம் திட்டத்தைப் பொறுத்தவரை நில ஆர்ஜிதத்திற்கான ஆரம்ப வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றனவா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அவை எல்லாம் இன்னும் தொடங்கப்படவில்லை.

### *House-sites for officials of Vigilance Department*

* 77 Q.—THIRU A. BALASUBRAMANYAN : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) the number of officials of the Vigilance and Anti-Corruption Departments who applied for assignment of house-sites and cultivable lands in Madurai taluk;

(b) the number of applicants that were granted house-sites; and

(c) the number of applications rejected?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** (அ) பயிரிடத்தக்க நிலங்களை ஒப்படை செய்து தரும்படி 6 பேர் மனுச் செய்துள்ளனர். வீட்டு மனைக்காக நில ஒப்படை செய்து கொடுக்கும்படி யாரும் மனுச் செய்து கொள்ளவில்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

(இ) பயிரிடத்தக்க நிலங்கள் ஒப்படை செய்து தரும்படி அனுப்பிய ஆறு மனுக்களில் ஒன்று மறுக்கப்பட்டது. எஞ்சிய 5 மனுக்கள் குறித்து முடிவு எடுக்கப்படவில்லை.



1967 ஜூன் 26]

**திரு. எ. பாலசுப்பிரமணியன்:** விஜிலென்ஸ் இலாகாவினர் தங்களுக்கு இருக்கும் அதிகாரத்தை உபயோகப்படுத்தி ரெவின்யூ இலாகாவினர் மீது நிர்ப்பந்தங்களைக் கொண்டு வந்து நில ஆர்ஜிதம் பெற்றுக் கொள்ள முயற்சி செய்கிறார்கள் என்ற புகார் அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு வந்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** அப்படிப்பட்ட எந்தப் புகாரும் அரசாங்கத்தின் கவனத்திற்கு வரவில்லை. திரு. ஏ. தேவதாஸ் மோனிஸ், டெபுடி சூப்பரின்டென்ட் ஆஃப் போலீஸ் விஜிலென்ஸ் அண்டு ஆன்டிகரப்ஷன், மதுரை—அவர்கள் நிலம் வேண்டுமென்று கோரி மனுச் செய்திருந்தார்கள். அது பொதுப் பணித் துறைக் கண்மாய்க்கு வேண்டுமென்ற காரணத்தால் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது. ஆகவே, அவருடைய மனு நிராகரிக்கப்பட்டது. மீதியுள்ள ஐந்து விண்ணப்பங்களைக் குறித்து எந்தவிதமான முடிவும் எடுக்கப்படவில்லை. அவை அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கின்றன.

THIRU K. VINAYAKAM : Sir, in the matter of assignment of these house-sites or the cultivable lands for the people, the tenets that are to be followed by the Department is that they must be given first to the landless people. Did those five applicants satisfy this requirement or do they propose to get them by using 'jabarthas' with the Revenue Department?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : The Government cannot agree to what the hon. Member calls 'jabarthas'. Only landless people are considered for allotment.

DR. H. V. HANDE : What is the total extent of land given to these five persons?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : The land has not yet been assigned. There are six applications. One application has been rejected. The Public Works Department has objected to the assignment of land to that applicant and the other five applicants. As I have stated before, the matter is still under consideration.

**திரு. சி. கோவிந்தராஜன்:** லஞ்ச ஒழிப்புத் துறையைச் சேர்ந்தவர்களே லஞ்சத்திற்கு உள்ளாகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

(விடை இல்லை)

**திரு. அ. லெ. சுப்பிரமணியம்:** திருநெல்வேலி தொகுதியில் ரயில்வே துறையில் வேலை செய்கிறவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்காக எட்டு எக்கர் இரு போக நஞ்சை நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. இவ்வாறு நஞ்சை நிலங்களை ஆர்ஜிதம் செய்வதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** கூடுமான வரையில் நஞ்சை நிலங்களை ஆர்ஜிதம் செய்யாமல் பார்த்துக் கொள்ள இந்த அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

[1967 ஜூன் 26

**திரு. டி எஸ் ஆதிமூலம்:** அசைன்மென்டைப் பொறுத்தவரை ஒரு பேப்பரிலே முடிவு எடுக்க ஆறு ஏழு வருஷங்கள் கூட ஆகிறது. இந்தச் சர்க்கார் ரெவின்யூ போர்டைக் கலந்து துரிதமாகப் பைசல் செய்வதற்கு வேண்டிய வழிமுறைகளை வகுக்க முன் வருவார்களா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இப்படிப்பட்ட நிலம் ஒப்படைக்கும் காரியம் துரிதமாக நிறைவேற வேண்டுமென்பதை ஒப்புக் கொள்கிறேன். அதே சமயத்தில் கனம் திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் எழுப்பிய தவறுதல்களும் நடைபெறக் கூடாது என்ற காரணத்தால் இரண்டுக்கும் மத்தியில் நின்று முடிவு எடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது.

**திரு. கே. பி. எஸ். மணி :** நிலம் ஆர்ஜிதம் செய்வதில் இருக்கும் கஷ்டங்கள் எல்லா ஜில்லாக்களிலும்—மாகாணம் பூராவும் இருக்கிறது. அப்படிப்பட்ட நேரத்தில் கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் என்று சொல்லிக் கொண்டு பெரிய இடங்களைக் காம்பவுண்டு வால் போட்டு வைத்திருக்கக் கூடிய நிலை இருக்கிறது. அப்பேர்ப்பட்ட நிலங்களைக் கட்டாயமாக ஆர்ஜிதம் செய்ய நில ஆர்ஜித சட்டத்தின் கீழ் எடுக்க முன் வருவார்களா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அது பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை எடுக்க இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறது.

**திரு. எஸ். கே. ராமசாமி:** திரு. தேவதாஸ் மோனிஸ் என்ற போலீஸ் அதிகாரிக்கு மனை ஒதுக்குவதிலே என்ன தவறு இருக்கிறது? நிராகரிக்கப்பட்டதற்குக் காரணம் என்ன ? அவர் ஏதேனும் குற்றம் செய்திருக்கிறாரா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அவர் ஒன்றும் தவறு செய்யவில்லை. அவர்கள் வேண்டுமென்று கேட்ட நிலம் was required for the surplus course of the tank அங்கிருக்கின்ற கண்மாய் அதிக மழையினால் நிரம்பிவிட்டால் கண்மாயினுடைய கீழ் அளவுக்கு வேண்டிய நிலமாக அது இருக்கிற காரணத்தால் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.

**திரு. எஸ். முத்துலிங்கம் :** நிலம் ஆர்ஜிதம் செய்வதில் அதிகக் கால தாமதம் ஆவதைத் தவிர்க்க அதற்கான தனி அதிகாரிகளைப் போட்டு துரிதமாக ஆர்ஜிதம் செய்ய சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** புதிய அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டவுடன் அதிலே இருக்கிற கால தாமதத்தை உணர்ந்து துரிதமாகவும், விரைவாகவும் நடவடிக்கை எடுக்க மாவட்டக் கலெக்டர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.



1967 ஜூன் 26]

THIRU K. VINAYAKAM : Sir, when did these applicants apply for the assignment of the land and what was the necessity for the hectic speed with which those applications have been disposed of, when thousands of applications from poor landless people are still lying on the table of the lower officials of the Revenue Department?

The HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, I want to point out that the applications have not been rejected. I have no information regarding their applications but they are entitled for assignment as any other landless people. Only one application has been disposed of and the other five applications are still to be disposed of.

**திரு. என். சங்கரய்யா :** உஷார் பிரிவைச் சேர்ந்த போலீஸ் அதிகாரிகள் இம்மாதிரி மனுக்கள் போடக்கூடிய நேரத்தில் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவதைத் தவிர்க்க கீழ் மட்டத்தில் இத்தகைய மனுக்களை வாங்காமல் மாநில மட்டத்திலே இத்தகைய மனுக்களைப் பரிசீலிப்பது பற்றி அரசாங்கம் கவனம் செலுத்துமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற தவறுகள் நடந்துவிடக் கூடாது என்ற வாதத்தை ஒத்துக் கொள்கிறேன். போலீஸ் அதிகாரிகளாக இருக்கின்ற காரணத்தாலேயே அவர்களும் மற்றவர்களைப் போல் கோருவதற்கு உள்ள உரிமையை மறுப்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது.

THIRU T. MARTIN : Sir, since assignment of land is intended to help poor landless people, may I request the Hon. Minister to state whether the Government will take steps to discountenance the procedure of giving loans to the officials?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : It does not encourage it but it does not necessarily mean that officials should not be assigned lands.

**திரு. எம். பூபதி :** சென்ற காலத்தில் அரிசன மக்கள் மனை கட்டும் இடங்கள் கேட்டபோது நகரங்களிலே அவர்களுக்கு இடம் ஆர்ஜிதம் செய்வதில்லை என்ற நிலை இருந்தது. அந்நிலையை மாற்றி இன்றைய சர்க்கார் அரிசன மக்களுக்கும் நகரங்களிலும் நகரங்களை சுற்றியிருக்கும் பிரதேசங்களிலும் நில ஆர்ஜிதம் செய்து மனைக் கட்டு, பயிரிட நிலம் கொடுக்க உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஏற்கனவே இருந்த அரசாங்கம் ஒவ்வொரு ஜில்லாவிலும் 100 ஏக்கர், 200 ஏக்கர் என்று பயிரிடப்படக்கூடிய நிலங்களை அசைன்மென்ட் செய்து கொடுத்து வந்தார்கள். பொதுவாகப் பார்க்கும்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் 20,000 ஏக்கர்வரை பயிரிடப்படக்கூடிய புறம்போக்கு நிலங்கள் குறைந்த காரணத்தால் இவை சம்பந்தமான புள்ளி விவரங்களைச் விசாரித்து அறிந்து, அதன் பிறகு இந்த அரசாங்கம் நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் கொடுக்கும் திட்டத்தை உருவாக்க இயலும்.

**திரு. மு. ச. சிவசாமி:** நிலத்தில் தானாகவே உழுது பயிரிடக் கூடிய விவசாயிகள் நிலம் இல்லாமல் ஆயிரக்கணக்கானவர்கள் இருக்கும்போது உழுவது இன்னது என்று தெரியாத, அவர்களுடைய துறைக்கு அப்பாற்பட்ட போலீஸ அதிகாரிகளுக்கு அந்த அசைன்மெனடைக் கொடுத்தால் அவர்கள் நேரடியாக உழுது பயிரிட்டு விவசாயத்தை அபிவிருத்தி செய்வார்கள என்று கருதுகிறார்களா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** மீண்டும் மீண்டும் சொல்லி விட்டேன். அங்கத்தினர் அவர்கள் கற்பனையின் மீது இந்தக் கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். எந்த அதிகாரிக்கும் கொடுக்கப்படவில்லை. அதிகாரிகளுக்குக் கொடுப்பது முறை கேடானது என்ற வாதத்தை இந்த அரசு ஒத்துக்கொள்ள முடியாது.

**திரு. எ. பாலசுப்பிரமணியன்:** போலீஸ் இலாகாவிலிடமிருந்து உஷார் லஞ்ச ஒழிப்பு அதிகாரங்களைப் பிரித்து அந்தந்த இலாகாவே உஷார், லஞ்ச ஒழிப்பிற்கான நடவடிக்கைகளைச் செய்துவிட வேண்டும் என்று கீழ் ஊழியர்களிடமிருந்து மனு ஏதாவது வந்திருக்கிறதா? அதுபற்றி என்ன யோசனை செய்யப்பட்டிருக்கிறது?

(விடை இல்லை)

THIRU K. VINAYAKAM: In the matter of assignment of lands to the people, is it not the policy of the Government to assign lands only to the tillers of the soil, men who actually undertake agriculture, and, if so, do these applicants satisfy the condition and will they till the soil, being officials who do not have much to do with agriculture?

(விடை இல்லை).

**திரு. என். வரதராஜன்:** சர்க்கார், நில ஆர்ஜிதம் சம்பந்தமாக ஒரு சரியான முடிவிற்கு வருவது வரையில் இன்றைக்குப் புறம் போக்கு நிலங்களில் குடிசைகள் போட்டுக் கொண்டிருப்பவர்களை அப்புறப்படுத்த வேண்டாம் என்று உத்தரவு அனுப்பும் உத்தேசமுண்டா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இது ஒரு அபாயகரமான யோசனையாகும்.

### சைதாப்பேட்டை வட்டம் கிராண்டு லயன் கிராமம்

*78 வினா.—திரு. அ. பொ. அரசு: மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், சைதாப்பேட்டை வட்டம் கிராண்டு லயன் கிராமம் இனும் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு விட்டதா?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன?



THE HON. THIRU K. A. MATHIALAGAN: (a) & (b) Grant Lyon village of Saidapet taluk in Chingleput district, is one of the leasehold villages specified in the First Schedule to the Madras Leaseholds (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 27 of 1963), and as such on and from 15th February 1965, the appointed date, it stood transferred to the Government and vested in them free from all encumbrances. But, the leaseholder has moved the High Court and later the Supreme Court challenging the validity of the Act. The further proceedings under the Act have been stayed by the Supreme Court.

**திரு. பெ. மலேச்சாமி:** இனும் நிலங்களைப் பட்டா நிலங்களாக மாற்ற அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ளதா?

THE HON. THIRU K. A. MATHIALAGAN: The matter is *subjudice* before the Supreme Court and the hon. Member is requested not to put any supplementary questions regarding this.

### நெல் விலை ஏற்றம்

*79 வினா.—திரு. எஸ். ஜே. ராமசாமி: } மதிப்பிற்குரிய உணவு-
திரு. எம். வில்லியம்: }
வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இந்தஆண்டில் விவசாயிகளுக்கு, நெல் விலையைக் கூட்ட அல்லது மாற்றியமைக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இல்லை.

THIRU M. WILLIAM: In view of the abnormal rise in the cost of cultivation, do not the Government feel the necessity to revise the price per quintal?

THE HON. THIRU K. A. MATHIALAGAN: The Government have already raised the maximum price in 1965. They have also given an incentive bonus, a bonus of Rs. 3 per short term kuruvai crop. The Government have no proposal either to increase or to revise the price per quintal?

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** மத்திய அரசாங்கம் இரண்டு மாதங்களுக்கு முன் விலையை ஏற்ற குறிப்பு ஒன்றை அனுப்பியுள்ளது. அது அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா? அந்தளவாவது விலையை ஏற்ற அரசாங்கம் ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** விலையை ஏற்ற எந்த விதமான குறிப்பையும் அனுப்பவில்லை. மத்திய அரசாங்கம் என்பது மட்டுமல்ல; அக்ரிகல்சரல் ப்ரைஸ் கமிஷன் நிர்ணயிக்கிற விலைக்கு மேல் போகக் கூடாது என்ற கட்டத்தில்தான் நாம் கொஞ்சம் விலையை ஏற்ற வேண்டும் என்று நினைக்கிற வேளையில் கூட, போனஸ் ரூபத்தில் கொடுத்து வருகிறோம் என்பதை உறுப்பினர் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

[1967 ஜூன் 26

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்:** விவசாய இலாகாவோ வாழை, திராட்சை போன்ற விவசாயங்களைச் செய்தால் ஏராளமான வருமானம் வரும் என்று பிரசாரம் செய்கிறார்கள். தானியத்திற்கு இன்று அரசாங்கம் கொடுக்கிற விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அந்த விலைக்குக் கொள்முதல் செய்தால் அசலாவது கிடைக்குமா என்று சிந்தித்துப் பார்த்து நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதா? எந்தக் காலத்தில் இந்த விலை நிர்ணயம் செய்யப்பட்டது?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** ஒன்றை எல்லோரும் தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரியும். விலையை நிர்ணயிப்பது அக்ரிகல்சரல் ப்ரைஸ் கமிஷன் என்று. நம் நெல் விலையை, எல்லா மாநிலங்களிலும் மத்திய அரசுதான் நிர்ணயிக்கிறது. அதற்கு மேல் கொஞ்சம் போக வேண்டுமென்று நாம் நினைத்துத் தந்திரமான முறையில் விலையைக் கூட்ட வேண்டுமானால் போனசாகவும், இன்சென்ட்டிவ் போனசாகவும் கொடுத்து வருகிறோம். விலை நிர்ணயம் செய்தது முதலில் ஒரு தடவை 1964-ல், பிறகு 1966-ல் இரண்டாவது முறையாக விலை நிர்ணயிக்கப்பட்டது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** திரு. எஸ். ஜே. ராமசாமி அவர்கள் குறிப்பிட்டபடி மத்திய அரசாங்கத்திலிருந்து மாநிலத்திற்கு ஒரு க்வின்டால் நெல்லுக்குக் கூடுதல் நான்கு ரூபாய் கொடுக்க வேண்டும் என்று சிபார்சு செய்திருப்பதாக அறிகிறோம். அது சர்க்காருக்குத் தெரியுமா? மேற்கு வங்காளத்தில் க்வின்டாலுக்கு 52 ரூபாய் வீதம் கொடுத்து வந்தது 60 ரூபாயாக்கப்பட்டு அதன்படி விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டு வருவதும் சர்க்காருக்குத் தெரியுமா? அப்படித் தெரிந்தால் மேற்கு வங்காளத்தில் கொடுக்கும் நிலை போன்று இந்தச் சர்க்காரும் விவசாயிகளுக்குக் கொடுக்க முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** முதலிலேயே தெளிவாகச் சொன்னேன். அங்கத்தினர் அவர்கள் சொல்லும்படியான எந்தத் தகவலும் இந்த அரசாங்கத்தின் வசம் இல்லை.

**திரு. ஆர். நாகசுந்தரம்:** ஐயா, சொந்த உபயோகத்திற்காக நபருக்கு 10 படி அரிசி கொண்டு போகலாம் என்றிருக்கும் சலுகையைப் பயன்படுத்திக் கொண்டு ஏராளமானவர்கள் ஒரு பெரிய கும்பலாக திருச்சி–கரூர் மார்க்கம் போகும் ரெயில் வண்டிகளில் இரவு நேரத்தில் கள்ளக் கடத்தல் செய்யும் காரியத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இது மாதிரியான தகவல் அரசாங்கத்திற்கு இல்லை. அங்கத்தினர் அவர்களைப் போன்ற மக்கள் பிரதிநிதிகள் இப்படிப்பட்ட கெடுதலான காரியங்களைத்



1967 ஜூன் 26]

தடுத்து நிறுத்துவதற்கு அப்படிப்பட்ட காரியங்களை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவார்களானால் தக்க துரிதமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

DR. H. V. HANDE: According to the Minister, the price was fixed in 1965. During the last two years the prices of oil cakes, bullocks and fertilisers have gone up very high and fertiliser is not available in the open market. The cost of production has gone up within these two years. The Minister has said that the Central Government have fixed the price. In view of the situation in the Madras State, will this Government come forward as a special case to subsidise the procurement price? Bonus does not reach the small farmers; it reaches only the big farmers. Will the Government re-examine the entire question and give an incentive to the farmers so that they may not come to the Madras City?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இப் பிரச்னையை மீண்டும் பரிசீலனை செய்வதல்ல இன்றுள்ள நிலைமை. நம் மாநிலத்தில் பெரும்பாலானவர்கள் இதை ஒரு வியாஜ்யமாக்கிச் சொல்கிறார்களே தவிர நிர்ணயிக்கப்பட்டிருக்கிற விலை நியாயமானது என்பதை அதிக விளைச்சல் உள்ள தஞ்சை மாவட்ட விவசாயிகளே மிகப் பெரும்பாலானவர்கள் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். வேறு சில மாவட்டங்களில் விலை ஏற்ற இறக்கத்தில் வித்தியாசப்படுவது உண்மையே. அது ரொம்பக் குறைவாக நெல் பயிரிடப்படுகிற இடத்திலே தானே தவிர பெரும்பாலான விளைச்சல் உள்ள இடங்களில் அல்ல. நான் தஞ்சை மாநில விவசாய மாநாட்டில் கலந்து கொண்டேன். அதில் பெருத்த குறைபாடு அல்லது மனக்குறைவு இருப்பதாக இந்த அரசாங்கம் கருதவில்லை.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம்:** இரண்டு மாதங்களுக்கு முன்னால் சென்ட்ரல் கவர்ன்மென்ட் ரசாயன உரங்களின் விலையை ஏற்றியிருக்கிறது. அதனால் உற்பத்திச் செலவும் மிக மிக அதிகமாகி இருக்கிறது. ஆகவே அக்ரிகல்ச்சுரல் ப்ரைஸ் கமிஷனை, விலையை ஏற்றித் தரும்படி இந்த அரசு வற்புறுத்துமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** மத்திய அரசாங்கம் இம்மாதிரி ரசாயன உரத்திற்கான விலையை ஏற்றியதல்லாமல் போனஸையும் எடுத்ததற்காக இந்த அரசாங்கம் அவர்களுக்கு ஆட்சேபம் தெரிவித்து இருக்கிறது. இதனால் தமிழகத்தின் உற்பத்தித் திறன் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அவர்கள் கவனத்திற்கு ஏற்கனவே கொண்டு வந்திருக்கிறது.

**THIRU R. PONNAPPA NADAR:** Sir, has any proposal been placed before the Agriculutral Prices Commission by this Government and if so, will the Government give its details?

**THE HON. THIRU K. A. MATHIALAGAN:** Sir, I want notice.

**திரு. எஸ். முருகையன் :** ஸார், இப்போது விவசாயிகளுக்கு விலை கட்டுபடியாகவில்லை என்று எதிர்த்தரப்பிலே சொல்லப் பட்டது. இரண்டு ரூபாய் அதிகமாகக் கொடுத்தாலும் கூட, இப்போது உற்பத்திச் செலவு அதிகமாகிக் கொண்டு போகிறது. உற்பத்திச் செலவைக் குறைக்க அரசாங்கத்தினால் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? அதற்கான திட்டங்கள் என்ன என்று அறியலாமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பொதுவாக இரண்டு விதமான முரண்பாடுகள் இன்றைக்கு ஒன்றும் தவிர்க்க முடியாத நிலையில் இரண்டு கோணங்களுக்கிடையில் அகப்பட்டுக்கொண்டு திண்டாடுகிறது. இன்று உற்பத்திச் செலவு அதிகமாகியிருக்கிறது. விவசாயிகளுக்கு அவர்களுடைய தானியத்திற்கு நியாய விலை வேண்டுமென்பது ஒன்று; அதே நேரத்தில் விவசாயம் செய்யாத ஏழை எளிய மக்களுக்குக் குறைந்த விலையில் தானியங்களை வழங்க வேண்டுமென்பது மற்றொன்று. இந்த இரண்டுக்கும் மையமான அனுபவசாத்தியமான கொள்கையை அரசாங்கம் கவனத்தில் வைக்க வேண்டியிருக்கிறது.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** தலைவர் அவர்களே, விலையை ஏற்ற வேண்டாமென்ற கொள்கை வரவேற்க வேண்டியது தான். 1965-ல் பிண்ணாக்கு, சல்ஃபேட்டு உரம் ஆகியவைகளின் விலை என்ன? இன்றைக்கு அம்மோனியம் சல்ஃபேட்டுக்கு மூட்டைக்கு மூன்று ரூபாய் அதிகமாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது. பழைய விலைக்கே விவசாயிகளுக்கு கொடுக்க அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுத்திருக்கிறதா? அல்லது எடுக்கத் தயாராக இருக்கிறதா? 1965-க்கு பிறகு உற்பத்திச் செலவு அதிகமாக ஆகியிருப்பதற்குக் காரணமே இந்த ஃபெர்டிலைசர்களின் விலை உயர்வுதான். இவைகளின் விலை உயர்வுக்கு மத்திய சர்க்காருக்கு எதிர்ப்புக் காண்பிக்கும் முறையில் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மத்திய சர்க்காரிடத்தில் கடுமையாக எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறோம். நாட்டு விவசாய மக்களுக்கும் அறிவித்திருக்கிறோம். இதற்குக் காரணம் மாநில அரசாங்கம் இல்லை, டீ-வேல்யூவேஷன் என்ற பெயரிலே ஏற்கனவே அதிக விலை கொடுக்க வேண்டியிருக்கிறது; போனஸையும் குறைத்திருப்பதால் ரசாயன உரங்களின் விலை ஏறியிருக்கிறது. கொஞ்சமும் மாநில அரசு விரும்பாத முறையில் நடந்து கொண்டிருக்கிறது என்று ஆட்சேபம் தெரிவித்திருக்கிறோம். மேற்கொண்டு அங்கத்தினர் அவர்கள் யோசனை கூறுவாரானால், தகுந்ததாக இருந்தால் அதையும் வற்புறுத்தத் தயாராக இருக்கிறோம்.

**திரு. பெ. மலைச்சாமி :** ஸார், உணவுத் தானியங்களுக்கு விலை நிர்ணயித்ததைப் போல எண்ணெய் வித்துக்களுக்கும் விலையை நிர்ணயிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(விடை இல்லை)



**திரு. ஆர். கருப்பையா :** தலைவர் அவர்களே, விவசாயிகளுக்குப் போனஸ் கொடுக்கும் திட்டம், இந்த அரசு கொண்டு வந்ததா? அல்லது இதற்கு முன்பு இருந்த அரசு கொண்டு வந்ததா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** முந்திய அரசிடமிருந்து வாரிசு உரிமையாக, பிதிரார்ஜிதமாகப் பெற்றதுதான்.

**திரு. இல. பலராமன் :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது, தஞ்சை மாவட்டத்திலே தற்போது இருக்கும் விலையே போதும் என்று கூறினார்கள். வட ஆர்க்காடு மாவட்டத்தில் போதாது என்று கூறும்போது, நெல்லின் விலையைக் கூட்டுமா என்று அறிய விரும்புகிறேன்.

(விடை இல்லை)

**திரு. எம். சண்முகம் :** தலைவர் அவர்களே, உணவுப் பொருள்களின் விலைவாசியை நிர்ணயம் செய்வது மத்திய அரசு என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி விலைவாசியை நிர்ணயிக்கும்போது, அல்லது மாற்றம் செய்யும்போது மாநில அரசைக் கலந்துகொண்டு செய்கிறார்களா? அல்லது தங்கள் யதேச்சாதிகாரத்தில் செய்கிறார்களா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** யதேச்சாதிகாரமும் இல்லை, புறக்கணிப்பும் இல்லை. மத்திய அரசு எல்லா மாநிலங்களுக்காகவும் செயல்பட வேண்டியிருக்கிறது. எல்லா மாநில அரசாங்கங்களையும் கேட்டுக்கொண்டுதான் அவர்கள் தகுந்த ஒரு முடிவுக்கு வருகிறார்கள்.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் :** தலைவர் அவர்களே, விவசாயி உற்பத்தி பண்ணுகிற பொருள்களைக் கண்ட்ரோல் விலைக்குக் கொடுக்க வேண்டும். அதே நேரத்தில் விவசாயி மற்ற பொருள்களைப் பிளாக் மார்க்கெட்டில் வாங்க வேண்டிய நிலையில் இருக்கிறான். இதை உத்தேசித்தாவது விவசாயிக்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் கண்ட்ரோல் விலையில் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பொதுவாக விவசாயிகள் மட்டுமல்லாமல் எல்லோருக்குமே நியாயமான விலையிலேயே தேவையான அளவில் கொடுக்க வேண்டும் என்பது இந்த அரசின் சித்தாந்தம், அதைச் செயல்படுத்துவதில் அரசு ஈடுபட்டிருப்பதை உறுப்பினர்கள் உணர்வார்கள்.

**திரு. ஆலடி அருணா :** தலைவர் அவர்களே, காங்கிரஸ் ஆளுகையுள்ள பிற மாநிலங்களில், காங்கிரஸ் அல்லாத வங்க அரசைப் போன்று அதிக விலை கொடுக்கப்படுகிறதா? அல்லது மத்திய அரசால் நிர்ணயிக்கப்படும் விலை பிற காங்கிரஸ் ஆளும் மாநிலங்களில் கொடுக்கப்படுகிறதா?

(விடை இல்லை)

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** கனம் சபாநாயகர் அவர்களே, விவசாயச் செலவு அதிகமாக ஆகியிருப்பதால் விவசாயிக்குக் கட்டுபடி ஆவதற்கு, அவர்களுக்குக் கொடுக்கும் போனஸ் தொகையின் அளவை அரசாங்கம் உயர்த்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** 1967-ம் ஆண்டுக்கு இந்த விலையை உயர்த்தவோ, மாற்றவோ எந்தவிதமான உத்தேசமும் இல்லை என்பதை முதலிலேயே தெளிவுபடுத்தினேன். அந்த நிலையிலேதான் இந்த அரசாங்கம் செயல்படும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, நான் போட்ட கேள்விக்கு கனம் அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கவில்லை. மேற்கு வங்க மாநில சர்க்காரிலே, மத்திய சர்க்கார் நிர்ணயித்த விலை ரூ. 52-ஆக இருந்தும், காங்கிரஸ் அல்லாத கூட்டணி சர்க்கார் ரூ. 60 கொடுப்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அதே மாதிரி இந்த மாநிலத்திலும் கொடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நான் முதலிலேயே பதில் சொல்லிவிட்டேன். இன்னும் சொல்ல வேண்டுமானால், மேற்கு வங்கத்தின் நிலை வேறு. அங்கு போலீஸ்காரர்களை வைத்து ப்ரொக்யூர்மென்ட் செய்கிறார்கள். அதே முறையை இங்கேயும் அனுமதிக்கிறார்களா ? அங்கு உள்ள நெருக்கடி நிலையை உத்தேசித்து அவர்கள் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கலாம். அங்கு என்ன நடக்கிறது என்பது பற்றிய தகவல்கள் அரசாங்கத்திற்கு இல்லை. அதோடு மேற்கு வங்கத்தைப் பின்பற்ற வேண்டிய அவசியமும் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. ச. சிவசாமி :** தலைவர் அவர்களே, ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுங்கள், போடுங்கள் என்று கேட்டுக் கொண்டே, நெல் விலையை உயர்த்த வேண்டுமென்று கூறுவது முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறது அல்லவா ? அரசாங்கத்திற்கு நிதி நெருக்கடியை உண்டாக்கும் முறையில் கோரிக்கை இருக்கிறதல்லவா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** சர்க்காருக்கு நெருக்கடி நிலைமை என்பது மட்டுமல்ல. பொதுவாக நாட்டிலே கூறப்படுகிற கருத்துக்கள் இரண்டும் ஒன்றுக்கு ஒன்று முரண் உள்ளதாக இருக்கிறது. ஒரு பக்கம் விவசாயிக்கு விலையை உயர்த்தியாக வேண்டும், கட்டுப்படியாகக் கூடிய விலை கொடுக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. அதே நேரத்தில் நமது நாட்டில் உள்ள 3½ கோடி ஏழை எளிய மக்களும் குறைந்த விலையில் உணவுப் பண்டங்களை வாங்கவேண்டும் என்று சொல்லப்படுகிறது. இப்படி இரண்டு முரண்பாடான கருத்துக்கள் இருக்கின்றன. இரண்டுக்கும் மத்தியிலான, ஆக்கபூர்வமான, செயல்படும் நிலையில் இருக்க வேண்டியிருக்கிறது.



**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, மின்சாரத்தைக் கொண்டு, கிணற்றுத் தண்ணீரை உபயோகப்படுத்தி, உற்பத்தி செய்யக் கூடிய முறையில் ஏக்கருக்கு 100 ரூபாய்க்கு மேல் செலவு ஆகிறது. வண்டல் நிறைந்த ஆற்றுத் தண்ணீரை, டாம் தண்ணீரைப் பாய்ச்சி உற்பத்தி செய்யக் கூடிய முறையில் ஏக்கருக்கு 25 ரூபாய்க்கு மேல் ஆவதில்லை. இதை உத்தேசித்தாவது, கிணற்றுப் பாய்ச்சலைக் கொண்டு உற்பத்தி செய்யும் நெல்லுக்கு மின்சார ரிபேட் கொடுக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அப்படியான உத்தேசம் அரசாங்கத்திடம் இல்லை. இதிலே மாக்ஸிமம் ப்ரைஸ் தான் நிர்ணயிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இவ்வளவுக்கு மேல் போகக் கூடாது என்று—குறைந்தபட்ச விலை இல்லை—உச்சவரம்பு விலைதான் நிர்ணயிக்கப்படுகிறது.

THIRU B. VENKATASWAMY : Sir, is the Hon. Minister aware of the cost of cultivation of paddy for one acre?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I have to point out that it differs from district to district and even taluk to taluk. முற்பகல்
Even in villages for different types of land, there will be different costs of production. 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா, விடைகளுக்கான நேரம் முடிவடைந்து விட்டது. இன்னும் ஐந்து நிமிடங்கள் நீடிக்கிறேன்.

THIRU K. VINAYAKAM : In view of the importance of the question of the fixation of the price for procurement of paddy in the villages and in view of the burning nature of the question which affects the very living of the people in the villages, I request you to set apart a half-hour for a debate on this subject at least after the day's evening session.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உணவு நிலையைப் பற்றி விவாதிக்க உணவு நிதிக் கோரிக்கைக்காக ஒரு நாள் முழுவதும் ஒதுக்கப்பட்டிருப்பதால், தனியாக அதற்கென்று அரை மணி தேவையில்லை என்று தெரிவிக்கிறேன்.

கேள்விகள் 80, 81 இரண்டும் தள்ளிவைக்கப் படுகின்றன.

*Re-organization of Co-operative movement*

* 82 Q.—THIRU K. VINAYAKAM : } Will the Hon. the
THIRU K. CHEEMAICHAMY : }

Minister for Law and Co-operation be pleased to state—

(a) whether the Government are contemplating to appoint an Expert Committee consisting of eminent lawyers and co-operators to go into the working of the co-operative movement in the State with a view to rehabilitate and reorganise the movement and avoid mismanagement and wastage of funds; and

(b) whether immediate steps will be taken to prosecute the offenders in cases which are pending?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) இம் மாநிலத்தில் கூட்டுறவு அமைப்பு செயல்படுவதைப்பற்றிப் பரிசிலனை செய்து அதைச் சீரமைப்பதற்கான செயற்குறிப்புகளைத் தயாரிப்பதற்கென ஒரு குழுவை நியமிக்க அரசாங்கம் கருதுகிறது. இக் குழுவின் உறுப்பினர் பற்றி இன்னும் முடிவெடுக்கவில்லை.

(இ) ஆம்.

THIRU K. VINAYAKAM: What exactly are the reasons that have prompted this Government to appoint a fresh committee to go into this question? Have this Government found any malpractices and, if so, do the Government think that the ordinary courts of law are not enough to book the culprits and render justice?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கூட்டுறவு சங்கங்களிலே நடைபெறுகின்ற தவறுகள் சம்பந்தப்பட்ட வரை கிரிமினல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கிறோம். அதற்காகத் தனிப் போலீஸ் வைத்து அதைப்பற்றி விரைவாக நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்கிறோம். கூட்டுறவு சட்டம், அதன் விதிகள் இதுவரை எப்படி செயல்படுத்தப்பட்டன, அதிலிருக்கும் குறைபாடுகளைப் பயன்படுத்திக் கூட்டுறவு சங்கங்களில் தவறுகள் ஏற்பட வாய்ப்பு இருக்கின்றதா என்பதையெல்லாம் பரிசீலிக்க இந்தக் குழு அமைக்கப்படுகிறது.

THIRU R. PONNAPPA NADAR: Have the terms of reference of the expert committee to be appointed been settled by the Government?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அது இன்னும் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. ஆலடி அருணா:** கூட்டுறவு இயக்கத்தில் இரு முறைக்கு மேல் ஒருவர் தலைவராக வருவதைத் தடுக்க சட்டத்தைத் திருத்த சர்க்கார் முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கனம் அங்கத்தினருடைய யோசனை பரிசீலிக்கப்படும்.

DR. H. V. HANDE: The Minister gave us the indication that an expert committee is going to be appointed. What are the exact reasons for appointing this expert committee? Were any *prima facie* cases made out from the functioning of the co-operative societies as to warrant the appointment of such a committee?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், பரிசிலித்துப் பார்த்ததில், ஒருவர் கூட்டுறவு அமைப்பில் தொடர்ந்து பதவி வகிக்கிற காரணத்தினால், ஒரே நபர்



பல கூட்டுறவு சங்கங்களில், அமைப்புக்களில் அங்கம் வகிக்கக் கூடிய நிலைமை இருப்பதால், இந்த சட்டத்தில், அதன் விதிகளில் குறைபாடுகள் இருக்கின்றன என்பது தெரிகிறது. அதன் காரணமாக ஒருவர் தவறான முறையில் ஈடுபடும் வாய்ப்பு இருக்கிறது. அது போன்ற காரியங்களால்தான் தவறுகள் இழைக்கப்படுகின்றன. அப்படி சட்டத்தில், விதிகளில் இருக்கும் குறைபாடுகளைச் சரிசெய்ய வேண்டும் என்று அரசாங்கம் கருதியிருக்கிறது.

THIRU K. VINAYAKAM: Is the Hon. Minister aware of the fact that, simply because most of these co-operators belong to one particular political party in this State, the party in power is now thinking in terms of appointing a committee so as to punish even innocent co-operators?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சமீபத்திலே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சில நபர்கள் இது போன்ற தவறான செயல்களில் ஈடுபட்டு, கைது செய்யப்பட்டிருப்பதைப் பற்றிக் குறிப்பிடுகிறார் போலும். அது அவர்களுடைய கட்சி விவகாரம். அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் யார் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் சர்க்கார் கொள்கை.

**திரு. பெ. மலைச்சாமி:** தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியப்பு தலைவர்கள் யாராவது கூட்டுறவுத் துறையில் மோசடி செய்திருக்கிறார்களா? அவர்களுடைய பெயர்களைத் தெரிவிக்க முடியுமா? அவர்கள் பேரில் வழக்குகள் போடப்பட்டிருக்கின்றனவா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அது போன்ற தகவல் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. தனிக் கேள்வி போட்டால், விவரங்கள் சொல்லப்படும்.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்:** சார், கூட்டுறவு இயக்கத்தின் பயன்களை மக்கள் பெற முடியாத அளவிற்குப் பல குறைகள் இருக்கின்றன. முக்கியமான குறை, இந்தக் கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் நெடுங்கால பாத்தியதை காரணமாக தேர்தல் காலங்களில் தாங்களே அந்த அதிகாரத்தில் தொடர்ந்து வரக்கூடிய முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுக்க முக்கியமாக அரசாங்கம் உடனடியாகக் கவனம் செலுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கனம் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அவர்களே இதுபோன்றவற்றை விளக்கமாக்கியிருப்பதால், அதற்குத் தக்க முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

**திரு. சேர். கோவிந்தராசன்:** அலங்காநல்லூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையை ஒன்றரைக் கோடி ரூபாயில் ஏற்படுத்தியும், அதை ஓட்ட முடியாத நிலையில் ரூ. 40 கையிருப்புடன் சென்ற

சர்க்கார் விட்டுச்சென்றது சர்க்காருக்குத் தெரியுமா? அதற்கு நிதி அளிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மாண்புமிகு தொழில் அமைச்சரைக் கேட்க வேண்டிய கேள்வி.

**திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் :** மூன்று வருஷத்திற்கு ஒரு முறை நிர்வாகிகள் தேர்தல் என்று இருந்ததை, வருஷத்தில் மூன்றில் ஒரு பங்கு என்று திருத்தியதன் விளைவாக பல சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அந்த விதியைத் திருத்தி, மூன்று வருஷத்திற்கு ஒரு முறை நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று உடனடியாக சட்டத்தைத் திருத்த சர்க்கார் முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கனம் அங்கத்தினர் குறிப்பிட்ட சிக்கலைப்பற்றியும் அரசாங்கம் கொண்டுவரவிருக்கும் திருத்தத்தில் சேர்க்கப்படும்.

**திரு. சு. துரைசாமி :** குற்றம் கண்டுபிடிக்கப்பட்ட கூட்டுறவு சங்க டைரக்டர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நிச்சயம் நடவடிக்கை எடுக்கும்.

**திரு. கு. கிருஷ்ணமூர்த்தி :** அரிசன மக்களுக்கு கூட்டுறவு சங்கம் புதிதாக அமைக்க அன்றிருந்த காங்கிரஸ் சர்க்கார் அனுமதி மறுத்து விட்டது. இப்பொழுது நம்முடைய சர்க்கார் அனுமதி கொடுக்க உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அரிசன மக்களுக்கு கூட்டுறவு இயக்கத்திலே அங்கம் வகிக்க ஊக்கம் தரவேண்டும் என்பதுதான் கொள்கை. கனம் அங்கத்தினர் குறிப்பாக எதாவது எழுதியனுப்பினால், அது கவனிக்கப்படும்.

**திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் :** சார், கூட்டுறவு சங்கங்களிலே ஏராளமான மோசடிகள் நடக்கின்றன. அவற்றை தடுக்க சரியான சட்டம் கொண்டு வந்து, தண்டிப்புக் குறைவாக இருப்பதை மாற்றி, கூட்டுறவு சங்கங்களிலே தப்பு செய்கிறவர்கள் எந்தத் தேர்தலிலும் நிற்க லாயக்கில்லை என்று செய்யும் வகையில் சட்டம் கொண்டு வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கூட்டுறவு இயக்கத்தில் ஏற்படும் தவறுகளைத் தண்டிக்க சட்டம் இருக்கிறது. ஆனால், வழக்குத் தொடர்ந்தால், அவர்கள் தப்பிக்கவும் வழி இருக்கிறது. ஆகவேதான் அரசாங்கம் சட்டத்தை பரிசீலித்து கொண்டிருக்கிறது. தண்டிப்புக் கடுமையாக இருக்க வேண்டும் என்று சட்டத்தைத் திருத்த ஆலோசிக்கிறோம்.



**திரு. டி. எஸ். ஆதிமூலம் :** சார், இந்தக் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்தவர்கள், எனக்குத் தெரியும், திருநெல்வேலியில். தலைவர் காமராஜர் பிறந்தநாள் என்றால், அதில் அவர்கள் பூராவாக ஈடுபடுவது சர்க்காருக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கூட்டுறவு சங்கங்களை அரசியல் நோக்கத்திற்காக உபயோகப்படுத்துவது, தவறுகள் செய்வது இவையெல்லாம் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்படும் போது அவ்வப்பொழுது பரிசீலித்து, முடிவு எடுக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கூடியவரை பெரியவர்கள் பெயர்களைக் கேள்வி நேரத்தில் பயன்படுத்தாமல் இருக்க வேண்டும் என்று தெரிவிக்கிறேன்.

**திரு. கே. பி. எஸ். மணி :** குற்றம் செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க உகந்த வகையில் சட்டத்தை திருத்தி சிக்கல்களை எடுக்கவேண்டும். இப்பொழுது என்னுடைய ஊரில் பல நிகழ்ச்சிகள் நடந்தும், 1½ வருஷத்திற்குப் பிறகும் விசாரணையில் தான் இருக்கிறது. ஆகவே, இப்படிக் குற்றம் செய்தவர்களை தண்டிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க, அவசர நடவடிக்கை எடுக்க, சட்டத்தை திருத்த சர்க்கார் முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கனம் அங்கத்தினருடைய அனுமதியைப் பூரணமாக நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். தண்டிக்கப்படவேண்டியது இந்தியன் பீனல் சட்டத்தின் கீழ், கணக்குகள் சம்பந்தமாக இருப்பது கூட்டுறவு சட்ட அமைப்பு. இந்த சட்டத்திற்கும், அந்த சட்டத்திற்கும் எந்த அளவிற்கு இணைப்பு ஏற்படுத்த முடியும், இருக்கும் சட்டத்தை எப்படி திருத்தியமைக்கலாம் என்பவைதான். அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள், விடைகள் முடிவடைந்தன.

[குறிப்பு.—ஒரு உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்.

### (அ) பேரவை அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு முக்கியமான அறிவிப்பு. இன்று காலை 10-30 மணிக்கு அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டம் என்னுடைய அறையில் நடைபெறும். அலுவல் ஆய்வுக்குழு உறுப்பினர்கள் திரு. மு. ப. அழகமுத்து, திரு. பி. ஜி. கருத்திருமன், திரு. கே. விநாயகம், திரு. பி. கே. மூக்கையா தேவர், திரு. எ. பால சுப்பிரமணியன், திரு. ஆ. கு. சுப்பையா, திரு. எ. ஆர். மாரிமுத்து,

டாக்டர் ஹபிபுல்லா பேக், திரு. க. ர. நல்லசிவன், திரு. ம. பொ. சிவஞானம் அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களையும் இன்று காலை 10-30 மணிக்கு என் அறைக்கு வருகை தந்து, அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டத்தை அருள்கூர்ந்து நடத்தித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். அலுவல் ஆய்வுக்குழுவின் கூட்டம் உடனடியாகத் தேவைப்படுவதற்குக் காரணம், சில கட்சி உறுப்பினர்கள் அதிக நேரம் பேசியிருக்கிறார்கள், மற்றும் சில கட்சி உறுப்பினர்கள் குறைவாகப் பேசியிருக்கிறார்கள், என்பதற்கு இடமில்லாதபடி, எவ்வாறு எல்லாக் கட்சி உறுப்பினர்களுக்கும் வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொள்வதற்குத் தகுந்த வாய்ப்பை அளிப்பது என்பதுபற்றி முடிவு செய்வதற்குத்தான்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நடைமுறை விதிக் குழுக் கூட்டம் எப்பொழுது நடைபெறும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நடைமுறை விதிக் குழுக் கூட்டம் 11 மணியளவில் இன்றைக்கு நடைபெறும். இப்போது, திருத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம், இன்று திரு. எஸ். ராமசாமி நாயுடு அவர்கள் முதலிலே உரையாற்றுவார்கள்.

### 3. 1967-ம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம் (தொடர்ச்சி).

* **திரு. எஸ். ராமசாமி நாயுடு :** மன்றத் தலைவரவர்களே சென்ற தேர்தலிலே ஒரு புரட்சியைக் கண்டோம். ஜனநாயக ரீதியிலே 20 வருஷமாய் அரசாட்சி செய்துவந்த ஒரு அரசியல் கட்சியை அரசு செய்யவிடாமல் விலக்கிவிட்டு புதிதாக ஒரு கட்சி ஆட்சி செய்யும் முறையிலே இந்தச் சட்ட சபைக்கு மக்கள் அனுப்பியிருக்கிறார்கள். இந்த தேர்தலிலே பிரச்சாரம் மூலமோ அல்லது ஒருவரையொருவர் குறை சொல்வதன் மூலமோ புரட்சி ஏற்பட்டதாக பலர் பேசிக் கொள்கிறார்கள். என்ன காரணத்தினாலே 20 வருஷமாக ஆண்ட கட்சியானது தோற்றுவிட்டது என்று அந்தக் கட்சியாரும் ஆராய்ந்துக்கொண்டிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியினர் ஆராய்ந்து கொண்டிருப்பதைவிட, என்ன காரணத்தால் 20 வருஷம் அரசாண்டு, மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டு, பல நல்ல காரியங்களைச் செய்த ஒரு கட்சியை மக்கள் துச்சமாகத் தள்ளிவிட்டார்கள் என்று, இன்று அரசு பீடத்தில் அமர்ந்திருக்கும் கட்சியினரும், கூட்டணி அங்கத்தினர்களும் ஆராய வேண்டியது மிக முக்கியம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வெறும் பிரச்சாரத்தின் காரணமாக எந்த ஒரு கட்சியையும் தோற்கடித்துவிட முடியாது. ஏதோ 20 வருஷம் ஒரு கட்சி அரசாண்டுவிட்டது; இன்னொரு கட்சிக்கு வாய்ப்புக் கொடுக்கலாம்





என்று மக்கள் மாற்றி விட்டார்கள் என்று லேசாகப் பேசிக் கொள்கிறார்கள். அது உண்மையான விஷயம் அல்ல. மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களுக்குப் பிறகு கூட பொதுமக்கள் சமதர்மம் தங்களுக்குக் கிட்டவில்லை என்ற எண்ணத்திலே இந்த ஆட்சியை விலக்கி, சமதர்மத்தின் பலனைத் தங்களுக்குக் கொடுக்க வேறு கட்சியை ஆட்சி பீடத்தில் அமர்த்திப் பார்க்க வேண்டுமென்று ஆசைப்பட்டார்கள். காரணமின்றி, வகையான மக்களாட்சி செய்துவந்த கட்சியை அகற்றிவிட்டு புதிதாக ஒரு கட்சியை அரசு பீடத்தில் அமர்த்தி விட்டார்கள் என்று சொல்வது பொருந்தாத விஷயம் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்னொரு காரணத்திற்காக மக்கள் இதுகாறும் ஆண்டு வந்த கட்சியை அகற்றி விட்டார்கள் என்பதாக பத்திரிகைகளிலே ஆராயப்பட்டு வந்திருக்கிறது. அந்தக் கட்சியினரே ஆராய்ந்து வருகிறார்கள். ஆனால் உண்மையை யாருமே புரிந்துகொள்ளவில்லை என்றுதான் நான் எண்ண வேண்டியிருக்கிறது. மக்களுக்கு இருந்த குறைகளை நிவர்த்தி செய்யமுடியவில்லை; நிவர்த்திக்கப்படவில்லை என்ற காரணத்தினாலே மக்கள் அந்தக் கட்சியை அகற்றி விட்டார்கள் என்பது நமக்குத் தெரிகிறதே தவிர என்னென்ன துறைகளிலே அவர்களுக்கு அந்த ஆட்சியின் பலன் கிட்டவில்லை என்பதை ஆராய்ச்சியின் மூலமாகத் தெரிந்துகொள்ளவில்லை.

மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் வைத்த பின்னும் கூட நாட்டில் விவசாயிகள் பழையமாதிரியிலேயே இருந்து வந்தார்கள். "நாலாறுமாறுக நனி சிறிதாக எப்புறனும் மேலாரும் மேலுரை சோரும் வீடு" என்று சொல்வதுபோல குடிசைகள் குடிசைகளாக இருந்து வந்தன. இந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் பலன் யாரிடமோ போய் பரிணமித்துக்கொண்டிருக்கிறதே தவிர ஏழை மக்களுக்குப் பயன்படவில்லை. அவர்கள் எப்பொழுதும்போல ஏழ்மையிலும், வறுமையிலும் கஷ்டப்பட, அவர்கள் அடைய வேண்டியதன் பலனை வேறு யாரோ அடைய இந்தத் திட்டங்களினால் தங்களுக்குப் பலன் கிட்டாது என்ற முடிவுக்கு வந்து இந்தத் திட்டங்கள் இட்ட ஆட்சியானது இன்னும் இரண்டு திட்டங்கள் இட்டாலும், திட்டங்களில் பலன்கள் ஏழை விவசாயிகளாகிய தங்களுக்குக் கிட்டாது; நாம் நல்ல பலன்களை அடைய முடியாது என்ற முடிவுக்கு வந்ததன் காரணமாக இன்று அந்த ஆட்சியை விலக்கி விட்டார்களே தவிர வேறொன்றுமில்லை. சென்ற தேர்தலிலே இங்கு விலக்கப்பட்ட கட்சியினர் பிரச்சாரத்திற்குச் செல்லும் நேரத்திலே கூட்டங்களில் இருக்கும் பாட்டைத் தலை பிள்ளையின் தலையைத் தடவி 'ஐயோ மக்களே, மூன்று ஐந்தாண்டு திட்டங்களினால் உங்கள் தலைக்கு எண்ணெய் கொடுக்க வேண்டுமென்று எண்ணினோம். ஆனால் இட்ட திட்டமெல்லாம் உன் தலைக்கு எண்ணெய் கூடக் கொடுக்கவில்லை. ஆகவே, உன் தலைக்கு எண்ணெய் கொடுக்க இன்னொரு முறை எங்களுக்கு வாக்குக் கொடுக்க வேண்டுமென்று உன் பெற்றோர்களிடம் சொல்' என்று கேட்கும்படி ஒரு அவல நிலை ஏற்பட்டதை நாம் அறிவோம்.

இப்படியாக பாட்டைத் தலை பிள்ளைக்கு ஒரு திட்டம், கன்னம் ஒட்டிய பிள்ளைக்கு ஒரு திட்டம் என்று புதிதாகத் திட்டங்களை யிட்டு, இனிமேல் செய்கிறோம் என்று சொன்னார்களே தவிர இட்ட திட்டங்களின் பலனை அனுபவிக்க வேண்டியவர்களுக்கு ஏன் கிட்ட வில்லை என்று ஆராய்ச்சியில் இறங்கவில்லை. அதன் காரணமாக மக்கள் மனச்சோர்வுற்று, இவர்கள் மூலம் இந்தப் பலன்கள் நமக்குக் கிட்டாது; ஜனநாயக ரீதியிலே இந்த ஆட்சியை மாற்றினாலொழிய நாம் பலன் அடைய முடியாது என்று இந்த ஆட்சியை மாற்றி விட்டார்கள்.

ஆகவே, இன்றைக்கு ஆட்சி புரியும் கட்சியினர் என்ன காரணத்துக்காக மக்கள், காங்கிரஸ் சர்க்காரை மாற்றினார்கள் என்பதை ஆராய்ந்து, மக்கள் குறைகள் என்ன, நிவர்த்திக்கப்படாமல் இருப்பவை எவை, பூர்த்தி செய்யப்படாமல் இருந்த தேவைகள் என்ன, என்பதை ஆராய்ந்து செயல்பட வேண்டும். இன்றைக்கு இங்கு புதிதாக இந்தச் சட்டசபையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இந்த நிதி நிலை அறிக்கை மக்களுக்கு எந்த வகையிலே, அவர்களுடைய அபிலாஷைகளை நிறைவேற்றி இருக்கிறது என்று பரிசீலிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. நிறைவேற்றப்படாமல் இருந்த சில திட்டங்களை நிறைவேற்றுவதற்குத்தான் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. புதிதாக எந்த ஒரு பெரிய ஏற்பாடும் செய்யப்படவில்லை. காரணம் என்னவென்றால் புதிதாக வந்த சர்க்கார் அதற்கான மூலதனத்தைத் தேடி புதுத் திட்டங்களைத் தீட்டுவதற்கான நிலையில் இல்லை. இதுவே குறைந்த வருமானத்தைக்கொண்டு துண்டு விழாமல் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த வரவு-செலவுத் திட்டத்தை மக்களுக்கு இடைஞ்சல் இல்லாமல் கொண்டுவர வேண்டுமென்ற எண்ணத்தில் தயாரித்திருப்பதை நான் வரவேற்கிறேன்.

ஆனால், இதை வரவேற்கும் பொழுது சில விஷயங்களை நான் இந்தச் சர்க்காருக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சர்க்காருக்கும், இந்த நாட்டுக்கும் அடிப்படையான பலம் விவசாயப் பெருமக்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. விவசாய பெருமக்களுக்குப் போதுமான வசதியைச் செய்து கொடுக்காத எந்தச் சர்க்காரும் நீண்ட நாள் ஆட்சி செலுத்த எண்ணுவதில் பிரயோசனம் ஏற்படாது என்று நான் சொல்லிக்கொள்கிறேன். விவசாய மக்கள் என்றால் தஞ்சாவூரிலே பாசன வசதி காரணமாக விவசாயம் செய்யும் மக்களை மனத்திற்கொண்டு, எண்ணிவிடக் கூடாது. இரு மாடு, ஓரேறு என்று வைத்து விவசாயம் செய்யக் கூடியவன் 20 ஏக்கரா நிலம் வைத்து உழ முடியும், வேறு பிரதேசங்களிலே. ஒரு ஏர் வைத்திருக்கும் உழவன், தானும், தன்னுடைய மனைவியும், தன்னுடைய பிள்ளைகளும் ஆக எல்லோருமாகச் சேர்ந்து காட்டிலே வேலை செய்து, வீட்டிலே வேலை செய்தால்தான் விவசாயத்தை ஓரளவு நடத்தித் தன்னுடைய வயிற்றையும் வளர்த்து ஏதோ வாழ முடியுமே தவிர நல்லபடியாக வாழ முடியும்





என்று நான் சொல்லிக்கொள்ள முடியாது. ஆகவே, அப்படிப்பட்ட விவசாயிகளை நாம் மனத்திற்கொள்ள வேண்டும். அவர்களுக்கும் நாம் இட்டிருக்கும் திட்டத்திலே பலன் இருக்கிறதா என்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

விவசாயம் செய்து பார்த்தால்தான் இன்றைக்கு விவசாயிகளுக்கு இருக்கக்கூடிய கஷ்டங்களைத் தெரிந்துகொள்ள முடியும். தானியம் உற்பத்தி செய்கிறவன் எந்த நிலையில் வாழ்கிறான் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். தேர்தல் காலத்தில் கிராமங்கள் தோறும் விஜயம் செய்த நமக்கு கிராமங்களில் இருக்கும் நிலை நன்றாகத் தெரியும். விவசாயிகளுடைய வீட்டில் என்ன என்ன வசதிகள் இருக்கக்கூடும் என்பதை நாம் அறியாமல் இல்லை. கீழே உட்கார ஒரு பலகை இருக்காது. இரவில் அவன் படுத்துறங்க பாய் இருக்காது. காலையிலே அவசரம் அவசரமாகப் பழையதைச் சாப்பிட்டுவிட்டு, காட்டிலே வேலைக்குப் போகிற போதும் பழையதை எடுத்துக்கொண்டுபோய், இரவிலே ஏதாவது சுடுசோறு தின்றுவிட்டு உட்கார்ந்த இடத்திலே அலுப்பின் காரணமாக அயர்ந்து படுத்துறங்குகிற நிலையைப் பார்க்கிறோம். பாசன வசதி உள்ள இடங்களில் இருக்கும் விவசாயிகளை மட்டும் எண்ணிப் பார்க்கக் கூடாது. மானம்பார்த்த காட்டு பூமிகளில் வேலை செய்யக் கூடியவர்களின் நிலையையும் எண்ணிப்பார்க்கவேண்டும். விவசாயம் செய்கிற மக்களுக்கு—அவர்களுக்குக் கட்டுபடியாகக் கூடிய விலையில் தானியங்களின் விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் கிடையாது. உரத்திற்காவது விலை நிர்ணயிக்கப் பட்டிருக்கிறதா என்றால் இல்லை. கலப்பு உரம் என்ற பெயரில் எதையோ சேர்த்துக்கொடுப்பவன் ஆயிரக்கணக்கில் ஆதாயம் அடைந்துகொண்டிருக்கிறான். கலப்பு உரம் விவசாயிகளுக்குக் கிடைப்பது அரிதாக இருக்கிறது. தழை உரம் கிடைக்கவில்லை. மாட்டு உரம் அதிகமான அளவில் பெறலாம் என்றாலும் மாடுகளுக்கு வேண்டிய தீவனம் பெறுவது அவனுக்கு மிகச் சங்கடமாக உள்ளது. தீவனம் வைத்து பராமரிக்க முடியாத நிலைமையில் போதுமான மாடுகளை வைத்துக் கொள்வதும் கஷ்டமாக இருக்கிறது. உரம் கிடைக்காத கஷ்டம், கிடைத்தாலும் அதிகவிலை கொடுத்துப் பெற வேண்டிய நிலை, உற்பத்தி செய்கிற தானியங்களுக்கோ கட்டுபடியாகக்கூடிய விலை கிடைக்காத நிலை—இவற்றினால் அவர்கள் படுகிற கஷ்டம் கொஞ்சமல்ல. அதுதான் அப்படி என்றால் மானம் பார்த்த பூமியாக இருப்பதன் காரணமாக மழை பெய்தால் கொஞ்சம் வெள்ளாமை கிடைக்கிறது, மழை பொய்த்துவிட்டது என்றால் போட்ட விதை முதல் கூட நஷ்டமாகிவிடுகிறது. கிணறுகளிலும் தண்ணீர் வறண்டுபோய் வெள்ளாமை தீய்ந்து போய் விடுகிறது. அதற்குப் பாதுகாப்பு இல்லை. மாடுகளுக்கோ, பயிருக்கோ இப்படி எவ்விதப் பாதுகாப்பும் இல்லாத நிலையில், அவர்களை விவசாயம் செய்து கொடு, கொடு என்று சொன்னால் எங்கிருந்து கொடுக்க முடியும்? நல்ல சாதனங்கள் கொடுத்து,

அவர்கள் உற்பத்தி செய்கிற தானியங்களுக்கும் நல்ல விலை கிடைக்கச் செய்தால் அவர்கள் அதிகமான அளவு உற்பத்தி செய்து கொடுக்கத் தயாராய் இருக்கிறார்கள்.

இவ்வாண்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டத்தில் நிலத்தீர்வை வஜா செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஒரு கோடியே ஐம்பது லட்சத்திற்கு புஞ்சைத் தீர்வை வஜா செய்திருக்கிறார்கள். அதன் மூலமாக விவசாயிகள் நன்மை அடைந்து விடுவார்களா என்றால் கிடையாது. காரணம் ஒரு பக்கத்தில் வரி வஜா செய்துவிட்டு, மறுபக்கத்தில் விவசாய வருமான வரியைக் கொண்டுவந்திருக்கிறார்கள். முன்னொரு காலத்தில் தவிடு கொடுத்து அரிசி வாங்கிய தகப்பனை நல்லவனுக்க மகன் உமியைக் கொடுத்து அரிசி வாங்கினான் என்ற கதை உண்டு. ஒரு பக்கத்தில் வரி வஜா செய்வதுபோலச் செய்துவிட்டு, விவசாய வருமான வரியை அவன் தலையில் சுமத்தியிருக்கிறார்கள். வருமான வரியை பற்றி நாம் அறிவோம். 3,600 என்கிற வருமான வரம்புக்கு மேல் வரி போடப்படுகிறது. ஆனால் இன்றைக்கு இருக்கும் விலைவாசி காரணமாக அவனுக்கு ஆகும் செலவுக்காக எவ்வளவு கழிக்கப் படும் என்ற நிர்ணயம் சட்டத்தில் இல்லை. அது அதிகாரிகள் கையில் விடப்பட்டிருக்கிறது. அதிகாரிகள் பார்த்து ஒரு ஏக்கருக்கு 20 ரூபாய் தான் ஆகும் என்று சொன்னால் அவ்வளவு தான் விலக்கப்படும். சட்டத்திலேயே அதற்கு பாதுகாப்பு இல்லை. அதன் காரணமாகத் தான் வரி வஜாவின் நன்மையை அவனால் அனுபவிக்க முடியாது என்று நான் தாழ்மையுடன் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால் இன்றைக்கு எல்லா விலைகளும் ஏறிவருகின்றன. அவனுக்கு ஏதோ அதிக லாபம் இருப்பதாக, அவனுடைய செலவுகள் என்ன என்பதைப் பார்க்காமல் பலர் நினைக்கிறார்கள். உடலிலும் நல்ல வலு இருக்கிறது, காட்டிலும் உழைக்கிறான், வரியை உழைத்துக் கொடுக்கட்டுமே என்கிற எண்ணம் பரவலாக இருக்கிறதே தவிர, அவனும் மனிதன் தான், அவனுக்கும் மற்றவர்களைப்போல வாழ வகை இருக்க வேண்டும் என்று நினைப்பதில்லை. அவனுக்கு செலவு எவ்வளவு ஆகக்கூடும் என்பதை முன்கூட்டியே தீர்மானம் செய்து அதற்கு மேல் உபரியாக இருந்தால் வரி போடலாம் என்ற முடிவைச் செய்திருக்கலாம். காங்கிரஸ் சர்க்கார் விவசாய வருமான வரியை கொண்டுவந்தார்கள் என்றாலும் விவசாய மக்கள் தங்களுடைய குறைகளை எடுத்துச் சொன்னதன் பேரில் அதை அமுல்படுத்தாமல் 12½ ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு மேற்பட்டவர்கள் கம்பவுண்டு செய்து கொள்ள உரிமை வழங்கியிருந்தார்கள். நாம் விற்பனை வரி செலுத்துகிற வியாபாரிகளுக்கு 75 ஆயிரம் வரை கம்பவுண்டிங் செய்துகொள்ள வகை செய்திருக்கிறோம். 75 ஆயிரம் வியாபாரம் என்றால் குறைந்த பட்சம் 7,500 லாபம் கிடைக்கும். 2,500 விற்பனை வரி மூலம் கிடைக்கும். அவர்களுக்கு கம்பவுண்டிங் செய்து கொள்ள அனுமதி கொடுத்திருக்கிறோம். ஆனால் விவசாயிகளுக்கு அந்த உரிமையை மறுத்திருக்கிறோம் என்பதை மறந்துவிடக்





டாது. காலையில் பலகாரம் சாப்பிட்டுவிட்டு கல்லாப்பெட்டியில் ட்கார்ந்து, காலை இட்டிலி, பிற்பகல் சுடுசோறு, மாலை பலகாரம், ரவு சுடுசோறு, பாலும் பழமும், மெத்தையில் படுத்துறங்கும் யாபாரிகளுக்கு இந்தச் சலுகை. ஆனால் விவசாயிகளுடைய லை நமக்குத் தெரியும். வாழ்க்கை வசதி எதுவுமின்றி இரவு கலாக காட்டிலும், வீட்டிலும் உழைப்பவர்களுக்கு அந்தச் லுகை மறுக்கப்படுகிறது. ஆனால், அதே நிலையிலுள்ள வியாபாரி மு.ப 10- ன்னுடைய வீட்டிலுள்ள பெண்டு பிள்ளைகள் எல்லாம் காலையிலே ராடி, மாலையிலே பூச்சூடி, என்ன என்ன வசதிகள் வேண்டு ாலும் அவைகளையெல்லாம் செய்துகொள்ளும்படியான நிலைமை ல் வாழ்க்கையை நல்லபடியாகச் செய்துகொள்கின்றான். அந்த யாபாரிக்குக்கூட நீங்கள் வசதிகளைச் செய்து கொடுத்துவிட்டு மை விவசாயிகளை வாடவிட்டிருக்கிறீர்கள். 3,500 ரூபாய் ருமானம் வரும், அதற்குமேல் வேறு ஆதாயங்கள் வரும் என்று சால்லி வந்தால் விவசாயிகள் என்ன செய்வார்கள். . . . . . மணியடிக்கப்பட்டது) விவசாயி நல்ல பால் மாடுதான். பால் ாட்டுக்கு நல்ல உணவு அளித்தால்தான் நல்ல பால் கொடுக்கும். ல்ல ஊட்டம் கொடுக்கவில்லையென்றால், மாடு உதைக்கிற தையிலே பால் கறக்கிறவனுக்குப் பல் போய்விடும் என்று சால்லிக் கொள்கிறேன். பசு பால் கொடுக்கிறதென்று கருதி, டியை ஒட்ட அரிந்து சாப்பிட வேண்டுமென்பது நல்ல புத்தி ாலித்தனமான காரியம் அல்ல. ஆகவே, விவசாயிகளுடைய ஷ்டத்தை நீக்கி, விவசாயக் குடும்பங்கள் சுகமாக வாழ வகை செய்து, நாட்டை வாழ்விக்க வேண்டுமே தவிர, விவசாய ருமானச் சட்டத்தைப் பிரயோகித்து, நிலவரியை மட்டும் வஜா செய்து கொடுப்பது போதாது என்பதைத் தெரிவித்துக் கொண்டு ன் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* திரு. ஏ. எம். ராஜா : தலைவர் அவர்களே, 1967-68-ம் ஆண்டுக் ான நிதிநிலை அறிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த ற்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய கருத்துக் ளைச் சொல்ல விரும்புகின்றேன். தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் கொண்டு வந்துள்ள நிதிநிலை அறிக்கை, தமிழ் நாட்டிலே சோஷலிச சமுதாயத்தை ஏற்படுத்தும் முன்னோடியாக இருப்பதைக் கண்டு இந்நாட்டு மக்கள் உளமாரப் பாராட்டி வரவேற்கின்றனர்.

இன்றையதினம் விரிவான வருவாய்த் துறைகள் அனைத்தும் மத்திய சர்க்காரின் பொறுப்பிலேதான் இருக்கின்றன. இந்நாட் டின் அரசியலமைப்பும், அதன் விதிகளும், திட்டமிட்ட பொருளா தாரத்தின் கீழ் எழுந்த நெறிமுறைகளும், வளர்ந்த மரபுகளும் மாநில அரசுகளை மத்திய சர்க்காரிடம் கையேந்தி நிற்கும் நிலை யிலேதான் வைத்திருக்கின்றன. மாநில அரசுகளின் கடன் பொறுப்புக்கள் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக்கொண்டே வரு கின்றன. 1950-ல் 12 கோடியே 30 லட்சமாக இருந்த இம்மாநிலத்

[திரு. ஏ. எம். ராஜா] [1967 ஜூன் 26

தின் கடன் 1967-ல் 300 கோடி ரூபாயாக வளர்ந்திருக்கிறது. அதே போல் 1950-51-ல் 41 லட்சமாக இருந்த வட்டித் தொகை 14 கோடி ரூபாய் என்ற அளவில் உயர்ந்திருக்கிறது. "பெரும்பாலான மாநிலங்களில், இந்த வட்டித் தொகையே நடப்பு ஆண்டில் பெரும் பகுதியை விழுங்கி விடுகிறது. வருங்காலத்தில் மேலும் அதிக அளவில் நிலைமை சீர்கேடு அடையும்" என்று கூறும் மூன்றும் நிதிக் குழுவின் அறிக்கையை நாம் மறந்துவிடக்கூடாது.

ஏறிவரும் விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதன் முதற் படியாக தமிழக அரசு சட்ட முறையில் பங்கீடு செய்யப்பட்டுள்ள பகுதிகளில் ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்ற திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தி வரும் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களையும், உணவு அமைச்சர் திரு. மதியழகன் அவர்களையும் இந்த நாட்டு மக்கள் தங்கள் இதயக் கோவிலில் வைத்துப் போற்றுகின்றனர். ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்ற திட்டத்தின் மூலம் இந்த நாட்டுக்கு ஆண்டுக்கு 5 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படும். இந்த நஷ்டத்தை ஈடுகட்ட தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் மத்திய அரசிடம் எவ்வளவோ எடுத்துக்கூறி, இந்தத் திட்டத்திற்கு உதவி செய்யும்படிக் கேட்டும் மத்திய அரசு மறுத்துவிட்டது. ஆனால் அதே தருணத்தில் இறக்குமதியாகும் உணவுப் பொருள்களையே நம்பியிருக்கும் வடக்கு மாநிலங்களுக்கு மட்டும் உதவித் தொகை கொடுத்து வருகிறது. வடக்கு மாநிலங்களுக்கு உணவுப் பொருள்களுக்காக ஆண்டுக்கு 118 கோடி ரூபாய் அளவில் உதவித் தொகை வழங்கிக் கொண்டு வருகிறது. மத்திய அரசு நேர்மையான மனப்போக்கு உடையதாக இருந்தால் நிச்சயமாக, தமிழகத்தில் ரூபாய்க்கு படி அரிசி திட்டத்தினால் ஏற்படும் நஷ்டத்திற்கு உதவித் தொகையை வழங்க முன்வந்திருக்கும்.

மற்றொன்று. உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கு ரசாயன உரங்கள் மிகவும் அவசியமான ஒன்றாகும். இந்த இரசாயன உரத்தை மத்திய அரசு, தமிழக அரசுக்குத் தேவையான அளவு எப்போதுமே கொடுத்ததில்லை. தமிழக அரசு தம்முடைய தேவையை எந்த அளவுக்கு எடுத்துக்கூறினாலும், மத்திய அரசு, ஓரளவு இம்மாநிலத்திற்கென்று ஒதுக்கிய அளவைக்கூட முழுவதுமாகக் கொடுப்பதும் இல்லை. கடந்த மூன்று ஆண்டுகளில் நமக்கு தேவைப்பட்ட ரசாயன உர அளவில், மத்திய அரசு பாதிப் பங்கைத்தான் கொடுத்து வந்திருக்கிறது. அதேபோல மாநில அரசின் திட்டங்களுக்கெல்லாம் தொகை கொடுக்கும்போது எல்லாம் மத்திய அரசு பிடிவாதமாக மறுத்தே வந்திருக்கிறது. இந்நிலையில் தமிழக அரசு தன்னுடைய நிதிநிலை அறிக்கையில் பாசனத்திற்காகவும், மின்சாரத்திற்காகவும் 40 சதவிகிதத்தை ஒதுக்கியிருக்கிறது. சிறுபாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டால் விரிவாகவும், விரைவாகவும் ஒருபோக நிலங்கள் எல்லாம் இருபோக நிலங்களாக மாற்றப்பட்டு உணவு உற்பத்திப் பெருக்கம் குறிப்பிடத்தக்க அளவில் பெருகும்.



1967 ஜூன் 26] [திரு. ஏ. எம். ராஜா]

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நமக்குத் தேவைப்படுவது ரூபாய் 100 கோடி. நடப்பு ஆண்டில் 20 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. மத்திய அரசு தமிழக அரசின்பால் நியாயமாக நடந்துகொள்ள வேண்டுமென்ற நல்லெண்ணம் வைத்திருந்தால் இந்தத் தொகையை உதவியாக வழங்க முன்வரவேண்டும். ஆனால் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் இதற்கான தொகையை கேட்டபோது மத்திய அரசு கொடுத்த பதில் திருப்திகரமாக இல்லை.

அடுத்தாற்போல், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பெரும் தொழிலுக்கும், சுரங்கத் தொழிலுக்கும் 3,751 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தமிழக அரசுக்கு நியாயமான பங்கு ஒதுக்கப்பட்டால் சேலம் உருக்காலைத் திட்டத்தையும், தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத் திட்டத்தையும் நிச்சயமாக நிறைவேற்றிவிட முடியும். ஆனால் மத்திய அரசு ஒதுக்கிய தொகை 100 கோடி ரூபாய்க்கும் குறைவாக இருக்கும்போல் தெரிகிறது. கனரகத் தொழிலுக்கு வேண்டிய மூலப்பொருள்களான இரும்புக் கனியும், நிலக்கரியும் தமிழகத்திலே கிடைக்கும்போது உருக்காலையை ஏற்படுத்தாமல் இருப்பது நியாயம் அல்ல. தமிழக மக்களின் விருப்பத்திற்கிணங்க மாநில அரசே உருக்காலையை ஏற்படுத்த முன்வந்து, அனுமதி கோரியபோதும் மத்திய அரசு அனுமதி தராமல் காலத்தை தட்டிக் கழித்துக்கொண்டு வருவது தமிழக மக்களின் உள்ளக்குமுறலைக் கிளப்புகின்ற செய்கையாகவே இருக்கிறதென்பதை இந்த மன்றத்தின்மூலம் மத்திய அரசுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். (மணி அடிக்கப்பட்டது.)

* திரு. கோ. பூவராகன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, முதன் முறையாகப் புதிய அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, இந்தத் தமிழ்நாடு 1967-68-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் இங்கே சபை முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கிறது. இப்போதைய ஆளும் கட்சியினர் ஏற்கனவே தேர்தல் காலங்களிலே, உடனடியாக நிறைவேற்றக்கூடிய சில காரியங்களைக் குறிப்பாக எடுத்துச் சொன்னார்கள். அந்தக் காரியங்களிலே ஒரு சிலவற்றையாவது இந்த வரவு-செலவுத் திட்டத்தில் குறித்திருக்கின்றார்களா என்று பார்த்தால், இதிலே ஒன்றுமே குறிப்பிடப்படவில்லை. அவற்றை இதிலே எதிர்பார்த்திருந்தவர்களுக்கு ஏமாற்றத்தை அளிக்கக்கூடிய அளவிலே இந்த நிதி நிலை அறிக்கை அமைந்திருக்கிறது.

பொதுவாக, புதிய பொறுப்பு ஏற்றுக்கொண்டால் தமிழ் மிகவும் ஏற்றம் பெறும் என்று சொன்னார்கள். அந்தத் தமிழ் மொழி வளர்ச்சியைப்பற்றி இந்த நிதி நிலை அறிக்கையிலே எங்குமே காணோம். அடுத்து, ஊதிய உயர்வு, அகவிலைப் படி உயர்வு, நகர ஈட்டுப் படி இவையெல்லாம் உடனடியாகக் கிடைக்

கும் என்றார்கள். அது எப்போது கிடைக்கும்? ஏன் கிடைக்கவில்லை? என்பதைக் குறித்தும் ஒரு சிறிதும் இந்த அறிக்கையிலே காணப்படவில்லை.

விவசாயிகளுக்குத் தொல்லை இருக்காது என்று சொன்னார்கள். ஆனால், விவசாயிகளுக்கு மேலும் தொல்லையை விளைவிக்கக்கூடிய அளவிற்கு இன்றைய தினம் விவசாய வருமான வரியைத் திருத்தியமைத்திருக்கிறார்கள். இப்படிப் பல காரியங்களிலே எடுத்திருக்கிற முயற்சிகளைப் பார்க்கும்போது, அவர்கள் கொடுத்த வாக்குறுதிக்கும் இங்கே எடுத்திருக்கும் முயற்சிக்கும் மிகுந்த ஏமாற்றத்தைக் கொடுக்கக்கூடிய அளவிலே இருக்கிறது.

இந்த வரவு-செலவுத் திட்டத்திலே முழுக்க முழுக்க மத்திய அரசாங்கத்தினுடைய கொள்கை, வரி விதிப்புகள், மாநில அரசாங்கம் எந்த அளவிற்கு அதனால் பாதிக்கப்பட்டிருக்கிறது, மாநில அரசாங்கத்தினுடைய பொறுப்புகள் இவற்றைப்பற்றியெல்லாம் அதிகமாக விவாதிக்கப்பட்டிருக்கிறது. மாநில அரசாங்கத்திற்கு மத்திய அரசாங்கம் வெறுமனே கடன் மட்டும் வழங்குகிறது. அந்தக் கடனுக்கு வட்டி வாங்குகிறது என்று இதில் குறித்திருக்கிறார்கள். மாநில அரசாங்கத்திற்கு மத்திய அரசாங்கம் கடன் மட்டும் வழங்கவில்லை, மானியமும் வழங்குகிறது. மானியமாக எத்தனை கோடி ரூபாய் வழங்குகிறது என்பதைக் குறித்த விவரத்தை இந்த நிதி நிலை அறிக்கையின் இணைப்பில் சேர்த்திருக்கிறார்கள். மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்திற்கு ஒதுக்கும் தொகையில் 25 சதவீதத் தொகையை மானியமாக அளிக்கிறார்கள். மத்திய அரசாங்கம் இந்த மாநிலத்தைப் புறக்கணித்துவிட்டது, ஒன்றுமே செய்யவில்லை, இந்த நாட்டில் வளர்ச்சி இல்லை என்று சொல்லுகிறார்கள். மத்திய அரசாங்கம், தமிழ்நாட்டைப் பொறுத்த அளவிலே, கிட்டத்தட்ட 300 கோடி ரூபாய் வரையில் இன்றைய தினம் தொழில் நிறுவனங்களில் முதலீடு போட்டிருக்கிறது. இதன் மூலம் வேலை வாய்ப்பு அதிகரித்திருக்கிறது. நெய்வேலித் திட்டத்தை எடுத்துக்கொண்டால் 160 கோடி ரூபாய்க்குத் திட்டமிட்டிருக்கிறார்கள். 18,000 பேருக்கு வேலை வாய்ப்புத் தேடிக் கொடுத்திருக்கிறார்கள். ஆண்டொன்றுக்கு நான்கு கோடி ரூபாய் சம்பளமாகப் பெறத்தக்க அளவிற்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், இந்தியாவிலேயே அதிக அளவில் உரம் தயாரிக்கின்ற ஒரு பெரிய உரத்தொழிற்சாலையை அங்கே நிறுவியிருக்கிறார்கள். திருச்சிக்குச் சென்றால், பாய்லர் தொழிற்சாலையொன்றை 25 கோடி ரூபாய் முதலீட்டில் அங்கே ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஒரு பாய்லர்—முழுக்க முழுக்க எல்லா உறுப்புக்களையும் சேர்த்து—இரண்டரை கோடி ரூபாய் அளவிலே விலைக்குப் போகக்கூடிய அளவிற்கு அங்கே தொழிற்சாலையை அமைத்திருக்கிறார்கள். திருச்சியில், சிறுரக ஆயுதத் தொழிற்சாலையையும் அமைத்திருக்கிறார்கள். உலகத்திலேயே ரயில் பெட்டிகளைத் தயாரிக்கக்கூடிய பெரிய தொழிற்



சாலைகளில் நம்முடைய பெரம்பூர் தொழிற்சாலையும் ஒன்று என்று கருதக்கூடிய அளவிற்கு பெரம்பூர் ரயில் பெட்டித் தொழிற்சாலை அமைந்திருக்கிறது. அங்கே பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலையிலே அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அங்கே ஆண்டொன்றுக்கு 750 ரயில் பெட்டிகள் தயாரிக்கப்படுகின்றன. சென்னையை அடுத்த ஆவடியில் டாங்க் பாக்டரியொன்றை ஆரம்பித்திருக்கிறார்கள். நந்தம்பாக்கத்தில் சர்ஜிகல் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் பாக்டரியொன்றை ஆரம்பித்திருக்கிறார்கள். உதகையில் ஃபோட்டோ ஃபிலிம் தொழிற்சாலையை 11 கோடி ரூபாய் செலவில் ஆரம்பித்திருக்கிறார்கள். இப்படி 300 கோடி ரூபாய் வரையில் மத்திய அரசாங்கம் நம்முடைய மாநிலத்திலே முதலீடு செய்திருக்கிறது. அதை இந்த மன்றத்திலே இருக்கிறவர்களில் ஒருவரும் எடுத்துச் சொல்லவில்லை. மாநில அரசாங்கத்தை மத்திய அரசாங்கம் புறக்கணித்துவிட்டது என்று சொல்லுகிறார்கள். அது சரியல்ல. மணலியில் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையும், அதைத் தொடர்ந்து உரத் தொழிற்சாலையும் ஆரம்பிப்பதற்கு அனுமதி கிடைத்திருக்கிறது. கல்பாக்கத்தில் அணு மின்சார நிலையம் ஆரம்பிக்க அனுமதி கொடுத்திருக்கிறார்கள்.

இப்பொழுதிருக்கும் பிரச்சினை என்னவென்றால், சேலம் இரும்புத் தொழிற்சாலை, தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத் திட்டம் ஆகியவற்றை ஆரம்பிப்பதைக் குறித்துப் போராட்டம் நடத்த வேண்டும், கிளர்ச்சிகள் நடத்தவேண்டும் என்றெல்லாம் சொல்லுகிறார்கள். நான் சற்று முன்னால் குறிப்பிட்ட தொழிற்சாலைகளைத் துவங்குவதற்காக முன்பிருந்த அரசாங்கம் போராட்டம் நடத்தியோ, கிளர்ச்சி நடத்தியோ அல்லது கண்டனக் குரல் எழுப்பியோ இவற்றையெல்லாம் இந்த மாநிலத்திற்குப் பெற்றுத் தரவில்லை. சேலம் இரும்பாலைத் திட்டமும், தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத் திட்டமும் வருவதிலே எங்களில் ஒருவருக்கும் ஆட்சேபணை இருக்க முடியாது. ஆனால், அவற்றை எப்படிப் பெறுவது என்பதிலேதான் கருத்து வேறுபாடுகள் இருக்க முடியுமே தவிர, அந்தத் திட்டங்கள் வரவேண்டும் என்பதிலே ஒருவருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. அவற்றை எந்த முறையில் பெறவேண்டும் என்பதிலேதான் எல்லோருக்கும் இருக்கின்ற ஒரு கருத்து வேறுபாடாக இருக்கிறது. இந்த நிலையில் இவ்வாறு மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்திற்கு உதவி அளித்துக்கொண்டு வருவதை நாம் பார்க்கிறோம்.

மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்குப் பதினான்கு கோடி ரூபாய் வட்டி கட்ட வேண்டியிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதே அறிக்கையில் மாநில அரசுக்கு வர வேண்டிய வட்டித் தொகை 19½ கோடி ரூபாய் என்று குறித்திருக்கிறார்கள். மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை வட்டியைத் தள்ளிக் கொடுக்க வேண்டும் என்று கேட்க முற்பட்டால், நமக்குக் கீழே மாநில அரசாங்கத்திற்கு வட்டி செலுத்துகிறவர்கள் எங்க

வட்டியைத் தள்ளிக் கொடுக்க வேண்டும் என்று கேட்பதற்கு ஒரு ஏது இருக்கும். அவ்வாறு அறிக்கைகள் கூட நமது முதல் அமைச்சர் அவர்களிடத்தில் வந்திருக்கின்றன என்று நான் கேள்விப்படுகிறேன். அந்த வட்டியை இந்த மாநில அரசாங்கம் எந்த அளவிற்குத் தள்ளிக் கொடுக்க உத்தேசித்திருக்கிறார்களோ, நான் அறியேன்.

இந்த மன்றத்திலே கூட, மத்திய அரசாங்கத்தைப்பற்றி நாம் விவாதித்திருக்கிறோம். இந்த அறிக்கையிலே கூட, அதுவே கண்ணுங்கருத்துமாகக் கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது. மாநில அரசாங்கத்திற்குக் கீழிருக்கும் அமைப்புகள் நகர மன்றங்களும், பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்களுமாகும். வரி போடுவதற்கும், பட்ஜெட் போடுவதற்கும், அதை அவர்கள் செலவிடுவதற்கும் அவைகளுக்கு வழிவகை கொடுத்திருக்கிறோம். நகர மன்றங்களானாலும் சரி, பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்களானாலும் சரி, அந்த மன்றங்களுக்கு, அவர்கள் எண்ணுகின்ற அளவுக்கு, அவர்களுடைய ஆசையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்குப் போதுமான நிதியைத் தமிழ்நாட்டு அரசாங்கம் ஒதுக்க முடியாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கக்கூடும். இன்றைய தினம் கூட இந்த பட்ஜெட் அறிக்கையில் பார்த்தால், பொதுவாக, குடி தண்ணீர்ப் பிரச்சினையை எடுத்துக்கொண்டால், ஒரு சில நகரங்களுக்குக் குடி தண்ணீர் வழங்கியிருக்கிறார்கள்; அநேக நகரங்களுக்குக் குடி தண்ணீர் வேண்டும் என்ற கோரிக்கையை விட்டு விட்டிருக்கிறார்கள். கடன்கள் மூலமாகவும், மானியங்கள் மூலமாகவும், கிராமப்புறங்களுக்கும் உதவ வேண்டுமென்று கோரிக்கைகள் விடப்பட்டிருக்கிறேன். கிராமப் புறங்களில் கூடி குடி தண்ணீர்ப் பிரச்சினை வெகுவாக இருக்கிறது, கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும் கடன்களும் மானியங்களும் வேண்டும் என்று அவர்கள் கேட்கிறார்கள். நமது தமிழ்நாட்டு அரசாங்கம், கீழுள்ள பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்களுக்கும் நகர மன்றங்களுக்கும் இந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத ஒரு நிலைமை இருக்கிறது. அதை வைத்துக் கொண்டு, பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்களிலும், நகர மன்றங்களிலும் அவர்கள் விவாதிக்கின்றபோது, இவ்வாறு நகர மன்றங்களுக்கும் பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்களுக்கும் தமிழ்நாட்டு அரசாங்கம் உதவி கொடுக்க முடியவில்லை. இந்தத் திட்டங்களை நாங்கள் நடத்த முடியவில்லை, ஒரு வேளை கிளர்ச்சி நடத்த வேண்டுமோ, கண்டனக் குரல் எழுப்பவேண்டுமோ, எப்படிப் பெறுவது என்ற விவாதத்தைக் கிளப்புவதற்கு ஒரு ஏதுவாக இந்த பட்ஜெட் அமைந்திருக்கிறது. இதையெல்லாம் தவிர்ப்பதற்கு முதல் அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்திருக்கவேண்டும் என்று என்னைப்பொறுத்த வரையில் நான் கருதுகிறேன். அவர்களுக்கு நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. டில்லிக்குச் சென்று பிரதம அமைச்சர் அவர்களையும், சம்பந்தப்பட்ட அமைச்சர்களையும் சந்தித்து, இது சம்பந்தமாக உரையாடி, அதைப் பெறுவதற்கு அவர்களுக்கு நிறைய சந்தர்ப்பம் இருக்கிறது.



அதற்காகத் தமிழ் நாட்டிலே கிளர்ச்சிகளோ, கண்டனக்குரலோ, போராட்டமோ நடத்த வேண்டிய அவசியம் இருந்திருக்க வேண்டிய நிலை இல்லை என்பதை இந்தச் சமயத்திலே நான் கூறிக் கொள்ளுவேன்.

அது மாத்திரமல்ல. வரியைக் குறைப்போம், வசதியைப் பெருக்குவோம் என்று சொன்னார்கள். ஏற்கனவே இருந்த அரசாங்கம், தமிழ்நாட்டு மக்கள் மீது நிறைய வரியைச் சுமத்தி விட்டார்கள் என்று சொன்னார்கள். வரியைச் சுமத்திவிட்டார்கள், அந்த வரியை 40 சத வீதம் குறைத்து, 60 சத வீதம் வசதியைப் பெருக்க நாங்கள் இருக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால், ஏற்கனவே இருந்த அரசாங்கம் வரி விதித்த அந்தப் பண்டங்கள் மீதே இப்பொழுது இவர்களும் வரியை அதிகமாகச் சுமத்தி இருக்கிறார்கள். ஏதோ புதிய வரி போடுவதற்கு யத்தனித்திருக்கக்கூடும், புதிய முறையில் வரியை மாற்றியமைப்பதற்கு யத்தனித்திருக்கக்கூடும் என்று நினைத்திருந்த நிலையில், அந்த நிலை இன்றையதினம் இங்கே காணப்படவில்லை. எந்தப் பொருட்கள் மீது ஏற்கனவே இருந்த அரசாங்கம் அதிகமாக வரியைச் சுமத்தி விட்டார்கள் என்று சொன்னார்களோ, அந்தப் பொருட்கள் மீதே இன்றையதினம் வரியை இன்னும் அதிகமாகக் கூட்டியிருக்கிறார்கள். வரி விதிப்பினால் மக்களுக்குத் தொல்லை ஏற்பட்டு, விலைவாசி ஏற்றம் ஏற்பட்டு, அவர்களுக்குக் கஷ்டம் கொடுக்கக்கூடிய நிலைமை தான் இன்றையதினம் இருந்துகொண்டிருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். எண்ணெய் வித்துக்கள், வேர்க்கடலை போன்ற பல பண்டங்கள் மீது விற்பனை வரியைக் கூட்டியிருக்கிறார்கள். அதைக் குறைக்க அரசாங்கம் மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று இந்தச் சமயத்தில் நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மோட்டார் வண்டி வரியையும் அதிகமாக்கியிருக்கிறார்கள். இதன் காரணமாக, மோட்டார்ப் போக்குவரத்தை அதிகமாக உபயோகப்படுத்தக்கூடிய நடுத்தர வர்க்கத்தினரும், கீழ் மட்டத்தில் இருக்கக்கூடிய ஏழை எளிய மக்களும் மிக அதிகமாகப் பாதிக்கப்படுவார்கள் என்பதை இந்தச் சமயத்தில் நான் கூறிக் கொள்ளுகின்றேன்.

மேலும் புகுமுக வகுப்பிலே படிக்கின்ற மாணவர்களுக்கு இலவசக் கல்வி கொடுக்கவேண்டுமென்று முன்னாலே இருந்த அரசாங்கம் திட்டமிட்டிருந்தது. அதற்காக ஆகும் செலவு அதிகம் ஒன்றுமில்லை, 50 லட்ச ரூபாய்தான் செலவாகும். அந்தச் செலவை புதிய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், அதிலே திருத்தம் கொண்டுவந்திருக்கிறார்கள். அதாவது 1,500 ரூபாய் அல்லது 2,000 ரூபாய்க்கு மேற்படாத வருட வருமானம் உள்ளவர்களுடைய பிள்ளைகளுக்குத்தான் சம்பளச் சலுகை உண்டு என்று கொண்டுவந்திருக்கிறார்கள். இதனால் பெற்றோர்களுக்குப் பல சங்கடங்கள், கஷ்டங்கள் ஏற்படும். எல்லா மாணவர்களுக்குமே

[திரு. கோ. பூவராகன்] [1967 ஜூன் 26

சம்பளச் சலுகையைக் கொடுக்கவேண்டும். இப்பொழுது 10 லட்ச ரூபாய் சேரணி அமைப்பதற்கென்று ஒதுக்கியிருக்கிறார்கள். அந்தப் பத்து லட்ச ரூபாயை அரசாங்கம் ஏன் ஏழை மாணவர்களின் இலவசக் கல்விக்காக ஒதுக்கக்கூடாது? அப்படி ஒதுக்கியிருக்க முன்வந்திருக்கவேண்டும். சேரணியை எடுத்துக் கொண்டால், ஏற்கனவே கிராமங்களிலே எல்லாம் கிராமத் தொண்டர் படை இருக்கிறது. அதிலே அறிவும், ஆர்வமும் உள்ளவர்கள் எல்லாம் சேர்ந்து நல்லமுறையிலே பணியாற்றி வந்திருக்கிறார்கள். இப்பொழுது அதைத் தவிர ஒரு மாவட்டத்திற்கு ஆயிரம் பேர் என்று திரட்ட அதற்காக பத்து லட்ச ரூபாய் செலவு செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். முன்னோடியாகத்தான் இந்த பத்து லட்ச ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். இது கோடி அளவிலே சென்றாலும் செல்லலாம். ஆரம்பத்திலே இது எளிதாக இருக்கலாம், சுலபமாக இருக்கலாம் என்ற எண்ணத்திலே இதைச் செய்கிறார்களே தவிர, இதனால் என்ன பலன்கள் ஏற்படும் என்று எதிர்பார்க்கிறார்களோ தெரியவில்லை. ஏற்கனவே தொண்டர் படை ஏற்படுத்தப்பட்டு, அதற்காக பத்து லட்ச ரூபாயைக் கொடுத்து, அதிலே பஞ்சாயத்து அலுவலர்கள், மெம்பர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள் இன்னும் மற்ற அதிகாரிகள் எல்லாம் இருந்து, அவர்களையெல்லாம் வைத்துக்கொண்டு பணியாற்றக்கூடிய சந்தர்ப்பம் இருக்கிறபோது, இப்பொழுது தனியாக ஒரு சேரணி ஏற்படுத்தி அதற்குச் செலவு செய்யவேண்டிய அவசியமே இல்லை. சில நல்ல காரியங்களைச் செய்வதற்கு சங்கடங்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். இப்பொழுது இந்தச் சேரணிக்காக ஒதுக்கியிருக்கிற பத்து லட்ச ரூபாயைத் தடுத்திருக்கலாம்; அதன் மூலம் அந்தக் காரியங்களைச் செய்யலாம். ஆகவே இந்தச் சேரணியை ஏற்படுத்தாமல், கிராமத் தொண்டர் படை மூலமாக சீர்திருத்தங்களைச் செய்யவேண்டுமென்றுதான் நான் சொல்வேன்.

விவசாய வருமான வரியை இப்பொழுது திருத்தியமைத்திருக்கிறார்கள். எனக்கு முன்னால் பேசிய பல நண்பர்கள் இந்த விவசாய வருமான வரியைப்பற்றி சொல்லியிருக்கிறார்கள். அதிலே ஏற்படும் சங்கடங்களைச் சொல்லியிருக்கிறார்கள். பணப்பயிர் செய்கின்றவர்கள் எல்லாம் இப்பொழுது கணக்கு வைத்துக் கொள்ளக் கூடிய நிலைமை தான் ஏற்படுத்தியிருக்கிறார்கள். என்னுடைய மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், கிட்டத்தட்ட 8½ லட்சம் ஏக்கரில் மணிலா பயிரிடப் படுகிறது. எல்லாப் பகுதிகளும் வானம் பார்த்த பூமிதான், வானம் பொழியவில்லையென்றால் பயிர் விளையாது. எனவே இந்தக் கஷ்டத்தால் விவசாயிகள் எல்லாம் கணக்கு வைத்துக்கொள்ளவேண்டிய நிலை ஏற்படுகிறது. இதைத் தடுக்கின்ற முறையில் ஏற்கனவே இருந்த முறைப்படி கம்பவுண்டிங் சிஸ்டத்தையே கொண்டுவரவேண்டும். ஒன்றிரண்டு ஏக்கர்கள் வைத்திருக்கக்கூடிய விவசாயிகள் கணக்குகள் வைத்துக்கொள்ளக்கூடிய கஷ்டங்கள் இருக்கின்றன. அதைத்தவிர இதன் மூலம் வருமானம் வருமா என்றால், என்னைப்பொறுத்தவரை



1967 ஜூன் 26] [திரு. கோ. பூவராகன்]

யில் வராது என்றுதான் கருதுகிறேன். ஏனென்றால் வரி நிர்ணயிருக்கும்பொழுது அந்த வரியை உடனடியாக விவசாயிகள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். காலம் கடக்கும். அடுத்த ஆண்டுதான் வரி வசூலிக்கவேண்டிய நிலையை ஏற்படும். இதனால் வருமானம் பாதிக்கப்படும்.

தொழிற்சாலைகளை எடுத்துக்கொண்டால், புதிய தொழிற்சாலைகள் இல்லை இந்த நிதி நிலை அறிக்கையிலே. நாட்டிலே தொழில் வளர்ச்சி ஏற்படவில்லையென்று சொல்கிறார்கள். சென்னைப் பக்கத்திலே உள்ள அம்பத்தூர், திருவொற்றியூர், திருவான்மியூர், எண்ணூர், நந்தம்பாக்கம், கிண்டி போன்ற இடங்களைப் பார்த்தால் தெரியும், தொழில் எப்படி வளர்ச்சியடைந்திருக்கிறதென்பது. அம்பத்தூரை எடுத்துக்கொண்டால், அங்கே மூன்று லட்சம் சைக்கிள்கள் தயாரிக்கிறார்கள். வண்டலூர் தொழிற்சாலையை எடுத்துக்கொண்டால் மோட்டார் தொழில் நடைபெறுகிறது. வெல்டிங் செய்யும் தொழிற்சாலை இருக்கிறது. இப்படியிருந்தும் கூட வளர்ச்சியில்லை என்று சொல்கிறார்கள். இந்த நிதி நிலை அறிக்கையில் புதிய தொழில்கள் வளர்வதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா என்று பார்க்கும்பொழுது இல்லையென்றுதான் சொல்லவேண்டும்.

அடுத்தபடியாக கைத்தறி நெசவாளர்களையும், தொழிற்சாலைகளிலே வேலைசெய்கிறவர்களையும் எடுத்துக்கொண்டால், அவர்களுக்கெல்லாம் ஒரு நெருக்கடியான நிலை ஏற்படும் என்று எச்சரித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஒன்றிரண்டு மாதங்களுக்கு முன்னால் கோவையிலே மில்கள் மூடிவிடப்பட்டன. அங்கே வேலை பார்த்தவர்கள் எல்லாம் வேலைவாய்ப்பில்லாமல் இருக்கிறார்கள். அதைப் போக்குவதற்கு என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்ற விவரம் இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்படவில்லை. கைத்தறி நெசவாளர்கள் பற்றியும் ஒருவரிக்கூட இல்லை. அவர்களுக்கு வேண்டிய உதவிகள் அவர்கள் நல் வாக்ழ்கை வாழ்வதற்குத் தேவையானவற்றை அமைப்பதற்கு என்ன முயற்சிகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதும் தெரியவில்லை. தமிழ் ஏற்றம் பெறுதற்கு நிதிநிலை அறிக்கையிலே ஒன்றும் சொல்லப்படவில்லை. முன்னாலே இருந்த அரசாங்கம் தமிழ் வளர்ச்சிக்கு ஒன்றும் செய்யவில்லை என்று கூறுகிறார்கள். முன்னாலே இருந்த அரசாங்கம் செய்ததைக்கூட இந்த அரசாங்கம் செய்யுமா செய்யாதா என்பதற்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒன்றும் சொல்லப்படவில்லை. தமிழ் வளர்ச்சிக்கு முன்னால் இருந்த அரசாங்கம் பல காரியங்களைச் செய்திருக்கிறது. தமிழ் வளர்ச்சிக் கழகம் என்று ஒரு தனித் துறை அமைத்து, அதைக் கவனிப்பதற்காக தமிழ் வளர்ச்சியிலே ஆக்கமும், ஊக்கமும் உள்ள ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியைப் போட்டார்கள். டில்லி தமிழ் சங்கத்திற்கு ஒரு லட்ச ரூபாய் கொடுத்து இருக்கிறார்கள். பெங்களூர் தமிழ்ச் சங்கக் கட்டடத்திற்கு ஐம்பதாயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். பல நான்

[திரு. கோ. பூவராகன்] [1967 ஜூன் 26

களைப் பதிப்பித்து இருக்கிறார்கள் முந்திய அரசு. நல்ல நூல்கள், ஆங்காங்கு உள்ள சுவடிகளில் மாவட்டங்களிலே, கிராமப் புறங்களிலே கிடைக்கும் சுவடிகள் எல்லாம் எடுத்து வல்லுநர்களின் முயற்சியால் நன்கு பரிசீலனை செய்யப்பட்டு அவற்றையெல்லாம் நூல்களாகக் கொண்டுவருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நூல் நிலையங்களில் பழுதடைந்த நூல்களையும் புதுப்பித்துப் பதிப்பிக்கவேண்டும். அப்படிப் பதிப்பிக்கின்ற பொறுப்பையும் தமிழ் வளர்ச்சிக் கழகம் எடுத்துக்கொள்ள வேண்டும். மேல் நாடுகளிலே நம்முடைய நூல்கள் பரவலாகப் படித்துப்பயன் பெறத்தக்க வகையில் ஒரு நிலைமையை ஏற்படுத்த அதற்காக ஒரு தனித்துறையை இந்த அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும். தமிழ் வளர்ச்சிக்கு மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டு புராதன இடங்களையெல்லாம் ஆராய்ச்சி செய்து அவற்றைப் புதுப்பித்து நல்ல முறையிலே பயனுள்ளவையாக ஆக்க வேண்டும். எனக்கு நேரமில்லாத காரணத்தினாலே சுருக்கமாக முடித்துக்கொள்கிறேன். இந்த பட்ஜெட் மூலம் யார் யார் எதையெதை எதிர்பார்த்தார்களோ, அவையெல்லாம் இல்லாமல் இருக்கிறது, அவர்களையெல்லாம் ஏமாற்றக்கூடிய வகையில் அமைந்திருக்கிறது. குறிப்பாக அரசாங்க ஊழியர்களுக்கு ஒன்றுமே இதிலே குறிப்பிடவில்லை. இரண்டு மூன்று தினங்களுக்கு முன்னாலே அரசங்க ஊழியர்கள் ஒன்றுகூடி காரசாரமாக விவாதம் செய்திருக்கிறார்கள். அதுபற்றி முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். அவர்கள் எல்லாம் முதலமைச்சர் அவர்களைப் பார்ப்பதற்குப் பதிலாக பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களைப் பார்த்திருக்கிறார்கள். நான் ஒருவரிடம் கேட்டேன், ஏன் நீங்கள் முதலமைச்சரை பார்க்காமல் பொதுப்பணித்துறை அமைச்சரை பார்த்தீர்கள் என்று. அதற்கு அவர் சொன்னார், பொதுப்பணித்துறை அமைச்சரைப் பார்த்தால் அவர் நினைத்த மாத்திரத்திலேயே கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வார்கள், ஆன் தி ஸ்பாட் டிஸ்போசல் செய்வார்கள், இதனால்தான் அவர்களிடத்திலே சென்றோம் என்று சொன்னார். அவரும் ஒன்றும் சொல்லவில்லை. அரசாங்க ஊழியர்களுக்கு உத்தியோகத்திலே உயர்வு இல்லாவிட்டாலும், அவர்களுக்குச் சம்பள உயர்வு இல்லாவிட்டாலும், அகவிலைப்படி உயர்த்தாவிட்டாலும், அவர்களுடைய வேலையாவது இருக்கக்கூடிய அளவில் ஒரு நல்ல நிலைமையை உண்டாக்கும்படி முதலமைச்சர் அவர்கள் தெளிவாக பதிலளிக்கும் பொழுது கூறவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் மிகுந்த ஏமாற்றத்தில் இருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர்:** உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். 36 பேர்கள் பேசவேண்டுமென்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். பேரவையின் நேரத்தை 2 மணிவரை வைத்துக் கொண்டாலும் கூட, கிடைக்கின்ற மூன்று மணிநேரத்தில் ஒரு உறுப்பினர் ஐந்து நிமிடங்களுக்கு மேல் பேச முடியாத நிலைமை இருக்கிறது என்பதை வருத்தத்துடன் தெரி



1967 ஜூன் 26] [திரு. துணை பேரவைத்தலைவர்]

வித்துக்கொள்கிறேன். ஆகவே உறுப்பினர்கள் ஐந்து நிமிடத்திற்கு மேல் செல்லக்கூடாது என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

11-0 மு.ப.

**திரு. ந. சோமசுந்தரம்:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் தாக்கல் செய்த 1967–68-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது பேச வாய்ப்புக் கொடுத்ததற்காக என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் பேசும் போது 'ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் பொதுக்கூட்டங்களில் பேசிய பேச்சுக்கள்தான் இங்கே பட்ஜெட் உரையாக இருந்ததே தவிர, வேறு ஒன்றும் இல்லை' என்று குறிப்பிட்டார்கள். நான் அவர்களுக்குச் சொல்லுவதெல்லாம் நம்முடைய பொய்யா மொழிப் புலவர் குறிப்பிட்டதைப் போல்—

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"

என்ற குறள்தான் அவர்களுடைய பேச்சுக்கு பொருந்தும். அவர்கள் கடந்த 20 ஆண்டு காலமாக என்னென்ன சொல்லி வந்தார்களோ, அவற்றையெல்லாம் செயல்படுத்தவில்லை. சுதந்திரம் வந்தால் பாலும் தேனும் ஓடும் என்றார்கள்; பற்றாக்குறை நீங்கும் என்று சொன்னார்கள். அவர்களுக்குச் சொல்வது எளிதாக இருந்தது. ஆனால் காரியாம்சத்தில் செய்ய முடியவில்லை. நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லியவண்ணம் இந்த நாட்டு மக்களுக்குப் பல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். முன்பு இருந்த அரசினர் நில வரியை நீக்குவோம் என்று சொன்னார்கள்; ஆனால் நீக்கவில்லை. நம்முடைய அரசு நில வரியை நீக்கியிருக்கிறது. அவர்கள் பஸ்களைத் தேசிய மயமாக்குவோம் என்றார்கள்; ஆக்கவில்லை. உழைப்பவனுக்கே நிலம் சொந்தமாகவேண்டுமென்று சொன்ன நேரத்தில் அகில இந்தியக் காங்கிரஸ் கட்சித் தலைவர் 'ஏறுகிறவனுக்கே ரயில் சொந்தமாகவேண்டும்' என்று கேலியாகப் பேசினார். இப்போதைய அரசு பஸ் போக்குவரத்தைத் தேசியமயமாக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதன்மூலம் ஏறுகிற மக்களுக்கு பஸ் சொந்தமாக்கப்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்திலுள்ள தனிப்பட்ட மூன்று மின்சார நிறுவனங்களை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. இதன் மூலம் தென்னிந்தியாவின் நெற் களஞ்சியமான தஞ்சைக்கு மேலும் பெருமை ஏற்பட்டு பல வசதிகளைச் செய்து கொடுத்து உற்பத்தியைப் பெருக்க வழி ஏற்படும்.

இந்த மன்றத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெரு முயற்சியால் வள்ளுவருடைய திருவுருவப்படம் திறந்து வைக்கப்பட்டது. அதன் அடியில் எழுதப்பட்டுள்ள குறள் நெறிக்கேற்ப இங்கு எதிர்க்கட்சிக்காரர் நடந்துகொள்வது கிடையாது.

"சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்"

என்பதற்கொப்ப அவர்கள் எதிர்க்கட்சிக்காரர்களைப் போல் பேசவேண்டுமேதவிர, எதிரிக்கட்சிக்காரர்களைப்போல் பேசக் கூடாது. ஒரு காலத்தில் பாரதி பாடினர். "வந்தே மாதரம் என்பார் கிளியே இவர் வாய்ச் சொல்லில் வீரரடி" என்பது போல் காங்கிரஸ்காரர்கள் வாய்ச் சொல்லில் வீரராக இருந்தார்களே தவிர, இதுவரை எதுவும் செய்யவில்லை. காங்கிரஸ்காரர்களாலேயே பாராட்டப்படக்கூடிய நமது அண்ணா அவர்கள் தென்னாட்டுக் காந்தி என்பதை நிரூபித்துக் காட்டி விட்டார்கள். ஒரு காலத்தில் காந்தியார் கனவு கண்டார். சுதந்திர இந்தியாவில் ஆதித் திராவிடப்பெண்களைக் கவர்னராக நியமிப்பேன் என்றார். அரிசன மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்று கனவு கண்டார். அறிஞர் அண்ணா அவர்கள் அரிசன நல இலாகாவுக்குத் திருமதி சத்தியவாணிமுத்து அவர்களை அமைச்சராக நியமித்ததன் மூலம் தென்னாட்டு காந்தி என்பதை நிரூபித்துக் காட்டிவிட்டார்கள். தாழ்த்தப்பட்டவர்களுக்கு நல்வாழ்வு அளிக்க வேண்டுமென்பதற்காக கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் பரிசு கொடுக்கும் திட்டத்திற்காக நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். அந்த நல்ல முயற்சியைக் காந்தியார் வாரிசுகள் பாராட்டுவார்கள் என்று எதிர்பார்த்தோம்; ஆனால் ஏமாந்தோம். பாராட்டாதது மாத்திரமல்ல, கிண்டல் செய்ய ஆரம்பித்தார்கள். "இதற்குத் தங்கப் பதக்கம் கொடுக்கிற நீங்கள் குழந்தைகள் குறைவாகப் பெறுகிறவர்களுக்கு ஒரு பித்தளைப் பதக்கமாவது கொடுப்பீர்களா" என்று பேசினார்கள். இந்தத் தங்கப்பதக்கத்திற்கு இருக்கிற மகத்துவத்தை, முக்கியத்துவத்தைக் குறைக்க முயற்சி செய்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பென்ஷன் திட்டம், மற்றும் பல திட்டங்களைச் சிறப்பாக நிறைவேற்றிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையை வரவேற்று முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

(மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் தலைமை)

* திரு. என். மருதாசலம் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையிலே தாழ்த்தப்பட்ட மக்கள் கல்வியிலே முன்னேற வேண்டுமென்பதற்காக பல சலுகைகளுக்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற வேண்டுமானால் ஒன்று கல்வி, இரண்டு பொருளாதாரம், மூன்றாவது தொழில்துறை—ஆகிய மூன்று துறைகளிலே முன்னேறினால் தான் அந்த தாழ்த்தப்பட்ட மக்கள் மற்ற மக்களோடு சமத்துவமாக வாழமுடியும்; வாழ்வதற்கான சந்தர்ப்பமும் மாற்றிலும் ஏற்படும். அந்த அடிப்படையில் இப்போது கல்வித் துறையிலே முன்னேறுவதற்கான சில சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சலுகைகளை எல்லாம் பெறுவதில் கிறிஸ்தவ ஹரிஜன மக்களையும் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



வருட வருமானம் 2,000 ரூபாய் வரை இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்கள் கல்விச் சலுகை பெறுவார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. ஏழைத் தொழிலாளியாக இருக்கக்கூடியவர்கள் கூட இன்று மாதம் 160 ரூபாய்க்கு மேற்பட்டு சம்பளம் வாங்கக்கூடியவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, பலர் இந்தச் சலுகையைப் பெற முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, 2,000 ரூபாய் என்பதை 3,000 ரூபாய் என்று மாற்றினால், எல்லா மக்களும் சலுகை பெற முடியும்.

பல ஏழை எளிய ஹரிஜன மக்கள், சர்க்கார் புறம்போக்கு நிலங்களிலே நீண்ட காலமாக விவசாயம் செய்து வருகிறார்கள். அவர்களை உடனடியாக வெளியேற்ற காங்கிரஸ்காரர்கள் சம்பந்தப்பட்டவரையில் மணியகாரர் உடந்தையாக இருக்கிறார்கள். பல இடங்களில் வெளியேற்றி இருக்கிறார்கள். அது பற்றி விண்ணப்பங்கள் கொடுத்திருக்கிறேன். அப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் நிலத்தைப் பட்டா செய்து கொடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்.

கோவையிலே பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் மில்களிலே வேலை செய்கிறார்கள். அங்கு 13 மில்கள் வேலை செய்யாது நிறுத்தப்பட்டிருக்கின்றன. இதனால் தொழிலாளிகள் வேலையில்லாது கஷ்டப்பட்டு பிச்சை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அது பற்றி இப்போது மாநில சர்க்கார் ஏற்படுத்திய கமிட்டி பரிசீலனை செய்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது. சர்க்கார் அந்த நடவடிக்கையைத் துரிதப்படுத்தி அந்த மில்களை உடனடியாகத் திறப்பதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ளவேண்டும்.

கோவையில் சிறுபாசனத் திட்டத்தை விரிவுபடுத்தி குடிதண்ணீர வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று பல ஆண்டுகளாக இந்த மன்றத்தில் கூறி வந்திருக்கிறேன். அந்தப் பகுதியில் வாழும் மூன்று லட்சம் மக்களுக்குத் தற்போதுள்ள சிறுவாணித் திட்டத்தின் மூலம் கிடைக்கக்கூடிய தண்ணீர் போதாததால் கேரள மாநிலத்தின் எல்லையிலிருந்து தண்ணீரைக் கொண்டு வந்து சிறுவாணித் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று முனிசிபல் நிர்வாகம் தீர்மானம் போட்டு அனுப்பியது. 1948-ம் வருஷத்திலேயே அந்த தீர்மானம் அனுப்பப்பட்டது.

ஆகவே அந்தத் தீர்மானப்படி சர்வே செய்யப்படவேண்டும். அதற்காக எல்லா செலவுக்கும் ஒரு கோடி நாற்பது லட்ச ரூபாய் ஒதுக்க ஐந்து ஆண்டுகளுக்கு முன் முடிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால் இந்தக் காலத்தில் அது போதாது. ஆகவே எஸ்டிமேட்டை அதிகமாகப் போட்டு அந்தச் சிறுவாணித் திட்டத்தை அமுல்படுத்தி அந்தப் பகுதி மக்களுக்கு தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எல்லாப் பகுதிகளுக்கும் தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கோவை நகரைச் சுற்றி பலவிடங்களில் ஹரிஜனங்கள் வாழ்கிறார்கள். கோவை நகரத்திற்குள்

[1967 ஜூன் 26

ளேயே வாழ்கிறார்கள். சொந்த நிலங்களில் அவர்கள் குடிசைப் போட்டுக் கொண்டும் வாழ்கிறார்கள். சில இடங்களில் குடிசைப் போட்டிருக்கும் இடங்களில் அங்கு அதன் சொந்தக்காரர்கள் இல்லை. இருந்தாலும் போலீஸ் தலையிட்டு அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்துகிறார்கள். வெள்ளக்கிணறு என்ற இடத்தில் 300 ஹரிஜனக் குடும்பங்கள் வாழ்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது.) அங்கு ஒரு கோவில் இருக்கிறது. அங்குள்ள இந்த மக்கள் கோவிலுக்குச் சென்று சாமி கும்பிட அனுமதிக்காது தடுக்கிறார்கள். இதுபற்றி சர்க்காரிடம் சொல்லியும், கலெக்டரிடம் சொல்லியும் கூட ஒன்றும் நடக்கவில்லை. ஆகவே உடனடியாக தக்க நடவடிக்கைகள் எடுத்து அங்குள்ள அந்த ஹரிஜன மக்கள் கோவிலுக்குச் சென்று சாமி கும்பிட ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

**திரு. ந. வீராசாமி:** மதிப்பிற்குரிய சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, நம் முதல் அமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் இந்த மன்றத்தில் வைத்திருக்கும் வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்லவிரும்புகிறேன்.

எதிர்க்கட்சியில் இருக்கிறவர்கள் பேசுகிற நேரத்தில் இந்த வரவு செலவுத் திட்டத்தில் புதுமையும் இல்லை, புரட்சியும் இல்லை என்று சொன்னார்கள். அப்படிச் சொன்னவர்கள் எது புதுமை, எது புரட்சி என்று குறிப்பிட்டிருப்பார்களேயானால், ஓரளவு புரிந்து கொள்ள முடியும். ஆனால் பேசும்போதெல்லாம் புதுமை இல்லை என்று சொன்னார்களே தவிர, எப்படி என்று விளக்கம் சொல்லவில்லை. புன்செய் நிலத்திற்குள்ள அடிப்படைத் தீர்வையைப் பொறுத்தவரையில் இந்த அரசுக்கு ஒரு கோடி அறுபது லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டாலும் கூட, இருக்கிற 60 லட்சம் பட்டதாரர்களில் 45 லட்சம் பட்டாதாரர்களுக்குப் பயன்படும் அளவிற்கு திட்டம் வகுத்திருக்கிறார்கள், அவற்றிற்கு வரி விலக்கு அளித்து அது புரட்சியில்லையா என்று நினைத்துப் பார்க்க வேண்டும்.

அதேபோல் திரு. வெங்கட்டராமன் அவர்கள் போக்குவரத்து இலாகா அமைச்சராக இருந்தபோது அவர் செய்யாத ஒரு புதுமையை, அரசாங்க பஸ்களுக்கு பாடி கட்டும் தொழிலை சிம்சன் கம்பெனி போன்றவர்களுக்கு கொடுத்து வந்ததை இன்றையதினம் அரசாங்கமே ஏற்று நடத்தக் கூடிய அளவிற்கு ஒரு திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்களே, அது புரட்சியில்லையா என்று நினைத்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பஸ் கட்டணத்தைப் பொறுத்தவரையில் எந்த அளவிற்குக் குறைந்திருக்கிறது என்பதையும் எண்ணிப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இங்கிருந்து காஞ்சிபுரத்திற்குச் செல்லவேண்டுமென்றால், தனியார் துறை பஸ்களில் இரண்டு ரூபாய் வசூலித்துக்கொண்டிருந்தார்கள். இன்றைய தினம் அது



1967 ஜூன் 26] [திரு. ந. வீராசாமி]

1½ ரூபாயாக குறைக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் தனியார் துறையில் இருக்கிற பஸ்களில் கட்டணத்தைக் குறைக்கிற அளவிற்கு அவர்கள் முன்வந்திருக்கிறார்கள், இது புதுமையில்லையா என்பதை அவர்கள் நினைத்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் தஞ்சையில் உள்ள விவசாயிகள் பயன் அடையக் கூடிய வகையில் மின்சார வசதியைப் பொறுத்தவரையில் தனியாரிடத்தில் இருந்ததை எடுத்து இன்றையதினம் மின்சார கார்ப்பரேஷன் இல்லாமல் அதை அரசாங்கமே ஏற்று நடத்தும் என்று அறிவித்திருக்கிறார்கள். அதையும் நினைத்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் ஏறக்குறைய 25,000 பம்ப்செட்கள் பயனடையும் அளவிற்கு அந்தத் திட்டம் இருக்கிறது. இவைகளை எல்லாம் புதுமை என்று சொல்லவில்லை என்றால் எதைத்தான் புதுமை என்று நினைக்கிறார்கள் என்றுநான் கேட்கவேண்டியிருக்கிறது.

அதேபோல் உர விநியோகத்தைப் பொறுத்தவரையில் நான் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்றையதினம் நம் அரசாங்கம் உணவுப் பிரச்னையில் அதிக அக்கறை காட்டிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் ஏழை விவசாயிகளுக்கு உரம் கிடைக்கவில்லை என்ற கூக்குரல் எங்கும் கேட்டுக்கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் மத்திய அரசாங்கம்தான் என்று தெரியவருகிறது. நமக்குத் தேவைப்படுகிற 1,66,000 டன் நைட்ரஜனுக்கு ஏறத்தாழ 83,000 டன்தான் கிடைக்க முடியும் என்று தெரிய வருகிறது. அறிஞர் அண்ணா அவர்கள் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டிருப்பதைப்போல், சேலம் இரும்பாலை கிடைக்கவில்லை என்றால் போராட்டம் நடத்துவோம் என்று சொன்னதைப் போல், இந்த உர வகையிலும் மத்திய அரசாங்கத்தோடு நாம் கொஞ்சம் கண்டிப்பாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில் விவசாயிகளுக்கு முக்கியமாகத் தேவைப்படுவது உரம். ஆகவே இந்த உர விநியோகத்தைப் பொறுத்தவரையில் நாம் நிச்சயம் வழி செய்தாகவேண்டும். அதற்கு மத்திய அரசாங்கம் இடம் கொடுக்கவில்லையென்றால், வேண்டுமானால், அதற்காக நாம் போராடுவதற்குத் தயாராயிருக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், சேலம் இரும்பாலைப்பற்றி இதற்கு முன் அமைச்சராக இருந்தவர் குறிப்பிட்டார் போராட்டம் தேவையில்லை என்று. ஆனால் அவர் அதற்கு வழி சொல்லியிருந்தால் நன்றாகயிருந்திருக்கும். அதைச் சொல்லாமல் இப்படித் தான் போராட்டம் நடத்தியா கல்பாக்கம் மின்நிலையத்தைப் பெற்றோம் என்று சொன்னார்கள். அவர்கள் நம்மைப்போல் போராடமுடியவில்லை என்றால் உள்ளுக்குள் போராடியிருக்கக்கூடும். நாம் இன்று உள்ளே சென்று போராட முடியாததினால், வெளியிலிருந்து போராட்டம் நடத்துவதைத் தவிர, வேறு வழியில்லை என்பதை முன்னாள் அமைச்சர் அவர்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

1967 ஜூன் 26] [திரு. ந. வீராசாமி]

பஞ்சாயத்து யூனியனைப் பொறுத்தவரையில், 10 கோடி அதற்காக ஒதுக்கினாலும் அதில் ஐந்து கோடி ரூபாய் நிர்வாகச் செலவிற்கும் மீதி ஐந்து கோடி தனிப்பட்ட பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்கும், இன்னும் சில காண்ட்ராக்டர்களுக்குமாக வீணாகிக் கொண்டிருக்கிறது. பல பகுதிகளில் போடாத ரோடுகளுக்கு பணம் கொடுத்தும், கட்டாத பள்ளிகளுக்கு பணம் கொடுத்தும் இருக்கிறார்கள். இந்த நிலைமையெல்லாம் மாற்றியமைக்கவேண்டும். பஞ்சாயத்து யூனியன்களைப் பொறுத்தவரையில் ஏற்கனவே நாம் இந்த மன்றத்தில் எதிர்க்கட்சியாக இருந்தபோது குறிப்பிட்டதை மனதில் வைத்துக் கொண்டு பஞ்சாயத்து யூனியன் தேர்தல் வருகிறபோது தனியாக யூனியன் தலைவருக்கு ஒரு ஓட்டும், கிராமப் பஞ்சாயத்து தலைவருக்கு ஒரு ஓட்டும் என்கிற முறையை உருவாக்க வேண்டும்.

வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நெல் கொள்முதல் திட்டத்தில், 40,000 டன் என்றிருந்தாலும் கூட, அது நிறைவேற்றப்பட்டதற்குப் பிறகும் இன்னும் கொள்முதல் செய்து கொண்டிருக்கிறார்கள். அதைக் கொஞ்சம் தளர்த்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் பாலாறு பேசின் ஸ்கீம் என்ற திட்டத்தையும் தளர்த்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் விவசாயிகள் பம்ப்செட்கள் வைக்கவேண்டுமென்று கேட்கிறபோது, அதற்கு சர்டிபிகேட் வாங்கவேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால், தனிப்பட்ட வகையிலே ஆயில் என்ஜின்கள் வைப்பவர்களுக்கு அந்த அத்தாட்சிச் சான்று தேவையில்லை. ஆனால் பம்ப்-செட் வைக்கும்போது அந்தச் சான்று தேவை என்று சொல்லி அதற்காக விவசாயிகள் அதிகாரிகளிடம் போய் வந்து கொண்டிருப்பதால், காலதாமதமாகிறது என்று சொல்லிக் கொண்டு நேரம் இல்லாத காரணத்தால் என் கருத்துக்களை இத்துடன் முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. ஏ. ஆர். மாரிமுத்து : கனம் உதவித் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இந்த நிதிநிலை அறிக்கையை நான் மனப் பூர்வமாக வரவேற்பதோடு இந்த அறிக்கை நல்ல முறையில் தங்களுடைய சக்திக்கு உட்பட்டு எந்தளவிற்கு விரிவான முறையில் சாதாரண மக்களுக்கு நன்மை செய்ய முடியுமோ, அந்தளவிற்கு செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். பொதுவாக, நாட்டில் ஏற்பட்டிருக்கிற பொருளாதார சீர்கேட்டிற்கு முக்கிய காரணம் விலை உயர்வே. இன்று எவ்வளவு நடவடிக்கைகள் எடுத்தாலும் ஒரு சர்க்கரச் சுற்று போல் ஒரு பக்கத்தில் விலையேறுகிறது. அதற்கேற்றபடி ஒரு பக்கத்தில் பஞ்சப்படி, சம்பள உயர்வு என்று ஏற்பட்டு மேலும் விலை உயர்வு என்ற பெரியதொரு சுழலில் நாம் சிக்கியிருப்பதற்கு அடிப்படைக் காரணம் விவசாய உற்பத்தி பெருகாமைதான் என்பதை அரசு உணர்ந்திருப்பதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.



1967 ஜூன் 26] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

இன்று நம் தேசத்தில் ஏற்பட்டுள்ள பொருளாதார சீர்கேட்டைப் போக்குவதற்கு, விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். அப்படி விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு, விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் புன்செய் நிலங்களுக்கு வரி விலக்கு அளித்திருப்பதை நான் பாராட்டுகிறேன். புன்செய் நிலங்களுக்கு வரி விலக்கு என்று கூறும்போது அதில் தென்னந்தோட்டங்கள், மா தோட்டங்கள், இன்னும் தரிசு நிலங்கள் எல்லாம் அடங்குகின்றன. யார் நேரடியாக புன்செய் நிலத்தில் உழுது தோட்டக்கால் பயிர் செய்கிறார்களோ, அவர்களுக்கு விலக்கு அளிப்பதில் தவறில்லை. ஆனால் நிலத்தை தரிசாகப் போட்டிருக்கிறவர்களுக்கு விலக்கு அளிக்க வேண்டுமா என்பதை சிந்திக்கவேண்டும். தோப்புகள் வைத்திருப்பவர்களுக்கு விலக்களிக்கவேண்டுமா அது தேவையா என்பதையும் சிந்திக்கவேண்டும். இதில் நெல் சாகுபடி செய்கிறவர்களுக்கு என்ன அனுகூலம் இருக்கிறது என்று தெரியவில்லை. நன்செய் நிலம் சம்பந்தமாக விரிவாக ஆராய்ந்த பிறகு முடிவிற்கு வர அரசு ஒப்புக் கொண்டிருக்கிறது. ஆகவே நன்செய் சாகுபடி செய்கிறவர்களுக்கு அனுசரணையாக அவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் விதத்தில் இன்றைய தண்ணீர் தீர்வை விகிதத்தை குறைக்க வேண்டும் அல்லது இரண்டாம் போகம் சாகுபடி செய்கிறவர்களுக்கு தண்ணீர் தீர்வை இல்லை என்று சொல்லலாமா என்பது பற்றி சிந்திக்கவேண்டும். ஏனென்றால், இரண்டாம் போகம் புதிதாகச் சாகுபடி செய்கிறவர்களுக்குத் தண்ணீர் தீர்வை விலக்கு அளித்தால், அதனால் ரெவின்யூ குறையாது. அரசாங்கத்திற்கு வரக்கூடிய ரெவின்யூ குறையாதமுறையில், விவசாயிகளுக்கு ஆக்கம் அளிப்பதாக இருக்கும் முறையில், ஒருபோக நிலம் வைத்திருக்கிறவர்கள் இரண்டாவது போகம் பயிர் செய்தால், தண்ணீர் தீர்வை கிடையாது என்ற முறையை ஏற்படுத்த அரசு ஆராயவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உணவு உற்பத்திக்கு அது பலன் அளிப்பதாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு நெல்லுக்கு கொடுக்கும் விலை போதவில்லை, விவசாயிக்குக் கட்டுப்படியாகவில்லை என்று எல்லாத் தரப்பிலும் பேசப்படுகிறது. இன்றைய நிலைமையைக் கருத்தில் வைத்துக்கொண்டு பார்த்தால், நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் குறைவாகத்தான் இருக்கிறது என்பதை நாமும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். சர்வதேச விலையைப் பார்த்தால், வெளிநாட்டிலிருந்து வரும் உணவுப் பொருள்கள் இங்கே உள்ளவர்களுக்குக் கட்டுப்படியாகும் விலையில் இருக்க வேண்டுமென்று மத்திய அரசு 118 கோடி ரூபாய் மானியம் வழங்கவேண்டியிருக்கிறது. அன்னிய நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் தானியங்களின் விலை உயர்வாக இருக்கிறது. பக்கத்து மாநிலங்களில் எடுத்துக்கொண்டாலும், தானியங்களின் விலை உயர்வாகத்தான் இருக்கிறது. எந்தச் சூழ்நிலையை எடுத்துப் பார்த்தாலும், தானியங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள விலை போதாது என்ற முடிவுக்குத்தான் வரவேண்டி

யிருக்கிறது. கனம் உணவு அமைச்சர் அவர்கள் இன்று காலையில் ஒரு கேள்விக்கு பதிலளிக்கும்போது, நெல்லுக்கு நிர்ணயிக்கப் பட்டிருக்கும் விலையை உயர்த்தும் யோசனை எதுவும் அரசாங்கத் திற்கு இல்லை என்று தெரிவித்தார்கள். இதைப் புனர்பரிசிலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நெல்லுக்கு பதிலாக வேறு பயிர் செய்கிறவர்களுக்கு அதிக விலை கிடைக்கும்போது, உணவு தானியங்களைப் பயிரிடுகின்றவர்களுக்கும் ஊக்கம் கொடுக் கும்முறையில் விலையானது இருக்கவேண்டும். இன்றைக்கு விவசாய உற்பத்திச் செலவு உயர்ந்திருக்கிறது. உரங்களின் விலை ஏறிப்போயிருக்கிறது. ஒரு படி அரிசி போடுவதாக வாக்களித் திருக்கலாம். இப்போது நெல்லின் விலையை, அதிகமாக்குவதால் இன்னும் அதிகத் தூண்டுவிழும் என்ற நிலைமை வரலாம். இன்றைக்கு எடுத்துக்கொண்டிருக்கிற முடிவு ஏழைகளுக்கு சாதகமாக இருக்கும் என்றாலும் இதை ஒரு அறிகுறி யாகக் கருதி, இப்போது நடத்திக் கொண்டிருக்கிற இரண்டு நகரங்களைப் பொறுத்தவரையில் இந்தத் திட்டத்தை நடத்திக்கொண்டு, மேற்கொண்டு மற்ற இடங்களுக்கு விஸ்தரிப்பதைப்பற்றி ஆலோசனை செய்யலாம். அவசரம் அவசரமாக, தலைகீழ்கோலமாகச் செய்துவிடக் கூடாது. இதைப் பற்றிச் சிந்தித்து, காலம் தாழ்த்திச் செய்யலாம். இதைச் செய் வதிலே பெரும் நிதிப் பொறுப்பு இருக்கிறது. இந்த இரண்டு நகரங்களில், இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கே நான்கு கோடி ரூபாய் ஆகும் என்று அரசு அறிவித்திருக்கிறது. மாநிலம் பூராவுக்கும், பரவலாக முழுப் பொறுப்பை எடுத்துக்கொண்டால், 10—12 கோடி ரூபாய் ஆகும். பெரும் பொறுப்பை நிறைவேற்ற முடியாத நிலையில் இருப்பதால், நன்கு சிந்தித்து, காலம் தாழ்ந்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இல்லாமல், விவசாய வருமான வரியை அதிகப்படுத்த வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். பணப்பயிர்களைச் சாகுபடி செய்கிறவர்களுக்கு அதிக வரி போடுவதில் தவறு கிடையாது. எல்லா விவசாயிகளும் கணக்கு வைக்க வேண்டும் என்ற முறை யைப் புகுத்தினால், ஆயிரக்கணக்கான விவசாயிகள் அதிகாரி களிடம் தொல்லைப்படும் நிலைமைவரும். ஆகவே, பழைய கம்பவுண்டிங் முறை அப்படியே இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வேண்டுமானால் பணப்பயிர்களாகிய கரும்பு, வாழை, மஞ்சள் பயிரிடக்கூடிய நிலங்களுக்கு சர்சார்ஜ் வீதத்தை அதிகப்படுத்தி அரசாங்கத்தின் வருவாயை அதிகரித்துக்கொள் வதற்கு ஏற்பாடு செய்யலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலங்களை தரிசு போடுவதைக் குற்றமாக ஆக்கவேண்டும். பல இடங்களில் தங்களுக்குத் தனிப்பட்ட இருக்கிற காரணத்தினால், தாங்களும் சாகுபடி செய்யாமல், பிறரையும் சாகுபடி செய்ய விடாமல் அநேக ஏக்கர் நிலங்கள் தரிசாக இருக்கின்றன என் பதை அரசு உணரும். நிலங்களை அப்படி தரிசாகப் போடக்



கூடாது, யாராக இருந்தாலும் நிலத்தைச் சாகுபடிக்குக் கொண்டு வர வேண்டும் என்ற சட்டத்தை இயற்றி, நிலத்தைத் தரிசாகப் போடுவதைத் குற்றமாக ஆக்கவேண்டும்.

தஞ்சை மாவட்டத்தில் ஒரு போக நிலங்களை இரு போக நிலங் களாக ஆக்குவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருப்பதை வரவேற்கிறேன். ஒரு போக நிலங்களை இருபோக நிலங்களாக ஆக்குவதற்கு நடைமுறையில் எவ்வளவு சிரமங்கள் இருக்கின்றன என்பதை உணரவேண்டும். அதிகாரிகள் போட்டுள்ள திட்டப் படி எல்லா நிலங்களையும் இருபோக நிலங்களாக ஆக்க முடியுமா என்று சிந்திக்கும்போது, இன்றைக்கு அதிகாரிகள் விரும்புகிற முறையில், நாம் எதிர்பார்க்கிறபடி அதிகரிக்குமா என்று சொல்ல முடியாது—சந்தேகம்தான். அதிகாரிகளை மட்டும் நம்பி நாம் காரியங்களைச் சாதித்துவிட முடியாது. இன்றைக்கு கிராம மட்டத்தில் இந்தத் திட்டத்தைப் புகுத்த வேண்டும். கிராமங் களில் உள்ள விவசாயிகளை ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்தி, அந்த நிலையில் எவ்வளவு நிலங்களைக் கொண்டுவர முடியும் என்று கிராம அடிப்படையில் இருபோக நிலங்களின் அளவை உயர்த்தவேண்டும். நமது முதலமைச்சர் அவர்கள் கூறியபடி, சேணி அமைப்பு பயனுள்ளதாக இருக்கும் என்பது எனது கருத்து. ஆரம்ப நட வடிக்கையாக மாவட்டத்திற்கு ஆயிரம் பேர்களைச் சேர்ப்பது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் இருப்பார்கள், கட்சிசார்பற்ற நிலையில் இருக்கும் என்பதில் சந்தேகம் கிடையாது. கிராமங்கள்தோறும், கிராம அளவில் அமைத்து, புரட்சிகரமாக கிராம மட்டத்தில் உற்பத்திப் பெருக்கத்தை ஏற்படுத்த இந்தச் சேணியைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு அரசாங்கத்திற்குப் பலவிதங்களில் இடைஞ்சல் களாக இருக்கின்றன சமூக விரோத சக்திகள். கள்ளக்கடத்தலில் ஈடுபட்டுள்ளவர்கள், கள்ளமார்க்கெட்காரர்கள், கலப்படம் செய் கிறவர்கள் ஆகியவர்களைக் கடுமையானமுறையில் கண்காணித்து கடும் நடவடிக்கை எடுக்கும் முறையில் ஆயுள் தண்டனை விதிக்கும் அளவுக்குச் சட்டத்தை மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். இதையெல்லாம் ஒழித்துக்கட்டும் முறையில் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

இப்போது பாசன வசதிகளை அதிகரிக்க, சிறு பாசனத் திட்டங் களைக் கவனத்தில் கொள்ளவேண்டும். பெரிய பாசனத் திட்டங் கள் கூடியவரையில் முடிந்து விட்டன. சிறிய பாசனத் திட்டங் களை அபிவிருத்தி செய்வதில் நாம் ஈடுபடவேண்டும். இதற்காக ஒதுக்கியிருக்கும் தொகை போதாது. சிறிய பாசனத் திட்டத் தைப் பொறுத்தவரையில் ஐந்து ஆண்டுகளுக்கு தனித் திட்டத் தைத் தயாரித்து விவசாய அபிவிருத்திக்காக 100 கோடி ரூபாய் அளவுக்கு ஒரு திட்டத்தை மாநில அளவில் தயாரித்து அதை நிறைவேற்றவேண்டும். மத்திய அரசு கொடுக்கும் உதவித்

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1967 ஜூன் 26

தொகைகளையும், மாநில அரசு எவ்வளவு போட முடியுமோ, அதையும் சேர்த்து, ஒரு திட்டத்தைப் போட்டு எல்லாத் திட்டங்களுக்கும்மேல், முதலிடம் கொடுத்து நிறைவேற்றினால், நம் மாநிலத்திற்கு தேவையான உணவு மட்டுமல்லாமல், நமது அண்டை மாநிலமான கேரள மாநிலத்திற்கும் போதுமான உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து கொடுக்கமுடியும். அந்த அளவுக்கு உற்பத்தியைப் பெருக்குவதில் கஷ்டம் ஏதும் இல்லை. நீர் வசதி, உர வசதி முதலியவைகளைச் செய்து கொடுத்தால், உற்பத்தியைப் பெருக்க முடியும். எந்த வகையிலாவது 100 கோடி ரூபாய்க்கான ஒரு ஐந்தாண்டுத் திட்டத்தை, சிறிய பாசனத் திட்டத்தைப் பொறுத்தவரையில் போடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

விற்பனை வரியை அதிகரித்திருக்கிறார்கள். நமக்கு ஏற்பட்டிருக்கிற துன்டை ஈடுகட்ட வேறு வழி கிடையாது. மாநில அரசு என்ற முறையில் தங்களுக்கு வருவாய் வேண்டுமென்றால், இதை உயர்த்தும் துர்ப்பாக்கிய நிலையில் இருக்கிறார்கள். முன்பு இருந்த அரசு ½ சதவீதத்திலிருந்து 2½ சதவீதத்திற்கு உயர்த்தி இப்போது அதை மூன்று சதவீதம் ஆக்குகிறோம். இந்த விற்பனை வரியை அதிகமாக்குவதன் மூலம் இந்தச் சுமை சாதாரண மக்களின் தலையில்தான் விழுகின்றது என்பதை மறக்கமுடியாது. இந்த வரியானது உபயோகிப்போர் தலையில் தான் விழுகிறது. மூன்று சதவீதம் ஆக்குவது பணம் தேவை என்பதால்தான் என்றாலும், இந்த நிலையைக் கைவிட்டு விடவேண்டும். இனி மேலும் 3 சதவீதத்திற்கு மேல் உயர்த்துவது என்ற காரியத்தை விட்டு விட்டு வேறு வழிகளை ஆராய்ந்து பண வசதியைப் பெருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஸ்களுக்கு இப்போது வரி அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. பஸ்களுக்கு வரி அதிகரித்திருப்பதைப் பற்றி எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது. வரி அதிகரிக்கப்பட்டிருக்கிறது என்ற காரணத்தைக் காட்டி பஸ் சொந்தக்காரர்கள் பஸ் கட்டணத்தை உயர்த்த அரசாங்கம் அனுமதிக்கக்கூடாது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கட்டடங்களுக்குச் செய்யப்படும் செலவு குறைக்கப்பட்டிருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள்—அது வரவேற்கத் தக்கது. டெட் காப்பிடலாக, வானளாவக் கட்டிக்கொண்டு போவதை விட்டு, உற்பத்தி ஏற்படும் முறையில் முதலீடு செய்வது விரும்பத்தக்கது. அரசாங்கம் இதிலே மிகவும் கவனமாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சாரத் திட்டங்களை அபிவிருத்தி செய்ய தஞ்சையில் உள்ள தனியார் கம்பெனிகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ளப்போவதாக இருக்கிறது. மற்ற மாவட்டங்களில் உள்ள கம்பெனிகளையும், பூராவாக எடுத்துக்கொள்ள முயற்சிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.



1967 ஜூன் 26]

* திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1967-68-ம் ஆண்டுக்குரிய வரவு-செலவு திட்டத்தின்மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை சொல்லுவதற்கு வாய்ப்பு அளித்ததற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த வரவு-செலவுத் திட்டத்தின்மீது உரையாற்றிய மதிப்பிற்குரிய காங்கிரஸ் அங்கத்தினர்கள் தாங்கள் எதிர்பார்க்கிற எல்லாக் காரியங்களும் உடனடியாக நிறைவேற்றப்படவேண்டுமென்ற கருத்தில் பேசியதை இந்த மன்றம் கவனித்து வந்திருக்கிறது. இது எப்படி இருக்கிறது என்றால், குழந்தை பிறந்தவுடனேயே தத்தி நடைபோடவில்லையே, நடந்துபோகவில்லையே, பேச பி.
வில்லையே, பள்ளிக்குச் செல்லவில்லையே என்று கேட்பது போல 11
இருக்கிறது. போகின்ற போக்கில் ஏற்கனவே இருந்த காங்கிரஸ் சர்க்கார் பற்பல உறுதிமொழிகளைத் தந்துவிட்டுச் சென்றார்கள். அவை எல்லாவற்றையும் முதல் ஆண்டிலேயே நிறைவேற்றிவிட வேண்டும் என்று நினைப்பது உண்மையிலேயே ஆசையின் விளைவாக இருக்கலாமே தவிர, அது அறிவின் விளைவாக இருக்காது என்று திட்டவட்டமாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக, விவாதத்தை முதன் முதலில் துவக்கி வைத்த காங்கிரஸ் உறுப்பினர் மாண்புமிகு திரு. மார்டின் அவர்கள் கடலோரத்தில் எழுப்பப் போகிறோம் என்று சொன்ன தடுப்புச் சுவர் எங்கே ? ஆட்டு இறைச்சி தொழிற்சாலை எங்கே ? கோழி முட்டை திட்டம் எங்கே ? என்றெல்லாம் கேலி செய்யும் வகையிலே கேட்டார்கள். அவர்களுக்கெல்லாம் நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, நீங்கள் சொன்ன எல்லா கருத்துக்களுடன் நாங்கள் சொன்ன எல்லா கருத்துக்களையும்சேர்த்து வர இருக்கிற ஆண்டுகளிலே அதற்கான வாய்ப்பினை அளிப்போம் என்று எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

நண்பர் திரு. மகாதேவன் அவர்கள் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டார்கள். நஞ்சைக்கு ஏன் வரிவிலக்கு அளிக்கவில்லை ? புன்சைக்கு மட்டும்தான் வரிவிலக்கா? என்றெல்லாம் கேட்டார்கள். அவர்களை நான் பணிவோடு கேட்கிறேன், '20 ஆண்டு காலத்தில் நீங்கள் புஞ்சைக்குக் கூட வரிவிலக்கு அளிக்காமல் இருந்தீர்களே, ஏன்?' இன்றைக்கு பாட்டாளி மக்களுக்காக வாதாடுகிறோம் என்று பேசிக்கொள்கிற எதிர்க்கட்சி தோழர்கள், இதே கருத்தை நாங்கள் சென்ற மன்றத்தில் வைத்த நேரத்தில், என்ன பேசினார்கள் என்பதை இந்த நேரத்தில் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மக்கள் குரலை மதித்திருக்கிற 'மக்கள் குரலே மகேசன் குரல்' என்ற கொள்கையை மனதார ஏற்றுக்கொண்டிருக்கிற இந்த அரசின் உண்மையை நிச்சயம் எல்லோரும் புரிந்து கொள்வார்கள்.

நான் உதாரணத்திற்காக ஒன்று கூற விரும்புகிறேன். 1944-ம் ஆண்டிலிருந்து பஸ் போக்குவரத்தை தேசியமயமாக்க வேண்டும் என்ற கருத்து சென்னை மாநிலத்தில் நிலவி வந்திருக்கிறது. 1944-ல்

அமைப்பு "Public Transport should be State owner and State managed" என்ற தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது. 1946-ல் சென்னை அரசு சென்னை மாநிலத்திலுள்ள போக்குவரத்தை தேசியமய மாக்கவேண்டும் என்று முடிவு செய்திருக்கிறது. 1947-ல் சுதந்திரம் பெற்ற ஆண்டில் சென்னை நகரத்தில் மட்டுமுள்ள பஸ் போக்கு வரத்தை அரசே எடுத்து நடத்தவேண்டும் என்ற முடிவு எடுக்கப் பட்டுள்ளது. 1947-க்குப் பிறகு 1967 பிப்ரவரி வரைக்கும் இந்த பஸ் போக்குவரத்தை தேசியமயமாக்கவேண்டும் என்ற கொள்கைக்கு ஏற்கனவே இருந்த காங்கிரஸ் அரசினல் ஒரு சிறு கண் அசைவுகூட காட்ட முடியவில்லை என்பதை இந்த மன்றத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த சூழ்நிலையில் புதிய அமைச்சரவை, மக்கள் ஆட்சியை ஏற்று நடத்துகிற இந்தத் தமிழக அரசு துணிச்சலுடன் மாநில அளவில் முதன் முதலில் பஸ் போக்குவரத்துத் துறை தேசியமயமாக்கப்படும் என்று அறிவித் திருக்கிறது.

அடுத்து, நம்முடைய விற்பனை வரி விலக்குக்கான வரம்பை உயர்த்தும் சலுகைகளைப்பற்றி காங்கிரஸ் பெரியவர்கள் பலர் பேசினர்கள். வளர்ந்துவரும் பண வீக்கம் மிக்க இந்தியப் பொருளாதாரத்தில் நிச்சயம் இந்த வரி விலக்கின் வரம்பை உயர்த்தி அளிக்கக் கூடிய சந்தர்ப்பத்தில் நாம் இருக்கிறோம். என்று தயவுசெய்து நாம் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்கனவே இருந்த காங்கிரஸ் அரசு தொடாத பல காரியங்களைத் தொட்டுச் சென்றிருக்கிறது என்பதை நிச்சயம் சொல்லவிரும்புகிறேன். பயந்துபோய் யார் என்ன சொல்வார்களோ, முதலாளிகள் கோபித்துக்கொள்வார்களோ, பஸ் மன்னர்கள் தங்கள் மீது கருணை காட்டாமல் இருந்து விடுவார்களோ என்றெல்லாம் அஞ்சிக்கொண்டிருந்தது ஏற்கனவே இருந்த காங்கிரஸ் சர்க்கார். அந்த நிலைமையை மாற்றி புதிய அரசு பல காரியங்களை, சோஷலிச சமுதாயத்தை உருவாக்கும் காரியங்களை எண்ணி, அவைகளுக்கான அடிக்கல் நாட்டு விழாவை நடத்தியிருக்கிறது.

நல்ல சமுதாயம் மலரவேண்டும் என்ற கருத்தில் கலப்புத் திருமணத்திற்கு நிதிநிலை அறிக்கையிலே ஆதரவு கொடுத்திருக்கிறார்கள். சங்க காலத்தில்

'யாயும் ஞாயும் யாராகியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல்நீர் போல,
அன்புடை நெஞ்சம் தாங்கலும் தனவே.

என்று சொல்லப்பட்டிருப்பதுபோல் ஜாதி மதம் இல்லாத சமுதாயம் ஏற்கனவே இருந்தது. இடைக்காலத்தில் நிலைமை





மாறி இன்றைக்கு ஜாதி வேறுபாடுகள் தமிழகத்தில் தொல்லை கொடுத்துக்கொண்டிருக்கின்றன. இந்தக் காரியங்களை மாற்றி அமைப்பதற்கு மக்களுடைய திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் தனது பரம்பரைக் கொள்கையை அனுசரித்து, கலப்புத் திருமணத்திற்கு ஆதரவுகொடுக்கும் முறையில் பாராட்டும் பதக்கமும் அளிக்க கணிசமான தொகையையும் ஒதுக்கியிருக்கிறது. ஏற்கனவே இருந்த அரசு தயங்கியதற்குக் காரணம் கலப்பு மணம் வேண்டும் என்ற கருத்து காங்கிரஸ் கருத்தோடு கலக்காமல் இருந்ததுதான். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகக் கருத்துடன் கலப்புமணக் கருத்து இரண்டறக் கலந்துவிட்ட ஒன்று. ஆதலால் அதற்கான ஏற்பாடுகளை அறிஞர் அண்ணா அவர்கள் செய்திருக்கிறார்கள்.

சீரணியைப் பற்றி பலர் கூறினார்கள் . .(மணியடிக்கப்பட்டது.)

* திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1967-68-ம் ஆண்டுக்கான பட்ஜெட் பற்றி என்னுடைய சில கருத்துக்களை கூற விரும்புகிறேன். இந்த பட்ஜெட் பற்றுக்குறை இல்லாமல் அமைக்கப்பட்டிருப்பது பாராட்டத் தக்கது தான். ஆனாலும், உப்புச் சப்பு இல்லாமல், அதிகமான விறுவிறுப்பு இல்லாத ஒரு பட்ஜெட்டாக இருக்கிறது. முக்கியமாக விவசாயிகள் அதிகமாக உற்பத்தி செய்ய ஊக்கத்தை அளிப்பதற்கு இந்த பட்ஜெட்டில் இன்னும் அதிகமாக கவனம் எடுத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடலாம். அது நல்ல திட்டம் தான். அது சென்னையிலும், கோவையிலும் மாத்திரம் என்று இல்லாமல் தமிழ் நாட்டில் எல்லா இடங்களிலும், முக்கியமாக விவசாயம் சம்பந்தம் இல்லாத கிராமத் தொழிலாளர்கள், கைத்தறி நெசவாளர்கள் இவர்களுக்குகெல்லாம் கிடைக்கக்கூடிய ஒரு நிலையில் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த நான்கு மாத காலமாக எனது தொகுதியில் கைத்தறி நெசவாளர்கள், மற்றும் ஏழை கிராமத் தொழிலாளர்கள் ரேஷன் அரிசி இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். எல்லா இடங்களிலும் விலை அதிகமாக ஏறிக்கொண்டு போயிருக்கிற சமயம். ஆடி மாதம் ஆகிவிட்டால் மிக அதிகமாக ஆகிவிடும். ஏழை கைத்தறி நெசவாளர்களுக்கு ரூபாய்க்கு ஒரு படி அரிசி கிடைக்கச் செய்ய முடியாவிட்டாலும், கொஞ்சம் கூடுதலான விலையில் அவர்களுக்கு அரிசி கிடைக்கும்படி செய்வதில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

உணவு உற்பத்தியை அதிகமாக பெருக்குவதற்கான முயற்சிகளை இந்த பட்ஜெட்டில் எடுத்துக்கொண்டிருப்பது பாராட்டத் தக்கது தான். தீவிரமாக உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு என்ன செய்யலாம் என்றால், முதலில் விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும். விவசாயிகளுக்கு நல்ல வித்து, உரம் போன்றவைகள் காலாகாலத்தில் கிடைக்கவேண்டும். அவர்களுக்கு அந்த சாதனங்

கள் சரியான காலத்தில் கிடைக்கிறதா என்பதைக் கண்காணிக்க வேண்டும். உரம் காலாகாலத்தில் கிடைத்துவிட்டால், அதை ஒரு பெரிய அதிருஷ்டமாக விவசாயிகள் நினைக்கிறார்கள். அவர்களுக் பெரிய அதிருஷ்டமாக விவசாயிகள் நினைக்கிறார்கள். அவர்களுக்கு உரிய காலத்தில் உரம் கிடைக்கவேண்டும். டிஸ்டிரிப்யூஷனும் செம்மையாக இருக்க வேண்டும். மேலும் விவசாயிகள் தண்டத் தீர்வை கொடுக்கிறார்கள். தண்டத் தீர்வையை நிறுத்திவிட்டால் விவசாயிகளுக்கு கட்டுப்படியாகும். அவர்கள் உற்பத்தி செய்வது பூராவையும் தண்டத் தீர்வை செலுத்துவதன் மூலம் இழந்து விடுகிறார்கள். புஞ்சைக்கு வரி வஜா செய்யப்பட்டிருப்பது வரவேற்கக்கூடியது தான். ஆனாலும், நஞ்சைக்கும் வரி வஜா செய்யக்கூடிய திட்டங்களையும் ஆட்சி எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் விவசாயிகள் சம்பந்தமாக சட்டங்களையெல்லாம் நல்ல முறையில் அமல் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். மாவட்டத்திற்குரிய அதிகாரிகள் இல்லாமல், கீழ்த்தரத்தில் உள்ள அதிகாரிகள் இந்த நில சீர்திருத்த சட்டங்களின் பலன்களை விவசாயிகள் பெறுவதற்கு இடம் இல்லாமல் செய்துவிடுகிறார்கள். அதைக் கண்காணிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இனும் ஒழிப்புச் சட்டம் ஏற்கனவே அமலில் இருக்கிறது. எங்கள் பகுதியில் 72 மைனர் இனாம்களும், 6 மேஜர் இனாம்களும் இந்தத் திட்டத்தின் கீழ் வருகின்றன. ஆனால், அவைகளுடைய பலன்களை விவசாயிகள் பெறுவதே இல்லை. அதை சரிவர அமல் செய்வதற்கு தற்பொழுது முறையில் உள்ள ரெவின்யூ அதிகாரிகள் சிறிதுஅளவும் கவனம் எடுத்துக்கொள்வதில்லை. இனாம்தார்கள், நல்ல பணம் படைத்தவர்கள் ரிட் போட்டுவிடுகிறார்கள், ஸ்டே ஆர்டர் வாங்கிவிடுகிறார்கள். விவசாயிகளை இன்னும் அவர்கள் மிரட்டுகிறார்கள். விவசாயிகள் இனாம் ஒழிப்புச் சட்டத்தின் பயனைப் பெறுவதற்கு இந்த அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளுக்கு நாம் ஊக்கம் அளித்தால்தான் உற்பத்தியை அதிகரிப்பதற்கு விவசாயிகள் முன்வருவார்கள்.

கொள்முதலை எடுத்துக்கொண்டால், செபாஸ்டியபுரம் என்ற இடத்திலே, பால் நாடார் என்பவர், போலீஸ் உதவியுடன் கொள்முதல் செய்தபோது மிகவும் கஷ்டப்படுத்தப்பட்டார் என்பது குறித்து அந்த வட்டாரத்திலே மிகுந்த பரபரப்பு விவசாயிகளிடத்திலே ஏற்பட்டது. அந்த அளவிற்கு இந்த பால் நாடார் என்பவரைக் கஷ்டப்படுத்த வேண்டியது நியாயந்தானா, அப்படி நடந்தது உண்மைதானா என்பதை விசாரித்து, அதிகாரிகள் தவறு செய்திருந்தால், அதன் பலனை அவர்களுக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். கொள்முதல் செய்யும்போது, விவசாயிகள் பயமுறுத்தப்படக்கூடிய நிலைமை இல்லாமல் இருக்கும் வகையில் இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.





இந்தக் கதர் சம்பந்தப்பட்டவரையில், இதில் அரசியல் நோக்கம் காரணமாக கையாளுகிறோம் என்று வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால் இந்தக் கதரைப் பற்றிக் கவனித்தால், அது மகாத்மா காந்தியால் ஏற்படுத்தப்பட்டது. அதில் கிராமப் பொருளாதாரத் தத்துவம் எவ்வளவு இருக்கிறது என்பதைக் கவனிக்க வேண்டும். அது பற்றி, அதன் பொருளாதாரம் பற்றி ஆசாரிய விநோபா பாவே அவர்கள், பூமிதான இயக்கம், சர்வோதய இயக்கம் இவற்றில் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அவற்றை நன்கு ஆராய்ந்து கதரை அபிவிருத்திக்குக் கொண்டு வந்தால், கிராம மக்களுக்கு கதரின் மூலமாக கிராம பொருளாதாரத்தில் நல்ல முன்னேற்றம் காணமுடியும் என்பதில் சந்தேகம் இல்லை. இயந்திரப் பொருளாதாரம், உலகத்திலே யுத்தத்தைத்தான் உண்டு பண்ணுகிறது. நிச்சயமாக சமாதானம் ஏற்படவேண்டும் என்றால், கிராமியப் பொருளாதாரம் சீர்படவேண்டும், அதற்கு அடிப்படையாக இருப்பது கதர் இயக்கம். ஆகவே, அந்த தத்துவத்தை நன்றாக உணர்ந்தோமானால், மனித குலத்திற்கு சமாதானம் நிலைக்க முடியும். கதர் அபிவிருத்தியில், அம்பர் சர்க்கா கிசான் சர்க்கா முதலியவற்றை கிராமங்களில் பரவச் செய்து, ஏழை எளியவர்கள் சிறிதளவாவது ஊதியம் பெறக்கூடிய அளவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மதுரை சர்வகலாசாலை, தமிழ் சர்வகலாசாலையாக இருப்பதைக் கண்டு பெருமைப்படுகிறேன். அதே சமயத்தில் அந்த சர்வகலாசாலை நல்லமுறையில் பணிபுரிய அதிகப்படியான ஊதியம் அளிக்க வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன். ஜெய் ஹிந்த்.

*திரு. ஓ. பி. ராமன்: மன்றத் துணைத் தலைவர் அவர்களே, 1967-68-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைமீது நடக்கும் விவாதத்தில் எனக்கும் பேசுகின்ற வாய்ப்பினை அளித்ததற்காக என் நன்றி கலந்த வணக்கத்தை தங்களுக்குத் தெரிவிக்கிறேன். இந்த நிதி நிலை அறிக்கை நாட்டிலே இன்றையதினம் இருக்கும் பொருளாதார நிலைமையை சிறந்த முறையில் ஆராய்ந்து, யார் யாருக்கு வரி போட்டால் நலமாக இருக்கும், எந்த எந்த முறையில் வரி போட்டால் வரியைப் பெறமுடியும் என்று நன்கு உணர்ந்து, ஏழை எளியவர்களுக்கு, நடுத்தர மக்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் நல்ல பல திட்டங்களைத் தீட்டி, மாண்புமிகு தமிழக முதல் அமைச்சரவர்கள் இந்த அறிக்கையை அளித்திருக்கிறார்கள். அதிலே, முதல் கட்டமாக, ஏற்படுத்தியிருக்கிற திட்டங்களிலே, விவசாயிகளுக்கு நன்மை பயக்க வேண்டும் என்று அடிப்படைத் தீர்வை புஞ்சை நிலங்களுக்கு ரத்து செய்யப்பட்டிருக்கிறது. அதன் மூலமாக இன்றைக்கு ஏறத்தாழ 45 லட்சம் பட்டாதார்கள் பயன் பெறுகிறார்கள். இந்தச் சூழ் நிலையில் நல்ல பயன் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நாம் 300 கோடி ரூபாய் கடன் வைத்திருந்து, 14 கோடி ரூபாய் வட்டி செலுத்தும் நிலை இருந்தும், இப்படிப் பட்ட சூழ் நிலையை உண்டாக்கி வருவாயைப் பெறுகிற முறையான திட்டங்களை அமல் படுத்த வழி செய்திருக்

[திரு. ஓ. பி. ராமன்] [1967 ஜூன் 26

கிறார்கள். எதிர்க் கட்சி அங்கத்தினர்கள், செலவு செய்யப் படும் முறையில் எந்த எந்த முறைகளில் தவறுகள் இருக்கின்றன என்பவைப்பற்றிக் குறிப்பிடவில்லை; அவர்கள் சொல்வதெல்லாம், வரியைக் குறைவாகப் போட்டிருக்கவேண்டும், அதை இதை எடுத்திருக்க வேண்டும் என்பவைதான். முறையாக செலவு செய்யும் முறையில் எந்த எந்த இடத்தில் குறை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட முடியவில்லை.

இன்றைக்கு கல்விக்காக 54 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இது மொத்த வருவாயில் 25 சதவிகிதமாக இருக்கிறது. தேர்தல் நேரத்திலே, திராவிட முன்னேற்றக் கட்சி ஆட்சிக்கு வந்தால் பள்ளிக்கூடங்களை ஒழித்து விடுவார்கள் என்று, முன்னாள் அமைச்சர்கள் இருக்கின்ற கூட்டங்களில், பொறுப்புள்ள காங்கிரஸ் காரர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். பத்திரிகைகளில் வந்திருக்கிறது. ஆனால் இன்றைக்கு நிலைமை என்ன? ஒதுக்கப் பட்டிருக்கும் தொகை, கல்விக்காக ஒதுக்கப் பட்டிருக்கும் பணம் ரூ. 54 கோடி. அதே போல தாழ்த்தப்பட்டவர்களுடைய நன்மைக்காக கணிசமான அளவு தொகைகள் இந்த பட்ஜெட்டிலே ஒதுக்கியிருக்கிறார்கள். ரூபாய் 1,500-க்குக் குறைவான வருமானம் உள்ளவர்களுடைய பிள்ளைகளுக்கு இலவசமாக கல்லூரி புகுமுக வகுப்பு செய்யப்பட்டிருக்கிறது. இந்தச் சலுகை ஜாதி மத வேறுபாடு இல்லாமல் அளிக்கப்பட்டிருக்கிறது. வருவாய் அடிப்படையில், இன்னின்ன ஜாதிக்கு என்று இல்லாமல், ஏழை எளியவர்கள் என்கின்ற அடிப்படையில் இந்தச் சலுகை அளித்திருக்கிறார்கள். எனக்கு முன்பு பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர், திரு. பூவராகன் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த பி. யு. சி. வகுப்பிற்குக் கொடுக்கும் சலுகை எல்லா மாணவர்களுக்குமே கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்று. இன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகம் வசதி உள்ளவர்களிடமிருந்து சம்பளம் வாங்க வேண்டும் என்று செய்திருப்பதற்குக் காரணம், வசதிபெற்றவர்கள் சம்பளம் கொடுக்கலாம் என்பதால் தான். தனிப்பட்டவர்களைப் பற்றிக் குறிப்பிடுவதாக நினைக்க வேண்டாம். உதாரணத்திற்குச் சொல்லுகிறேன். இன்றைக்கு டி.வி.எஸ். வீட்டார் பிள்ளைகளுக்கு சம்பளம் வாங்க வேண்டும் என்றால், அவர்களிடமிருந்து வாங்கி பக்தவத்சலம் அவர்களுடைய பிள்ளைகளுக்குச் சேர வேண்டும் என்பதல்ல கொள்கை. கக்கன் அவர்களுடைய பிள்ளைகளுக்கு சேர்ந்தாலும் சேரலாம். ஆனால் வசதிபடைத்தவர்களிடமிருந்து வசூல் செய்து சாதாரண ஏழை எளிய நடுத்தர மக்கள் பயன் பெற வேண்டும் என்பதுதான் நோக்கம். ஆகவேதான் வருவாய் அடிப்படையில் தமிழக அரசு 1,500-க்கும், 2,000-க்கும் குறைவான வருமானம் உள்ளவர்களுக்கு உதவி என்று செய்திருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் கல்விச் சலுகை கொடுப்பதில் வருவாய் அடிப்படை 2,000 என்று உயர்த்தப்பட்டிருக்கிறது. அது நடுத்தர மக்களுக்கு நன்மை பயக்கும் என்பதைக் கண்கூடாகக் காண்கிறோம்,



1967 ஜூன் 26] [திரு. ஓ. பி. ராமன்]

விவசாயத்திற்கு மின்சாரம் மிக மிக அவசியமானது. அதற்காக ஒதுக்கியிருக்கும் தொகை ரூ. 30,60,00,000. அனல் மின்சாரத்திற்கு பத்துக் கோடியும், பரம்பிக்குளம்-அளியார் திட்டத்திற்கு 3,10,000 மும் பேசின் பிரிட்ஜ் திட்டத்திற்கு 1,85,00,000 மும் கோதையாறு திட்டத்திற்கு 3,10,00,000 மும் இன்னும் பல திட்டங்களுக்கும், ஆக 30 கோடி 60 லட்சம் ரூபாய் மின்சாரத்தைப் பெருக்குவதற்காக என்று ஒதுக்கியிருக்கிறார்கள் அதனால் விவசாயிகளுக்கு நல்ல பயன் ஏற்படும். ஆகவே, திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைக்கு ஆட்சியில் வந்து நல்ல பல சீர்திருத்தச் சட்டங்களைக் கொண்டு வந்து, 20 ஆண்டு காலமாக காங்கிரஸ் சர்க்கார் செய்யாததைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

முக்கியமாக பஸ் போக்குவரத்தை 75 மைலுக்கு மேல் இருப்பவற்றை, அரசாங்கமே ஏற்றுக்கொண்டு நடத்த இருக்கிறது.

இப்படி கல்விக்காக அதிகமான அளவில், காங்கிரஸ் அரசில் செய்ததைவிட அதிக அளவில், பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். அந்த முறையில் புதிய புதிய சாதனை செய்துக் கொண்டிருக்கிறது. அந்த வகையில் இந்த அரசு சாதாரணமாக பணக்காரர்களைக் கசக்கிப் பிழியவேண்டும் என்று இல்லாவிட்டாலும், ஏழைகளுக்கு வாழ்வு அளிக்க வேண்டும் என்பதை புரிந்துகொண்டு தமிழக வரவு செலவுத் திட்டத்தை அமைத்திருக்கிறது என்பதைத் தெரிவிக்கிறேன்.

அடுத்தபடியாக, கலப்பு மணம் பற்றி ஒரு வார்த்தை. பொற்பதக்கம், பரிசு இவற்றிற்கெல்லாம் வழிசெய்து பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். ஜாதிக் கொடுமையை இன்றைக்கும் பார்க்கிறோம். சட்டத்திலே தீண்டாமையை ஒழித்து அமல் படுத்தினாலும், கிராமப்புறங்களிலே தீண்டாமை இன்னும் இருந்து கொண்டுதான் இருக்கிறது. நல்ல படித்த இடங்களில் கூட அதைப் பார்க்கிறோம். நகர் புறங்களிலே குறைந்திருக்கிறது என்றாலும், கிராமங்களில் அப்படி இல்லை நிலைமை. ஜாதி வித்தியாசத்திற்கும், தீண்டாமைக்கும் வேறுபாடு இருக்கிறது. உதாரணமாக, நாயக்கர், பிள்ளை என்று எடுத்துக் கொண்டால், அவர்களிடையில் தீண்டாமை முறை இல்லை. ஆனால் கொள்வினை கொடுப்பினை இருக்காது. ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், மற்றவர்களுக்கும் இடையே தீண்டாமை இருந்து கொண்டிருக்கிறது, நடைமுறையிலே தீண்டாமை இருக்கிறது. ஆகவே, இந்த கலப்பு மணத் திட்டத்திலே தீண்டாத வகுப்புப் பெண்ணை ஒரு உயர்ந்த வகுப்புக்காரர் மணந்தாலும், ஒரு உயர்ந்த வகுப்புப் பெண்ணை, தீண்டாத வகுப்புக்காரர் கட்டிக் கொண்டாலும், அதற்கு தனிப்பட்ட அதிகமான சலுகைகள் கொடுக்க திட்டத்திலே ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்பொழுதுதான் ஜாதியற்ற சமுதாயம் உருவாகும் சூழ்நிலை ஏற்படும் என்று கருதுகிறேன். அந்த வகையில் சிறந்த பரிசுகள் கொடுக்க திட்டத்திலே வகைசெய்யுமாறு கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன், வணக்கம்,

* திரு. ஆ. கு. சுப்பையா: மதிப்பிற்குரிய உதவித் தலைவர் அவர்களே, இன்றையதினம் மேன்மை தங்கிய முதலமைச்சரவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கக்கூடிய நிதிநிலை அறிக்கை சம்பந்தமாக நான் சில விஷயங்களைச் சொல்வதற்கு ஆசைப்படுகிறேன். நமது மதிப்பிற்குரிய முதலமைச்சரவர்கள் மிகச் சாமர்த்தியமாக இந்த வரவு-செலவு அறிக்கையைத் தயார் செய்திருக்கிறார்கள். இருபது வருஷ காலமாக ஆட்சி நடத்திய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் இம்மாதிரியான ஒரு அறிக்கையைத் தயாரித்ததே கிடையாது.

இந்த அறிக்கையில் முழுக்க முழுக்க மத்திய சர்க்காருடைய ஏகபோக அதிகாரத்தை நமது தமிழக மக்களுக்கு எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இதைக் கம்யூனிஸ்டு கட்சி பூரணமாக வரவேற்கிறது. மத்திய ஆட்சிக்கும், மாநில ஆட்சிகளுக்கும் உள்ள உறவுகளைப் பார்க்கின்றபொழுது, இன்றையதினம் மத்திய ஆட்சியினுடைய உதவிகளெல்லாம் மாநில ஆட்சிகளுக்கு துரதிருஷ்டவசமான நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. அதன் காரணமாகத்தான் இன்று நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தயாரித்தும் கூட அந்தத் திட்டம் தோல்வி தரக்கூடிய ஒரு நிலையில் உள்ளது. நமது ராஜ்யத்திற்கு அதிகமான நிதி ஒதுக்காமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்த ஆண்டிற்கு 85 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நியாயமாகப் பார்த்தால் இந்த நாட்டிற்கு 113 கோடி ரூபாய் ஒதுக்கியாக வேண்டும். அதிலும் குறைத்திருக்கிறார்கள். இவ்வாறு குறைத்ததன் காரணமாகத்தான் நம்முடைய திட்டங்களை நிறைவேற்ற முடியாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது.

இன்று இதற்கு முன்னரே ஆலோசனையில் இருக்கக்கூடிய சேலம் உருக்காலைத் திட்டமும், சேது சமுத்திரத் திட்டமும், தூத்துக்குடி துறைமுகத் திட்டமும் நிச்சயம் நிறைவேற்றப்பட வேண்டும். அதை நிறைவேற்றக்கூடிய அளவில் மத்திய அரசாங்கத்தோடு நாம் போராடியாக வேண்டும். அவ்வாறு போராடுகின்றபொழுது இந்த ராஜ்யத்தில் இருக்கக்கூடிய கோடிக்கணக்கான மக்கள் இந்தப் போராட்டத்தை நடத்துவதற்குத் தயாராக இருந்து கொண்டு இருக்கிறார்கள். அந்தப் போராட்டத்திற்கு நம்முடைய அரசு ஆதரவு கொடுத்தால் போதும். அதற்காக பதவி விலக வேண்டிய அவசியம் கிடையாது. பதவியிலிருந்து கொண்டே மத்திய அரசை எதிர்த்துப் போராடி அந்த உரிமைகளைப் பெறுவதற்கு நாம் பெரிய தீவிரமான முயற்சியிலே ஈடுபட வேண்டுமென்று சொல்லிக் கொள்ளுகின்றேன். அம்மாதிரி ஈடுபடுகின்ற காலத்தில் நமது அரசு மக்களுக்கு ஆதரவு கொடுக்கின்ற காலத்தில் காங்கிரஸ் அல்லாத மற்ற மாகாணங்களும் நமக்குப் பரிபூரணமாக ஆதரவு கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய, நமது அரசு முன் வரவேண்டும். மத்திய சர்க்காரிடமிருந்து வாங்கிய கடன் மேலும் மேலும் உயர்ந்துகொண்டே போய்



இன்றையதினம் 300 கோடி ரூபாய் கடனாளியாயிருக்கிறோம். 300 கோடி ரூபாய்க்கு 14 கோடி ரூபாய் வட்டி கொடுக்க வேண்டிய நிலையிலே இருக்கின்றோம். மத்திய சர்க்கார் லேவாதேவி செய்வது போல் மாநில சர்க்காரை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொகையை ஏன் அவர்கள் மானியமாகக் கொடுக்கக்கூடாது என்பது என்னுடைய கேள்வியாகும்.

65005

மத்திய நான்காவது நிதிக் கமிஷன் தன்னுடைய தனிக்குழு பரிவுரையையேற்று, அவசியமானால் ஒரு வல்லுனர் குழு அமைக்க வேண்டியது என்று இந்தச் சமயத்திலே இந்த அறிக்கையில் முதலமைச்சரவர்கள் கூறியிருக்கிறார்கள். அதைச் செய்வதன் மூலம் மத்திய மாநில அரசாங்கத்தின் உறவுமுறைகளையும் நிர்ணயம் செய்ய முடியும். இந்த நான்காவது திட்டத்தில் கண்டுள்ள வேலை கைவிடப்படுமேயானால் அல்லது நாம் உத்தேசித்திருக்கக்கூடிய இந்தப் பெரிய தொழிற்சாலைகள் நிறுத்தப்படுமேயானால் நம நாட்டிலே வேலையில்லாத நெருக்கடி மேலும் மேலும் அதிகரிக்கும். இன்றையதினம் படித்து வேலையில்லாமல் இருக்கக்கூடியவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னால் இந்தத் திட்டங்களை நிறைவேற்றியாக வேண்டும்.

அடுத்து, வேளாண்மைத் துறையைப்பற்றியும், விவசாயத்தைப் துறையைப்பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு வேண்டிய உரம், உயர்ந்த ரக வித்துக்கள் ஆகியவைகளை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என்றும், உணவுப் பற்றாக் குறையைப் போக்குகிறோம் என்று சொல்லிக்கொண்டு காங்கிரஸ் ஆட்சியாளர்கள் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 70 லட்சம் டன் உற்பத்தியாகும் என்று சொல்லி இறுதியாகப் பார்க்கும்பொழுது 53 லட்சம் டன்தான் உற்பத்தி செய்ய முடிந்திருக்கிறது. ஆகவே, இதிலே நம்முடைய அரசு விவசாய உறவு முறையிலே மாற்றத்தை ஏற்படுத்தியாக வேண்டும். அமெரிக்க போர்டு பவுண்டேஷன் நிபுணர் அவர்கள் விவசாயச் சட்டம் எப்படி நடைமுறையில் இருக்கிறது என்பதுபற்றியும் ஒரு அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள். விவசாயிகள் உற்சாகத்துடன் பாடுபட்டாலொழிய, உணவு உற்பத்தி செய்ய முன்வந்தாலொழிய அரசாங்கம் செய்யக்கூடிய உதவியெல்லாம் பயன்தராது என்பதுதான் எங்கள் அபிப்பிராயமும்.

இன்றையதினம் நிலவரி ரத்து செய்யப்பட்டிருக்கிறது. புஞ்சைக்கு ரத்து செய்யப்பட்டிருக்கிறது வரவேற்க வேண்டியது. அதுபோல நஞ்சை நிலத்துக்கும், விரைவிலே மூன்று ஏக்கரா வரையிலுள்ள நிலம் வைத்திருக்கக்கூடிய நிலச் சொந்தக்காரர்களுக்கும் நிவாரணம் அளிக்கக்கூடிய வகையில் ரத்து செய்ய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும். நிலச் சட்டங்களைப்பற்றி நமது மதிப்பிற்குரிய முதலமைச்சரவர்கள் ஒரு வார்த்தைக்கூட இதிலே குறிப்பிடவில்லை. அடுத்து, விவசாயிகளுக்கு நிலம் சொந்தமாக்க வேண்டிய நடவடிக்கை எடுப்பதின்

மூலம் நாம் எதிர்பார்க்கிற 70 லட்சம் டன் உணவு உற்பத்தி செய்ய வாய்ப்பு இருக்கிறது. நில வார உரிமை 60-40 என்ற முறையை கொஞ்சம் மாற்றி 65-35 என்ற முறையிலே இந்தச் சட்டத்தைத் திருத்தியாக வேண்டும். நிலப்பிரபுக்கள் தாங்கள் ஒரு வேலையும் செய்யாமல் நிலத்தைத் தங்களுக்குச் சொந்தமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலே குத்தகைகாரர்களுக்கு வசதியாக இந்த வாரசட்டத்தை திருத்தம் செய்யவேண்டும்.

இன்றையதினம் மதுவிலக்கை ரத்து செய்வதன் மூலம் ஏராளமாக வருமானம் கிடைக்கும் என்பது எங்கள் அபிப்பிராயம். பக்கத்து மாநிலங்களில் மதுவிலக்கை ரத்து செய்திருக்கிறார்கள். பக்கத்து மாநிலத்திலுள்ளவர்கள் மதுவை அருந்திக்கொண்டிருக்கிறார்கள். இதற்குரிய தகுந்த சட்டத்தை இயற்றி அரசாங்கம் மதுவிலக்கை ரத்து செய்வது சரியாக இருக்க முடியும். அதில் இருந்து கிடைக்கக்கூடிய வருமானத்தால் நம்முடைய திட்டங்களுக்கு செலவு செய்வதற்கு வேண்டிய ஒரு நிலையை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

இன்றையதினம் பல ஆண்டுகளாக இருந்து வந்த, தஞ்சை விவசாயிகளின் ஆவலை நிறைவேற்றக்கூடிய வகையில் இந்த மின்சார கார்ப்பரேஷனை அரசாங்கம் எடுத்துக்கொள்வது மிக்க பாராட்டிற்குரியது. தஞ்சை விவசாயிகள் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறார்கள். ஆகவே, இந்த காரியத்தைச் செய்திருப்பதாகவும் அரசாங்கத்தை பாராட்டி அரசாங்கத்துக்கு விவசாயிகளின் சார்பில் நன்றியை கூறிக்கொள்ளுகிறேன். தரிசு நில வினியோக சம்பந்தமாகப் பார்த்தால், இப்பொழுது இருக்கக்கூடிய தரிசு நிலத்தை மாத்திரம் அரசாங்கம் 11 மாவட்டங்களில் விவசாயம் செய்யும் நிலங்களாக அறிவித்து இருக்கிறது. அந்த நிலங்களையெல்லாம் விவசாயிகள் உடனடியாக எடுத்துக்கொள்வதற்கு ஆவன செய்ய வேண்டும். விவசாயத்தை நம்பியிருக்கக்கூடிய லட்சக்கணக்கான குடும்பங்கள் நமது நாட்டிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த நிலத்தை வினியோகம் செய்து மற்ற இதர உதவிகளையும் செய்து அவர்களை ஊக்குவிப்பதன் மூலமாக அந்த மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்கு வசதியளிக்க முடியும். திருச்சி, இராமநாதபுரம், நெல்லை, வடார்க்காடு போன்ற ஜில்லாக்களிலுள்ள தரிசு நிலங்களை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

ந. ப. 12–00 இறுதியாக, ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்குவதற்கு வருமான வரம்பை உயர்த்தியிருப்பதை வரவேற்கிறேன். ஆயினும் ஹரிஜனங்களை எடுத்துக்கொண்டால் வாழ்க்கையில் மிகவும் அடித்தளத்தில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அரிசனங்கள் எந்தவிதமான வருவாயும் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, வருமான வாய்ப்பு இல்லாத ஹரிஜனங்களுக்கு பூரணமான உபகாரச் சம்பள



வசதியைக் கொடுக்கவேண்டும். அரசாங்கம் அவர்களிடம் நல்ல எண்ணம் கொண்டிருக்கிறது. ஆகவேதான் எந்த விதமான வருமான வரம்பும் இல்லாத அடிப்படையில் அவர்களுக்கு உதவி செய்தால் அவர்கள் இந்த அரசிற்கு மிகவும் கடமைப்பட்டவர்களாக இருப்பார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, ஹரிஜனங்களுடைய குடியிருப்பு விவகாரம் பெரிய பிரச்சனையாக இருக்கிறது. கடந்த 20 வருஷங்களாகவே அது தீர்க்கப்படவில்லை. கடலில் பெருங்காயம் கரைத்தது போல் ஆங்காங்கே சில பேர்களுக்கு மனை வழங்கியிருக்கிறார்களே தவிர பெரும்பாலானவர்கள் நிலப்பிரபுக்களின் பிடியில் அகப்பட்டுத் தான் தவிக்கிறார்கள். ஆகவே, உடனடியாக எங்கே மனைகள் வாங்கி விநியோகிக்க வசதியிருக்கிறதோ அங்கே எல்லாம் வாங்கி விநியோகிக்க ஏற்பாடு செய்யவேண்டும். சர்க்கார் புறம்போக்கு மனை நிலங்களை உடனடியாக விநியோகிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். சுதந்திரம் பெற்று பல ஆண்டுகள் ஆகியும் கூட அவர்கள் சுதந்திரமாக வசிக்க இடமின்றித் தவிக்கிறார்கள். பெரிய மனிதர்களுக்கு அடிமையாக இருக்கிற நிலைமையை மாற்ற உடனடியாக இந்த அரசாங்கம் முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ஆ. கருப்பையா** : பெருமதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டத்தைப்பற்றி பேச வாய்ப்பு அளித்ததற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வரவு-செலவுத் திட்டம் ஏழை எளியவர்களுக்கு வாழ்வு அளிக்கிற திட்டம். குறிப்பாக இருபது ஆண்டு காலமாக நசுக்கப்பட்டு வந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நல்ல வளத்தைத் தேடிக்கொடுக்கக்கூடிய திட்டம், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நல்லதொரு சலுகையை வழங்குகிற திட்டம். இந்தத் திட்டத்தை காங்கிரசைச் சேர்ந்த சில மெம்பர்கள் பாராட்டவில்லை என்றாலும் அதிலே ஒருவிதமான புரட்சியும் இல்லை என்று சொல்கிறார்கள். அவர்கள் இந்த இருபது ஆண்டு காலமாக இந்த நாட்டை ஆண்டு வந்திருக்கிறார்களே, என்ன புரட்சியை ஏற்படுத்தியிருக்கிறார்கள். என்ன வளர்ச்சியைக் கண்டு இருக்கிறார்கள் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். தனிப்பட்டவர்கள் தங்களுடைய வாழ்வை வளப்படுத்திக் கொண்டிருக்கலாம். ஆனால் சமுதாயம் என்ன பயனை அடைந்திருக்கிறது?

உண்மையை விளக்க சிலவற்றை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்கள் திருநெல்வேலி ஜில்லாவில் இருந்து வந்துள்ள காங்கிரஸ் உறுப்பினர்கள் முன்னால் எவ்வளவு பஸ் ரூட்டுகள் வைத்திருந்தார்கள்? இன்றையதினம் எவ்வளவு பஸ் ரூட்டுகள் வைத்திருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். முன்பு எவ்வளவு சினிமாக் கொட்டகைக்கு அதிபர்களாக இருந்தார்கள்.

இப்போது எவ்வளவு சினிமாக் கொட்டகைகளுக்கு அதிபர்களாக இருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். காங்கிரஸ்காரர்களுக்கே அது நன்றாகத் தெரியும். அவர்கள் தங்கள் வாழ்வை வளப்படுத்திக் கொண்டார்கள். ஏழைகளைக் கவனிக்கவில்லை என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எவ்வளவோ நல்ல திட்டங்களையும், சட்டங்களையும் காங்கிரஸ் அரசாங்கம் கொண்டுவந்தது. ஆனால் அவற்றின் பயனை ஏழை எளியவர்கள் அனுபவிக்க காங்கிரஸ்காரர்கள் விடவில்லை. குறிப்பாக எனது கங்கைகொண்டான் தொகுதியில் அழகனேரி கிராமத்தில் பாபுரெட்டியார் இனும் நிலம் இருக்கிறது. அதை ஏழை தாழ்த்தப்பட்ட மக்கள் வேளாண்மை பல ஆண்டுகளாக செய்து வந்ததை 1963-ல் வந்த இனும் ஒழிப்புச் சட்டத்திற்கு பயந்து மற்றும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் உதவியுடனும், போலீஸ் உதவியுடனும் பல பேர்களைக் கைது செய்து, அடக்குமுறை அட்டூழியங்களைச் செய்து காராக்கிரகத்தில் அடைத்து வைத்தார்கள். இதனால் அந்த நிலங்கள் மூன்று ஆண்டுகளாய் தரிசாகத்தான் கிடக்கின்றன. தாழ்த்தப்பட்ட மக்கள் துன்புறுத்தப்பட்டார்கள். இதற்காக காங்கிரஸ் ஆட்சியைப் பாராட்ட வேண்டுமா? அவர்கள் ஏழைகளுக்குத் தீங்குதான் இழைத்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லாமல் இருக்க முடியாது. ஒரு பூவுக்கு நாலாயிரம் மூட்டை நெல் விளையக்கூடிய நிலம் இன்றைக்கும் எனது தொகுதியில் தரிசாகத்தான் கிடக்கின்றன. பேரறிஞர் அண்ணா தன் ஆட்சியில்தான் விவசாயப் பெருங்குடி மக்களை உயர்த்திவிட முன் வந்திருக்கிறார். இந்த அரசு அதுபற்றியும் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாய் விவசாயிகள் தூண்டாமணி விளக்குப் போன்றவர்கள். அவர்களை நம்பினால் இந்த நாட்டின் உணவுப் பஞ்சத்தைப் போக்கிவிடலாம் என்பதாக நிதி நிலை அறிக்கையிலேயே குறிப்பிட்டிருக்கிறார்கள். உணவுப் பஞ்சத்தைப்போக்க, உணவு உற்பத்தியைப் பெருக்க முந்திய அரசு விவசாய மக்களை உற்சாகப்படுத்தத் தவறிவிட்டது. என்னுடைய கங்கைகொண்டான் தொகுதியை எடுத்துக் கொண்டால் சித்રாநதி மேற்கும் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி வருகிறது. அதில் பாண்டியர்கள் காலத்தில் கட்டப்பட்ட அணைகளைத் தவிர வேறு அணையோ இல்லை. அதற்கு மேற்படி நதி உற்பத்தியாகும் இடத்தில் நல்ல அணை கட்டப்பட்டால் நல்ல இருபோக நஞ்சை நிலமாக்கப்படக் கூடிய பூமி இருக்கிறது. அதனால் உணவுப் பஞ்சத்தையும் நீக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் வரவு-செலவுத் திட்டத்தில் மின்சார விநியோக கம்பெனிகளை தேசியமாக்குவதுபற்றி சொல்லப்பட்டிருக்கிறது. அதை வரவேற்கிறேன். இன்றுள்ள மின்சார விநியோகம் எப்படி இருக்கிறது என்றால் கங்கைகொண்டான் தொகுதியில் நவிதநல்லூர் பிர்க்காவில் 1963-லேயே 56 கிணறுகளுக்கு மின்சார மோட்டார்கள் பொருத்தப்பட்டன. ஆனால் இன்னும் கனெக்ஷன் கொடுக்கப்படவில்லை. காரணம் மின்சார கழகத்தினர் எங்கே மோட்டார் வாங்கச் சொன்னார்களோ, அங்கே விவசாயிகள் வாங்காததுதான்





என்று சொல்லப்படுகிறது. இதுபற்றியும் கவனம் செலுத்தி உடனடியாக விவசாயத்திற்கு மின்சாரம் தேவைப்படுகிற இடங்களில் மின்சாரத்தைக் கொடுக்கவேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அளித்துள்ள சலுகையை வரவேற்று அறிஞர் அண்ணா அவர்கள் சமர்ப்பித்துள்ள வரவு-செலவுத் திட்டத்தை ஆதரிப்பதோடு, எனக்குப் பேச வாய்ப்பு அளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

## 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (இ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் :** ஓர் அறிவிப்பு உள்ளது. சட்டப் பேரவையின் 6-வது விதியின்கீழ், கீழே குறிப்பிட்டுள்ள மாண்புமிகு உறுப்பினர்களை, மாற்றுத் தலைவர்களாக Panel of Chairmen ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கடை வைத்திருந்து முன்பணமாக வாங்கிய நாலு

1. திரு. ஏ. வி. பி. ஆசைதம்பி.
2. திரு. பெ. மலைச்சாமி.
3. திரு. எஸ். முருகையன்.
4. திரு. கா. வேழவேந்தன்.
5. திரு. தோ. மு. நல்லசாமி.
6. திரு. வி. கே. கோதண்டராமன்.

## 3. 1967–68-ம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

*** திரு. ரா. ரெத்தின தேவர் :** உதவி சட்டமன்றத் தலைவர் அவர்களே, 1967-68-ம் ஆண்டுக்கான பட்ஜெட் வரவு-செலவுத் திட்டத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். பொதுவாக ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டம், புஞ்சை நிலங்களுக்கு வரி ரத்து செய்தது, பஸ்களை தேசியமயமாக்கியது ஆகிய எல்லாவற்றுக்கும் நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். அதேபோல் நஞ்சை நிலங்களுக்கும் இந்த அரசாங்கம் வரியை ரத்து செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக நஞ்சை நிலங்களில் எல்லாம் நெல் பயிர் அதிகமாக விவசாயம் செய்யப்படுகிறது. அதே தருணத்தில் ஒரு ஏக்கர் நஞ்சை நிலத்தில் விவசாயம் செய்ய ஏறத்தாழ 150 ரூபாய், 200 ரூபாய் வரையிலும் விவசாயிகளுக்குச் செலவாகிறது. மேலும் விவசாயிகளுக்குக் குறிப்பிட்ட காலங்களில் ரசாயன உரங்களும் கிடைப்பதில்லை. அவர்கள் வெளி மார்க்கெட்டில் படி 2 ரூபாய்

[திரு. ரா. ரெத்தின தேவர்] [1967 ஜூன் 26

2½ ரூபாய் என்று அதிக விலை கொடுத்து வாங்கும்படியான நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, நஞ்சை விவசாயத்தில் அதிகமாகச் செலவுகள் ஏற்படுகின்ற காரணத்தினால், விவசாயிகளுக்கு நஞ்சை நில வரியையும் ரத்து செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல் வருமான வரி. என்னுடைய மாவட்டம் கிழக்கு இராமநாதபுரம். எப்போதுமே அது வறட்சியான பகுதி என்பது தெரியும். அந்தப் பகுதியில் சிறுநில விவசாயிகளும், பெரிய நில விவசாயிகளும் இருக்கிறார்கள். விவசாயம் செய்ய நிலத்தில் நாற்று நட்டு, களை எடுத்து, உரம் போட்டு, அறுவடையாகின்ற நேரத்தில் மழை இல்லாமல் போனால் பயிர்கள் எல்லாம் சாவியாகப் போய்விடுகின்றன. பயிர்கள் எல்லாம் சாவியாகப் போய்விட்டனவே என்று கிராம அதிகாரிகளிடம் எடுத்துச் சொன்னால் அவர்கள் அதைக் கேட்பது இல்லை. அந்த அதிகாரிகள் கிராமக் கர்ணத்தைக் கூப்பிட்டு, கணக்கைப் பார்த்து அடங்கலைப் பார்த்து உடனே வரியை விதித்து விடுகிறார்கள். அங்குள்ள மக்கள் வருமான வரியைச் செலுத்த முடியாத நிலைமையில் கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இராமநாதபுரம் மாவட்டத்திற்கு இந்த வருமான வரியிலிருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பர்மா அகதிகள் பிரச்னை. எங்கள் பகுதியில் கைத்தொழில்களோ, மில்களோ இல்லாத காரணத்தினால் பர்மா அகதிகள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பர்மாவிலே கடைகள் வைத்திருந்தவர்கள் மீண்டும் கடைகள் வைத்துப் பிழைக்க அரசாங்கத்திற்கு லோன்களுக்கு மனுக்கள் போட்டிருக்கிறார்கள். ஆயிரம் ரூபாய் லோன் என்றால் அவர்களுக்கு நூறு ரூபாய்தான் முன் பணமாகக் கொடுக்கிறார்கள். அந்த நூறு ரூபாய்க்கும் இங்குமங்கும் அலைய ஐம்பது ரூபாய் செலவாகி விடுகிறது. மீதியான ஐம்பது ரூபாய்தான் கைக்குக் கிட்டுகிறது. அவர்கள் கடை வைத்திருந்தது முன்பணமாக வாங்கிய நூறு ரூபாய்க்குச் சாமான்கள் வைத்திருந்தால்தான் மீதிப் பணம் கொடுக்கப்படும் என்று அதிகாரிகள் கட்டளையிடுகிறார்கள். அப்படி அதிகாரிகள் கூறுகிறபடி ஏற்பாடு செய்கிற நேரத்தில், "ஏற்கெனவே வந்த அலாட்மெண்ட்கள் தீர்ந்துவிட்டன. அடுத்தது வரட்டும்" என்று தொடர்புள்ள அதிகாரிகள் கூறிவிடுகிறார்கள். இப்படியாக பர்மா அகதிகள் கையிலுள்ள பணத்தையும் செலவழித்துவிட்டுக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த விஷயத்தில் முதலமைச்சர் அவர்கள் தகுந்த கவனம் செலுத்தி ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. மலைச்சாமி) தலைமை]

சென்ற ஏப்ரல் மாதம் கனம் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கமுதி பஞ்சாயத்து யூனியனுக்கு விஜயம் செய்திருந்



1967 ஜூன் 26] [திரு. ரா. ரெத்தின தேவர்]

தார்கள். பஞ்சாயத்து யூனியனிலே நடந்த அயோக்கியத்தனமான சில ஊழல்களைப்பற்றி, ஓர் ஊழல் புகார் பெட்டிஷன் அவர்களிடம் தரப்பட்டது. அவர் தகுந்த அதிகாரிகளிடம் விசாரித்துத் தணிக்கை செய்து பார்த்தார். அப்படி அவர் பார்த்தவுடனே . . .

(மணியடிக்கப்பட்டது)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. மலைச்சாமி) :** கனம் உறுப்பினர் அவர்கள் 'அயோக்கியத்தனம்' என்ற வார்த்தையை உபயோகித்தார். அந்த வார்த்தை பேரவைக்கு ஒவ்வாதது என்பதால், அதைத் திரும்பப் பெற வேண்டுமென்று அங்கத்தினரைக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ரா. ரெத்தின தேவர் :** அங்கே நடந்தது . . .

(மணியடிக்கப்பட்டது)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. மலைச்சாமி) :** நீங்கள் அந்த வார்த்தையை வாபஸ் பெற வேண்டும்.

**திரு. ரா. ரெத்தின தேவர் :** நான் வாபஸ் பெற்றுக்கொள்கிறேன். சில குற்றங்களை அவர் நேரில் பார்த்துக் கொண்டிருந்தார். ஏற்கெனவே அவர் அது சம்பந்தமான அதிகாரிகளிடம் நல்ல முறையில் நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லிவிட்டு வந்தார். பத்து நாட்கள் கழித்து, பஞ்சாயத்து யூனியன் தலைவர் ஏதோ சொன்னதாகவும், அதன் காரணமாக அவரை மன்னித்துவிட்டதாகவும், கமுதியைப் பொறுத்த அளவிலே, பேசிக்கொண்டார்கள். என்னைப் பொறுத்தமட்டில் எந்த விதமான எண்ணமும் இல்லை. குற்றம் என்று தெரிந்திருந்தும், அமைச்சர் அவர்கள் நல்ல முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதுதான் எங்கள் நோக்கம். தவறு செய்திருப்பவர்களுக்கு மன்னிப்புக் கொடுத்தால் மறுபடியும் தவறு செய்ய இடம் ஏற்படும். அதே சமயத்தில் அவர்கள் வருகிற காலங்களில் . . .

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** கமுதி ஊராட்சி மன்றத்திற்கு சென்றிருந்த நேரத்தில் அந்த ஊழல்கள்பற்றிய புகார் வந்தது. அவற்றை விசாரித்து நடவடிக்கை எடுக்குமாறு தொடர்பு உடைய அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அவ்வப்போது எடுக்கப்படுகிற நடவடிக்கைகள் குறித்து தெரியப்படுத்த வேண்டுமென்று கூறிவிட்டு வந்திருக்கிறேன். இதுதான் அங்கு ஏற்பட்டிருக்கிற நிலைமை. உறுப்பினர் அவர்கள் கற்பனை செய்துகொண்டு பேச வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ரா. ரெத்தின தேவர் :** அதே நேரத்திலே மீண்டும் அந்தச் சந்தர்ப்பத்திற்கு இடம் கொடுக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். பொதுவாக 1967-68-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலே எங்களுடைய கிழக்கு இராமநாதபுரம் பகுதியும், முதுகுளத்தூர் விவசாயப் பெருமக்களுடைய எண்ணத்தின் அடிப்

படையில் தண்ணீர் திட்டத்திற்கான ஏற்பாடுகள் ஒன்றும் செய்யப்படவில்லையென்பதை மிக்க வருத்தத்தோடு தெரிவித்துக்கொண்டு விடை பெறுகிறேன்.

* திரு. டி. டி. எஸ். திப்பையா : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் 1967-68-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை வரவேற்றும், சிலர் திருத்தங்கள் செய்யவேண்டுமென்றும் பேசினார்கள். நான் விவசாயி என்ற முறையில், விவசாயத்திலே உள்ள கஷ்டங்களைப்பற்றி ஒருசில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.

இப்போது விவசாயிகளுக்குப் புதிதாக விற்பனை வரி போடுவது அவ்வளவு உசிதமாக இருக்காது என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இன்றையதினம் விவசாயிகளில் 100-க்கு 90 பேர் கடனிலே ஆழ்ந்து, கஷ்டப்பட்டுக்கொண்டு வருவதை நாம் பார்க்க முடியும். இந்த உண்மை விவசாயம் செய்கிறவர்களுக்குத்தான் தெரியும். நான் 100-க்கு 90 பேர் என்று சொல்லும்போது, அந்த மீதிப் பத்து பேர் யாராய் இருக்க முடியும் என்று பார்ப்போமானால், அவர்கள் விவசாயத்தோடு, மற்ற உபதொழில்களைச் செய்து வருபவர்களாகத்தான் இருக்க முடிகிறது. உண்மையிலே நேரடியாக விவசாயம் செய்யக்கூடியவர்கள் வசதி படைத்தவர்களாக இருக்க முடியாது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். அதுமட்டுமல்ல. விவசாயம் என்று எடுத்துக்கொள்ளும்போது, சென்ற பத்து ஆண்டுகளுக்கு முன் விவசாயம் எப்படி இருந்தது இப்போது எப்படி வளர்ச்சி அடைந்திருக்கிறது என்பதைப் பார்க்கும்போது ஓர் உண்மை தெரிகிறது. அதாவது பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்பட்ட பிறகுதான் விவசாயத்தில் ஒரு புதிய உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. காரணம், அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகள், வட்டார வளர்ச்சி அலுவலகத்திலே பணிபுரியக்கூடிய விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகள்தான். இதற்கு முன்பு இருந்த அரசாங்கமானது, விவசாயத்திற்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் கடன்களையும், மற்றச் சலுகைகளையும் வழங்கி வந்ததின் காரணமாகவே விவசாயத்தில் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. விவசாய உற்பத்தியில் தனி அக்கறை காட்டப்பட்டது. அதுமட்டுமல்ல. இன்று படித்துப் பட்டம் பெற்று கிராமங்களில் இருக்கக்கூடியவர்கள் தொழில் இல்லாமல், கடைசியாக விவசாயத்தைச் செய்ய வேண்டுமென்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. விவசாயத்திலே கூட ஏதோ ஒரு பெரிய ஆபத்து ஏற்பட்டுவிட்டதாக விவசாயிகள் கருதுகிறார்கள். காரணம், எங்களுடைய பகுதியில் 100 அடி ஆழத்திற்குக் கீழேதான் தண்ணீர் இருக்கிறது. சிறிய கிணறாக இருந்தாலும் பத்தாயிரம் ரூபாய் செலவழிக்க வேண்டியிருக்கிறது. பெரிய கிணறாக இருந்தால், இருபதாயிரம், முப்பதாயிரம் ரூபாய் வரை செலவழித்தால்தான் கிணறு என்று சொல்லக்கூடிய அளவில் ஏற்படுகிறது. 100 அடி, 150 அடி ஆழத்திலிருந்து தண்ணீர்





எடுத்து விவசாயம் செய்யக்கூடிய நிலை அந்தப் பகுதியில் இருக்கிறது. அதுவல்லாமல், அவ்வளவு பெரிய தொகையைக் கடனாக வாங்கி, கிணறு வெட்டி விவசாயம் செய்து, ஒன்று, அரை மிச்சமானாலும், அதையும் அந்த விவசாயிகள் விவசாயத்திற்காகத்தான் மீண்டும் செலவழிக்கிறார்களே தவிர, வேறு காரியங்களுக்கோ அல்லது குடும்பத்தின் சௌகரியத்திற்கோ உபயோகப்படுத்திக்கொள்ள முடிவதில்லை என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். விவசாயிகளுக்கு கிடைக்கக்கூடிய தொகைகளை அந்தப் பூமியிலேயே மேலும் மேலும் போட்டு, அந்த விவசாயத்தைப் பெருக்குவதற்கு முயற்சிக்கிறார்களே தவிர, வேறு காரியங்களுக்கு உபயோகப்படுத்துவதில்லை என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

மேலும் ஒரு கஷ்டம் என்னவென்றால், இவ்வளவு தொகை செலவு செய்து அந்தப் பூமியிலே ஏதாவது நெல்லோ அல்லது வேறு உணவு தானியங்களோ உற்பத்தி செய்யும் பட்சத்தில் ப்ரொக்யூர்மென்ட் தொல்லை இப்பொழுது இருந்து கொண்டிருக்கிறது. சாதாரணமாக, வாய்க்கால் வழியாக வரும் தண்ணீரையோ அல்லது குளங்கள் மூலமாக வரும் தண்ணீரையோ அல்லது கிணறுகள் வெட்டி அதிலிருந்து வரும் தண்ணீரையோ உபயோகப்படுத்தி நெல் உற்பத்தி செய்தால், எல்லாவற்றிற்கும் ஒரே மாதிரிதான் ப்ரொக்யூர்மென்ட் இருக்கிறது. எப்படிப் பயிர் செய்தாலும் ப்ரொக்யூர்மென்ட் ஒரே மாதிரிதான் கொடுக்க வேண்டியிருக்கிறது. 100, 150 அடி ஆழத்திலிருந்து தண்ணீரை எடுத்து, அதிகப்படியாகச் செலவு செய்து, நெல் விளைவித்தாலுங்கூட, அதிலும் ப்ரொக்யூர்மென்ட் என்ற தொல்லை இருப்பதால் விவசாயிகள் மிகவும் வேதனை அடைகிறார்கள். இதையெல்லாம் கருத்திற்கொண்டு, தோட்டங்களிலே பயிர் செய்யக்கூடிய நெல் வகைகளைப் பொறுத்த வரையில் அவற்றிற்கு ப்ரொக்யூர்மென்ட்டை நீக்கி, வாய்க்கால் வழியாகத் தண்ணீர்க் கிடைக்கக்கூடிய பூமிகளைப் பொறுத்து மாத்திரம் ப்ரொக்யூர்மென்ட்டை வைத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாது என்று சொல்லுவார்கள். அது முற்றிலும் உண்மை. விவசாயிகளாக இருக்கக்கூடியவர்கள் அப்பாவிகள் என்று சொல்லலாம். வேறு துறையிலே இருக்கக்கூடியவர்களைப்போல் அவர்கள் படித்தவர்களல்ல. கணக்கு வைப்பதென்றாலே அவர்களுக்கு ஒரு பயத்தை உண்டாக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆகவே, ஏக்கருக்கு இவ்வளவு தொகை என்று கம்பவுண்டிங் முறையை வைத்தால் அந்த வரியை அவர்கள் கட்டிவிடுவதற்குச் சிரமமில்லாமல் இருக்கும்.

மேட்டுப்பாளையம் பகுதியில் மலையோரங்களில் இருக்கும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் தரிசாகக் கிடக்கிறது. ஏழை எளியவர்கள் அதிகமாக இருக்கும் அந்தப் பிரதேசத்தில் சும்மா

யிருக்கும் பூமிகளை, ஐந்து ஏக்கர், நான்கு ஏக்கர் என்று பிரித்தாவது கொடுத்து வேளாண்மையை ஊக்குவிக்க வழிவகை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். நிறைய வண்டல் படிந்த மண் அந்தப் பகுதியில் இருக்கிறது. விவசாயிகள் அதை எடுத்துக்கொள்ள அனுமதி கொடுப்பதில்லை. அனுமதி கொடுத்தால் விவசாயத்தைப் பெருக்குவதற்கு வழியாக இருக்கும்.

பவானி ஆற்றிலிருந்து விவசாயத்திற்குத் தண்ணீர் எடுத்துக் கொள்ள ஒரு சிலருக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. ஒரு சிலருக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. எல்லோருக்கும் ஒரே மாதிரியாக விதி விலக்கு அளித்து, பவானி ஆற்றிலிருந்து விவசாயத்திற்குத் தண்ணீர் எடுத்துக்கொள்ள அனுமதி அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கல்வி பற்றியும் இந்த அறிக்கையில் குறிக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் உயர்நிலைப் பள்ளிகள் கிராமப் பகுதிகளில் அதிகப்படியாக இருந்தும், இட வசதி இல்லாமல் மிகவும் கஷ்டப் பட்டு வருவதையொட்டி, பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஜெனரல் ஃபண்டிலிருந்து குறைந்தது பத்தாயிரம் ரூபாயாவது கொடுக்க வழிவகை செய்ய அரசாங்கம் முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

•

## 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (உ) பேரவையின் பிற்பகல் கூட்டம்

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. மலைச்சாமி) :** இன்று காலை நடந்த அலுவல் ஆய்வுக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டபடி, இப்பேரவையின் கூட்டம் இன்று பிற்பகல் 1-30 மணிக்கு முடிந்து, மீண்டும் மாலை 3-30 மணிக்குத் தொடரும் என்பதை இப்பேரவைக்கு நான் அறிவிக்கிறேன்.

## 3. 1967-68-ம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

* **திரு. பி. ஜயராஜ் :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நமது புதிய அரசு கொண்டுவந்திருக்கிற இந்த வரவு-செலவுத் திட்டத் தின்மீது என்னுடைய கருத்துக்களையும் சொல்ல நான் முன் வருகிறேன். புதிதாக அமைந்திருக்கக்கூடிய இந்த அரசாங்கம், ஏழை எளிய மக்களுக்கு நல்ல வாய்ப்புக்களைக் கொடுத்து, அவர்களுடைய வசதிகளைப் பெருக்கி, அவர்களுக்கு நல்ல வாழ்க்கையை இந்த மாநிலத்தில் ஏற்படுத்தும் என்று தமிழகத் திலே இருக்கும் மக்களெல்லோரும் எண்ணிக்கொண்டிருந்தார்கள். அதே நேரத்தில், புதிதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இந்த பட்ஜெட்டில், நில வரியைப் புன்செய் நிலங்களுக்கு ரத்து





செய்வதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இருப்பினும், தஞ்சை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், பெரும் பகுதி அங்கு நன்செய் நிலங்களாகக் காட்சி அளிக்கின்றன. தஞ்சை மாவட்டத் தில் சுற்றுப்பிரயாணம் செய்திருக்கிற அமைச்சர்கள், நேரடியாக வயலில் இறங்கி வேலை செய்யக்கூடிய விவசாயிகளுக்கு வரி விலக்கு கொடுக்கப்படும் என்று பேசியதாகப் பத்திரிகையில் பார்த்தேன். அப்படிப் பார்க்கின்றபோது, குறிப்பாக, இரண்டு ஏக்கர் நிலமுள்ள விவசாயிகளைப் பொறுத்தவரையிலாவது நன்செய் நிலங்களுக்கு வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கலாம். ஒரு ஏக்கர் நிலத்தில் 300 ரூபாய்க்கு மேல் ஆயிரம் ரூபாய் வரை வருமானம் வரக்கூடிய புன்செய் நிலங்கள் இருக்கின்றன. ஒரு ஏக்கர் நிலத்தில் கிட்டத்தட்ட 200 ரூபாய், 250 ரூபாய்க்குக் குறைவாக வருமானம் தரக்கூடிய நன்செய் நிலங்களும் இருக் கின்றன. ஆகையால், புன்செய் நிலங்களைப் பொறுத்தவரையில் வரி விலக்கு செய்கின்ற அரசாங்கம், தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், எங்கு பார்த்தாலும் நன்செய் நிலங்களாகக் காட்சி அளிக்கின்ற நிலையில், நன்செய் நிலம் வைத்திருக்கும் ஏழை எளிய விவசாயிகளுக்கும் வரி விலக்குக் கொடுப்பார்களானால், அவர்கள் இந்த அரசாங்கத்தைப் பாராட்டுவதற்கு நல்ல அம்சமாக விளங்கும். தென்னை, கரும்பு, வாழை இப்படிப் பயிரிடக்கூடிய இடங்களை எடுத்துக்கொண்டால், ஆயிரம் தேங்காய் கிடைக்கக் கூடிய நிலையில், கிட்டத்தட்ட 300 ரூபாய், 400 ரூபாய் வருமானம் வரும். அதையெல்லாம் பார்க்கும்போது, நன்செய் நிலங் களுக்கும் வரியிலிருந்து விலக்கு அளித்திருக்கவேண்டும் என்பது என்னுடைய கருத்து. அதிலும் குறிப்பாக, நம்முடைய அரசாங்கம் புன்செய் நிலங்களுக்கு வரி விலக்குச் செய்திருக்கின்ற போது, விவசாய வருமான வரிச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி, வருமானத்தைக் குறித்துக் கணக்கு வைக்கவேண்டும் என்ற காரணத்தைக் காட்டி இருக்கிறார்கள். அதனைப்பற்றி உறுப் பினர்கள் பேசுகிறபோது குறிப்பிட்டபடி, அத்தகைய கணக்குகளை விவசாயிகள் வைத்துக்கொள்ள முடியுமா என்பதையும் அரசாங்கம் நன்கு கவனிக்க வேண்டும்.

ஒரு படி அரிசித் திட்டம் இந்த மாநிலம் பூராவும் உள்ள ஏழை எளிய மக்களுக்குப் பயன்படும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், இந்த அரசாங்கம் சென்னை நகரிலும், கோவை நகரிலும் மட்டும் அந்தத் திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அந்த இரண்டு நகரங்களிலும் கொடுக்கப்படாமல் இருந்தால் மற்ற மாவட்டங்களில் இருக்கும் ஏழை எளியவர்கள் அதைப்பற்றிச் சிந்தித்தே இருக்கமாட்டார் கள். ஆனால், சென்னையிலும், கோவையிலும் மட்டும் கொடுக்கின்ற போது, தஞ்சை மாவட்டத்திற்கு வரவில்லையே என்று அங்குள்ள வர்கள் கருதுகிறார்கள். தஞ்சை மாவட்ட மக்களுக்கும் இந்தத் திட்டத்தை எதிர்பார்க்க உரிமை இருக்கிறது. தஞ்சை மாவட்டத்து மக்கள் விளைவிக்கின்ற நெல்லை மற்ற மாவட்டங்

களுக்குக் கொண்டுபோய் அரசாங்கம் குறைந்த விலையில் பெறமுடிகின்றபோது, தங்களுடைய மாவட்டத்தில் விளைகின்ற தானியத்தைத் தாங்கள் குறைந்த விலையில் பெற முடியவில்லையே என்று நினைக்கிறார்கள். அரசாங்கம் கொண்டுவந்திருக்கின்ற ஒரு படி அரிசித் திட்டத்தை எல்லா மக்களுக்கும் பயன்படும் வகையில் செய்யவேண்டும் என்பதுதான் எங்களுடைய நோக்கமாகும். காங்கிரஸ் கட்சிக்காரர்கள் என்ற காரணத்தால் எதிர்க்கிறார்கள், இந்த நல்ல திட்டத்தை வரவேற்கவில்லை என்று அங்கத்தினர்கள் பலர் சொல்லுகிறார்கள். முன்பு நடைபெற்ற அரசாங்கத்தின் காலத்தில், மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை வகுத்து நிறைவேற்றிய எத்தனை காரியங்களை அப்பொழுது எதிர்க்கட்சியினராக இருந்த அங்கத்தினர்கள் பாராட்டினார்கள் என்பது சட்டசபை நடவடிக்கைகளைப் பார்த்தால் தெரியும். ஆகையால், எதிர்க்கட்சி என்னும்போது, அவர்கள் பாராட்டுவதற்காகவே இருப்பதல்ல. அரசாங்கம் இன்னும் செய்யவேண்டிய காரியம் என்ன என்ன இருக்கிறதோ அதைச் செய்யவேண்டும் என்று எடுத்துச் சொல்லுவதற்குத்தான் எதிர்க்கட்சியே தவிர, அமைச்சர்களைப் பாராட்டிவிட்டால் மக்கள் நன்மையைப் பெற்றுவிட்டார்கள் என்று சொல்ல முடியாது. ஆகையால்தான் அரசாங்கம் செய்யும் நல்ல காரியங்களைப் பாராட்ட வேண்டிய நேரத்தில் பாராட்டி, இன்னும் அவர்களைத் தூண்டவேண்டுமென்பதுதான் எதிர்க்கட்சியினுடைய முக்கியமான நோக்கமாக இருக்க முடியும். ஹரிஜனங்களுக்குச் சம்பளச் சலுகை கொடுக்கும் வரம்பை 1,500 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாக்கு உயர்த்தியிருக்கிறார்கள். அதை வரவேற்க வேண்டியதுதான் என்றாலும் கூட, ஹரிஜனங்களுக்கு போனஸ் திட்டம் என்ற ஒரு திட்டம் கொண்டுவரப் போவதாகவும், ஏனென்றால், ஏற்கனவே ஹரிஜனங்களில் 9 சதவிகிதம்தான் படிக்கிறார்கள் என்று கவர்னர் அவர்கள் உரைமீது பேசும் பொழுது முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், அதனால் அவர்களுக்குப் போனஸ் திட்டம் கொண்டுவரப்படும் என்று குறிப்பிட்டார்கள். அந்தத் திட்டத்தைப்பற்றிய விளக்கம் இந்த நிதி நிலை அறிக்கையிலே காணோம். எனவே அவர்கள் கூறியதைப் போன்று ஒரு போனஸ் திட்டத்தை உடனடியாகக் கொண்டு வந்தால்தான் தாழ்த்தப்பட்ட மக்கள் படித்து முன்னேறுவதற்கு வசதி ஏற்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்ததாக, இந்தக் கலப்புத் திருமணத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏழை எளிய மக்கள் கலப்புத் திருமணம் செய்துகொள்வதால் மட்டும் எல்லா சுகத்தையும் பெற்றுவிட்டார்கள், அவர்கள் வாழ்ந்துவிடுவார்கள் என்று சொல்வதற்கு முடியாது, கலப்புத் திருமணம் செய்கின்ற ஏழை எளிய மக்கள் அதனால் எந்த அளவுக்குப் பாதிக்கப்படுகிறார்கள் என்பதையும் பார்க்கவேண்டும். சட்டத்தின் மூலமாக அவர்கள் நன்மை பெறாத நிலைமைதான் இருக்கிறது. கலப்புத் திருமணம் யார்





செய்துகொண்டிருக்கிறார்கள் என்றால், பணக்காரர்கள், வசதியுள்ளவர்கள், உத்தியோகத்தில் இருக்கிறவர்கள்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். ஏழை எளிய பாமர மக்கள் கலப்புத் திருமணம் செய்துகொண்டால் சட்டத்தின் மூலமாக நன்மைகளைப் பெறமுடியுமா என்று பார்க்க வேண்டும். முன்னாலே இருந்த சர்க்கார் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அப்படிச் சட்டத்தைக் கொண்டுவந்தாலும்கூட தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற்றம் காணமுடிகிறதா என்பதைப் பார்க்க வேண்டும். முன்பு தீண்டாமையை ஒழிக்கப் பாடுபட்டதற்குக் கூட பதக்கம் கொடுத்தார்கள். எனவே தீண்டாமை ஒழிக்கப் படுவதற்குச் சட்டத்தின் வாயிலாக முயன்றாலும்கூட அது இன்னும் நடந்துகொண்டுதான் இருக்கிறது. எனவே சட்டத்தின் மூலம் மட்டும் இதைச் செய்துவிட முடியாது. கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்கள் முன்னேற்றத்தக்க வகையில் அவர்களுக்கும் பதக்கம் கொடுப்பதைவிட்டு அதற்குப் பதிலாக அவர்களுக்கு சர்வீஸ் கமிஷனில் வேலை கொடுக்கப்படும் என்று கொண்டு வந்தால் முன்னேறுவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பொழுது பாடசாலைகளில் சேர்க்கின்ற நேரத்தில் வசூலிக்கின்ற ஸ்கூல் ஃபீஸை அதிகப்படுத்தியிருக்கிறார்கள். நாலரை ரூபாய் கட்டியவர்கள் 9 ரூபாய் கட்ட வேண்டியிருக்கிறது. 5 ரூபாய் கட்டியவர்கள் 15 ரூபாய் வரையில் கட்டவேண்டியிருக்கிறது. இது ஏழை எளிய மக்களுக்குக் கஷ்டத்தைக் கொடுக்கின்றது. இதை அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும். எங்களுடைய கட்சி ஆட்சியில் கலைப்பிடாது என்று எல்லாம் சொல்லி வந்தார்கள். ஆனால், இன்றைக்குப் பார்க்கின்ற பொழுது ஆசிரியர் செலக்ஷன் கமிட்டி, மற்றும் கல்லூரிகள் செலக்ஷன் கமிட்டி இவற்றிலெல்லாம் கட்சிக்காரர்களையும், மாவட்டக் கட்சி செயலாளர்களையும்தான் போட்டுக் கொண்டிருக்கின்ற நிலைமை இருந்து வருகிறது. இப்படி இருந்தால் எப்படி எல்லோருக்கும் நன்மை கிடைக்கும் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். காலம் அதிகமாக இல்லாத காரணத்தால் நான் என்னுடைய உரையை இத்துடன் முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. என். நாச்சிமுத்து** : தலைவரவர்களே, இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையின்மீது எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்தனை நாட்களாக நடைபெற்ற இந்த அறிக்கையின்மீதான விவாதத்தில் பல காங்கிரஸ் உறுப்பினர்கள் குறைப்பட்டுக் கொண்டார்கள், நாங்கள் எதிர்பார்த்தது எதுவும் வரவில்லை என்று சொன்னார்கள். உண்மையிலேயே அவர்கள் எதிர்பார்த்தது நடைபெறவில்லைதான். தேர்தலிலே பலவகைகளிலே ஏமாற்றமடைந்திருக்கிறார்கள். தேர்தலிலே திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் அதைச் சேர்ந்த கூட்டணிக்கும் தோல்வி ஏற்படும்

என்று எதிர்பார்த்தார்கள். ஆனால், அதற்கு மாறாக பெருவாரியாக வெற்றி பெற்றுவிட்டோம் நாம் என்பது அவர்கள் எதிர்பாராததுதான்.

அடுத்ததாக, மந்திரி சபை அமைப்பிலே ஏதாவது சிக்கல்கள் வரும் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால், அவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாகத் தமிழக அரசின் மந்திரிசபை சிக்கனமான சிறந்த மந்திரிசபையாக அமைந்து இயங்கி வருகிறது. இதுவும் அவர்கள் எதிர்பாராததுதான். எல்லோருக்கும் சலுகைகள் புகுமுக வகுப்பில் கிடைக்கும் என்று எதிர்பார்த்தார்கள். ஏழைகளோடு பணக்காரர்களுக்கும் ஒரு நியாயமற்ற முறையில் சலுகைகள் எதிர்பார்த்தார்கள். ஆனால், அந்த நியாயமற்ற சலுகையை மறுத்து, ஏழை மக்களுக்கு மட்டுமே சலுகை அளிக்கப்பட்டிருப்பது அவர்கள் எதிர்பாராததுதான். மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கும் விவகாரங்கள் வரும், அந்தப் பிரச்னையில் இந்த அமைச்சரவைக்குத் தொந்திரவுகள் கொடுக்கலாம் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் மாநில அரசு வலுவோடு செயல்படுவோர்க்கூடிய தன்மையும், மத்திய அரசு நியாயமற்ற முறையிலே கட்டுப்படுத்துகின்ற ஒரு அரசாக இது இல்லாமல் நல்ல முறையில் வலுவுடன் இருப்பதால் மத்திய அரசுக்கு அதைக் கட்டுப்படுத்தும் வலுவும் இல்லாமல் போய்விட்டது. இதுவும் அவர்கள் எதிர்பாராததுதான்.

அடுத்ததாக, இருபது ஆண்டுக்காலமாக பாங்குகளையும், தொழில்களையும் தேசிய மயமாக்குவோம் என்று சொல்லிக்கொண்டு முதலாளிகளைத் தன் இஷ்டத்திற்கு ஏகபோகமாக வளரவிட்டுக் கொண்டிருந்தார்கள். புதிய அமைச்சரவையும் அப்படித்தான் செய்யும் என்று எதிர்பார்த்தார்கள். புதிய அரசால் தீவிரமாக இதில் ஈடுபட முடியாமல் போகும் என்று நினைத்தார்கள். அதற்கு மாறுபட்ட வகையில் இன்று அரசானது மற்ற தனிப்பட்ட பெரிய தொழில்களைத் தேசியவுடைமையாக்க வேண்டுமென்ற ஒரு முடிவு எடுத்து, தொழில்களையும், பாங்குகளையும் மின்சார நிறுவனங்களையும் தேசியமயமாக்கிக்கொள்ள முயற்சித்துக் கொண்டுவருவது அவர்கள் எதிர்பாராததுதான்.

அடுத்து, நாங்கள் தமிழை வளர்க்கிறோம் என்று சொல்லிக் கொண்டு இந்திக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்து வந்தார்கள். அந்தப் பிரச்னையைத் தீர்க்கும் முறையில் திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை தாய்மொழிக்கு முதலிடம் கொடுத்து அதற்கான ஆதரவு காட்டிவருகிறது. இதுவும் அவர்கள் எதிர்பாராததுதான்.

அடுத்தபடியாக, மதுவிலக்குப் பிரச்னையிலேகூட அவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக இந்த அமைச்சரவை செய்துகொண்டு வருகிறது. உழவுத் தொழிலை எடுத்துக்கொண்டால் அவர்கள் சில ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டும் நாட்டிலே முடிவாக பற்றாக்குறையும் அதன் மூலமாகப் பல சிக்கல்களும் வந்திருக்கின்றன.





திருவள்ளுவர் சொல்லக்கூடிய முறைப்படி இப்பொழுது இருக்கின்ற அமைச்சரவை செய்துகொண்டு வருகிறது. உழவுத் தொழிலுக்கு நிதி நிலை அறிக்கையிலே முதன்மையான இடம் கொடுத்திருக்கிறது இந்த அரசு. திருவள்ளுவர் "சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம். . ." என்று சொல்லியிருக்கின்ற காரணத்தினாலே நம்முடைய அரசு இந்தக் காரியத்திலே ஈடுபட்டு எத்தனைப் பிரச்னைகள் இருந்தாலும், எத்தனை சிக்கல்களைப் போக்கினாலும் முக்கியமாக உழவுத் தொழிலுக்கு முக்கியத்துவம் கொடுத்து, நாட்டு மக்களுடைய பசியைப் போக்கவேண்டுமென்பதற்காக, வரவு-செலவுத் திட்டத்திலே அதற்காகப் பெரிய தொகையை அந்தத் துறைக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். உழவுத் தொழிலைப்பற்றிச் சொல்லும்பொழுது பல உறுப்பினர்கள் அதிலே உள்ள சிக்கல்களை எடுத்துச் சொன்னார்கள். இன்று செய்யக்கூடிய அத்தனை விவசாயப் பயிர்களுக்கும், ஒரு தடவை அல்ல, இரண்டு தடவைகள் மூன்று தடவைகள் நோய் பீடிக்கப்பட்டு விளைபொருட்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றன. உழவுத் தொழிலானது, வள்ளுவர் கூற்றுப்படி "தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும் வேண்டாது . . ." என்று சொல்கிறார். நிலங்களில் அடிக்கடி விவசாயம் செய்வதால் நிலத்திலேயுள்ள ஈரப்பதம் போய் நாளடைவிலே விவசாயம் குறைந்துவிடுகிறது. ஆகையினால் நிலத்திலே ஏதோ ஒரு சத்துக் குறைவாக இருக்கிறது என்பது தெரிகிறது. சாதாரணமாக மனிதர்களை எடுத்துக்கொண்டாலும், மிருகங்களை எடுத்துக் கொண்டாலும் ஏதாவது ஒரு வகை உட்டச் சத்துக் குறைந்து விட்டால்கூட நோய் வந்துவிடுகிறது. ஆகவே விவசாயப் பயிர்களுக்கும் நோய் பீடிக்கப்படுவதற்குக் காரணம் ஏதோ ஒரு வகையான சத்து குறைவாக இருப்பதால், எந்த வகையான சத்துக் குறைகிறது என்பதை வல்லுநர்கள் கொண்ட குழுவொன்று ஆராய்ச்சிசெய்து அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பட்டா மாறுதல்கள் செய்வதில் விவசாயிகள் சிரமப்படுகிறார்கள், அதையும் போக்க வழிவகை செய்யவேண்டும். கடைசியாக ஒன்றைமட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் தரிசு நிலங்களையெல்லாம் விவசாய நிலங்களாக மாற்றுவதற்கு ஏற்பாடு செய்வதில் ஒன்றைக் கவனிக்க வேண்டும். முதலிலே தரிசு நிலங்கள் இருக்கும் பகுதியில் எங்கெங்கு குளம், குட்டைகள் அமைக்கப்பட்டிருக்கின்றனவோ அவற்றை முதலில் எடுத்துக்கொண்டு பிறகு மீதி நிலங்களை விவசாயத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. கு. மூர்த்தி: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, 1967-68-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையின்மீது நடக்கின்ற விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய கனம் காங்கிரஸ் உறுப்பினர்கள் அத்தனை பேரும் 'நூதனமாக இந்த அறிக்கையில் என்ன இருக்கிறது ? இந்த அறிக்கை பொதுமக்களை ஏமாற்றுகிறது ;

இந்த அறிக்கையில் புரட்சிகரமாக ஒன்றும் இல்லை' என்றெல்லாம் பேசினார்கள். அதோடு மட்டுமல்ல, இங்கு பேசுகின்றபோது மதிப்பிற்குரிய கனம் உறுப்பினர் மார்ட்டின் அவர்கள் அறிஞர் அண்ணா அவர்கள் நிதிநிலையைப் படிக்கிறபோது இடையிடையே தண்ணீரைக் குடித்துக்கொண்டு பேசினார்கள் என்று கிண்டலாகப் பேசினார். அறிஞர் அண்ணா அவர்கள் படிக்கின்றபோது ஏற்பட்ட நா வறட்சியின் காரணமாகத் தண்ணீர் குடித்தார்கள். அதே நேரத்தில் மதிப்பிற்குரிய கனம் உறுப்பினர் மார்ட்டினாக இருந்தால் காளி மார்க் சோடா குடித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

மதிப்பிற்குரிய மகாதேவன் அவர்கள் பேசும்போது, 'இங்கே பேசுகின்ற திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எல்லாம் இறுமாப்புடன் பேசினார்கள்' என்று சொன்னார். இறுமாப்புடன் பேசுவது நாங்கள் அல்ல. 1967-ல் நடந்த தேர்தலின்போது இறுமாப்புடன் பேசியதன் காரணமாக, மேடையிலே வசை மொழிகளை உதிர்த்ததன் காரணமாகத்தான் இன்று சட்ட மன்றத்திலே, தமிழகத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி அமைந்திருக்கிறது என்பதை நினைவுபடுத்த விரும்பு கிறேன்.

தான் ஒரு அமைச்சராக இருந்தவர் என்பதை அடிக்கடி அறிமுகப்படுத்திக் கொள்ளுகின்ற மதிப்பிற்குரிய திரு. சிதம்பர நாதன் அவர்கள் 'கன்னித் தமிழை வளர்க்கும் கருணாநிதி' என்று திரும்பத் திரும்பச் சொன்னார்கள். கன்னித் தமிழை வளர்ப்ப வர்கள் கலைஞர் கருணாநிதியைப் போன்றவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தினருந்தான் என்பதை நாட்டு மக்கள் உணர்ந்த காரணத்தால்தான் இன்று தமிழகத்திலே திராவிட முன்னேற்றக் கழக அரசு உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

புன்செய் நிலத்திற்கு வரி இல்லையென்று அறிக்கையில் கூறப் பட்டிருக்கிறது. ஏழை விவசாயிகள்தான் புன்செய் நிலம் அதிக மாக உள்ளவர்களாக இருக்கிறார்கள். எனவே புன்செய் நிலத்திற்கு வரி ரத்து செய்வதை நாடு பாராட்டுகிறது. நாட்டு மக்கள் பாராட்டுகிறார்கள்.

இதற்கு முன்னே இருந்த அரசாங்கம் மந்திரிமார்களுக்கு விருந்து வைத்தவர்களுக்கும், மாலை போட்டவர்களுக்கும், சொந்தக்காரர்களுக்கும் பஸ் ரூட் பெர்மிட்டை வழங்கி அவர் களிடம் பணம் கொழிக்கச் செய்தார்கள். இன்றைக்கு அந்த பஸ்கள் எல்லாம் நாட்டுடைமையாக்கப்படுகின்றன.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர் சாப்பாடு போட்டவர்களுக்கும், சொந்தக்காரர்களுக்கும் போன அரசாங்கம் பஸ் ரூட் பெர்மிட் கொடுத்ததாகச் சொன்னார். அப்படி விருந்து போட்டதற்காக, போன அரசாங்கத்தில் இருந்த எந்த





அமைச்சர் அவ்வாறு பஸ் ரூட் பெர்மிட் கொடுத்தார், யார் யாருக்குக் கொடுத்தார் என்பதைப் புள்ளி விவரத்துடன் கூற முன்வருவார்களா?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. மலைச்சாமி) :** இது பொதுவாகச் சொன்ன கருத்து. இதற்காக மன்றத்திலே எதை யும் கொண்டு வந்து காட்ட வேண்டிய தேவையில்லையென்று கருது கிறேன். இது ஒழுங்குப் பிரச்சினைக்கு உரியதல்ல.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பொதுவாக இந்த பெர்மிட்டுகள் கலெக்டரால் கொடுக்கப்படுகின்றன. விருந்து வைத்தவர்களுக் கெல்லாம் பெர்மிட் கொடுத்தார்கள் என்று அனாவசியமாகப் பேச வேண்டாமென்பதற்காகத்தான் புள்ளி விவரம் கொடுக்க முடியுமா என்று கேட்டேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** சாப்பாடு போட்டு ஏதோ பஸ் பெர்மிட் பெற்றார்கள் என்று நண்பர் சொன்னதற்காக வருந்துகிறேன். அவ்வளவு மலிவாக யாரும் பஸ் ரூட்டுகளை வாங்கிவிடவில்லை; அதிகம் கொடுத்து தான் வாங்கியிருக்கிறார்கள். (ஆரவாரம்).

**திரு. ஆ. கு. மூர்த்தி :** இந்த அரசு பஸ்களை நாட்டுடைமையாக்கி இருக்கிறது. எழுபத்தைந்து மைல்களுக்கு மேல் ஓடக்கூடிய பஸ்களை நாட்டுடைமையாக்கி அதனால் வருகின்ற லாபத்தைக் கொண்டு இந்த நாட்டு மக்களுடைய, ஏழைகளுடைய கண்ணீரைத் துடைக்க இந்தத் தமிழக அரசு திட்டமிட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பி.யு.சி. வகுப்பில் சேருகின்ற ஏழை மாணவர்களுக்குச் சலுகை அளிக்கும் வகையில் 1,500 ரூபாய்க்குக் குறைவாக ஆண்டு வருமானம் உள்ளவர்கள் அத்தனை பேருக்கும் இலவசமாகப் படிக்க சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. இதை அத்தனை பெற்றோர்களும் பாராட்டுகிறார்கள். மாணவர்கள் அத்தனை பேரும் மகிழ்ச்சியடைகிறார்கள்.

காங்கிரஸ்காரர்கள் இந்த நாட்டிலே தீண்டாமையை ஒழிக்க வேண்டும், ஜாதியை ஒழிக்க வேண்டுமென்று வாயளவில் சொல்லி வந்தவர்கள் அதனை வளர்க்கின்ற முறையிலேதான் நடந்து வந்தார்கள். அந்த நிலைமையை மாற்றி ஜாதி ஒழிவதற்கு அடிப் படையான கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் பொற் பதக்கம் வழங்கும் திட்டத் தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். 'காதலிருவர் கருத்தொருமித்து வாழ்வதே இன்பம்' என்ற வகையில் ஜாதி வித்தியாசமின்றி மணந்துகொண்டு பொற் பதக்கம் வாங்கப் பலர் தயாராக இருப் பார்கள்.

அடுத்து, இந்தத் தமிழக அரசைப்பற்றிக் குறை கூறுகிறவர்கள் 'இந்த அரசு தமிழுக்கு என்ன செய்துவிட்டது?' என்று கேட்கிறார்கள். இந்த மூன்று மாத காலத்திற்குள்ளாகத்தான்

இந்த அரசு 'தமிழக அரசு—தலைமைச்செயலகம்' என்று ஒளி உமிழ் பெயர்ப் பலகையைப் பொருத்திற்று. காங்கிரஸ் அரசு இந்த 20 ஆண்டுக் காலமாகச் செய்யாத ஒன்றை இந்த அரசு செய்தது. தமிழுக்கு, தமிழ் வளர்ச்சிக்கு வேறு என்ன செய்ய வேண்டுமென்று கேட்க விரும்புகிறேன்.

இந்தத் தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையை நாட்டு மக்கள், நல்லவர்கள், ஆன்றோர்கள், சான்றோர்கள் அத்தனை பேரும் போற்றிப் புகழுகின்றார்கள். அதனை நானும் வரவேற்று என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனார்:** அவைத் தலைவர் அவர்களே, பாராட்டுவதற்கான விஷயங்கள் 1967–68-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே இருந்தாலும், ஆளும் கட்சியினர் நிச்சயம் பாராட்டத் தவற மாட்டார்கள் என்ற காரணத்தாலே, அதிலே இருக்கின்ற சில குறைகளைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

புன்செய் நிலத்திற்கு 12½ ஏக்கருக்குக் குறைவாக இருப்பவர்களுக்கு வரி விலக்குக் கொடுத்திருப்பதை வரவேற்றுக் கூடிய அதே நேரத்தில் நன்செய் நிலம் வைத்திருக்கக்கூடிய மக்களுடைய குறைகளையும் இந்த அரசு நல்ல முறையில் உணர்ந்திருந்தால் அவர்களுக்கும் ஒரு வரிச் சலுகையை அளித்திருக்க முடியும்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** பல கனம் உறுப்பினர்கள் நன்செய் நிலக்காரர்கள்மீது உருக்கத்தோடு பேசி வருவதால் நினைவுபடுத்த விரும்புகிறேன். நன்செய் நிலக்காரர்களுக்குச் சலுகையே செய்யப் போவதில்லை என்று இந்தச் சர்க்கார் தெரிவிக்கவில்லை. நன்செய்க்கு வரி விலக்குச் செய்ய வேண்டுமென்றால் அதைச் சற்றுத் தீவிரமாக ஆராய்ந்து செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறோமே தவிர, நன்செய் நிலத்திற்கு எந்தவிதமான சலுகையும் கிடையவே கிடையாது என்று சொல்லவில்லை. ஆகவே, நன்செய் நிலக்காரர்கள்மீது அதிகமான அக்கறையும் உருக்கமும் இருந்தாலும், எங்களுக்கு அதிலே அக்கறை இல்லையென்ற முறையில் அதைப்பற்றிப் பேசிக்கொண்டிராது கனம் உறுப்பினர்கள் மற்ற விஷயங்களைப்பற்றிப் பேசுவார்களேயானால் குறைவான நேரமே இருப்பதால் மிகுதியான பயன் கிடைக்கும்.

**திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனார்:** கனம் முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். புன்செய் நிலத்திற்கு அளிக்கப்படுகின்ற வரி விலக்கால் ஏற்படுகின்ற குறைவை ஈடுசெய்து கொள்ளும் வகையில் 12½ ஏக்கருக்கு மேல் வைத்திருப்பவர்களுக்கு வருமான வரி விதித்திருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.





ஆக, புன்செய் நிலங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள வரி விலக்கினால் ஏற்படுகிற நஷ்டத்தை கணக்குப்போட்டு பார்த்தால், விவசாய வருமான வரி மூலம் வருகிற வருமானம் மிக அதிகமாக இருக்கும் என்று தெரிகிறது. லிஃப்ட் இரிகேஷன் என்று சொல்கிற பம்ப் செட்கள் மூலம் பயிர் செய்கிறவர்களுக்காவது குறைந்தபட்சம் வரி விலக்கு உடனடியாக அளித்தால் நலமாகயிருக்கும். இப்போது கூட்டுறவு சங்கங்களினால் கொடுக்கப்படுகிற கடன் வசதிகள் விவசாயிகளுக்குப் போதுமான அளவில் கிடைக்கவில்லை என்ற காரணத்தினால் ஷெட்யூல் பாங்குகள் மூலம் விவசாயிகளுக்கு அதிகபட்சம் 9 சதவிகிதத்திற்கு அதிகப்படாத வட்டியில் கடன் கொடுத்தால் பரவாயில்லை. அந்த அளவிற்கு கடன் வசதிகள் செய்து கொடுக்கவேண்டுமென்று, அதற்கான வழிவகைகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயச் செலவிற்காக தனியாரிடம் 20 சதவிகித வட்டிக்கு கடன் வாங்கி விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, ஷெட்யூல் பாங்குகள் மூலம் அவர்களுக்கு கடன் கொடுக்கக் கூடிய திட்டத்தை உருவாக்கினால் நல்லது.

அடுத்தபடியாக, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் சாலை பராமரிப்பை நல்ல முறையில் செய்வதற்கு வழிவகை செய்திருந்தால் நன்றாகயிருந்திருக்கும். தஞ்சை மாவட்டம் தொழில் வளர்ச்சியில் நல்ல முன்னேற்றம் அடையவில்லை என்ற குறை இருக்கும்போது அதற்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்கிற வகையில் அங்கு ஒரு பொறியியற் கல்லூரி ஏற்படுத்திக் கொடுக்க இந்த அறிக்கையில் ஒரு வழிவகையும் செய்யவில்லை. காரணம், சிக்கன நடவடிக்கைகள் என்று கூறலாம். தொழில் கல்வி படித்தவர்கள் வேலையில்லாது திண்டாடுவார்களே என்று கூறலாம்.

எஸ்.எஸ்.எல்.சி., பி.ஏ. படித்துவிட்டு வேலையின்றி சும்மாயிருப்பதைவிட தொழில் கல்வி படித்திருந்தால், அதன் நுணுக்கம் நன்கு தெரிந்திருந்தால் அதனால் நல்ல முன்னேற்றம் அடைய வழி ஏற்படும் என்பதை உணர வேண்டும். ஒரு நாட்டின் வளம் தொழில் வளர்ச்சியைப் பொறுத்திருக்கிறது என்பதை மனத்தில் கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக, 75 மைல்களுக்கு மேற்பட்டுள்ள பஸ் போக்குவரத்தை தேசீயமயமாக்குவது என்று கூறியுள்ளார்கள். அது வரவேற்கத்தக்கது. அதே நேரத்தில் அதற்குக் குறைந்த தூரமுள்ள பஸ்களை அரசாங்கம் ஏற்றெடுத்து நடத்தினால் அரசாங்கத்திற்கு மிகவும் நஷ்டம் ஏற்படும் என்பது இந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதில் இருந்தே தெரிகிறது. நெடுந்தூரம் செல்லக்கூடிய பஸ்களில் இருந்து வருகிற லாபத்தில் இருந்து குறைந்த தூரம் செல்லக் கூடிய பஸ்களினால் ஏற்படும் நஷ்டத்தை ஈகேட்டுவதாக காணப்படுகிறது. நெடுந்தூரம் ஓடுகிற பஸ்களுக்கு, 200 மைல்கள் ஓடுகிறவைகளுக்கு ஒரே ஷிப்ட்தான் இருப்பதாக அறிகிறேன்.

ஆனால் குறைந்த தூரம் ஓடுகிற பஸ்களுக்கும், டவுன் பஸ்களுக்கும் இரண்டு ஷிப்டுகள் உள்ளதாக அறிகிறேன். குறைந்த தூர பஸ்களை அரசாங்கம் ஏற்றெடுத்து நடத்தினால் நஷ்டம்தான் ஏற்படும் என்று அறிகிறேன். நாடு முழுவதும் தேசியமயமாக்கப்பட்டுவிட்டால் ஒரு காலத்தில் வேலை நிறுத்தம் என்று ஏற்பட்டால் நாடு பூராவிலும் போக்கு வரத்துத்தடை ஏற்படும். அடுத்தபடியாக, நாட்டின் எதிர்காலப் பொருளாதாரத்தை உணர்ந்து குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு எந்தவிதமான முக்கியத்துவம் இதில் கொடுக்கப்படவில்லை. விலைவாசி ஏறியிருக்கிற இந்த நாளில் கெஜட் பதிவு செய்யப்படாத அதிகாரிகளுக்கு எந்தவிதமான சலுகையும் கொடுக்கவில்லை. காவேரிப் பாசனத்தில் உள்ள மக்களுக்கு கடைமடை வரை தண்ணீர் செல்லவில்லை என்ற குறை இருக்கும்போது அவர்கள் குறைகளைத் தீர்க்கும் விதத்தில் காவேரித் தண்ணீர் திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்துமாறு கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. கே. போஜன்:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த 1967-68-ம் ஆண்டு வரவு செலவு அறிக்கையை நான் மனப்பூர்வமாக வரவேற்பதோடு ஒருசில திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்ற என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

முதலாவதாக, நம் புதிய அமைச்சரவை உணவுப் பிரச்னையைத் தீர்ப்பதற்காக நல்லமுறையில் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டார்கள். இந்த அமைச்சரவை ஆட்சிப் பொறுப்பேற்ற நாளிலிருந்த உணவு நெருக்கடியை நன்கு சமாளித்து நான்கு மாதங்களுக்குள்ளாகவே நல்லமுறையில் உணவுப் பிரச்னையைத் தீர்த்து வைத்தார்கள். அவர்களுக்கு அதற்காக நம் பாராட்டுதல்கள் உரியன. அடுத்தபடியாக, நம் அமைச்சரவை ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்ற திட்டத்தை சென்னையிலும், கோவையிலும் அமுல்படுத்தியிருக்கிறார்கள். இந்தத் திட்டம் பொது மக்களால் வரவேற்கப்படுகிறது. அதற்காக அமைச்சரவையை நான் பாராட்டுகிறேன். இந்தத் திட்டத்தை மற்ற பகுதிகளுக்கும் விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உணவுப் பிரச்னையை எடுத்துக்கொண்டால் நீலகிரி நெல் விளையாத ஒரு பகுதியாகையால் அந்த ஜில்லாவில் உடனடியாக இந்த ரூபாய்க்கு ஒரு படி அரிசி திட்டத்தை அமுல்படுத்தவேண்டுமென்று உணவு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நீலகிரியில் சிறிது நாட்களுக்கு முன்பு அரிசி லிட்டருக்கு 90 பைசா என்றிருந்தது. இப்போது லிட்டருக்கு 2¼ ரூபாய் என்று மட மடவென்று ஏறி விட்டது. இதுவரை கோவையிலிருந்து நீலகிரிக்கு தனி வியாபாரிகள் கொஞ்சம் கொஞ்சமாக அரிசி கொண்டு வந்து தனியாக விற்றுக் கொண்டிருந்தார்கள். அதனால் விலை குறைவாக இருந்தது. ஆனால் சில நாட்களுக்கு முன் மேட்டுப்பாளையத்தில் போலீஸார் நீலகிரிக்கு அரிசி கொண்டு வந்து கொண்டிருந்த லாரியை மடக்கி அரிசியை பறிமுதல் செய்து





விட்டதால், இப்போது தனி வியாபாரிகள் அங்கு அரிசி கொண்டு வர தயங்குகிறார்கள். அதனால் விலை ஏறிவிட்டது, அரிசி கிடைக்கவில்லை. மக்கள் அதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்பிரச்னைபற்றி உணவு அமைச்சரிடமும் நாங்கள் கூறியுள்ளோம். நீலகிரிக்கு, பார்த்து கவனம் செலுத்துவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இன்று காலையில் அவர்களைச் சந்தித்து நீலகிரியை கோவை மாவட்டத்தோடு இணைத்து, நீலகிரிக்கும் கோவைக்கும் இடையே தடையின்றி அரிசி நடமாட்டம் நடைபெறவேண்டும் என்று கேட்டுக்கொண்டோம். அவர்கள் இப்போது ஒரு உத்தரவு இட்டிருப்பதாகத் தெரிகிறது. கோவைக்கும் நீலகிரிக்கும் இடையே அரிசி நடமாட்டம் தடையின்றி ஏற்பட உத்தரவிட்டிருப்பதாகக் கூறினார்கள். அதற்காக அவர்களுக்கு நீலகிரி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** நீலகிரி மாவட்டத்தில் அரிசி விலை மிகவும் உயர்ந்திருப்பதாகச் சித்தரிப்பது இன்னும் சலுகைகள் வேண்டுமென்பதற்காக அங்கத்தினர் அவர்கள் சொல்கிறார்கள். நீலகிரி மாவட்டத்தின் பிரத்தியேகமான நிலையை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நீலகிரி மாவட்டத்தில் மொத்தம் ஐந்து லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். அந்த ஐந்து லட்சம் பேர்களுக்கும் குடும்பக் கார்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அங்கு ஒன்று தான், மலை முழுவதிலும் உள்ள எல்லா குடிமக்களுக்கும், ஆண், பெண், குழந்தைகள் எல்லோருக்கும், ஐந்து லட்சம் பேர்களுக்கும் குடும்பக் கார்ட் மூலம் அரிசி வழங்கப்பட்டு வருகிறது. அதில் வேண்டுமானால் அது போதுமா, போதாதா என்ற கருத்து வேறுபாடு இருக்கலாமே தவிர அங்கு விலை மிகவும் அதிகமாக இருக்கிறது என்று சொல்வது இன்னும் கூடுதல் வேண்டும் என்பதற்காகத்தான். கோவை, நீலகிரி இரண்டு மாவட்டங்களுக்குமிடையே நெல் நடமாட்டக் கட்டுப்பாடோ மற்றவையோ கிடையாது. மேட்டுப்பாளையம் போன்ற எல்லையில்லை. லைசென்ஸ் இல்லாமல் சிலர் சோளம், கம்பு இவற்றை எடுத்துக் கொண்டு போனார்கள் என்று வழக்குகள் தொடர்ந்தார்கள் என்று அழுத்தமாகச் சொல்வது சரியல்ல. நீலகிரியைப் பொறுத்தவரையில், சென்னை, கோவை போன்று எல்லாப் பேர்களுக்கும்—தோட்டத் தொழிலாளர்கள் ஒரு லட்சம் பேர்கள் இருக்கிறார்கள்—தோட்டத் தொழிலாளர்களுக்கும், அங்குள்ள மற்றுமுள்ளவர்களுக்கும், ஐந்து லட்சம் பேர்களுக்கும் கூட்டுறவு மூலம் நேராயாக அரிசி விநியோகம் செய்கிற முயற்சி அங்கிருக்கிறது. ஆகவே, தவறாக விலை மிகவும் ஏறிவிட்டது, இந்த சர்க்கார் அங்கு சரியாக விநியோகம் செய்யவில்லை என்று சொல்வது சரியல்ல.

**திரு. கே. போஜன்:** உணவு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அமைச்சரவை

[திரு. கே. போஜன்] [1967 ஜூன் 26

கவனிக்கவில்லை என்று நான் கூறவில்லை. உணவு விஷயத்தில் உஷார் போலீஸ்காரர்கள் வெளிமாநிலங்களுக்கு கள்ளக்கடத்தல் இருக்கிறது என்று உள்ளூரிலேயே லாரிகளை மடக்கி விடுகிறார்கள். மாநில எல்லைகளில் உஷார் போலீஸ்காரர்களை வைத்து அதைத் தடுத்து நிறுத்துவது நலம்.

அடுத்தபடியாக கல்வியை எடுத்துக்கொண்டால், நம்முடைய புதிய அமைச்சரவை 1,500 ரூபாய்க்குக் குறைவாக வருமானமுள்ள ஏழை மக்களின் குழந்தைகளுக்கு புகுமுக வகுப்பில் இலவசமாகக் கல்வி அளிக்க முன் வந்திருப்பதை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். இதனால் ஆயிரக்கணக்கான ஏழை மாணவர்கள் இலவசமாகக் கல்வி பெற வாய்ப்புக் கிடைக்கிறது.

பி. ப 1-00 அடுத்து, இந்த அமைச்சரவை பின்தங்கிய வகுப்பினருக்கும், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் கல்விக் கட்டணத்திலிருந்து சலுகை பெற, சர்க்கார் உதவித் தொகை பெற இருந்த வருமான வரம்பை உயர்த்தி இருப்பதை வரவேற்கிறேன். அதற்காக அமைச்சரவையைப் பாராட்டுகிறேன்.

விவசாயத்திற்கு புதிய அமைச்சரவை அதிக முக்கியத்துவம் கொடுத்திருக்கிறது; இது வரவேற்கத்தக்கது. விவசாயத்திலே புன்செய் நிலங்களுக்கு நில வரியிலிருந்து சர்க்கார் விலக்கு அளித்திருக்கிறது. அதே போல நன்செய் நிலங்களுக்கும் வரி விலக்கு அளித்தால் நலம் என்று நான் கருதுகிறேன்.

விவசாய வருமான வரியை எடுத்துக்கொண்டால், இதுவரையில் இருந்த கம்பவுண்ட் செய்யும் முறையை, அதாவது ராஜி செய்யும் முறையை அமைச்சரவை வாபஸ் பெறப்போவதாக அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இதனால் சிறிய விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். சிறிய விவசாயிகளிலே எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் தான் அதிகம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கணக்கு எழுதி வைத்துக்கொண்டு, அதிகாரிகளிடம் கணக்குக் கொடுத்து அதன் மீது வரி விதிப்பது என்பது முடியாத காரியம். அதனால் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள், விவசாயம்கூட பாதிக்கப்படும் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீலகிரியை எடுத்துக்கொண்டால், 100-க்கு 80 பேர்களுக்கு மேல் சிறு நிலச் சொந்தக்காரர்கள். கம்பவுண்ட் ஸ்கீமை எடுத்துவிட்டால் சிறு தேயிலை, கிழங்கு உற்பத்தியாளர்களெல்லாம் பாதிக்கப்படுவார்கள். விவசாய வருமானவரிச் சட்டத்திலிருந்து கம்பவுண்ட் ஸ்கீமை வாபஸ் பெற வேண்டாமென்றும், முன் போலவே வைத்திருக்கவேண்டுமென்றும், எனது அன்புக்குரிய முதலமைச்சர் அண்ணா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, 1967–68-ம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்டத்தை நல்ல முறையிலே தயாரித்துள்ள நமது அன்புக்குரிய முதலமைச்சர் அண்ணா அவர்கள் தலைமையில் அமைந்திருக்கும்



1967 ஜூன் 26] [திரு. கே. போஜன்]

அமைச்சரவையைப் பாராட்டி, எனக்கு வாய்ப்பு அளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்து, எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. அ. லெ. சுப்பிரமணியம் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த 1967-68-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை நான் மனமார வரவேற்று, முதலமைச்சர் அண்ணா அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலை முதன்முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய அரசிடம் அதிகாரங்கள் குவித்து வைக்கப்பட்டிருந்தாலும், நமக்குள்ள அதிகாரத்திற்குட்பட்டு, சிந்தாமல்—சிதறாமல், செட்டும்—சீருமாக, நிதி நிலை அறிக்கையைத் தந்ததற்கு எனது மனமுவந்த பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிதி நிலை அறிக்கையை அளிக்கும்போது, முதல் பக்கத்திலேயே வைத்திருக்கிற குறிப்பிலே, மத்திய அரசாங்கத்தில் அதிகாரம் குவிந்திருப்பதால் அரசுக்கு எத்தகைய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று, இருக்கிற இடைஞ்சலை மிக விரிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதோடுகூட, கடைசி இரண்டு பக்கங்களில் மாநில அரசுக்கு அதிகாரங்கள் அதிகப்படியாகத் தரப்பட வேண்டும், மத்திய அரசு நல்ல முறையில் முடிவுக்கு வரவேண்டும், இதற்கு ஒரு கமிஷன் நியமிக்கவேண்டும் என்று மதிப்பிற்குரிய அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தக் கருத்தை நான் மிக மிகத் தீவிரமாக ஆதரிக்கிறேன். இதுவரையில் மத்திய அரசிலேயும், மாநில அரசுகளிலேயும் ஒரே கட்சியின் ஆட்சி இருந்து வந்தது. இன்றைக்கு நிலைமை அப்படி இல்லை. மத்திய அரசில் காங்கிரஸ் ஆட்சியும், எட்டு மாநிலங்களில் எதிர்க்கட்சி ஆட்சியும் இருக்கின்றன. இது அரசியல் சட்டத்திற்குப் புது விளக்கங்கள் தரும் நேரம், அப்படிப் புது விளக்கங்கள் தருவதற்குத் துவக்கமாக அண்ணா அவர்கள் நிதி நிலை அறிக்கையில் மாநில அரசுக்கு அதிகப்படியான அதிகாரங்கள் வேண்டும் என்ற கோரிக்கையைத் துவக்கி வைத்ததை நான் மனமாரப் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன்.

இப்போது இருக்கிற அரசியல் சட்டப்படி மாநில அரசுகள், நிதித் துறையாலும், அரசியல் துறையாலும், மத்திய அரசுக்குக் கட்டுப்பட்டிருக்கிற, கீழ்ப்பட்டிருக்கிற நிலைமையைத் தான் பார்க்கிறோம். இப்போது இருக்கிற அரசியல் சட்டப்படி இக்கனமிக் டாமினேஷன் என்று சொல்லுவார்களே, அப்படிப்பட்ட பொருளாதார எதேச்சாதிகார மனப்பான்மை மத்திய அரசில் இருப்பதைக் காண்கிறோம். அரசியல் சட்டத்திலே அந்த அளவுக்கு இடமிருக்கிறது. அரசியல் சட்டத்தைத் திருத்தி அமைக்கவேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

இதற்கு முன்னால் பேசிய காங்கிரஸ் உறுப்பினர்களெல்லாம் இந்த பட்ஜெட்டில் புதுமை இல்லை, புதுமை இல்லை என்று குறிப்பிட்டார்கள். நானும் புதுமை இருக்கிறதா, இல்லையா என்று

[திரு. அ. லெ. சுப்பிரமணியம்] [1967 ஜூன் 26

பார்ப்பதற்காக, திரு. பக்தவத்சலம் ஆட்சியில் அளிக்கப்பட்ட 4-5 பட்ஜெட்டுகளைத் திருப்பிப் பார்த்தேன். அவைகளெல்லாம் புள்ளிவிவரங்களைத் தரும் ஜாபிதாவாக இருந்ததே தவிர வேறு விதமாக இல்லை. இன்றையதினம் மாநில அரசாங்கத்திற்கு அதிகப்படியான அதிகாரங்கள் தரப்படவேண்டும் என்று உரிமைக் குரல் எழுப்புகிற சாஸனமாக இந்த நிதி நிலை அறிக்கை இருப்பதைக் காண்கிறேன்.

இப்போது மாநில அரசாங்கத்திற்கு அதிகப்படியான அதிகாரங்கள் தரப்படவேண்டும் என்று டாக்டர் அமல் ரே அவர்கள் ஒரு புத்தகத்தில் எழுதியிருக்கிறார்.

" Inter - Governmental Relations in India ".

என்ற அந்தப் புத்தகத்தில், அவர் ஃபெடரல் சிஸ்டம் இருக்கிற இந்தியாவையும் அமெரிக்காவையும், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளையும் ஒப்பிட்டுவிட்டு, இந்தியாவிலேதான் மாநிலங்களுக்கு மிக மிகக் குறைந்த அதிகாரங்கள் என்று குறிப்பிட்டு, அவை திருத்தி அமைக்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார். ஃபெடரல் ஸிஸ்டம் என்றால் என்ன என்பதற்கு மிக அழகான விளக்கத்தைத் தந்திருக்கிறார்.

' By the federal principle I mean the method of dividing powers so that the general and regional governments are each within a sphere, co-ordinate and independent. '

ஃபெடரல் ஸிஸ்டம் என்றால் மாநில அரசும், மத்திய அரசும் தங்களுக்கு இருக்கிற அந்த வட்டத்திற்குள், தனக்கு இருக்கிற பொருளாதார சுதந்திரத்தைப் பகிர்ந்து அளிப்பதுதான் ஃபெடரல் ஸிஸ்டம் என்று குறிப்பிட்டு, அவர் ஒரு இடத்தில் அதிகாரம் குவிவதால் என்ன கேடுபாடுகள் விளையும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

' The effects of centralisation have been first certain dilution of State autonomy and secondly certain blurring of the boundaries of the Centre and the States. '

என்று மாநில அரசின் அதிகாரங்கள் மிக மிகக் குறைக்கப்பட்டிருக்கின்றன என்று அதிலே குறிப்பிட்டிருக்கிறார். அப்படிக் குறிப்பிட்டுவிட்டு, மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரங்கள் தரப்படாததால் மனக்குமுறல் ஏராளமாக இருக்கிறது என்று கருதுகிறேன்; இதை வளரவிட்டால், ஒரு காலத்தில் எரிமலை போல் வெடித்துச் சிதறும்; இந்திய ஒருமைப்பாட்டுக்கு கேடு விளையும் என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியை மட்டும் தலைவர் அவர்களின் அனுமதியோடு படிக்க விரும்புகிறேன்.

' But at times they are active indeed and then they would like a sleeping volcano suddenly get awake, tend to burst as under India's national unity and introduce serious strains and stresses in her federal system. '



1967 ஜூன் 26] [திரு. அ. லெ. சுப்பிரமணியம்]

என்று மிக மிக அழகாகக் குறிப்பிட்டிருக்கிறார். டாக்டர் அமல் ரே அவர்களின் இந்த எச்சரிக்கையை காங்கிரஸ்காரர்களுக்கு காணிக்கையாக்கிக் கொள்கிறேன்.

முன்னாள் அமைச்சர் திரு. பூவராகன் அவர்கள் பேசும்போது எதற்கெடுத்தாலும் மத்திய அரசைக் காட்டுவதா என்று கேட்டார். மனைவியைப் பார்த்து கணவன் 'தினமும் ரசமும் அப்பளமும் தானா?' என்று கேட்டால், மருமகள் பெட்டிச் சாவி இருக்கிற மாமியாரைத்தான் காட்டுவாள்—அதுதான் முறை. இந்தத் தைரியம் கூட காங்கிரஸ்காரர்களுக்கு இல்லாமல் இருந்தது. இன்றைக்கு இருக்கிற புது மருமகள் புத்திசாலி—மாமியாரிடத்தில் இருக்கிற எல்லாச் சாவிகளையும் பெற முடியாவிட்டாலும், தனக்கு வேண்டிய சில சாவிகளையாவது நிச்சயமாகப் பெறுவாள் என்று நம்புகிறேன்.

இன்னும் இந்த அறிக்கையில் பல புதுமைகள் இருப்பதைக் காண்கிறோம். தொழிலாளர்கள் அரசு இது என்பதற்காக மாண்புமிகு அண்ணா அவர்கள் கோயம்புத்தூரிலே மே தினத்தைக் கொண்டாடுகிற நோக்கில் மே முதல் நாளில் ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டத்தைச் சொன்னார்கள்.

புன்செய்க்கு வரி விலக்கு அளித்திருக்கிற புதுமையைப் பார்க்கிறோம். மேலும், புரட்சிகரமான திட்டமான பஸ்களைத் தேசிய மயமாக்கும் திட்டத்தைக் காண்கிறோம்.

இன்றைக்கு இருக்கிற நிதி நிலைமையைப் பெருக்குவதற்கான என்னுடைய யோசனையை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு இன்ஷூரன்ஸ் திட்டத்தை எடுத்துக்கொண்டால், அந்த இன்ஷூரன்ஸ் திட்டமானது அகில இந்திய ரீதியில் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷனாக இருக்கிறது. இந்த அகில இந்திய ரீதியில் இருக்கும் திட்டத்தை மாநிலங்களுக்குப் பிரித்துக் கொடுத்து, தமிழகத்திற்கென்று தனி இன்ஷூரன்ஸ் திட்டத்தை, ஸ்டேட் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷனாக ஆக்கினால் அதிகப்படியான வருமானம் கிடைக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதிலே இன்னொன்றும் இருக்கிறது. க்ராப் இன்ஷூரன்ஸ் திட்டம் என்று சொல்லப்படுகிற பயிர்களுக்கான இன்ஷூரன்ஸ் திட்டத்தை விரைவு படுத்த வேண்டுமென்ற திட்டம் இருக்கிறது. நாம் மாநிலங்களுக்கு இன்ஷூரன்ஸ் திட்டத்தைப் பிரித்து வாங்கிக் கொண்டால் க்ராப் இன்ஷூரன்ஸ் திட்டத்தையும் செயல்படுத்த முடியும் என்று கூறிக் கொள்கிறேன்.

இப்படி பல புரட்சிகளும், புதுமைகளும் இருக்கிற இந்தத் திட்டத்தை வரவேற்று என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. நா. கிருட்டிணன் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையை வரவேற்று பேசுகின்ற வாய்ப்பினை எனக்கும் அளித்தமைக்கு நான் முதலில் நன்றி தெரிவித்துக்

[திரு. நா. கிருட்டிணன்] [1967 ஜூன் 26

கொள்கிறேன். நிதிநிலை அறிக்கையானது எந்த ஒரு கட்சி பெறுப்பேற்று ஆட்சியை நடத்தி வருகிறதோ அந்தக் கட்சி நாட்டு மக்களுக்கு தங்களுடைய கொள்கைகள் எவை என்று சொல்லி வந்தார்களோ அவைகளையெல்லாம் இன்னின்ன வகையிலே நிறைவேற்றிக் காட்டுவோம் என்று தொகுத்துக் காட்டுகிற ஒரு அரசியல் சாசனமாகும்.

'The Budget speech is largely a political document. No doubt, the Finance Minister reviews the salient features of the financial administration of the year ending and the year commencing; but the main purpose is to focus attention on the policies and programmes of the party he represents and how far these had been implemented and how far they are to be further implemented during the Budget year'.

அந்த வகையிலே அறிஞர் அண்ணா அவர்கள் இந்த ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை மிகச் சிறந்த முறையில் தயாரித்துத் தந்தமைக்கு அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையை தயாரிக்கின்றபொழுது நமக்கு இருக்கிற குறிப்பிட்ட நிதி வசதியை வைத்து ஒரு குறைந்தபட்ச பற்றுக்குறை நிதிநிலை அறிக்கையை தயாரித்தது மிகவும் பாராட்டத்தக்கதாகும். அரசியல் அமைப்புச் சட்டத்தில் 12-வது பிரிவில் குறிப்பிட்டுள்ள பெரும்பாலான வருவாய் வருகின்ற வரித்துறைகளெல்லாம் மத்திய அரசாங்கத்திற்குத் தரப்பட்டிருக்கின்றன. அந்த வகையிலே மாநில சர்க்கார்கள் மத்திய சர்க்காரிடம் எதற்கொடுத்தாலும் அதிககமாகக் கையேந்தி நிற்கவேண்டிய நிலையைத் தான் அரசியல் சட்டம் இன்றுள்ள நிலையில் ஏற்படுத்தியிருக்கிறது என்று நான் கூறவில்லை, வங்காளத்து முதல் அமைச்சர் டாக்டர் பி. சி. ராய் அவர்கள் 1958-ம் ஆண்டில் கூறியிருக்கிறார்கள். அந்த வகையிலே காலையிலே நாம் பிரஷ் எடுத்து பல் தேய்க்கத் துவங்கினால் பிரஷுக்குப் போடப்படுகிற வரியும், பல்பசைக்கான வரியும் மத்திய சர்க்காருக்குத்தான் போகிறது. பிறகு காப்பியோ, டீயோ குடிக்கத் துவங்கினால், அதற்குப் போடுகிற வரியும் மத்திய அரசாங்கத்திற்குத்தான் போகிறது. பின்னர் ஷேவிங் செய்துகொள்வதற்கு பிளேடு எடுத்தால், அதற்குப் போடுகிற வரியும் மத்திய சர்க்காருக்குத்தான் செல்கிறது. குளிக்க சோப்பு எடுத்தால் அதற்கான வரியும் மத்திய அரசுக்கே போய்ச் சேருகிறது. அது மட்டுமல்ல, சிகரெட் குடிக்கத் துவங்கினால் அதற்குப் போடுகின்ற வரியும் மத்திய அரசாகங்த்திற்குப் போய் சேருகிறது. அந்த வகையிலே ஒரு மனிதன் தன்னுடைய அன்றாட வாழ்க்கைக்குப் பயன்படுகிற அத்தியாவசியமான பொருள்களுக்குப் போடுகின்ற வரிகள் அனைத்தும் பெற்றுக்கொண்டிருக்கிற மத்திய சர்க்கார் மாநில சர்க்கார்களுக்கு உரிய பங்கை செலுத்துமானால், அதைப் பயன்படுத்தி மாநில சர்க்கார் இந்த நாட்டு மக்களுக்கு நல்லது செய்ய முடியும். அந்த முறையிலே அந்த வரிகளுடைய தேவையான



967 ஜூன் 26] [திரு. நா. கிருட்டிணன்]

ாகத்தைப் பெறுகின்ற வாய்ப்பை இந்த சர்க்கார் மத்திய சர்க்காரிடம் கேட்டுப் பெறவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நிதிநிலை அறிக்கையில் பஸ் போக்குவரத்து நாட்டுடைமையாக்கப்பட்டிருக்கிறது. எழுபத்தைந்து மைல்களுக்கு மேற்பட்ட ருட்களை எல்லாம் நாட்டுடைமையாக்கியிருக்கிறார்கள். அவ்வாறு ாடுக்கின்ற நேரத்தில் இந்த பஸ்களை வேறு ஊர்களுக்கு, கிராமப்புறங்களுக்கு 75 மைல்களுக்குக் குறைவாக எந்தெந்த ஊர்களுக்கு பஸ் போக்குவரத்து இல்லாமல் இருக்கிறதோ அந்த ஊர்களுக்குத் திருப்பித்தர பெர்மிட் கொடுப்பது நாட்டு மக்களுக்கு மறைமுகமாக நன்மை செய்வதாகும் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். உதாரணமாக, சென்னைக்கு வருகிற அத்தனை பஸ்களையும் நாட்டுடைமையாக்கியிருக்கிறார்கள். அவ்வாறு ஆக்குகின்ற காலத்தில் நான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற காஞ்சீபுரத்திலிருந்து சென்னைக்கு வருகிற அத்தனை பஸ்களும் நாட்டுடைமையாகிவிடும். அப்பொழுது காஞ்சிபுரத்திலிருந்து சென்னைக்கு வந்துகொண்டிருக்கும் அத்தனை பஸ்களையும், அதே போல் தமிழ்நாட்டில் 75 மைல்களுக்கு மேற்கொண்டு ஓடிக்கொண்டிருக்கிற அத்தனை பஸ்களையும் கிராமப்புறங்களில், பஸ் போக்குவரத்து வசதி இல்லாத ஊர்களுக்கு அனுப்பிவைப்பதன் மூலம் நாட்டு மக்களுக்கு நல்ல பஸ் போக்குவரத்து வசதி செய்தவர்களாவோம். அதே நேரத்தில் ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்குச் செல்கின்ற ரூட்டில் தனிப்பட்ட பஸ் முதலாளிகள், வேறு தனிப்பட்டவர்கள் பஸ் அந்த வழியில் ஓடவில்லை என்றால், அதன் காரணமாக என்ன கட்டணத்தைக் குறிப்பிட்டாலும் அந்தக் கட்டணத்தை மக்கள் கொடுத்துப் போகவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகிறார்கள். உதாரணமாக எங்கள் ஊரிலிருந்து ஆற்காட்டுக்குச் செல்ல வேண்டுமென்றால் எம்.பி.டி. பஸ் நிறுவனத்தின் பஸ்கள்தான் ஓடிக்கொண்டிருக்கின்றன. எங்கள் ஊருக்கும் ஆற்காட்டுக்கும் 28 மைல்கள். ஆனால் 28 மைல்களுக்கு விதிக்கப்படுகின்ற கட்டணம் ரூ. 1-30. அந்த இடத்தில் எங்கள் ஊரிலிருந்து ஆற்காட்டுக்கு அல்லது வேலூருக்கு இரண்டு மாநில சர்க்கார் பஸ்கள் விடப்படவேண்டும். அப்பொழுது தனியார் பஸ்களில் கட்டணம் குறைக்கப்பட்டுவிடும். எடுத்துக்காட்டாக வேண்டுமானால், எங்கள் ஊரிலிருந்து சென்னைக்கு 3 பஸ்கள் ஏற்கனவே ஓடிக்கொண்டிருந்தன. என்ன காரணத்திற்காகவோ என்னவோ முன்னாலிருந்த சர்க்காரால் அது நிறுத்தப்பட்டுவிட்டது. மீண்டும் புதிய சர்க்கார் முயற்சியின் பேரில் இப்பொழுது மூன்று பஸ்கள் விடப்படுகின்றன. அதன் காரணமாக முன்பு ரூ. 2 என்றிருந்த கட்டணத்தை தனிப்பட்ட பஸ் முதலாளிகள் ரூ. 1-50-ஆகக் குறைத்து விட்டார்கள். ஆகவே, இதை எடுத்துக்காட்டாக வைத்து நான் சொல்லியபடி காஞ்சீபுரத்திற்கும் ஆற்காட்டுக்கும், அல்லது காஞ்சிபுரத்திற்கும் வேலூருக்கும் இரண்டு பஸ்கள் விடவேண்டும் என்று போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. நா. கிருட்டிணன்] [1967 ஜூன் 26

அடுத்து, சேலம் உருக்காலையைப் பற்றி நமது நிதிநிலை அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. அறிஞர் அண்ணா அவர்கள் இதைப் பற்றி கூறும்பொழுது கண்டனம், கிளர்ச்சி, பதவித் துறப்பு இவற்றிலெல்லாம் ஈடுபடுகின்ற செயல் திட்டம் எல்லாக் கட்சியின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளலாம் என்ற கருத்தும் வலுப்பெற்று வருகிறது என்பதனை மிகத் துணிந்து கூறியிருக்கிறார்கள். இந்தத் துணிச்சல் ஏற்கனவே 1958-ம் ஆண்டில் வங்காளத்து முதலமைச்சர் டாக்டர் பி. ஸி. ராய் அவர்களுக்கு ஏற்பட்டதின் விளைவாகத்தான் அங்கே எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலை ஏற்படுத்தப்பட்டது. அந்த நேரத்தில் டாக்டர் பி. ஸி. ராய் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்,

'It is by now painfully apparent that our rulers in Delhi cannot be counted upon to be fair to under-developed regions. It is the people concerned that by their united and strong action must wrest what is their due'.

அந்த வகையிலே நம் நாட்டு மக்களுடைய பிரதிநிதிகளாக இருக்கிற நாம் இத்தகைய தியாகங்களைச் செய்தாவது சேலம் உருக்காலையைப் பெற்றுத் தீரவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியிருக்கிறோம்.

அடுத்து டாக்டர் பி. ஸி. ராய் அவர்கள் அந்த நேரத்தில் குறிப்பிட்டிருப்பது என்னவென்றால், 'இன்றுள்ள அரசியல் அமைப்பு நிலையில நாம் இன்னும் ஒரு குடியேற்ற நாடு நிலையிலேதான் இருக்கிறோமே தவிர, சுதந்திரம் பெற்ற நாடாக இன்னும் ஆகவில்லை'—நான் இன்னும் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இங்கு பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் . . . (மணி அடிக்கப்பட்டது)

*திரு. இ. அ. சிதம்பரம் பிள்ளை : மாண்புமிகு தலைவரவர்களே, இந்த விவாதத்தில கலந்துகொள்வதற்கு எனக்கு வாய்ப்பு கொடுத்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அறிக்கையிலே வேளாண்மையைப் பெருக்குவதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பது பற்றி விவசாயி ஆகிய நான் மிகவும் வரவேற்கிறேன். புன்செய் நிலங்களுக்கு அடிப்படை தீர்வையை எடுத்து விட்டபோதிலும் சிறுநிலக்கிழார்களுக்கு அதனால் கிடைக்கக்கூடிய பலன் அதிகம் இல்லை என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், விவசாய வருமான வரியின் தத்துவமானது வருமான வரியின் அடிப்படையிலே வருகிறபொழுது ரூ. 3,600 என்ற வரம்பை உயர்த்துவது தான் அவர்களுக்கு பிரயோசனமாக இருக்கும். 12½ ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலத்திற்கும் குறைவாக உள்ள நிலச்சுவான்தார்களும் விவரக் கணக்குகள் கொடுக்கவேண்டும் என்ற முறை இருக்கிறபடியால், சிறிய நிலச்சுவான்தார்களும் கணக்குகள் மூலம் வரி விதிக்கப்படவேண்டிய நிலையில் தான் இருக்கிறார்கள். ஆகவே இந்த முறையானது அவர்களுக்கு அதிகக் கஷ்டத்தைத் தான் கொடுக்கும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



1967 ஜூன் 26] [திரு. இ. அ. சிதம்பரம் பிள்ளை]

அடுத்தபடியாக, உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு பாசன வசதிகளை விரிவு படுத்துவதற்கும், இருக்கிற கிணறு, ஏரிகளை ஆழப்படுத்துவதற்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்று கூறிக்கொள்கிறேன். எனது தொகுதியில் முக்கியமாக தென்காசி, செங்கோட்டை தாலுகாக்களில் குளங்கள் அத்தனையும் விஸ்தீரணம் குறைவாக உள்ளன. மாதம் மும்மாரி பொழியவில்லை; அந்தக்காலம் போய், பருவம் தவறி விட்டிருக்கிறது. ஒரு விளைச்சலுக்கு இரண்டு மூன்று தண்ணீர் பெருக்க வேண்டிய நிலை இருக்கிறது. மராமத்து செய்யாமல் குளங்கள் திடல் அடித்துப் போய் இருக்கின்றன. அதற்குக் காரணம், போர்ட் ஸ்டாண்டிங் ஆர்டர் பிரகாரம், சில்ட் க்ளியரன்ஸ் என்பது குடிமராமத்தில் செய்யப் படவேண்டும், அரசாங்கம் செய்யாது என்கின்ற முறை இருப்பதால்தான். அதனால் பல ஆண்டுக்காலமாகவே சில்ட் க்ளியரன்ஸ் செய்யப்படாததால், போதுமான தண்ணீர் தேக்க வசதி இல்லை. அந்த முறையில் இருக்கும் ரூலை மாற்றி, அந்த வேலையை அரசாங்கமே நேரிடையில் செய்வதற்கு வசதி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, செங்கோட்டை தாலுகாவில் அனுமந்த நதி பாசனத்தில் மோட்டை நீர்த்தேக்கம் பரிசீலனையில் இருந்தது. அதோடு நயினார் நீர்த்தேக்கமும் சேர்ந்து 69 லட்ச ரூபாயில் நிறைவேற்ற உருவாகியிருக்கிறது. அதை இந்த ஆண்டே ஆரம்பித்தால். 2,500 ஏக்கரா நன்செய்க்கு நிரந்தரமாக தண்ணீர் கிடைக்கும். அதன் மூலம் கூடுதலான புன்செய் நிலம் நன்செய்க்குக் கொண்டுவர இயலும் என்று அந்தப் பக்கத்திலுள்ள ஓய்வுபெற்ற சூப்ரெண்டிங் எஞ்ஜினியர் அவர்களும், இன்னும் பலரும் கருதுகிறார்கள். அது சம்பந்தமாக மகஜர் கூட அனுப்பியிருக்கிறார்கள். அதையும் கவனித்து நீர்த்தேக்கத் திட்டங்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, உரவினியோகம். உர வினியோக விஷயத்தில் தகுந்த அளவு வேண்டிய காலத்தில் கிராம மக்களுக்குக் கொடுக்கும் முறை இருக்கவேண்டும். அப்படிக் கொடுப்பதை தனியார் மூலமாகவோ அல்லது கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவோ அல்லது பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாகவோ அந்தந்த கிராமங்களிலேயே கொடுக்கக் கூடிய வசதியைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, பயிர்களுக்கு நோய் பாதுகாப்புத் திட்டம். பயிர்களுக்கு நோய் வந்தபிறகு, அதைத் தடுக்க உள்ள முறைகளில் பூச்சி மருந்து தெளித்தல் ஒன்று. அதைச் சிலர் கையாண்டால், பக்கத்து நன்செய் நில விவசாயி அந்த பூச்சி மருந்தைத் தெளிக்காமல் இருந்தால், உபயோகமில்லாமல் போய்விடுகிறது. மீண்டும் அந்த நோய் பயிர்களைத் தாக்கும். ஆகவே, அப்படி பூச்சி மருந்து தெளிப்பதை அரசாங்கமே எடுத்துக் தெளித்து விட்டு, அதற்காகக் கூடிய செலவை விவசாயிகளிடமிருந்தே வசூல் செய்துக் கொள்ளலாம். அப்படிச் செய்தால் நலமாக இருக்கும். இன்றைக்கு

[திரு. இ. அ. சிதம்பரம் பிள்ளை] [1967 ஜூன் 26

இருக்கும் நிலைமை என்னவென்றால், ஒருவன் நன்செய்க்கு மருந்து தெளிக்கிறான் என்றால், நோய் தீர்ந்து போகிறது; பயிர் விளைகிறது. ஆனால், பக்கத்தில் உள்ளவன் நிலத்திலிருந்து மறுபடியும் நோய் பரவுகிறது. அவன் மருந்து தெளிக்காமல் இருந்திருப்பான். ஆகவே, இரண்டாம் முறையாக இவனே தன் நிலத்திற்கு மருந்து தெளிக்க வேண்டியிருக்கிறது. அதனால் அவனுடைய விளைச்சல் பாதிக்கப்படுகிறது. ஆகவே, உணவு உற்பத்திப் பெருக்கத்தை உத்தேசித்து, மத்திய சர்க்காரும், நம்முடைய சர்க்காரும் இதற்கு மானியங்கள் கொடுப்பதன் மூலம், செலவுத் தொகைகளை பகிர்ந்து கொண்டு அதிகமாகாமல் பார்த்துக் கொள்ளலாம். அதோடு கூட, அந்தத் தொகையையும் விவசாயிகளிடமிருந்து வசூலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, நில அடைமான பாங்கின் மூலம் கடன் வசதிகள் கொடுப்பது. இன்றைக்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் எவ்வளவோ திட்டங்கள் போட்டு கடன் வசதி கொடுக்கிறார்கள். தென்னந்தோப்பு, மாந்தோப்பு இவைகளுக்கு கடன் வழங்க வேண்டும் என்று சென்னை மாநில கூட்டுறவு பாங்கை கேட்டோம். அதைப் பரிசீலனை செய்தால் நலமாக இருக்கும். தென்னந்தோப்புகள், மாந்தோப்புகள் இவற்றிற்கும் கடன் உதவி யளிக்க பரிசீலனை செய்து ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என் உரையை முடிக்கிறேன்.

**திரு. ந. தீர்த்தகிரி :** மன்றத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் செய்யத் தவறிய நல்ல காரியங்களை புதிய அரசு செய்யும் என் றிருந்த மக்கள் இன்றைக்கு ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள். ஏனென்றால், கடந்த ஆட்சியிலே விவசாயிகள் வாங்கக் கூடிய மின்சார பம்புசெட்டு மோட்டார்கள் ரூ. 1,500-ஆக இருந்தது, இப்பொழுது அது ரூ. 2,000 ஆக இருக்கிறது. அப்பொழுது ஒரு விவசாயத் தொழிலாளிக்குக் கிடைத்த சம்பளம் ரூ. 200 ஆக இருந்தது, இப்பொழுது அது ரூ. 400 ஆக இருக்கிறது. அப்பொழுதுக்கும் இப்பொழுதுக்கும் உள்ள உரம், தழை மற்றும் விவசாயக் கூலிகளை எடுத்துப் பார்த்தால், ரூபாய்க்கு எட்டு அணா அளவிற்கு உயர்ந்திருக்கிறது, குறைந்ததாகக் காணோம். இப்படி விவசாய மக்கள் பல கஷ்டங்களையும் அனுபவித்துக் கொண்டுதான் இருக் கிறார்கள். இன்றும், இனிமேலும் அந்தக் கஷ்டத்தை அனுபவித்துக் கொண்டேதான் இருப்பார்கள், நசுக்கப்படுவார்கள் என்று சொல்லுகிறேன். விவசாய மக்கள் விவசாயத்தைச் செய்தாலிட்டு, எந்தவிதமான கஷ்டங்களும் குறையாமலே இருந்து கொண்டு இருக்கிறார்கள். ஒரு பெட்டிக்கடை வைத்திருப்பவனுடைய நல்ல சுகத்தைக் கூட அனுபவிக்க முடியவில்லை. மிகக் கஷ்டத்தில் ஆழ்ந்து அல்லும் பகலும் அல்லல்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். விவசாய மக்கள் காலையில் எழுந்து, சாயந்தரம் ஏழு மணி, இரவு 10 வரை என்று ஓயாமல் ஒழியாமல் ரத்தத்தை வாரிச் சிந்தி கஷ்டப் பட்டு உழைத்தும் எந்தவிதமான நல்ல சுகத்தையும் அவனுடைய மனைவி மக்கள் அனுபவிக்க முடியவில்லை. பெரும் தொல்லையில்



1967 ஜூன் 26] [திரு. ந. தீர்த்தகிரி]

இருக்கிறார்களே ஒழிய, எந்தவித நற்சுகத்தையும் அறியார்கள். நானும் ஒரு விவசாயி மகன் என்ற முறையில் சொல்லுகிறேன். விவசாயத்தைச் செய்து பார்த்து உண்மையாகச் சொல்லுகிறேன். அவர்களுடைய கஷ்டம் அமைச்சருக்குத் தெரியாது. ஆனால் என்னைப் போன்ற விவசாயிகளுக்கு, உழைப்பாளிகளுக்குத் தெரி யும் என்று சொல்லுகிறேன். விவசாயிகள் செய்யக்கூடிய வேலை களுக்கு போதிய ஊதியம் கிடைக்கச் செய்ய வேண்டும் அரசாங்கம் 1-30 பி.ப.
என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது விவசாயம் பெருகி னால்தான் நாடு நலன் அடையும். விவசாய மக்கள் நாட்டின் முது கெலும்பு போன்றவர்கள். அவர்கள் உழைப்பு அரும் உழைப்பு என்று இந்த மன்றத்திலே சொல்ல விரும்புகிறேன். மேலும், விவசாயிகள் வாழ வழிவகை செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும் என் தொகுதியில், அரிசன மக்கள் பின்தங்கிய மக்கள் அவர்களுக்கு கூலி நிறுவனத்தில் ஒரு நாளுக்கு எட்டு அணா கூலி என்கின்ற முறையில் எத்தனையோ காலமாக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய ஓயாத உழைப்பின் காரணமாக நல்ல பலன்களைக் காண முடியவில்லை. ஆகவே, இந்த புதிய அமைச்சரவை இதற்காக ஆங்காங்கே சிறுசிறு தொழில் களை ஏற்படுத்தி அவர்களுக்கு உதவியளிக்க வேண்டும். சொசைடிகள் மூலம் அவர்களுக்கு அளிக்கக் கூடிய சலுகைகளைக் கொடுக்க ஆவன செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளு கிறேன். மேலும், அந்தவகைகளில் அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும், என்னுடைய மாவட்டமாகிய தர்மபுரியைச் சேர்ந்த வட்டாரம் பின்தங்கிய வட்டாரம். அங்கே நீர்ப்பாசன வசதிகள் அதிகமாகக் கிடையாது. அது மேட்டுப்பாங்கான இடம், அதிலே சிறு சிறு அணைக்கட்டுகளும், நீர்த் தேக்கங்களும் கட்டினால், ஆறுகளில் வரும் தண்ணீரைத் தேக்கி விவசாய மக்கள் வாழ வழி கிடைக்கும் என்று அமைச்சருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். எங்கள் பகுதியில் வாணியாறு செல்லுகிறது. அது இரண்டு மலைகளுக்கு இடையே செல்லும் இடத்தில் ஒரு அணையைக் கட்டினால், அதன் கீழே உள்ள 7, 8 ஏரிகளில் தண்ணீரைத் தேக்கி விவசாயம் செய்ய வசதி கிடைக்கும். அந்தப் பகுதியில் பயிர்கள் தண்ணீர் இல்லாமல் காய்ந்து போகின்றன. அந்த வகையில் இந்த 7, 8 ஏரிகளிலும் தண்ணீரைத் தேக்கினால், பயிர்கள் காயாமல் நல்ல மகசூல் கிடைக்க வழி ஏற்படும். அப்படிப்பட்ட நல்ல காரியங்களை இந்த அரசு செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அரிசன ஆஸ்டல்களில் குறைவான மாணவர்களையே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் பிள்ளைகளைச் சேர்க்க வழி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். படிக்கிற வர்கள் 30 பேர்கள் பாஸ் ஆகிவிட்டால், மேலும் பிள்ளைகளைச்

சேர்க்க முடியவில்லை. ஆஸ்டல்களில் அப்படிப்பட்ட கஷ்டங்கள் இருக்கின்றன என்று அரசாங்கத்திடமும், உங்களிடமும் சொல்ல விரும்புகிறேன். இதுபோன்ற காரியங்களைச் செய்து கொண்டு விவசாயிகள் மின்சார வசதி இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொருவரும் கிணற்றிலே மோட்டாரை வைத்துக்கொண்டு மிகவும் சிந்தனையோடு இருக்கிறார்கள். அவர்களது தொல்லையைப் பார்க்கும்பொழுது வேதனைப்படுகிறேன். அதற்குத் தாங்கள் ஆவன செய்வீர்கள் என்று எதிர்பார்க்கின்றோம். விவசாய மக்களிலே நானும் ஒருவன். அவர்கள் குறைகளை எல்லாம் நான் எடுத்துச் சொல்லுகிறேன். விவசாயம் வளர அவசியமான மின்சார வசதிகளை உண்டாக்குவதற்கும், விவசாயிகளுக்கு இன்னும் மேலும் மேலும் அதிகமான உற்சாகம் உண்டாவதற்கும் நீங்கள் ஆவன செய்யவேண்டுமாய் பணிவான எண்ணத்தோடு கேட்டுக்கொள்ளுகிறேன். எங்கள் பகுதி மேட்டுப்பாங்கான பகுதி. விவசாயத்தை நம்பி வாழக்கூடியவர்கள், ஏழை எளியவர்கள். அதற்குத் தக்க நடவடிக்கை எடுத்து ஆவன செய்வீர்கள் என்று நான் மேலும் மேலும் கேட்டுக் கொள்ளுகிறேன். மேலும், ஹரிஜன மக்கள் வாழ்வினை வளம் பெறச்செய்ய ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொண்டு, தாழ்மையுடன் மன்றத்திற்கு என் வணக்கத்தைத் தெரிவித்து உரையை முடிக்கின்றேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. மலைச்சாமி):** இத்துடன் மன்றத்தில் முற்பகல் நிகழ்ச்சி முடிவுறுகின்றது. பிற்பகல் 3-30 மணி அளவுக்கு பேரவை மீண்டும் கூடும்.

1–32 பி.ப. பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

### இடை வேளைக்குப் பின்.

பேரவை பிற்பகல் 3-30 மணிக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமையில் மீண்டும் கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வரவு-செலவுத் திட்டத்தின் மீது விவாதம் தொடர்ந்து நடைபெறுகிறது. மாலை நிகழ்ச்சியில் இப்பொழுது முதலில் உரையாற்றுகின்றவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. எஸ். சந்தானம் அவர்கள்.

* **திரு. பி. எஸ். சந்தானம்:** மதிப்பிற்குரிய சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய முதலவர் அறிஞர் அண்ணா அவர்கள் 1967-68-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்திருப்பதையொட்டி அவருக்கு என்னுடைய நன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அறிக்கையை நான் வரவேற்றுப் பாராட்டும் முகத்தான் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இருபதாண்டுக் காலமாக காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றபோது அவர்கள் ஆண்டுதோறும் சமர்ப்பித்த நிதி நிலை அறிக்கைகளையும் இப்பொழுது இந்த அரசாங்கத்தின் 1967-68-ம் ஆண்டுக்கான நிதி





நிலை அறிக்கையையும் பார்க்கின்ற நேரத்தில், ஏழை எளியவர்கள் அத்தனை பேரும் பூரிப்பு அடையக்கூடிய நிலையில் இது அமைந்திருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும். தமிழகத்தில் உள்ள அத்தனை ஏழை எளியவர்களும், பாட்டாளி பாமர மக்களும் பூரிப்பு அடையக்கூடிய நிதி நிலை அறிக்கையாகத்தான் இது காணப்படுகிறது.

தமிழகத்தின் ஜனத்தொகையில் ஆறிலொரு பகுதி உள்ள ஆதித் திராவிட மக்கள் உண்மையாகவே ஆதரவற்ற நிலையில் இருந்த சமுதாயமாகும். அந்த ஆதித்திராவிட சமுதாய மக்களின் சார்பாக இன்றைக்குப் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையில் இயங்குகின்ற இந்த அமைச்சரவையைப் பாராட்டியே தீர வேண்டும்.

அரிசன நலத்துறை வழங்கும் கல்வித் துணைச் சம்பளங்களுக்குரிய வருமான வரம்பு ஆண்டொன்றுக்கு ரூ. 1,500 என்றிருந்ததை, ஆண்டொன்றுக்கு ரூ. 2,000 என்று உயர்த்தப்படுவதாக இந்த நிதி நிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ரூ. 2,000 வருமானம் உடையவர்களுடைய குழந்தைகளும் இலவசமாகப் படிப்பதற்கு அருகதையுடையவர்கள் என்று இந்த அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதைக் குறித்து பேரறிஞர் அண்ணா அவர்களை ஏழை எளியவர்கள் அத்தனை பேர்களும் பாராட்ட வேண்டியவர்களாகத்தான் இருக்கிறார்கள்.

இந்த நிதி நிலைஅறிக்கையில் கூறப்பட்டிருக்கிற சில அம்சங்களை நாம் ஆராய்ந்து பார்க்கும்போது, ஒவ்வொரு திட்டமும் ஏழை எளியவர்களுக்குப் பயன்படத்தக்க முறையில்தான் அமைந்திருக்கிறது. அதே நேரத்தில், சில பெரிய பெரிய நிலச்சுவாந்தார்கள் 100 வேலி, 200 வேலி, 1,000 வேலி நன்செய் நிலம் வைத்திருக்கக்கூடிய அத்தனை பேர்களும் இந்த சர்க்காரை ஒரு விதமாக நினைக்கக்கூடும். ஆனால், புன்செய் நிலம் வைத்திருக்கக்கூடிய ஏழை எளியவர்கள், ஐந்து முதல் பத்து ஏக்கர் வரை நிலம் வைத்திருக்கக்கூடிய அத்தனை பேர்களும் இந்த சர்க்காரைப் பெருமையோடு பாராட்டத்தக்க நிலையில், நமது ஒப்பற்ற தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் சமர்ப்பித்திருக்கும் இந்த நிதி நிலை அறிக்கையைக் குறித்துப் பூரிப்பு அடையும் நிலையில் இருக்கிறார்கள்.

ஏழை எளியவர்களுக்கெல்லாம் நிலம் வழங்கவேண்டும், உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்ற முதுமொழிக்கிணங்க, ஏறத்தாழ 800 ஆண்டுக் காலம் ஆண்ட நவாப் காலத்தில், தமிழகத்தில் உள்ள சிலருக்கு நிலம் வழங்கப்பட்டது. எவரெவர் எந்த எந்தத் தொழிலைச் செய்கின்றார்களோ, அவரவர்களுக்கு நவாப் ஆட்சியில் நிலங்கள் வழங்கப்பட்டன. தோட்டி மானியம் என்றும், கருமார் மானியம் என்றும், பார்ப்பனர் மானியம் என்றும், தலையாரி மானியம் என்றும் வழங்கப்பட்டிருந்தன. இருநூறு ஆண்டுக் காலமாக நம்மை ஆண்டுவந்த வெள்ளைக்காரர்கள் காலத்தில் பஞ்சம் தரிசு என்ற பெயரில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு

நிலம் வழங்கப்பட்டிருந்தது. அந்தப் பஞ்சம தரிசு நிலங்களை ஏழை எளியவர்களுக்கு வழங்கவேண்டும் என்று இருபதாண்டுக் காலம் ஆட்சி புரிந்த காங்கிரஸ் சர்க்காரிடத்தில் நானும் 1957-ம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து இந்த மாமன்றத்திலே கூறியுள்ளேன். பஞ்சம தரிசு நிலத்தை ஆதித் திராவிட மக்களுக்கு இன்னும் பகிர்ந்து கொடுக்கவில்லை. அப்பொழுது நான் வேண்டு கோள் விட்டேன். இந்த மாநிலத்தில் எந்தெந்த கிராமங்களில் பஞ்சம தரிசு நிலங்கள் இருக்கின்றனவோ; அந்த நிலங்களை சர்க்கார் மூலமாக விளம்பரப்படுத்தி, அங்குள்ள ஏழை எளியவர்களுக்கு, நிலம் இல்லாத ஏழை எளிய பாட்டாளி மக்களுக்குப் பகிர்ந்து கொடுக்கவேண்டும் என்று இந்த மாமன்றத்தில் 1957-58-ம் ஆண்டிலிருந்து நான் கூறியுள்ளேன். பஞ்சம தரிசு நிலங்கள் எந்த எந்த கிராமங்களில், எத்தனை எத்தனை ஏக்கர் இருக்கின்றன என்பதைக் கணக்கெடுக்க இருபதாண்டுக் காலம் தமிழகத்தை ஆண்ட காங்கிரஸ் சர்க்கார் யாதொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால், இந்த சர்க்கார்—இப்பொழுது இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார்—ஒவ்வொரு தாசில்தாருக்கும் 'மெமோ' அனுப்பி, எந்த எந்தக் கிராமங்களில் பஞ்சம தரிசு நிலங்கள் இருக்கின்றன என்பதைக் கணக்கெடுத்து, அங்குள்ள நிலமில்லாத ஏழைகளுக்கு அந்த நிலத்தை உடனடியாகப் பட்டா கொடுக்க வேண்டும். பஞ்சம தரிசு நிலத்தில் யார் சாகுபடி செய்து கொண்டிருந்தாலும், அவர்களை அந்த நிலங்களிலிருந்து அப்புறப்படுத்திவிட்டு, நிலமில்லாத ஏழை எளிய ஆதித் திராவிட மக்களுக்குக் கொடுக்கும்படியாக இந்த அமைச்சரவையை நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நிற்க, வேலை மாற்றுவது ஒன்று. நான் கேள்விப்பட்டதை உண்மையிலே சொல்லத்தான் வேண்டும். ஒரு பழமொழி சொல்வார்கள். அதாவது "கடைவதில் இல்லாமல் குடைவதில் வராது" என்று சொல்வார்கள். ஏழை எளியவர்கள் பல்லாயிரம் ஆண்டுகளாக 'இசும்களை' வைத்துக்கொண்டு ஒரு ரூபாய், இரண்டு ரூபாயிலிருந்து இப்போது 40 ரூபாய் சம்பளம் வருகின்ற நேரத்தில் பரம்பரையாக வருகின்ற தோட்டி, தலையாரிகள் மூன்று பேர்கள் உள்ள இடத்தில் ஒருவரை நீக்க வேண்டுமென்ற சட்டத்தை சர்க்கார் ஏற்படுத்தியிருக்கிறது. ஒருசில நாட்களுக்கு முன் நம்முடைய பகுதியைச் சேர்ந்த ஏழெட்டு தலையாரிகள் வந்தார்கள். அவர்கள், "நாங்கள் பல்லாயிரம் ஆண்டுகளாக, பரம்பரையாக பாத்தியதை கொண்டாடி, ஒரு ரூபாய்—இரண்டு ரூபாய் சம்பளத்திலிருந்து இப்போது 40 ரூபாய் சம்பளம் வாங்குகின்ற நேரத்தில் மூன்றில் ஒருவரை நீக்குகின்ற சட்டம் வந்திருக்கிறது" என்று என்னிடத்தில் முறையிட்டார்கள். இந்தமாதிரி இரண்டு மூன்று பேர் சொல்கின்ற நேரத்தில் உண்மையில் வேதனையுடைகிறேன். ஆகவே, சர்க்கார் உடனடியாக தலையிட்டு, மூன்று பேர்கள் உள்ள கிராமத்தில் ஒருவரை நீக்குவது என்ற சட்டத்தை ரத்து செய்து, அங்குள்ள அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்தபடியாக, கல்வித் துறையை நாம் எடுத்துக்கொண்டால், உண்மையில் பூரிப்பு அடையாமல் இருக்க முடியாது. 100-க்கு 70 சத விகிதம் கல்வியின் முன்னேற்றம் இருந்து வருகிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், 50 ஆயிரம் மக்கள் வாழக்கூடிய திருவண்ணாமலை, போளூர், செங்கம் சேர்ந்த டிவிஷனிலே ஏறக்குறைய 70 உயர்நிலைப்பள்ளிகள் இருக்கின்றன. திருவண்ணாமலையில் மட்டும் மூன்று உயர்நிலைப்பள்ளிகள் இருக்கின்றன. இரண்டு ஆண்கள் உயர்நிலைப்பள்ளிகளும் பெண்கள் உயர்நிலைப்பள்ளி ஒன்றும் இருக்கின்றன. தவிர, திருவண்ணாமலையிலுள்ள பெருங்குடி மக்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து நன்கொடை வசூல் செய்து, சர்க்காரிடம் வாதாடி அங்கே ஒரு கல்லூரியை 1967-ம் ஆண்டு துவக்கினார்கள். இந்த ஆண்டு நல்ல முறையிலே அந்தக் கல்லூரியிலே மாணவர்கள் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். மீண்டும் மேல் பட்டப் படிப்பிற்காக சர்க்காரிடம் விண்ணப்பித்திருக்கிறார்கள். ஆகவே, சர்க்கார் அங்கே மேல் பட்டப் படிப்பு பெறுவதற்காக ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக செங்கம் தாலூகாவிலே செய்யாறு ஒன்று குறுக்கிடுகிறது. அந்த ஆற்றின்மீது பாலம் ஒன்று கட்டித் தரவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டோம். பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களையும் அறிஞர் அண்ணா அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் இது எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. இது நிறுத்தி வைக்கப்பட்டதை ரத்து செய்து மீண்டும் எடுத்து இந்தப் பாலத்தைக் கட்டினால் ஆற்றின் அக்கரைப் பகுதியிலுள்ள ஏறக்குறைய ஐம்பது கிராமப் பகுதிகளை வாழ வைத்த திட்டமாக அமையும் என்பதைக் கூறிக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER : Dr. Habibullah Baig will now speak. The time allotted to the hon. Member is fifteen minutes according to the decision made in the meeting of the Business Advisory Committee this morning.

* DR. HABIBULLAH BAIG : Mr. Speaker, Sir, at the very outset I congratulate the Hon. Chief Minister on the very good budget he has presented to the House. I welcome it on behalf of myself and on behalf my party. The budget has not levied many taxes on the people of the state. The people have been already taxed and the Hon. Chief Minister has been very careful in preparing the budget to see that there is no heavy taxation. But without taxation we cannot give benefits to the people. It is the responsibility of the Government to see that the people have sound health and sound mind and there must not be economic backwardness and social backwardness. The Government have to see that there is development in the fields of agriculture, public

[Dr. Habibullah Baig] [1967 ஜூன் 26

health and industries. To achieve that object, we cannot overburden the people with taxes. The Central Government must come to the rescue of the State Government. But unfortunately we are not in a position to expect more loans and more subsidies from Government of India. Anyway the present Government, under the leadership of the Hon. Chief Minister Mr. Annadurai, has given some relief to the farmers by waiving the basic assessment on dry lands. Nearly 45 lakhs of pattadars out of the 60 lakhs of pattadars have been benefited by this waiver and the loss to the Government by this waiver in the current year is estimated to be not less than one crore of rupees. After the D.M.K. Party came into power, they have implemented their promises to the people. Immediately after assuming office, they started procurement and in a very short period built up a stock of 5 lakh tonnes of rice. They have supplied the starving people with rice at one rupee per measure. By this supply in the statutory rationed area covering nearly 31 lakhs of people, the Government have to incur a loss of Rs. 5 crores in the current year. They have promised to extend the supply to the informally rationed areas covering 123 lakhs of people and by this extension the Government will have to incur a greater loss. The loss has to be compensated by additional taxation.

The Government have promised to augment the food resources by cultivating double crops on 17 lakh acres in Thanjavur district. Already 14 lakh acres are under double crop of high yielding strains. Nearly 60 lakhs to 70 lakhs of acres are under food crops. Unless and until we increase the area of cultivation to 80 lakhs to 90 lakhs of acres, we cannot have 70 lakh tonnes of food. The previous Government wanted to augment food production to 70 lakh tonnes. But in 1965–66 we had only 52.59 lakh tonnes. The short-term policy of supplying food at one rupee per measure will not be a successful one. We have to resort to a long-term policy for augmenting food production by increasing the area under cultivation and encouraging the ryots by the supply of fertilisers in time and the provision of credit facilities.

As regards the question of the supply of fertilisers, it is seen from the Budget speech of the Hon. Chief Minister that the Central Government, as promised by them, are not in a position to supply fertilisers and we have got only 50 per cent of the fertilisers asked for. Now, the farmers have become more scientifically-minded. Previously, we have to goad them to use the fertilisers. Now the position has completely changed and the farmers are coming forward to use the fertilisers. Then comes the proper water supply by means of minor irrigation or medium irrigation or whatever irrigation it may be. We have to see that the proper water supply is there. No doubt the Hon. Chief Minister has assured us that he will take up the scheme of minor irrigation works immediately and repair or improve the tanks,



1967 ஜூன் 26] [Dr. Habibullah Baig]

bore wells, etc. But one difficulty will arise with regard to the supply of electricity. For that also, the Government are taking immediate steps to take away electricity undertakings from the private licensees so that they could supply more electric power to the farmers. As it is, one-fourth of the electricity is supplied to the cultivators. Unless and until we improve the electric power, we cannot augment cultivation and the Hon. Chief Minister has assured us that there would be increased supply of electricity.

As regards procurement of foodgrains we have given only a fixed price to the producer. I have received various complaints from the cultivators regarding it. Production of foodgrains is changing from district to district and at the same time the cost of cultivation is also chaging. For instance, in Thanjavur the cost of cultivation is Rs. 150 per acre but in the Chingleput district it is nearly Rs. 250 or Rs. 300 because in the Chingleput district, they have to depend upon rain and pump sets for which they have to use electricity and spend more money. But in the Thanjavur district the water supply is plenty and they need not use electricity and so the cost of cultivation will be low. Therefore, if we fix a uniform price, it will be difficult for the farmers, to cultivate their paddy lands. Also, the soils differ from place to place. As a result of it, they are resorting to the cultivation of commercial crops. For example, if they cultivate groundnut, they will got nearly Rs. 800 per acre. One bag of wet groundnut costs Rs. 30 or Rs. 35. They will got a yield of 20 bags per acre which comes to about Rs. 750. The cost of cultivation is only Rs. 250 or Rs. 300. Thus they get a net income of Rs. 500 per acre. So, they are compelled to go in for commercial crops and we have to encourage them to cultivate paddy by giving them more supply of water, electricity and credit. Now credit is not available to the farmers particularly, the small farmers who have not been cared for. All the farmers are not the owners of the land and the small farmers have to get credit facilities from the large land-owners. If they have to go to the credit society or co-operative bank, they have to produce documents relating to the land for a period of 10 to 15 years. Otherwise, they cannot get any credit. So, we have to see that credit is made available to the poor ryots so that they can increase the yield from the lands by cultivating it properly.

Now, as per the promise made by them, the present popular Government have supplied rice to the statutory rationing areas at the rate of Re. 1 per measure and on that account they have to incur a loss of about Rs. 5 crores. The Central Government must come to the rescue of the Madras Government. Now the Centre are spending about Rs. 118 crores towards subsidising imported food and given it to the various States. After all, the sum of Rs. 5 crores is a small amount which they can give to this Government as subsidy. But as pointed out by the Honourable Chief Minister, they have not cared to give that subsidy to the State Government.

[Dr. Habibullah Baig] [1967 ஜூன் 26

So far as industries are concerned, we have been assured that there is going to be a cement factory and also a casting plant in Arkonam. Some more industries are to be set up with the collaboration of the Rumanian Government. Several industrial estates and pharmaceutical and instruments factories are also to be set up and for all of them, help from the Centre is needed.

Now, we are spending Rs. 52 crores towards Education. This is really a big slice of money, one-fourth of the total revenue. Though we are spending such a huge amount, still there is so much rush for admission to the P.U.C., B.Sc., and other courses. In this connection, I want to inform the House that I have been made a Member of the Selection Committee for the Presidency College. In that college, there are only 150 seats for the Arts courses—History 24 seats, Politics 24 seats, Economics 60 seats, Psychology 20 seats, English 15 seats, Hindi 10 seats. For the B.Sc., course, for Mathematics there are 24 seats, for Statistics 24 seats, for Physics 48 seats, for Chemistry 48 seats, for Botany 32 seats, for Zoology 32 seats, for Geology 24 seats and for Geography 24 seats. This is a premier college and it has got a huge building. The number of seats in the college can be increased. If we are not in a position to increase them in respect of the Science course, we can increase them at least in respect of the Arts course. There is no difficulty about it because we need not spend-more money. If we increase the number of seats, we can to some extent meet the heavy rush for admission and also satisfy the parents who want their children to be educated. I hope provision would be made for increasing the number of seats in the existing colleges through a building expansion programme.
4-90 I am thankful to the Government because they are going to start
பி.ப. two Arts Colleges.

MR. SPEAKER : The hon. Member's time is up.

DR. HABIBULLAH BAIG : Sir, I congratulate the Government on their introducing a social reform in the form of inter-caste marriages. Inter-caste marriages will be a great reform on the lines of the Varnashrama Dharma. Now, there is a spirit of disintegration prevailing in the country and this reform of inter-caste marriages will be a great integrating force cementing various castes in the Hindu community. I welcome the announcement of the Government encouraging the celebrations of such marriages and the award of medals. I once again thank the Hon. Chief Minister for presenting a good Budget and also the Hon. Speaker for giving me an opportunity to speak. With these few words, I close my speech.

* திரு. ஏ. வெள்ளத்துரை : மதிப்பிற்குரிய தலைவரவர்களே 1967-68-ம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின்மீது எனக்குப் பேச வாய்ப்பளித்த அமைச்சர்கள் அவர்களுக்கும், சட்டசபை



1967 ஜூன் 26] [திரு. ஏ. வெள்ளத்துரை]

உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த 1967-68-ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையிலே மதிப்பிற்குரிய கனம் காங்கிரஸ் உறுப்பினர்கள் பேசும்பொழுது இதிலே புதுமை இல்லை, புரட்சி இல்லை' என்று குறை பேசினார்கள். ஏறத்தாழ இருபது ஆண்டுக்காலமாக அவர்கள் ஆட்சி புரிந்த காலத்தில் அவர்கள் அறிக்கையிலே புதுமையும் இல்லை, புரட்சியும் இல்லை, இதைத் தமிழ்நாட்டு மக்கள் அறிவார்கள். அவர்களுக்கு அந்த ஆட்சியினால் எந்தவிதமான பலனோ நன்மையோ அடையவில்லை. இப்பொழுது அறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையில் ஒப்புவிக்கப்பட்ட இந்த அறிக்கையை எல்லோரும் பாராட்டுகிறார்கள். மக்கள் எல்லோரும் பாராட்டுகிறார்கள். ஏழை எளியவர்கள், தொழிலாளர்கள் விவசாயிகள் ஏறத்தாழ இருபது ஆண்டுக் காலமாகக் கஷ்டப்பட்டு வந்த மக்கள் பாராட்டி வருகிறார்கள்.

நெல்லை மாவட்டத்தில் வாசுதேவநல்லூர் தொகுதியில் மேற்குத் தொடர்ச்சி மலை அருகாமையில் இருப்பதால் அங்கே இரண்டு மூன்று நதிகள் ஓடிக்கொண்டு இருக்கின்றன. அங்கே தற்பொழுது 10 ஆயிரம், 20 ஆயிரம் மூட்டைகள் ஒருபோகத்திற்கு விளைந்துகொண்டிருக்கிறது. அங்கே ஓடுகின்ற ஆற்றின் குறுக்கே அணைகட்டி, பாசன வசதிகளை ஏற்படுத்தினால் அங்கே உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும், உணவுப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். தென்காசியிலிருந்து ராஜபாளையம் வரைக்கும் மேற்குத் தொடர்ச்சி மலை தொடர்ந்து செல்கிறது. அதிலே வருகின்ற நீர்வீழ்ச்சிகளின் தண்ணீரைக் கொண்டு அங்கே பாசனத்தை இரண்டு போகப் பாசனமாகச் செய்தால், குறைந்தது இரண்டு மூன்று தாலூகாக்களாவது அதனால் பயனடையும், அந்தப் பகுதிகள் எல்லாம் செழிப்புறும். எங்களுடைய தொகுதி விவசாயத்தைப் பொறுத்தவரையில் பின்தங்கியிருக்கிறது. அங்கே போதிய நஞ்செய் நிலங்கள் இருக்கின்றனவே தவிர தண்ணீர் கஷ்டம் இருந்துகொண்டு இருக்கிறது. புன்செய் நிலத்தை எடுத்துக் கொண்டால் லட்சக்கணக்கான ஏக்கர்கள் இருக்கின்றன. புன்செய் நிலத்திற்கு வரியை நீக்கியிருக்கிறார்கள். இதைப்பற்றிச் சொல்லும்பொழுது எதிர்க்கட்சிக்காரர்கள் புன்செய் நிலங்களை, தோப்பு போன்றவற்றை எல்லாம் பணக்காரர்கள்தானே வைத்திருக்கிறார்கள், வரிச்சலுகை அவர்களுக்குத்தானே போய்ச்சேரும் என்று குறை கூறுகிறார்கள். புஞ்செய் நிலங்கள் ஏழை விவசாயிகளுக்குத்தான் அதிகமாக இருக்கின்றன. வாசுதேவநல்லூர் பகுதியில் பாசன வசதியைச் செய்து கொடுத்தால் நல்ல விளைச்சலை ஏற்படுத்தலாம், உணவுப் பிரச்சினையைத் தீர்க்கலாம். எனக்குப் பேச வாய்ப்பளித்ததற்காக நன்றி தெரிவித்துக்கொண்டு விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. கே. எம். ராமசாமிக் கவுண்டர்: மதிப்பிற்குரிய சபா நாயகர் அவர்களே . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : சுதந்திராக் கட்சி உறுப்பினர்களுக்கு இன்னும் 10 நிமிட நேரமே உள்ளது. ஆகவே, அந்த 10 நிமிடத்திற்குள்ளாக ஒருவரோ அல்லது ஒருவருக்கு ஐந்து நிமிடம் வீதம் இருவரோ பேசும்படி கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்**: மதிப்பிற்குரிய சபா நாயகர் அவர்களே, கனம் முதலமைச்சர் அவர்களுடைய 1967-68-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை பாராட்டுக்குரியது. பல விஷயங்களிலே துணிச்சலுடன் அறிக்கை தயாரித்து நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதிலே கல்வி, மருத்துவம், பொதுச் சுகாதாரம், குடிநீர் போன்றவற்றிற்குக் கவனம் செலுத்தப்பட்டு இருந்தாலும், முதலிடம் — ப்ரையாரிடி — விவசாயத்திற்குக் கொடுத்து, அதற்காக என்ன என்ன காரியங்கள் செய்ய வேண்டுமோ, உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு என்ன என்ன செய்யவேண்டுமோ அத்தனையும் செய்ய இங்கே சில கருத்துக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சென்ற மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஆரம்பத்திலே 53 லட்சம் டன் இருந்த உற்பத்தியை 70 லட்சம் டன்னாக உயர்த்த முயற்சித்து அது முடியாமலே, கடைசியிலே 53 டன்கூட இல்லாது 52.59 டன்னோடு நின்றுவிட்டது. கிராஷ் புரோகிராம், பேக்கேஜ் ஸ்கீம் தீவிரச் சாகுபடித் திட்டம், அதிதீவிரச் சாகுபடித் திட்டம் என்றெல்லாம் வந்தும் கூட அவர்கள் முயற்சியிலே வெற்றி காண இயலவில்லை. அதற்கு பல காரணங்கள் இருக்கலாம். இந்தத் திட்டங்கள் எல்லாம் திறமை மிக்க அதிகாரிகளாலே திறம்படத் தீட்டப்பட்டாலும் கூட, வேளாண்மைப் பெருங்குடி மக்களிடம் அது எவ்வளவு தூரம் அமல் நடத்தப்படுகிறது, வேளாண்மைக் குடிமக்கள் எவ்வளவு தூரம் அதில் சிரத்தை காட்டுகிறார்கள் என்பதைப் பொறுத்துத்தான் திட்டத்தில் பலன் இருக்கும். எனவே அதை மனதில் கொண்டுதான் திட்டம் தீட்டவேண்டும். உதாரணமாக தஞ்சை மாவட்டத்திலே 12 லட்சம் ஏக்கர் உற்பத்தியிலே குறுவைக்காக 3 லட்சம் ஏக்கர் போக, ஒரு போகமாக இருந்த 9 லட்சம் ஏக்கரில் 6 லட்சம் ஏக்கர் இரண்டாம் போகச் சம்பா பயிருக்கு என்று கொடுக்கப்படுகிறது. இதை கோட்டையிலோ, அல்லது ரெவின்யு போர்டிலோதான் தீட்டியிருப்பார்கள். சென்ற முறையில் தஞ்சையிலே ஏற்பட்ட பல அசௌகரியங்கள் பற்றி எல்லோருக்கும் தெரியும். தஞ்சை மாவட்டம் நெற்களஞ்சியம். ஆனால் எந்த அளவுக்கு அதிகப்படியான உற்பத்தியைக் கொடுக்குமோ, அந்த அளவுக்குத் திட்டம் இருந்தால்தான் சரிப்படும்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. பெ. மலைச்சாமி தலைமை.)

தஞ்சையிலே சில அசௌகரியங்கள் ஏற்பட்டன. காவிரியின் டெல்டாப் பகுதியிலே வடிகால் வசதி கிடையாது, அங்கே தொழிலாளர்கள் மிகக் குறைவு. இராமநாதபுரம், திருச்சி ஜில்லாக்





களிலிருந்து சாகுபடி செய்வதற்கு, அறுவடை செய்வதற்கு தஞ்சை ஜில்லாவிற்கு ஆட்கள் கொண்டுவர வேண்டியிருந்தது ரசாயன உரத்தை எடுத்துக்கொண்டால், இந்த ஆண்டிலும் பாதி தான் கிடைக்கப் போகிறது. மீதிப் பாதியை ஈடுகட்ட வேண்டியிருக்கிறது. அதற்காக மத்திய சர்க்காரைக் குறைசொல்லியோ, புகார் சொல்லியோ உணவு உற்பத்தியைப் பெருக்கமுடியாது. இப்பொழுது அதை ஈடுகட்டுவதற்காக சப்ஸ்டிட்யூட் ஆக, அதாவது பதிலாக, பசுந்தாள் உரம், தொழு உரம் போன்றவற்றைப் பயன படுத்தினால் நல்லது. இதைத் தஞ்சாவூரில் செய்ய முடியாது. ஏனென்றால் அங்கே வடிகால் வசதியில்லை, அதனால் பசுந்தாள் உரம் கிடைக்காது. ஆகவே மற்ற மாநிலங்களிலிருந்து கொண்டு வரவேண்டும். கொள்முதல் நெல் ஏற்றுமதியைப் பொறுத்த வரையில் தஞ்சை ஜில்லா ரயில் நிலையங்களிலே வெளியே கிடந்து நனைந்துபோய், முளை ஏறி ஒரு முழப் பயிர்கூட வந்துவிட்டதைப் பார்த்தோம். காரணம் சாக்குப்பைகள் போதிய அளவு இல்லை, ரெயில் வாகன வசதியில்லை என்று சொன்னார்கள். ஆகவே, தஞ்சையிலே மாத்திரம் தீவிரச் சாகுபடித் திட்டம் என்று கொண்டுவந்து, அதைக் கஷ்டப்பட்டு அமல் நடத்துவதைக் காட்டிலும் மற்ற மாவட்டங்களிலேயும் இரண்டு போக சாகுபடி கொண்டுவருவதற்கேற்ற அளவிலே உற்சாகப்படுத்தி, இன்டென்சிவ் கல்டிவேஷன் செய்யவேண்டும். அதைச் செய்தால்தான், உற்பத்தியைப் பெருக்க முடியும். நான் இதைப்பற்றி கடந்த இடைக்கால பட்ஜெட் விவாதத்தின்போதே பேசினேன். இரண்டுபோகம், மூன்று போகம் என்று தஞ்சை மாவட்டத்திலே மட்டும் கான்சென்ட்ரேட் பண்ணுவதைவிட்டு சேலம், கோவை, திருச்சி போன்ற மாவட்டங்களிலும், கீழ்ப்பவானியிலோ, மேட்டூர் கெனால் ஸ்கீமிலோ ஒரு போகப் பயிரை மாற்றி இரண்டு போகமாக ஆக்குவதற்கு வசதிகள் உண்டு. அங்கே மட்டும் நிலம் இருக்கிறது. பசுந்தாள் உரம் இருக்கிறது, வடிகால் வசதியுள்ள இடம் ஆக இருக்கிறது என்கின்ற காரணத்தால்தான் நான் இந்த யோசனையைத் தெரிவிக்கிறேன். மற்ற மாவட்டங்களிலும் அந்த அளவுக்கு தீவிர சாகுபடித் திட்டத்தை அமல் செய்வதற்கு நெல்லோ அல்லது சோளம், கம்பு போன்றவற்றையோ பயிர்செய்து உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு கவனம் செலுத்தப்படுவதாகத் தெரியவில்லை. முன்பு இருந்த ஆட்சி இதைச் செய்யவில்லை. திராவிட முன்னேற்றக் கழக அரசாவது முக்கியமாக இதைக் கவனித்து, நாம் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமானால், எந்த எந்த இடங்களில் மற்ற மாவட்டங்களிலே, இரண்டு போகங்கள் பயிர்செய்ய முடியுமோ அங்கே அவ்வாறு பயிர் செய்து விளைவை அதிகமாக்குவதைப் பற்றி முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விர்ஜின் சாயில்-புதுமண்-என்று சொல்லக் கூடிய நிலம் இருக்கக்கூடிய பகுதிகளிலே தீவிர சாகுபடித் திட்டத்தை அமல்படுத்த வேண்டும். தஞ்சையில் பரம்பரையாக, நூற்றுக்கணக்கான

வருஷங்களாக, 'ஓல்டு டெல்டா'வில் பயிர் செய்து வருவதால் அங்கு மண் வளம் குன்றி சத்துக் குறைந்திருக்கிறது. ஆகவே, மண் வளம் மிகுந்த மற்ற மாவட்டங்களிலே தீவிர சாகுபடித் திட்டத்தை அமல்படுத்த வேண்டும். அதற்காக தஞ்சையிலே நடத்தவே வேண்டாம் என்று சொல்லவில்லை. எந்த எந்த மாவட்டங்களில் அத்தகைய முயற்சி எடுத்தால் அது வெற்றி பெறும் என்று தெரிந்து, அந்த முறையில் வேளாண்மைத் திட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. வி. டி. அண்ணாமலை : பெருவணக்கத்திற்குரிய தலைவர் அவர்களே, 1967-68-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை நம்முடைய பேறிஞர் அண்ணா அவர்கள் இம்மாமன்றத்தில் வெளியிட்ட சமயத்தில் தமிழகத்து வான் தண்ணீர் தெளித்து வரவேற்றது.

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றமிழ் வானில் நனி சிறந்தனவே"

என்பதற்கொப்ப அறிஞர் பெருந்தகையை தமிழகத்து வான் சிறப்பாக வரவேற்றிருக்கிறது. அறிஞர் அண்ணா அவர்கள் சமர்ப்பித்த நிதிநிலை அறிக்கை மணம் பொருந்திய மனோஞ்சித மலரைப் போன்றதாகும். நல்ல எண்ணத்தோடு அத்தனை மக்களுக்கும் நன்மை தரும் நல்ல காரியங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

உதாரணமாக, விவசாயப் பெருங்குடி மக்களில் நன்செய் வைத்திருப்பவர்களில் பெரும் பகுதியினர் பெருநிலக்கிழார்கள்தான். ஏழை விவசாயிகளில் பெரும் பகுதியினர் புன்செய்தான் வைத்திருக்கிறார்கள். எனவே, ஏழை விவசாயிகளுக்கு நன்மை செய்யும் வகையில் புன்செய் நிலத்திற்கு வரி விலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இது ஏழைகள் வயிற்றில் பால் வார்த்தது போலாகும். அதே போன்று சிறு வியாபாரிகளுக்கு, சிறு முதலை வைத்துக் கொண்டு வயிற்றைக் கழுவ வியாபாரம் பண்ணுகின்றவர்களுக்கு சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் விற்பனை வரி அதிகாரிகளால் பெரும் தொல்லைக்கு ஆளாகிக் கொண்டிருந்தார்கள்; அவர்களை அந்தத் தொல்லையிலிருந்து நீக்க உச்ச வரம்பை உயர்த்தியிருப்பது அவர்களுடைய வாழ்க்கையிலே வளம் உடைய செய்தியாகும்.

தொழிலாளர், மத்தியதர வகுப்பினர் ஆகியோருக்கு விலைவாசி உயர்வுப் படி இல்லையென்று சொன்னார்கள். ஆசிரியர்கள் என்.ஜி.ஓ.க்கள் ஆகியோருக்கு வாழ்க்கைக்கேற்ற வசதி, தேவைக்கேற்ற வசதி என்ன முறையில் ?, என்ன செய்திருக்கிறார்கள் என்று கேட்டார்கள். இவர்கள் எல்லாம் முன்பு ஒரு படி அரிசியை இரண்டு ரூபாய் கொடுத்து வாங்கி வந்தார்கள். இப்போது நமது முதலமைச்சர் அவர்கள் ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி அளந்திருக்கிறார்கள். இதனால் அவர்களுக்கு ஒரு படிக்கு ஒரு ரூபாய்



மிச்சமாகிறது. சாதாரணமாக ஒரு நாளைக்கு ஒருபடி அரிசி தேவைப்படுகிற குடும்பத்தில் மாதம் 30 ரூபாய் மிச்சமாகிறது. பொருளாகக் கொடுக்காமல் வாழ்க்கைக்கு வேண்டிய பொருளாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மதிப்பிற்குரிய காங்கிரஸ் உறுப்பினர்கள் கோவையிலும், சென்னையிலும் மட்டும் ரூபாய்க்கு ஒரு படி அரிசி கொடுத்தால் போதுமா என்று கேட்டார்கள். எக்மோரிலிருந்து புறப்படுகிற தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் ஒரு மணி நேரத்தில் தூத்துக்குடி போய் சேர்ந்து விட முடியுமா ? 24 மணி நேரத்திற்குப் பிறகுதான் அது தூத்துக்குடி போய்ச் சேருகிறது. அண்ணா அவர்கள் மூன்று மாதத்தில் சுமார் 32 லட்சம் மக்களுக்கு ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி கொடுத்திருக்கிறார்கள். இன்னும் ஓராண்டுக்குள்ளாகவோ, அதற்கும் முன்னதாகவோ 3 கோடி மக்களுக்கும் கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இன்னும் சீக்கிரமாகவே கொடுக்கலாம் என்றாலும், பழைய அரசு சரியாகக் கொள்முதல் செய்யாது மிக மோசமான அளவுக்கு விலைவாசி ஏறுவதற்கு வழி செய்து விட்ட காரணத்தால்தான் இதிலே சிறிது காலம் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

கல்லூரி நிழலைக் கூடப் பார்க்க முடியாத ஏழை மாணவர்களுக்கு இலவசக் கல்வி அளித்திருப்பதன் மூலம் அவர்களுடைய வாழ்க்கை நிலையில் முக்கிய மாற்றம் ஏற்பட இருக்கிறது. அந்த வகையில் இந்த நிதி நிலை அறிக்கை எல்லா வகையிலும், எல்லாத் தரப்பினருக்கும் திருப்தி அளிக்கக்கூடிய அறிக்கையாக அமைந்திருக்கிறது என்பதைக் காண்கிறோம்.

விவசாயிகளைப்பற்றி ஒரு கருத்தைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். தமிழகத்தில் 80 சதவிகிதம் மக்கள் விவசாயிகளாக இருக்கிறார்கள். நானும் ஒரு விவசாயக் குடும்பத்திலே பிறந்தவன் என்று சொல்லிக் கொள்வதிலே பெருமையடைகிறேன். 1932-ம் ஆண்டில் 64 படி கொண்ட ஒரு மூட்டை நெல் 3 ரூபாய்க்கு விற்றது. இப்போது அதே ஒரு மூட்டை நெல்லுக்கு 32 ரூபாய் கிடைக்கிறது. ஆயிரம் சதம் லாபம் கிடைத்திருக்கிறது. விவசாயிகள் பொறாத்திரப்படக் கூடாது. கடந்த 20 ஆண்டுகளாக காங்கிரஸ்காரர்கள் நாட்டைப் பாழ்படுத்தியதன் காரணமாகத்தான் விவசாயிகளுடைய வாழ்வில் மணம் இல்லை. விவசாயிகள் என்றால், பெருநிலப் பிரபுக்கள் ஒருவகை; நிலக்கிழார்கள் மற்றொரு வகை; மூன்றாவது இரண்டு போக நிலத்திலும் சாகுபடி செய்யக்கூடிய குத்தகைதாரர்கள். நான்காவது அடிமைகளாக முழு நேரம் வேலை செய்யும் வேலையாட்கள்; ஐந்தாவது கூலிக்காரர்கள். இவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு முகமாக நிலத்தை விரும்ப வேண்டும்; காதலிக்க வேண்டுமென்று கூட ஆசைப்படுகிறேன். பெருநிலக் கிழார்கள் ஆயிரம் ஏக்கர், இரண்டாயிரம்

ஏக்கர் என்று வைத்துக் கொண்டு நிலத்திற்குப் போய்ப் பார்ப்பதே இல்லை. நிலத்திற்குத் தழை உரம் போட வேண்டுமா, குப்பை உரம் போட வேண்டுமா, எதைப் போட்டால் நல்லது என்பது பற்றியெல்லாம் அவர்கள் நினைத்துப் பார்ப்பதே இல்லை. ஏழை விவசாயி அந்த நிலத்திலே பாடுபட்டு உற்பத்தி செய்தால் அதிலிருந்து எப்படிக் கொள்ளையடிக்கலாம் என்ற நோக்கத்தோடேயே இருக்கிறார்களே தவிர, நிலத்தை பேணுவதே இல்லை. 'கடன் கேளாமல் கெட்டது; பயிர் பாராமல் கெட்டது' என்பது போல் நிலத்தைச் சரிவரக் கவனித்தால்தான் பலன் நல்ல படியாகக் கிடைக்கும். அந்த நிலையில் திராவிட முன்னேற்றக் கழக அரசு நிலத்தைப் பறித்துக் கொள்ளுமோ, கம்யூனிஸ்ட் கட்சி அந்த நிலத்தைத் தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கூறி, பிடுங்கிக் கொடுத்து விடுமோ என்றெல்லாம் பயந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நிலத்திலே அக்கறை இல்லாத காரணத்தால் பயிர் செய்கின்ற தொழிலாளிகளும் நகர்ப்புறத்திற்கு வேலை தேடிச் சென்று விடுகிற நிலையும், நிலத்திலே அக்கறை இல்லாத நிலையும் வளர்ந்து வருகின்ற நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது.

புன்செய் நிலங்களில் கிணறுகள் வைத்து பாடுபடுகிறவர்களுக்கு மின்சாரத்தை இலவசமாகக் கொடுத்தால் உற்பத்தியை மேலும் பெருக்கமுடியும். அரிசி சாப்பிடுகிறவர்கள், நெல்லில் கல்லைக் கலந்து விடுகிறார்கள் என்று பேசுகிறார்கள். கிராமங்களில் உள்ள ஏழை எளிய மக்கள், படிக்கத் தெரியாதவர்கள் அறுப்பு அறுக்கிறார்கள். நெல்லைக் களத்தில் கொட்டுகிறார்கள், நெல் அடிக்கிறார்கள். நெல்லை மணலில் போட்டு அடிக்கிறார்கள். அப்போது கீழேயுள்ள மண் அதனுடன் கலந்து விடுகிறது. ஆகவே ஒவ்வொரு கிராமத்திற்கும் பஞ்சாயத்து மூலம் களங்களை ஏற்படுத்தி, 200 சதுர அடியோ அல்லது கிராமத்திலுள்ள வயல்களை பொறுத்து 500 சதுர அடியோ சிமெண்ட் கொண்டு ஒரு களம் அமைத்துக் கொடுத்தால் விவசாயிகள் தாங்கள் பயிரிடக்கூடிய நெல்லை அடித்து கல் மண் சேராமல் நெல் கொடுக்கமுடியும் என்று கூறிக்கொண்டு 1967-68-ம் ஆண்டுக்கான இந்த நிதிநிலை அறிக்கை அறிஞர் அண்ணா அவர்களின் ஆட்சியில் பொற்காலத்தை ஏற்படுத்தும் ஒரு அறிக்கை எனத் தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. இல. பலராமன்:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, 1967-68-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை இந்தச் சட்டமன்றத்திலும், மக்களிடையேயும் பரவலாக ஒரு விழிச்சியையும் உணர்ச்சியையும் ஏற்படுத்தியிருக்கிறது. வரியைக் குறைத்து வசதிகளைப் பெருக்குவோம் என்று கூறிய இந்த சர்க்கார் வரியைக் கூட்டியிருக்கிறது, வசதிகளைப்பற்றி மேலும் போனால்தான் தெரியும். விவசாயத்திற்கு முக்கியத்துவம் தரவேண்டும், தரவேண்டும் என்று பல அங்கத்தினர்களும் பேசினார்கள். ஆனால், விவசாயம் பின்



தங்கிக் கிடக்கிறது என்பதுதான் என் கருத்து. இந்த பட்ஜெட்டில் ரூபாய்க்கு ஒரு படி அரிசி தருகிறோம், வியாபாரிகளுக்கு 10,000-ல் இருந்து 15,000 ரூபாய் வரை சலுகை அளிக்கப் படுகிறது என்றெல்லாம் கூறப்பட்டிருக்கிறது. ஆனால், 3,500 ரூபாய்க்கு மேல் போனால் வரி இருக்கிறது. இப்படியிருந்தால் அவர்கள் எங்கிருந்து எப்படி தங்கள் உழைப்பை இந்த ஆட்சிக்குத் தரமுடியும்? நிலைமை இப்படியிருந்தால் கிராம மக்கள் நகரப் புறங்களுக்கு சில்லறைக் கடைகள் வைக்கத்தான் வருவார்கள். கிராமங்களில் இப்படிப்பட்ட எண்ணம்தான் இருக்கிறது பரவலாக. ஆகவே, இந்தப் போக்கை மாற்றுவதற்கு சர்க்கார் முயன்று பழைய நிலைக்கு மக்களை ஊக்குவிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஜனநாயக சர்க்காரின் அடித்தளம் பஞ்சாயத்துதான் என்ற நியதி ஏற்கனவே வகுக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட பஞ்சாயத்துக்களுக்கு நாம் அதிகப்படியான பணம் ஒதுக்கீடு செய்யவேண்டும். இப்போது பஞ்சாயத்துக்களுக்கு அளிக்கக் கூடிய தொகை போதாது. நகரப்புறங்களில் உள்ள மக்கள் பல வசதிகளை, பலபல வாய்ப்புக்களை அனுபவிக்கும்போது கிராம மக்கள் மட்டும் பழைய பாணியில் இருந்து வருகிறார்கள். இங்கு பேசிய அங்கத்தினர்கள் பெருவாரியாக பஞ்சாயத்து யூனியன்களை வெறுத்துப் பேசினார்கள். பஞ்சாயத்து திட்டத்தில் வெறுப்பில்லை, அதன் செயல்முறையில் வெறுப்பிருக்கலாம். அதை மாற்றுவதற்கு நாம் கண்ணுங்கருத்துமாக இருக்கவேண்டுமே தவிர பஞ்சாயத்து திட்டத்தை வெறுப்பதில் அர்த்தமில்லை. ஜனநாயக சோஷலிஸத்தின் அடிப்படையில் கிராம மக்களின் வசதிகளைப் பெருக்கவும், அவர்களது பொருளாதாரம் வளரவும் பஞ்சாயத்துக்களுக்கு நல்ல ஊக்கமும், ஆர்வமும் தரப்படுதல் வேண்டும். ஜனநாயகத்தின் அடிப்படையான பஞ்சாயத்துக்களுக்கு பஞ்சாயத்து அலுவலகங்கள் இருப்பதற்குக் கூட இன்று வசதியற்ற நிலைதான் இருக்கிறது. ஆகவே, இதற்கு வேண்டிய பொருள் உதவியை சர்க்கார் செய்யும் என்று நான் நம்புகிறேன். மேலும் முத்திரைக் கட்டணங்கள் போன்றவைகளில் பல சீர்கேடுகள் இருக்கின்றன. இன்று பொதுவாக ஒரு 100 ரூபாய் முத்திரைத்தாள் வாங்கவேண்டுமென்றால் 120, 150 ரூபாய் கொடுத்து வாங்கவேண்டிய சூழ்நிலை மக்களிடையே இருக்கிறது. இதைப் போக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். இந்த நிலை இரண்டு மூன்று மாதங்களாக பரவலாக இருந்து வருகிறது. இதைத் தவிர்ப்பதற்கு சர்க்கார் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். தற்போது புகுத்த இருக்கும் புது முறையில் பல மாறுதல்களைச் செய்து மக்களுக்கு வசதி செய்து தர வேண்டும். மின்சாரத்திற்காக மேலும் அதிகப்படியான தொகையை ஒதுக்க வேண்டும். குறிப்பாக எங்கள் வட ஆற்காடு மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் காவேரி பாயும் தஞ்சை மாவட்டத்தோடு

போட்டியிடும் அளவிற்கு விறுவிறுப்பான முறையில் இந்த சர்க்காருக்கு நல்ல அளவிற்கு விளைச்சலைப் பெற்றுத்தருகிறது. இதற்கு அடிப்படைக் காரணம் மின்சாரம்தான். ஆகவே, மின்சார விஸ்தரிப்பிற்காக அதிகப்படி தொகை ஒதுக்கி விவசாயிகளுக்கு வேண்டிய கனெக்ஷன்ஸ் கொடுப்பதற்கு சர்க்கார் பாடுபடவேண்டும். டெபாசிட் பணம் போன்றவை கட்டியும் இரண்டு ஆண்டுகளாக பல விவசாயிகளுக்கு மின்சாரக் கனெக்ஷன் கிடைக்காமல் அவர்கள் இன்னலுறுகிறார்கள்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** எந்தெந்த கிராமங்கள் என்று தெரிவித்தால் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**திரு. இல. பலராமன் :** எந்தெந்த கிராமங்கள் என்று அமைச்சர் அவர்கள் கேட்கிறார்கள். நான் ஒரு பட்டியலைத் தரமுடியும். வட ஆற்காடு மாவட்டத்தில் இதுபோன்ற பல கிராமங்கள் உள்ளன. ஆளும் கட்சி அங்கத்தினர்களுக்கு இது விரிவாக தெரிந்திருக்கும் என்று கருதுகிறேன். கம்பம், கம்பிகள் போன்ற உப பொருள்கள் கிடைப்பதில்லை. அவை கிடைப்பதிலும் காலதாமதமாகிறது, ஆகவே இப்படிப்பட்ட பொருள்கள் கிடைப்பதில் காலதாமதம் ஏற்படாமல் காலாகாலத்தில் விவசாயிகளுக்கு வேண்டிய மின்சார வசதிகளைச் செய்து கொடுத்தால் அமோகமான விளைச்சல் ஏற்படும். வட ஆற்காடு மாவட்டத்திற்கு நன்றி செலுத்தக் கூடிய நிலையில் அது இருக்கிறது. நல்ல விளைச்சலைப் பெற்றுத்தர, இயற்கையோடு போராடி தங்கள் கஷ்டங்களையும், துன்பங்களையும் பாராது பிறருக்காகவே உழைக்கக் கூடிய நிலையில் இருக்கிறார்கள் வட ஆற்காடு மக்கள். அவர்களுக்கு இந்தச் சபை நன்றி செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல புதிய விவசாய முறைகளை நாம் அங்கு பரப்பவேண்டும். ஆர்வம் உள்ள பல விவசாயிகள் அங்கிருக்கிறார்கள். விவசாயப் பிரிவுகள் பல அங்கிருக்கின்றனவே தவிர அவர்கள் பெருவாரியான மக்களிடையே தொடர்பு கொள்வது கடினமாக இருக்கிறது.

வாழைக்கு ஒருவர், கடலைக்காய்க்கு ஒருவர், பூச்சிமருந்துக்கு ஒருவர் என்று இப்படி பல அதிகாரிகள் இருக்கிறார்கள், ஜில்லா தலைமை பீடத்தில், இருக்கவேண்டியதுதான். ஆனால், அவர்கள் மக்களிடம் தொடர்பு கொண்டு இன்னின்னது செய்தால் நன்றாக யிருக்கும் என்று மக்களிடம் எடுத்துச் சொல்லும் அளவில் மக்களுடம் தொடர்புள்ளவர்களாக இருக்கச் செய்ய இந்த சர்க்கார் ஆவன செய்யவேண்டும். பூச்சி மருந்துகளை எப்படி உபயோகிப்பது என்பது பலருக்கும் தெரியாதிருக்கும் நிலையில் அதன் விலைகள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, இந்தப் பூச்சி மருந்துக்கள் விவசாயிகளுக்கு குறைந்த விலையில் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும். ஒரு சில மருந்துகள் கிலோவிற்கு 10, 15 ரூபாய் என்று விற்கிறது. இந்த நிலையெல்லாம் மாற்றப்பட்ட வேண்டும்.





கல்வியை எடுத்துக் கொண்டால் இன்று 1,10,000 பிள்ளைகள் எஸ்.எஸ்.எல்.ஸி. பாஸ் செய்து வெளியே வந்திருக்கிறார்கள். முந்திய ஆண்டில் மார்ச், அக்டோபரில் பாஸ் செய்தவர்கள் 10,000 பிள்ளைகள் இருப்பார்கள். ஆக 1,20,000 பிள்ளைகள் எஸ்.எஸ்.எல்.ஸி. பாஸ் செய்து கல்லூரிக்குப் போக இருக்கிற நிலையில் பி.யு.ஸி.யில் 45,000 பிள்ளைகளுக்குத்தான் இடவசதியிருக்கிறது. இந்த நிலையை மாற்றியமைக்க இந்தச் சர்க்கார் முயலவேண்டும். எங்கள் பகுதியில் ஒரு கலைக் கல்லூரியை ஏற்படுத்தித் தர வேண்டும். இப்போது வேலூரில் உள்ள கல்லூரியில் ஆறு மாதங்களாக பிரின்சிபால் இல்லாமலிருப்பது வருந்துவதற்குரியது. ஆகவே, அங்குள்ள பின்தங்கிய மக்களுக்காக அரசு ஒரு கலைக் கல்லூரியை ஏற்படுத்தி, இப்போது வேலூரில் உள்ள கல்லூரியில் ஒரு தலைவரைப் போட்டு அங்குள்ள பிள்ளைகளுக்கு நல்ல வழியை ஏற்படுத்தித் தரவேண்டும் எங்கள் ஜில்லாவிற்கு ஒரு விவசாயக் கல்லூரியையும் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. மலைச்சாமி):** என் பி. ப. 4-30
னிடம் கட்சி வாரியாக நேரத்தைப் பகிர்ந்துகொடுத்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இரண்டு மணி நேரமும், காங்கிரஸ் கட்சிக்கு முப்பது நிமிடமும், இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சிக்கு இருபது நிமிடமும், சுதந்திராக் கட்சிக்கு பத்து நிமிடமும் பகிர்க்கப்பட்டிருக்கிற காரணத்தினால் தயவுசெய்து குறிப்பிட்ட நேரத்திற்குள், மணியின் ஒலி கேட்கும் முன்னதாகவே முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. பி. ஜெயராமன் :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் தமிழக அரசு அண்ணா அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டு, அவர்கள் 1967-68-ம் ஆண்டு பட்ஜெட்டைத் தயாரித்திருக்கிறார்கள். அந்த பட்ஜெட்டைப்பற்றி இன்றைக்குள்ள எதிர்க்கட்சியினர் அதிலே எதுவும் இல்லை என்று கூறியிருக்கிறார்கள். எதுவும் இல்லை என்று எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்லுவதை ஒரு பக்கம் நாங்கள் எடுத்துக்கொள்ளாவிட்டாலும், இன்றைய தினம் நாட்டிலே உள்ள ஏழை மக்கள் அறிஞர் அண்ணா அவர்கள் வகுத்திருக்கிற பட்ஜெட்டைப் பற்றி, பாட்டாளி மகன், குடிசையிலே வாழுகின்றவன், ஓட்டைக் குடிசையிலே வாழுகின்றவன் இன்றைக்கு நிமிர்ந்து நின்று, நல்லதொரு அரசு இன்றைக்கு அமைக்கப்பட்டிருக்கின்றது, நல்லதொரு சர்க்கார் இன்றைக்கு இருக்கிறது, பணக்கார சர்க்காரை மாற்றிவிட்டு பாட்டாளி சர்க்கார் இன்றைக்கு அமைக்கப்பட்டிருக்கிறது என்று நாட்டிலே உள்ள மக்கள் அனைவரும் பாராட்டி, போற்றிப் புகழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இன்றைக்கு இருக்கிற எதிர்க்கட்சியினருக்கு நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

உள்ளபடியே எனக்கு முன்னால் பேசிய திரு. மூர்த்தி அவர்கள் பேசிய போது காங்கிரஸ்காரர்கள் ஆத்திரப்பட்டார்கள். காங்கிரஸ்காரர்கள் சோறு போடுகிறவர்களுக்கும், மாலை போடுகிற வர்களுக்கும் பர்மிட் வழங்குவது வழக்கம் என்று சொன்னதற்கு ஆத்திரப்பட்டார்கள். அவர்களுக்கு நான் அருள்கூர்ந்து சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 1943-ல். . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. மலைச்சாமி).:** உறுப்பினர் அவர்கள் தயவுசெய்து மற்ற உறுப்பினர்கள் இதயம் புண் படாதவாறு பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜெயராமன் :** 1943-ம் ஆண்டு வெள்ளைக்காரர் ஆட்சி காலத்தில் மகாத்மா காந்தி அவர்களின் பிறந்த நாளைக் கொண்டாட வேண்டுமென்று தொழிற்சங்கத்தின் சார்பில் கேட்டபோது, அன்றைக்கு இருந்த காங்கிரஸ்காரர் லீவு கொடுக்க மறுத்து, சுதந்திரம் பெற்ற பிறகு பெரிய காங்கிரஸ்காரராக இருந்து நான் தான் இந்த வட ஆற்காடுக்கு அதிபதி என்று நாட்டு மக்களை ஏமாற்றிக்கொண்டு இருக்கிறார். அப்படியெல்லாம் ஏமாற்றிக் கொண்டு இருந்த காரணத்தினால்தான், நாட்டு மக்களுக்கு நல்ல முறையில் காரியங்களைச் செய்யாத காரணத்தினால்தான், அதை நாட்டு மக்களே உணர்ந்து நல்லதொரு சர்க்காரை அமைக்க வேண்டுமென்று இன்றையதினம் அமைத்திருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நல்லது செய்யவில்லை; நல்லது செய்ய முன்வரவில்லை என்று சொல்லுகிறவர்களுக்கு, காங்கிரஸ் நண்பர்களுக்கு நான் ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் பரிதாபப்பட்டுப் பேசுகிறவர்கள் மகாத்மா காந்தி அவர்கள் சொன்ன கருத்தை யாராவது கடைப்பிடித்திருக்கிறார்களா என்றால், நிச்சயமாக இல்லை என்று அறுதியிட்டுச் சொல்ல முடியும். மகாத்மா காந்தி என்ன சொல்லி யிருக்கிறார்? 'தொண்டு' என்பதைப்பற்றி வரலாறு படித்தவர் களுக்குத் தெரியும். அண்டை வீட்டுக்குச் செய்கிற சேவை உலகத்தின் எல்லைக்கோட்டுக்குச் செல்லும் என்று சொல்லியிருக் கிறார்கள். அதைப்போல அவர்கள் தொண்டு செய்யவில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தொண்டு என்றால், கிராம மக்களின் தோட்டியாகவும், காவலனாகவும், ஆசிரியனாகவும் அமைத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். தொண்டு என்று சொன்னால், கிராமத்தில் வாழுகிற சேரி மக்களுக்கு, இருக்கிற சேற்றை வாரி அப்புறப்படுத்தி, சுகாதார முறைப்படி சேவை செய்யவேண்டும். அந்த கிராமத்தில் இருக்கிற சேரி மக்களுக்கு, அறிவு இல்லாத மக்களுக்கு, அறிவைப்



போதிக்கும் ஆசிரியராக அமையவேண்டும் என்று மகாத்மா காந்தி அவர்கள் சொன்னார்கள். அதோடு சேரி மக்களுக்கு வருகிற கஷ்ட நஷ்டங்களிலிருந்து பாதுகாப்பு அளிக்கிற அளவுக்குப் பாதுகாவலனாக இருக்கவேண்டுமென்று சொல்லியிருக் கிறார்கள். அந்த முறைப்படி, மகாத்மா காந்தி அவர்கள் சொன்ன கருத்தைக் கடைபிடிக்கிறவர்கள் இந்தியாவில் யார் என்று திட்ட வட்டமாகச் சொல்ல முடியுமா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

மகாத்மா காந்தி அவர்கள் கலப்பு மணம் என்று சொன்னால், சமபந்தி போஜனம் என்று சொன்னால் ஒன்றும் கஷ்டமான பிரச்னை இல்லை—மனக்கஷ்டம் ஒன்றுதான் குறுக்கிடுகிறது என்று சொல்லி யிருக்கிறார். அப்படிச் சொல்லிவிட்டு அரிஜனப் பெண்ணை யார் மணம் செய்துகொள்ளாது இருக்கிறார்களோ அவர்களுக்கு ஆசீர்வாதம் செய்ய சந்தர்ப்பம் கிடைக்காது என்று சொல்லி யிருக்கிறார். அந்த விதிமுறைப்படி பார்த்தால் நிச்சயமாக மகாத்மா காந்தியின் ஆசீர்வாதம் பெறுதவர்கள் இன்றைக்கு காங்கிரஸிலே இருக்கிறார்கள் என்று சுட்டிக்காட்ட ஆசைப்படு கிறேன். ஒட்டுமொத்தமாகச் சொல்லப் போனால், காங்கிரஸ் காரர்கள் அத்தனை பேரும் நாட்டு மக்களைப்பற்றிப் பேசும்போது "பச்சைத் தண்ணீர் ஊத்தாத சித்தாத்தா கடைத் தெருவு மூட்டம் வழி விட்டாளாம்" என்ற முறையில்தான் இருக்கிறது. நாட்டு மக்களைப்பற்றிச் சிந்திக்க முடியாதவர்கள், ஏழை மக்களைப்பற்றி எண்ணி 20 ஆண்டுகள் பேச முடியாதவர்கள், விவசாயிகளைப்பற்றி பேசமுடியாதவர்கள், போலீஸ்காரர்களைப்பற்றிப் பேச முடியாத வர்கள், என்.ஜி.ஓ.-க்களைப் பற்றிப் பேச முடியாதவர்கள், ஆசிரியர் களைப்பற்றிப் பேச முடியாதவர்கள், அத்தனை காங்கிரஸ்காரர்களை யும் இன்றைய தினம் சட்ட மன்றத்திலே அறிவுலகின் மேதை அறிஞர் அண்ணா அவர்கள், பேசுகிற அளவுக்கு உருவாக்கி விட்டிருக்கிறார்கள் என்று எடுத்துக்காட்ட ஆசைப்படுகிறேன். இப்பேர்பட்ட அளவிற்கு ஒப்புக்குப் பேசாமல், இன்னும் தெரிந்து பேசவேண்டுமென்று காங்கிரஸ் நண்பர்களைக் கேட்டுக்கொள் கிறேன். காந்தியார் தத்துவத்தில் ஆதித்திராவிட மக்களுக்குப் பரிந்து பேசுகிறார்கள் என்றால், ஆதித்திராவிட மக்களுக்குச் செய்தது என்ன என்று பார்த்தால், நிச்சயமாகச் சொல்லுகிறேன், ஆதித்திராவிடப் பெண்ணை மேல் ஜாதிக்காரர் கட்டிக்கொள்ள வந்தால் மேல் ஜாதிக்காரருக்குக் கொடுக்காதே என்று சொல்லு வேன். ஏனென்றால் ஆதித்திராவிட சமுதாயம் அரசாண்ட பரம்பரை. பாதியில் வேறு வேறு ஜாதிகள் பதவிகள் கிடைக்கும் என்று ஏற்பட்டன. வேறு வேறு ஜாதிகள் திராவிட இனத்தில் சேரும் வரையில் மேல் ஜாதிக்காரர்கள் என்று சொல்லுகிறவர் களுக்கு ஆதித்திராவிடப் பெண்ணை நிச்சயமாகக் கொடுக்கக் கூடாது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இன்றைய தினம் கொண்டுவரப்பட்ட பட்ஜெட்டை என் இதயம் கலந்த பண்போடும் பாசத்தோடும் பாராட்டி, வரவேற்று முடித்துக் கொள்கிறேன்.

[1967 ஜூன் 26

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. மலைச்சாமி) : அடுத்து, திரு. எ. பாலசுப்பிரமணியன் அவர்கள் இருபது நிமிட நேரம் உரை ஆற்றுவார்கள்.

*திரு. எ. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, பட்ஜெட்டில் வரவேற்கக் கூடிய அம்சங்களைக் குறித்து ஏற்கனவே எனது கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். நான் வேறு சில அம்சங்களைச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இன்றைக்கு இருக்கிற நெருக்கடியான பொருளாதார நிலைமைக்கு யார் காரணம் என்ற தெளிவான முடிவு இந்தச் சபைக்கு இருப்பது அவசியம். பயங்கரமான விலைவாசி உயர்வைத் தொடர்ச்சியாக ஏற்படுத்திவிட்டு, அதனுடைய விளைவுகளுக்கு மாநில அரசுகள் பொறுப்பு ஏற்கவேண்டுமென்று மத்திய சர்க்கார் எதிர்பார்ப்பது அர்த்தமற்றது. இதை ஏன் காங்கிரஸ் உறுப்பினர்கள் புரிந்துகொள்ள முடியவில்லை என்று தெரியவில்லை.

விலைவாசி உயர்வு என்ற விஷயத்தை எடுத்துக்கொண்டால் டீ-வால்யுவேஷன் செய்தது யார்? அது போகட்டும்; அது பழைய கதை. தேர்தலுக்குப் பின்னால், மூன்று மாதங்களுக்குள் என்ன நடந்திருக்கிறது ? இரும்பு—உருக்கு கண்ட்ரோல் எடுக்கப்பட்டு, டன்னுக்கு 50 ரூபாய் முதல் 100 ரூபாய் வரையில் விலை உயர்த்தப் பட்டது. யாரால்? காங்கிரஸ்காரர்களால். சீனி விலை உயர்த்தப் பட்டது. யாரால்? காங்கிரஸ்காரர்களால். துணி விலையில் சி[illegible] ரகங்களுக்கு 4½ சதவீதம் உயர்த்தப்பட்டது. யாரால்?—மத்திய சர்க்காரால். உரத்திற்கு மானியத்தை எடுத்து விலை உயர[illegible] செய்யப்பட்டது யாரால் ?—மத்திய சர்க்காரால். இவ்வளவு[illegible] போதாது என்று மொரார்ஜி தேசாய் பட்ஜெட்டிலே காப்பி தேயிலை வரி, ரயில் வண்டிக் கட்டணம் எல்லாம் உயர்த்த[illegible] பட்டிருக்கிறது. இதெல்லாம் விலைவாசியை மேல் நோக்[illegible] நெருக்காதா ? உயர்த்தாதா ? இதற்கு விளைவுகள் இல்லையா[illegible] இவ்வளவும் இருக்கும்போது, விலைவாசி உயர்வு அத்தனைக்கு[illegible] மத்திய சர்க்கார் பொறுப்பாக இருக்கும்போது, மாநி[illegible] சர்க்கார்கள் மத்திய சர்க்கார் உதவியின்றி சமாளிக்கவேண்[illegible] மென்பது எப்படி நியாயமாகும் என்ற கேள்வியை அனைவரு[illegible] கேட்டுக்கொள்வது நமது கடமையாகும்.

அது போக, மத்திய சர்க்கார் இப்படிப்பட்ட நேரத்தில் இந்[illegible] இலங்கையிலிருந்து அகதிகள் வந்திருக்கிறார்கள். மேலும் வர[illegible] போகிறார்கள். இவர்களுக்கான செலவை யார் ஏற்பது நியாயம்



1967 ஜூன் 26] [திரு. எ. பாலசுப்பிரமணியன்]

இந்தியாவுக்கு வெளியேயிருந்து மீள்பவர்களுக்கு, பர்மா அகதிகளுக்கு ஒரு கோடி ரூபாய் கொடுத்தால் அது கடனும், அதை நாம் திருப்பித் தரவேண்டுமாம். இலங்கை அகதிகளுக்கு உதவித் தொகை கொடுப்பது கடனும். தங்கக் கட்டுப்பாடு சட்டத்தினால் வாழ்வை இழந்த மக்களுக்கு வாழ்வு அளிப்பதற்கு மத்திய சர்க்கார் கொடுக்கும் தொகை கடனும். அதற்காகக் கொடுக்கப் படும் ரூ. 2 கோடி கடனும். அதை நாம் திருப்பித் தரவேண்டுமாம். அது போக, குந்தா திட்டத்திற்காக கனடாவிலிருந்து ரூ. 10 கோடி வாங்கிக் கொடுத்தும் கடனும்; நாம் மத்திய சர்க்காருக்கு திருப்பிக் கொடுக்கவேண்டுமாம். நம்மை இவ்வளவு கடன்பட வைத்தவர்கள் யார்? இம்மாதிரி பொறுப்புகளையெல்லாம் மாநில ஆட்சித்தான் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று எதிர்பார்ப்பது எந்த விதத்திலும் நியாயமாக இருக்க முடியாது என்பதை நான் முதலில் இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.

அது போக, மத்திய சர்க்கார் இப்படிப்பட்ட நேரத்தில் இந்த வருஷ பட்ஜெட்டில் என்ன செய்திருக்கிறார்கள்? சென்ற வருஷம் மாநிலங்களுக்கு அளித்த மான்யத் தொகையை கிட்டத்தட்ட ரூ. 130 கோடி குறைக்கப்பட்டிருக்கிறது. இந்த வருஷம் ரூ. 100 கோடிக்கும் அதிகமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. எனது நினைவு ரூ. 138 கோடி என்று. குதிரை கீழே தள்ளியதும் இல்லாமல் குழியையும் பறித்ததாம் என்ற நிலைமை தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. மாநில ஆட்சிக்கான மானியத் தொகையை இந்த வருஷம் குறைத்திருக்கிறார்கள் மத்திய அரசினர். இது எப்படி நியாயமாகும்? இதையெல்லாம் கவனியாமல் எங்கேயோ நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். அது ஒருபுறத்தில் இருக்க, இந்த நிலைமையில் நமது மாநில ஆட்சி வட்டியை தள்ளி வைக்கும்படி கேட்டுக் கொண்டிருக்கிறது. ரத்து செய்துவிடும்படி கேட்கவில்லை; தள்ளி வைக்க வேண்டுமென்று தான் கேட்கப்பட்டிருக்கிறது. அதுவும் முடியாது என்று கூறப்படுகிறது.

வட்டியைப்பற்றி பேசும்பொழுது இன்னொரு முக்கியமான பெரிய விஷயம் இருக்கிறது. ஸ்தல ஸ்தாபனங்களிலிருந்து நாம் வட்டியைப் பெறுகிறோம் என்று இங்கே ஒரு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நாம் மத்திய சர்க்காருக்கு வட்டி தருகிறோம், நமக்கு ஸ்தலஸ்தாபனங்கள் வட்டி தருகின்றன, வாஸ்தவம்தான். இவையெல்லாம் குடும்பத்திற்கு உள்ளே நடக்கும் விஷயங்கள். இதிலே எல்லாம் நீக்குப் போக்கு இருக்க வேண்டும். வேண்டும் பொழுது தள்ளி வைக்க வேண்டும். ரத்து செய்யவேண்டும். கடனாளியாக்கப்பட்ட நம் நாட்டிலிருந்து ரூ. 5,000, 6,000 கோடி அளவுக்கு கடன்பட்டுள்ள இந்த நாட்டிலிருந்து வருஷா வருஷம் சர்வீஸிங் சார்ஜ் மூலம், அன்னிய நாட்டு முதலாளிகள் சம்பாதிக்கும் லாபம் மூலம் வெளியே போகும் தொகை எவ்வளவு?

ரூ. 250 கோடி. ஒரு பெரிய ஓட்டை வழியாக இந்த நாட்டுச் செல்வம் எல்லாம் வழிந்து போய்க்கொண்டிருக்கிறது. இந்த ஓட்டையை அடைத்தால் ஒழிய நமக்கு விமோசனம் இல்லை. மேலும் அன்னிய நாட்டு உதவியின் மூலமும், உடன்-உழைப்பு ஒப்பந்தங்களின் மூலமும் (கொலாப்ரேஷன் எக்ரிமெண்டு) நாட்டில் தொழில் வளர்ச்சியைப் பெருக்குவது என்பது மத்திய சர்க்காருடைய கொள்கை. காங்கிரஸ்காரர்களுடைய கொள்கை. அதன் பலன் என்ன? மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பித்த காலத்தி அன்னியச் செலாவணியில் 13 சதமானம் சர்வீஸிங் சார்ஜ் மூலம் வெளிநாட்டிற்கு பண ரூபமாகப் போய்க் கொண்டிருந்தது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் இது 22 சதமானமாக உயர்ந்திருக்கிறது. வெளி நாடுகளிலிருந்து அதிக உதவி பெற, பெற அதிக உடன்-உழைப்பு ஒப்பந்தங்கள் செய்து கொள்வதன் மூலம், 22 சதமானம் நாம் சம்பாதிக்கும் அன்னியச் செலாவணி திரும்பப் போய்க்கொண்டிருக்கிறது. கூடுதலாகப் போகிறது. முன்னைவிட அதிகமாகப் போய்க்கொண்டிருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கதி என்ன? இன்னும் திட்டமே உருவாகவில்லை. ஆனால், முதல் ஆண்டிலேயே நாம் சம்பாதிக்கும் அன்னியச் செலாவணியில் 27 சதமானம் வெளி நாடுகளுக்கு சர்விசிங் சார்ஜ் மூலமாகவும், லாபத்தின் மூலமாகவும் போய்க்கொண்டிருக்கிறது. அதாவது, ஒத்துழைப்பு ஒப்பந்தங்களும் கடன் உதவியும் அதிகரிக்க அதிகரிக்க நாம் சம்பாதிக்கும் அன்னியச் செலாவணியில் அதிகப் பகுதி வெளி நாடுகளுக்குப் போய்க்கொண்டிருக்கிறது. இந்த வழியே நீடித்தால், இந்தப் பாதையில் தொடர்ந்து சென்றால், நாம் சுதந்திர நாடுதானா என்ற கேள்வியை எழுப்பக்கூடிய ஆபத்து இருக்கிறது என்பதை நான் காங்கிரஸ் அன்பர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏனென்றால், நம்மைவிட மோசமான நிலையில் இருக்கிற இரண்டு நாடுகள் அர்ஜென்டைனா, பிரேஸில். இந்த இரண்டு நாடுகளும் சம்பாதிக்கும் அன்னியச் செலாவணியில் 40 சதமானம் ஏற்கனவே பெற்ற கடன்களுக்காக, சர்விசிங் சார்ஜுக்காகப் போய்க் கொண்டிருக்கிறது. அதனால் ஆத்மா போய்விடும், சுதந்திர அந்தஸ்தும் போய்விடும். பிறகு அவர்களிடத்தில் சிக்கிக் கொண்டு அவர்கள் வைத்த ஆள் மாதிரி நாம் செயல்பட வேண்டிய நிலைவரும், அரசியல் நெருக்கங்கள் ஏற்பட்டுவிடும். குடுமியை அவர்களிடம் கொண்டுபோய், கொடுத்துவிட்டு, இம்மாதிரி மேற்கொண்டும் குடுமியை அவர்களிடம் கொடுத்துக்கொண்டிருப்பது சரியான கொள்கை, என்று வாதாடுவதால், பயங்கரமான ஆபத்து நம் நாட்டைச் சூழ இருக்கிறது.

விலைவாசி உயர்வு ஒரு பக்கம். அது மட்டுமின்றி நாடு கடனாளியாகி, சர்வீஸிங் சார்ஜுக்கே நமது அன்னியச் செலாவணியை இழக்கக்கூடிய இந்த இரண்டு கொள்கைகளும் நீடிக்கப்பட்டால், இந்த வட்டத்திற்குள்ளிருந்து செயல்படக்கூடிய எந்த மாநில ஆட்சியும் அதிகமாக சாதிக்க முடியாது. சாத்தியமில்லை. பெரிய





ஓட்டை ஒரு பக்கம். அதை அடைக்காமல் நாம் எடுக்கக்கூடிய எல்லா முயற்சிகளும் சில்லரை முயற்சிகளாகத்தான் இருக்க முடியும். அதற்கு மேலும் சாதிக்க முடியாது. அதற்கு நாம் பொறுப்பாக இருக்க முடியாது, எந்த மாநில ஆட்சியும் பொறுப் பாக இருக்க முடியாது என்பதை சுட்டிக்காட்டுவது மிகவும் அவசியம் என்று கருதுகிறேன். இந்தக் கொள்கையை மாற்று வதற்கு நாம் முயற்சி செய்யாமல், அதற்கு மாநில ஆட்சியும், தமிழக மக்கள் அனைவரும் சேர்ந்து போராடாமல் இருந்தால், கொள்கையை மாற்ற வழி செய்யாமல் இருந்தால், ஒரு மாற்றம் செய்யப்படாமல் இருந்தால், நமக்கு கதிமோட்சம் இல்லை. இதை மாற்றாவிட்டால் நமக்கு எதிர்க்காலம் இல்லை என்ற அழுத்த மான கருத்தை நான் இந்தச் சபையின் முன்னால் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதே பாதையில் சென்றால், நாம் சம்பாதிக்கும் அன்னிய செலாவணி அத்தனையும் சர்வீஸிங் சார்ஜுக்கு கொடுத்துவிட்டு, அவன் காட்டின இடத்தில் கையெழுத்துப் போட வேண்டிய நிலைதான் வரும். நீட்டின இடத்தில் கையெழுத்து நாட்டவேண்டும் என்ற ஆபத்தான நிலைமை இந்த நாட்டில் தினே, தினே அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இதைத் தான் இந்தக் காலத்தில் "நியோ கலோனியலிசம்" என்று சொல்கிறார்கள். புதிய ரூபத்தில் காலனி அடிமைத்தனம் என்று சொல்கிறார்கள். அந்த நிலைமைக்கு இந்த நாட்டை இழுத்துச் செல்லக்கூடாது. இதுதான் வழி என்று நாம் போய்க் கொண்டி ருக்கக்கூடாது. இந்தப் பாதையிலிருந்து நாடு மாறவேண்டும். வேறு வழி கண்டுபிடித்தாக வேண்டும். ஏழைகளை வாழ வைக்க மக்களை வாழ வைக்க நாம் புதிய வழியை பார்த்தாக வேண்டும். என்ன வழி? அன்னிய நாட்டினருக்குக் கடன் திருப்பிக் கொடுப்பதை ஒத்திவைக்கும்படி கேட்கவேண்டும். எட்டு, பத்து வருஷங்களுக்கு நாம் மாரடோரியம் கேட்க வேண்டும். மேலும் கடன் வாங்கக் கூடாது என்ற முடிவுக்கு வரவேண்டும். அன்னிய மூலதனத்தை யெல்லாம் நாம் பறிமுதல் செய்து தேசிய உடைமை யாக்கவேண்டும். அன்னிய நாட்டு வர்த்தகம் முழுவதையும் மேற் கொள்ளவேண்டும். பாங்குகள், எண்ணெய் கிணறுகள் இவைகளை அரசாங்கமே மேற்கொள்ளவேண்டும். கேந்திரமான தொழில்களை யெல்லாம் அரசு மேற்கொள்ள வேண்டும். மாஜி மன்னர்களுக்கு இன்னும் ஏன் நாம் மான்யம் அளிக்கவேண்டும்? ரூ. 5 கோடி, 6 கோடி ஏன் இதற்காக செலவு செய்யவேண்டும்? நாடு நெருக் கடியில் சிக்கித் தவிக்கும்பொழுது, இந்த மான்யத்தை ஏன் நீடிக்க வேண்டும்? இதை உடனே நிறுத்த வேண்டும். மாதம் ரூ. 2,000-க்கு மேல் ஏன் இந்த நாட்டில் சம்பளம் இருக்க வேண்டும்? ஒரு கவளம் சோற்றுக்கு வழியில்லாமல் லட்சக் கணக்கான மக்கள் வாடும்பொழுது, ரூ. 2,000-க்கு மேல் ஏன் மாத வருமானம் இருக்க வேண்டும்? இவைகளெல்லாம் கட்டாயம் தடுக்கப்பட வேண்டும். இந்த விதமான பாதையில் செல்வதை மாற்ற, இப்படிப்பட்ட

கொள்கைகளை மாற்ற, ஜனங்களை திரட்டி மாநில ஆட்சி போராடி நாம் கூடுதலான வசதிகளைப் பெற்றால்தான், தமிழகம் இன்னும் தீவிரமாக முன்னேற முடியும். இல்லையென்றால், வருஷா வருஷம் இந்த வட்டத்திற்குள்ளேயே செயல்பட்டுக் கொண்டிருந்தால், மீண்டும் சேற்றிற்குள் போய் சிக்கிக்கொள்ள வேண்டியதுதான். எவ்வளவுதான் நல்ல காரியங்களைச் செய்யவேண்டுமென்று முயற்சித்தாலும், எவ்வளவு நல்லெண்ணம் இருந்தாலும், டெல்லியிலிருந்து வெட்டு வைக்கப்படும், நம்மால் சமாளிக்க முடியாத நிலைமை திரும்ப வந்து சேரும். மத்திய சர்க்காரிடமிருந்து வசதிகள் பெறுவதற்கு மாற்று வழிகள் என்ன? என்ன ஸ்தாபனங்களின் மூலம் பணம் உண்டாக்கிக்கொள்ள வேண்டும், வசதிகளைப் பெருக்கிக்கொள்ள வேண்டும் என்று நாம் பார்த்து, அதற்கான வழிவகைகளை நான் சொன்ன வழிகளிலே பெறவேண்டுமானால், அந்த வசதிகளெல்லாம் மத்திய சர்க்கார் கையில் இருக்கவிடக் கூடாது. அந்த வருமானத்தில் குறைந்த பட்சம் 75 சதமானம் மாநில ஆட்சிக்குக் கிடைக்கவேண்டும். இப்பொழுது கஸ்டம்ஸ் டியூடியில் நமக்கு ஒரு பைசா கூட கிடைக்கவில்லை, அந்த வகையில் ரூ. 550 கோடி மத்திய சர்க்கார் பெறுகிறது. அதில் ஒரு பைசா கூட நமக்குக் கிடைக்கவில்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார், கஸ்டம்ஸ் ட்யூட்டி பாராளுமன்றத்திற்கு உரியது. அதைப்பற்றி நாம் இங்கே பேசுகின்றபொழுது, அதுவும் இங்கே இருக்கிற பிரச்சினைக்கு தொடர்பு இருந்தால்தான், அதைப்பற்றி சொல்லலாம். அப்படியில்லாமல் மத்திய சர்க்காரை தாக்குவதற்காக இப்படிச் சொல்வது சரியா என்பதை தாங்கள் அருள்கூர்ந்து சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன்:** தலைவர் அவர்களே, மத்திய சர்க்காருக்கு இருக்கக்கூடிய வருமானத்திலிருந்து மாநில ஆட்சிக்கு பணம் வரவேண்டும் என்று கேட்பதற்கு எனக்கு முழு உரிமை இருக்கிறது என்று இந்த சபையில் சமர்ப்பித்துக்கொள்ள விரும்புகிறேன். தலைவர் அவர்கள் ஏதாவது தீர்ப்பு கூறவேண்டுமெனில் தீர்ப்புக் கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. மலைச்சாமி):** இத்தகைய வரிகளால் மாநில அரசு பாதிக்கப்படுகிறது என்ற காரணத்தைக் காட்டத்தான் உறுப்பினர் அவர்கள் சொன்னாரே தவிர, மத்திய அரசைத் தாக்க வேண்டுமென்ற காரணம் இல்லை.

**திரு. எ. பாலசுப்பிரமணியன்:** மத்திய அரசைக் குறை சொல்ல இங்கே எங்களுக்கு உரிமை உண்டு. ஆகவே, இன்றைக்கு இருக்கக் கூடிய அரசியல் அமைப்புச் சட்டத்தில் தீவிர மாற்றம்



கண்டு, மாநில அரசுக்கு, எக்ஸைஸ் ட்யூடி, இன்கம்-டாக்ஸ், கஸ்டம்ஸ் இவற்றில் குறைந்தது 75 சதவீதமாவது கொடுக்க வேண்டுமென்று கேட்பது நியாயமானது. மத்திய சர்க்காரின் பொறுப்புக்களையும் குறைக்க வேண்டும். நாட்டுப் பாதுகாப்புப் போக்குவரத்து, அயல்நாட்டு விவகாரம் போன்ற விஷயங்கள் மட்டும் அவர்களுக்கு பொறுப்புக் கொடுத்தால் போதுமானது. மற்ற நாட்டு விஷயங்களில் மத்திய ஆட்சியின் பொறுப்புக்களைக் குறைக்கும் வகையில் கிளர்ச்சி செய்ய மாநில ஆட்சிகளையும், மக்களையும் ஈடுபடுத்த வேண்டும்.

அடுத்து, நிலச்சீர்திருத்தம் ஒரு முக்கியமான விஷயம், ஒரு கருத்தை மட்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். நமக்கெல்லாம் தெரியும். நில உச்சவரம்புச் சட்டம் பெரும் மோசடியாகப் போய்விட்டது என்பது. அதைத் திருத்துவது என்பதைக் கொள்கையாகக் கொண்டு செயல்பட வேண்டும். அது மிக மிக அவசியமானது. திருத்தி, நிலம் மிச்சம் கண்டு, அப்படிக் கண்ட நிலத்தை ஏழை உழவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்க வேண்டும். விதிவிலக்குக்குப் பின்னால் ஒளிந்துகொண்டிருக்கும் நிலங்களை வெளியே கொண்டுவந்தாக வேண்டும். அப்படிக் கிடைக்கும் லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களை விவசாயிகளுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த நிலங்களுக்கு உரம், தண்ணீர், கிணறுகள், மின்சாரம் இவற்றைக் கொடுத்து உதவி செய்தால், பன்மடங்கு உற்பத்தி பெருகும். வேறெதையும் விட உழவர்களுடைய உற்சாகந்தான் மிக முக்கியமானது உற்பத்திப் பெருக்கத்திற்கு. அப்படி நிலங்களை ஏழை விவசாயிகளுக்குக் கொடுப்பதால் மூன்றுவித பலன்கள் ஏற்படும். ஒன்று உள்நாட்டுச் சந்தை பெருகும். வியாபாரப் பெருக்கம் ஏற்படும். இரண்டாவதாக, மூலதனம் பரவலாக பலர் கையில் வரும். 'காபிடல் ஃபார்மேஷன்' என்பார்கள். அது ஏற்படும். மூன்றாவதாக, உற்பத்தி பன்மடங்கு பெருகி, வீச்சான வளர்ச்சி ஏற்படும். ஆகவே இந்த மூன்று பலன்களையும் அடையத் தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இந்த விஷயத்தில் இந்த பட்ஜெட் மௌனம் சாதித்து இருக்கக் கூடாது என்று பணிவோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். அப்படிப்பட்ட திருத்தம் செய்ய மத்திய சர்க்காரின் அனுமதி நமக்குத் தேவையில்லை. அதன் மூலம் கிராம மக்களின் அகத்தையும், முகத்தையும் மகிழச் செய்யலாம். அப்படிப்பட்ட சீர்திருத்தம் தமிழ்நாட்டு எதிர்காலத்திற்கு அவசியம். ஆகவே ஏற்கனவே பலர் அந்தக் கருத்தைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும், அது முக்கியமான, அடிப்படையான விஷயம் என்பதால் நானும் அதைப்பற்றி பேச முற்பட்டேன்,

[திரு. எ. பாலசுப்பிரமணியன்] [1967 ஜூன் 26

அடுத்து, கொள்முதல் சம்பந்தமாக ஒன்று சொல்லவேண்டும். விலைவாசி உயர்வுபற்றி நாம் 'காம்ப்ளேசன்ட்' ஆக இருந்துவிடக் கூடாது. திருப்தி மனோபாவம் கொண்டு மெத்தனமாக இருந்து விடக் கூடாது. மத்திய சர்க்காரின் கொள்கை காரணமாகவும், பழகிப் பழகிப் போய்விட்ட சமூக விரோதச் செயல்கள் காரணமாகவும், விலைவாசிகள் ஏறிக்கொண்டே போய்விடுகின்றன. இன்றைக்குப் புளியின் விலை என்ன? சீனியின் விலை என்ன? பருப்பு வகைகளின் விலை என்ன? தஞ்சாவூரிலேயே படி அரிசி இரண்டு ரூபாய்க்கு விற்க ஆரம்பித்து விட்டது. கொஞ்சம் இறங்கு முகமாக இருந்த விலைகள் இன்றைக்கு மறுபடியும் ஏறத் தொடங்கி விட்டன. மிக எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அப்படிப் பார்க்கும்போது, கொள்முதலில் தீவிரமான கவனம் செலுத்தியாக வேண்டும். பொது மக்கள் ஆதாவோடும் வினியோகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டாக வேண்டும். அதை அசட்டை செய்யக் கூடாது. அது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை என்று நினைப்பது மாதிரித் தோன்றிவிட்டால், பெரிய ஆபத்தாகப் போய்விடும். அடுத்து இரண்டு மாதங்கள் லீன் மாதங்கள் என்பார்கள். ஐப்பசி மாதம் அறுவடை தொடங்கிவிடும். அப்பொழுது கொள்முதலை தீவிரமாக நடத்தவில்லை என்றால் கையில் இருப்பது போதுமானது என்று நினைக்க ஆரம்பித்தால், ஒன்றரைக் கோடி மக்களுக்கு ரூபாய்க்கு ஒரு படி அரிசி கொடுப்பது என்பது முடியாத காரியமாகிவிடும். நாம் எடுத்துக்கொண்ட பொறுப்பை நிறைவேற்றுவதற்கு வசதி செய்து கொள்ளாவிட்டால் அது ஆபத்தில் கொண்டு விட்டு விடும். அப்படிச் செய்யும் போது அதிகாரிகளுடைய யோசனைகளை மட்டும் கேட்டுக்கொண்டு மெத்தனமாக இருந்து விடக்கூடாது. மூன்று ஏக்கருக்கு விதி விலக்கு அளித்தாக வேண்டும். கிராமப்புற மக்களுக்கு அப்பொழுதுதான் உற்சாகம் ஏற்படும். இல்லை என்றால் அவர்களையும் பெரு நிலக்காரர்கள் சேர்த்துக்கொண்டு கொள்முதலுக்கு எதிராகக் கிளப்பிவிட்டு விடுவார்கள். அப்படி அவர்கள் பெருநிலக்காரர் வசம் சென்று விடாமல் நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். மூன்று ஏக்கர்காரர்களுக்கு விலக்கு அளித்தால், அவர்களிடம் உள்ள தானியங்கள் கிராமத் தேவைகளைச் சமாளித்துக் கொள்ள போதுமானதாக இருக்கும். ஆகவே, மூன்று ஏக்கர்காரர்களுக்கு விலக்கும், ஐந்து ஏக்கர் வரை உள்ளவர்களுக்கு லெவி முறையையும் கையாளலாம். பத்து ஏக்கருக்கு மேல், பட்டாக் கணக்கு இருக்கிறது. கறாராக இருந்து, மார்கெட்டின் சர்ப்ளஸ் முழுவதையும் கொள்முதல் செய்யவில்லை என்றால் நமக்கு ஆபத்துத்தான். அந்த வகையில் கொள்முதல் கட்டாயமாகச் செய்ய வேண்டும். அதையும் பொது மக்கள் கமிட்டி மூலமாகச் செய்தால், அநியாயம் எதுவும் நடவாமல் பார்த்துக்கொள்ள சாதகமாக இருக்கும். இன்றைக்கு சாதாரணமாக, அதிகாரிகள் ஏழை எளியவர்கள் வீட்டில் புகுந்து, 1½ ஏக்கர்காரர்கள் வீட்டில் புகுந்து நெல்லை எடுப்பதும், 10 ஏக்கர்



1967 ஜூன் 26] [திரு. எ. பாலசுப்பிரமணியன்]

காரர்களிடம் போகாமல் இருப்பதும் நாம் காணும் காட்சி. ஏன்? அவர்களிடம்தான் இந்த அதிகாரிகள் ஸ்மால் சேவிங்ஸ்ஸுக்கு என்றும் ப்ரைஸ் பாண்டுக்கு என்றும் போகிறார்கள். இன்னும் பல்வேறு கடன்களுக்காகவும் போய் இருப்பார்கள். ஆகவேதான் பாபுலர் கமிட்டிகள் போட்டு, பொது ஜனக் கமிட்டிகள் மூலம் யார் யார் பட்டாக்காரர்கள், 10 ஏக்கருக்கு மேல் வைத்திருப்பவர்கள் என்று அவர்களுக்கு தெரியுமாதலால், அவர்கள் மூலம் உபரி நெல்லை எடுக்க வேண்டும். அவர்களுடைய தேவைக்குப் போக, தாராளமாக அவர்களுடைய தேவைக்கு எடுத்துக் கொள்ளட்டும், மொத்தத்தில் 5 சதவீதத்திற்கு மேல் எடுத்துக் கொள்ளட்டும். அதற்குப் போக பாக்கியிருப்பதை, உபரி நெல் முழுவதையும் சர்க்காரே எடுத்துக்கொள்ள ஏற்பாடு செய்தால், உள்ளபடியே ஒன்றரைக் கோடி மக்களுக்கு ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்று கொடுப்பது சாத்தியமாக இருக்கும். அதனால்தான் இந்த விஷயத்தைப்பற்றி இவ்வளவு தூரம் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

இன்னொரு விஷயத்தைப் பற்றியும் சொல்ல வேண்டும். அரிசி, நெல் இவை மில்களுக்கு வந்துதான் ஆகவேண்டும். நேஷனலைஸ் என்று செய்யாவிட்டாலும், கட்டாயக் குத்தகை என்று செய்ய முடியுமா என்றும், அதற்கு சட்டக் குறுக்கீடு இருக்கிறதா என்றும் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். மில் கணக்குத் தெரியும்; எந்த எந்த பெரிய புள்ளிகளிடம் நெல் இருக்கிறது என்றும் தெரியும். ஆகவே, இப்படிப்பட்ட 'ஸ்ட்ராடஜிக்' பாயிண்டுகள் சர்க்காரின் கையில் இருக்கவேண்டும். மூன்று ஏக்கர்காரர்களுக்கு விலக்கு அளித்து விட்டால் கிராமத்தில் நெல் அரிசி இவை சஞ்சாரம் இருக்கும், கிராம மக்கள் தேவைகள் பூர்த்தியாகிவிடும். அப்படிச் செய்யா விட்டால், கிராமத்திலுள்ள நியாய விலைக் கடைகள் வேண்டும், குடும்பக் கார்டு வேண்டும் என்கின்ற கோரிக்கைகள் வரும். அதுதான் இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது. அப்படி தஞ்சையில் கிளம்ப ஆரம்பித்து விட்டது. ஒரு ஏக்கர்காரர்களுக்கு மட்டும் விதிவிலக்கு கொடுத்தால் போதும் என்ற அதிகாரிகள் கணக்கை நம்ப நான் தயாராக இல்லை. மூன்று ஏக்கர்காரர் வரை விலக்கு அளித்தே ஆகவேண்டும். மற்றபடி இருக்கும் நிலச்சுவான்தார்களிடம் கறாராக இருந்து கொள்முதல் செய்யவேண்டும். ஆகவேதான் இந்த பட்ஜட் பிரசங்கத்தில் இதற்கு நான் முக்கியம் கொடுத்துப் பேசுகிறேன். இருபது ஆண்டு காலமாக விலைவாசி உயர்வுக்கு காரணமான காரியங்கள் நடந்து இருக்கின்றன. நாட்டை கடன்காரன் ஆக்கி ஆகிவிட்டது. ஆகவே இந்த நிலச் சீர்திருத்தத்தைச் செய்தே ஆகவேண்டும். கொள்முதல் விஷயத்தில் என்னுடைய யோசனைகளை ஆராய்ந்து செயல்படவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதற்கு பொதுஜனக் கமிட்டிகள் மூலம் செயல்பட வேண்டும். அப்படிச் செய்தால் நாட்டுக்கு நல்லது. ஒரு கட்சிக்கு என்று சொல்லவில்லை

[திரு. எ. பாலசுப்பிரமணியன்] [1967 ஜூன் 26

பி.ப. 5-00 தமிழகத்திற்கு நல்லது. ஆகவே அப்படிப்பட்ட காரியத்தைச் செய்ய அரசாங்கம் முன்வரவேண்டும் என்று பணிவோடு விண்ணப்பித்துக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* **திரு. ஆர். நாகசுந்தரம்:** ஐயா, 'குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம் மடிதற்றுத் தான் முந்துறும்' என்ற குறளின் படி குடிமக்களுக்குத் தொண்டு செய்கிறேன் என்று முன்வரும் ஒருவருக்குத் தெய்வம் வரிந்து கட்டிக்கொண்டு முன் வந்து உதவும். இன்று மெய்வருத்தம் பாராது, பசி நோக்காது, கண் துஞ்சாது இந்நாட்டு மக்களின் வாட்டத்தைப் போக்க முன் வந்துள்ள நம் முதலமைச்சர் அண்ணா அவர்களுக்கு இயற்கையும் நல்வாழ்த்துக் கூறுகிறது.

இப்போது நாட்டிலே புயல் வீசவில்லை. மரங்கள் அடியோடு சாயவில்லை. கப்பல் தரை தட்டவில்லை. கப்பல் சட்டமன்றத்திற்கெதிரிலேயே உடையவில்லை.

மாறாக, இந்த வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்த முதல் நாளும், ரூபாய்க்கு 1 படி அரிசி போட்ட முதல் நாளும் சென்னையில் நல்ல மழை பெய்து இதுவரை இருந்துவந்த வெப்பத்தைப் போக்கி, மக்கள் மனதிலே ஒரு குளிர்ச்சியை ஏற்படுத்தியது.

சென்ற ஆண்டின் ஜூன் 17-ஆம் தேதிய வெப்பநிலை இந்து இதழின்படி 37.0 டிகிரி சென்டிகிரேட். இந்த ஆண்டு 17-6-1967 தேதிய வெப்ப நிலை இந்து இதழின்படி 29.1 டிகிரி சென்டிகிரேட். எவ்வளவு குளிர்ந்துள்ளது பூமி?

இதற்கு முன்பெல்லாம் சென்னை வெப்பம் தாங்காமல்—எதிர்க் கட்சியினர் ஏற்றுக்கொண்டால்—இந்தச் சட்டமன்றத்தை ஊட்டியில் நடத்தலாம் என்றெல்லாம் பேசப்பட்டது. ராமன் இருக்குமிடம் அயோத்தி என்று ஒரு பழமொழி. அது போல் அண்ணா இருக்கும் இந்தச் சென்னையே ஊட்டியாக மாறிவிட்டது ஒரு வார காலமாக.

நான் பேப்பரில் அடிக்கடி பார்க்கிறேன். "தி.மு.க. கட்சியினர், மந்திரிசபை அமைக்க வேண்டும், அதை என் வாழ்நாளில் நான் கண்ணாலே காண வேண்டும்" என்று சில அரசியல் மேதைகள் பத்திரிகையிலே எழுதுவதைப் பார்க்கிறேன். நான் ஒன்று சொல்லுகிறேன். இது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்ட கதைதான். இங்கிருக்கிற என் அருமைத் தோழர்கள் 51 பேர்கள் எந்த அடிப்படையில் ஓட்டுக் கேட்கப்போகிறார்களோ எனக்குத் தெரியவில்லை. நான் மனம் திறந்து சொல்லுகிறேன். அவர்கள் எதிர்பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் இன்னும் இரண்டாயிரம் வருஷங்களானாலும் வரப்போவதில்லை. பட்ஜெட் பேச்சிலே 28-2-1966-ஆம்



967 ஜூன் 26] [திரு. ஆர். நாகசுந்தரம்]

தேதி அன்று திரு. சிதம்பரநாத நாடார் அவர்கள் இங்கே பேசியிருக்கின்றார் முடவனுக்குக் கொம்புத் தேன் கிடைத்துவிட்டது ம். முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டான், தவறில்லை. வன் கொம்பு ஏறுமலேயே வாக்காளப் பெருமக்கள் கொம்புத் தனை தந்துவிட்டனர்.

காங்கிரசல்லாத சர்க்கார்களின் நல்ல திட்டங்களையும், காள்கைகளையும் எதிர்க்கட்சி என்ற முறையில் வீம்புக்காக திர்க்கலாகாது என்று காங்கிரஸ் கட்சித் தலைவர் காமராஜர் றியது நம்முடைய அரசாங்கத்திலுள்ள காங்கிரஸ்காரர் ளுக்கும் சேர்த்துத்தான் என்று நினைக்கிறேன். யார் ஆண்டால் ன்ன என்று இதுவரை மக்களிடையே இருந்து வந்த அலட்சியப் பாக்கு மாறி, இன்று எல்லா பிரச்சினைகளுக்கும் அமைச்சர்களைச் ந்தித்துப் பரிகாரம்காண முன்வந்துள்ளனர். நம்மவர்கள் ள்கிறார்கள் என்ற எண்ணம் இன்று நாட்டிலே பரவி இருக் ன்றது.

அண்டை மாநிலமான ஆந்திராவில், காங்கிரஸ் ஆட்சியே டந்து வந்தபோதிலும், அனுபவமிக்கவர்கள் இருந்தும் 12.76 காடி ரூபாய் பற்றுக்குறை பட்ஜட்தான் போட்டுள்ளனர். அதே மயத்தில் அனுபவமில்லாத முற்றும் புதியவர்களால் தயாரிக்கப் ட்ட நமது பட்ஜட்டில் மிகக் குறைந்த ஒரு கோடி 12 லட்ச பாய்தான் பற்றுக்குறை என்பதனைப் பெருமையோடு கூறிக் காள்கிறேன்.

ஓமந்தூரார் முதலமைச்சராயிருந்தபோது அடிக்கடி டெல்லிக்கு பாய் மடிப்பிச்சை ஏந்த ஒரு ஆகாய விமானமே வாங்கியிருந் ார்களே தவிர, டெல்லியிடம் மாநிலங்கள் எதற்கெடுத்தாலும் டிப்பிச்சை ஏந்த வேண்டிய நிலைமையை அண்ணா அவர்களைப் பால் யாரும் இதுவரை துணிவாகக் கூறவில்லை.

இங்கு பேசிய காங்கிரஸ்காரர்கள் அத்தனை பேரும் ஒரு பாய்க்கு ஒரு படி அரிசித் திட்டத்தை ஆதரித்தார்களே தவிர ற்ற இடங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டுமென்ற அக்கறை ாட்டினார்களே தவிர டெல்லியைக் கேட்பதில் நமக்கு உறுதுணை ாயிருப்பதாக மறந்தும் காட்டிக்கொள்ளவில்லை.

ஐந்து தலை ஆதிசேஷன்மேல் ஏறி நின்று, அதனுடைய ாட்டத்தை அடக்கினாற்போல கிருஷ்ணன் அதைப் போல பங்கரமான உணவு இலாக்காவிலே எத்தனையோ உணவு மந்திரி ளை ஜீர்ணம் செய்த அந்த உணவு இலாகாவிலே, இன்று துணிவாக சயல்பட்டு, பதுக்கல்காரர்கள், கொள்ளை லாபமடிப்போர்; கள்ளக் டத்தல்காரர்கள், பெருமுதலாளிகள், கொள்முதலை உடனே றுத்து என்று கூறும் இந்த ஐந்து சமுதாய விரோதிகளை அடக்க ல்லையா நமது உணவமைச்சர் மதியழகன்.

[திரு. ஆர். நாகசுந்தரம்] [1967 ஜூன் 26

திங்கள்கிழமையும், வியாழக்கிழமையும் சாப்பிடாதே என்ற உபதேசமும், சாப்பாடு போடாதே என்ற உத்தரவு ஓட்டல்களுக்கும், பிறப்பித்ததே பழைய அரசாங்கம். அதனால் ஆயிரம் ஆயிரம் பேர் வெளியூர்களிலிருந்து வந்து இங்கே அலுவலகங்களிலே வேலை பார்க்கும் ஊழியர்களும், நாள்தோறும் பல அலுவல்களுக்காக தலைநகர் வருபவர்களும், சோறுசோறு என்று அலைந்தார்களே சென்னை தெருக்களிலே, அந்தப் பரிதாபத்தை இந்த அரசாங்கம் உடனடியாக மாற்றவில்லையா ?

சென்ற 17—6—1967 அன்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாடு அரசின் புதிய வரவு-செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்த செய்தியை அகில இந்திய ரேடியோவில் ஆங்கில ஒலிபரப்பில் அறிவிக்கப்படவில்லை. மதியம் 1-30, மாலை 6-00, இரவு 9-00 ஆகிய மூன்று செய்தி அறிவிப்பின்போதும் இது அலட்சியம் செய்யப்பட்டு விட்டது. எல்லோரும் தூங்கிய பிறகு இரவு 11 மணி செய்தி ஒலிபரப்பில் மட்டும் அறிவிக்கப்பட்டது.

இந்த இரவு 11 மணி அறிவிப்பு கூட டெல்லியில் உள்ள ஒரு தமிழர் அகில இந்திய ரேடியோ செய்தி டைரக்டருக்கு இதுபற்றி போன் செய்த பிறகுதான், அறிவிக்கப்பட்டது.

டெல்லியிலுள்ள ஒரு தமிழருக்கு உள்ள அக்கறை, அதே தொழிலாகக் கொண்ட ஒரு டைரக்டருக்கு இல்லை. இது டெல்லி நம்மை எவ்வளவு அலட்சியப்படுத்துகிறது என்பதனைக் காட்டுகிறது.

இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு செய்தி எவ்வாறு அறிவிக்கப்படாமல் விட்டுப் போயிற்று என்று மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு போக வேண்டுகிறேன்.

சென்னை மாநில எலக்ட்ரிஸிடி போர்டின் மேல் மட்டத்தில், உயர்தர அதிகாரிகளில் தேவையில்லாமல் அதிகப்படியான பதவிகளை ரத்து செய்வதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 66 லட்சம் ரூபாய் இந்த அரசாங்கத்திற்கு மீதமாகும் என்ற யோசனை ஒன்றை இந்த அரசாங்கத்திற்குக் கொடுத்திருக்கிறேன். அன்பு கூர்ந்து அதனை அரசாங்கம் தீவிரமாக பரிசீலித்து நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துகொள்கின்றேன். வணக்கம்.

* திரு. சி. கே. சின்னராஜி கவுண்டர் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, 1967-68 நிதிநிலை அறிக்கை மீது நான் சில கருத்துக்களைச் சொல்லுகின்றேன். இந்த அறிக்கையிலே வடார்க்காடு மாவட்டம் திருப்பத்தூர் நகர் மன்றத்திற்கு குடிதண்ணீர் திட்டத்திற்காக நிதி ஒதுக்கி இருப்பதற்காக நான் பெருமதிப்பிற்குரிய அறிஞர் அண்ணா அவர்களுக்கு நன்றி சொல்லிக்



1967 ஜூன் 26] [திரு. சி. கே. சின்னராஜி கவுண்டர்]

கொள்ளுகிறேன். அடுத்து வடாற்காடு ஆம்பூர் நகரத்திற்குக் குடிதண்ணீர் திட்டத்துக்கு நிதி ஒதுக்கியதற்கும் நான் அண்ணா அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்த குடிதண்ணீர் திட்டமானது 1957-ம் ஆண்டு நிதிநிலையில் குடி தண்ணீருக்காக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கியது. இதற்கு முன்பிருந்த அரசாங்கம் குடிதண்ணீர்த் திட்டத்தை நகரமன்றத்திற்கு அளிக்காமலிருந்ததற்கு நான் அவர்களுக்கு வருத்தம் தெரிவித்துக்கொண்டிருக்கின்றேன். அண்ணா அவர்கள் ஆட்சிபீடமேறியதும் முதலாவதாகக் குடிதண்ணீர் தந்ததற்கு அண்ணா அவர்களுக்கும், அவர்களுடன் ஒத்துழைத்த அமைச்சர்களுக்கும் மீண்டும் நான் நன்றி தெரிவித்துக்கொள்ளுகின்றேன். இரண்டாவதாக இந்த நிதி நிலை அறிக்கையிலே புஞ்சை நிலங்களுக்கெல்லாம் வரிவஜா செய்ததற்கு விவசாயிகள் சார்பில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அடுத்தாற்போல் கல்லூரியில் பி.யூ.சி. படிக்கும் மாணவர்களுக்கு, 1,500 ரூபாய் வருமானத்துக்கு மேலுள்ளவர்களிடமிருந்து சம்பளம் வசூலிக்க வேண்டுமென்று ஒரு விதியிருக்கிறது. இப்பொழுது 1,500 ரூபாய் வருமானமுள்ளவர்களுக்கு பி.யூ.சி. படிப்புக்குச் சம்பளம் இல்லை என்பதை நிதி நிலை அறிக்கையிலே வெளியிட்டிருக்கிறார்கள். அடுத்து, 2,000 ரூபாய்க்கு மேல் வருமானமுள்ளவர்கள் சம்பளம் கட்ட வேண்டுமென்ற ஒரு விதியினை மாறுதல் செய்ததற்கு நான் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்.ஜி.ஓ.க்கள், சாதாரண குடிமக்கள் ஆகியோரின் பிள்ளைகள் இந்த பி.யூ.சி. கல்லூரியைப் படிப்பதற்கு சலுகைகள் செய்ததற்கு மக்கள் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். காங்கிரஸார், அரசாங்கம் நிதி நிலை அறிக்கையிலே என்ன செய்துவிட்டது என்று கேட்டுக்கொண்டிருந்தார்கள். இருபது ஆண்டு ஆண்டு காலமாக ஆண்டவர்கள் என்ன செய்தார்கள். பள்ளியிலே படிப்பவர்கள் 1,500 ரூபாய் வருமானமுள்ளவர்களெல்லாம் பணம் கட்ட வேண்டுமென்று சொன்னார்கள். நமது அரசாங்கம், அறிஞர் அண்ணா அவர்களால் மக்களுக்கு எல்லாவற்றையும் நல்லவைகளாகச் செய்துகொண்டு வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து, விற்பனை வரியைப் பொறுத்த வரையில், 7;500 ரூபாய்க்கு மேல் வியாபாரம் செய்கிறவர்கள் வரி கட்ட வேண்டும் என்ற விதி முன்பு இருந்தது. இப்பொழுது 15,000 ரூபாய்க்கு மேல் வியாபாரம் செய்கின்ற வியாபாரிகளுக்குத் தான் வரி உண்டு என்ற வகையில் மாற்றம் செய்யப்பட்டிருப்பதால் சிறிய வியாபாரிகளெல்லோரும் பெரும் பலன் அடைகிறார்கள். இதற்காக இந்த சர்க்காரைப் பாராட்ட வேண்டும்.

அடுத்தாற்போல், 75 மைல்களுக்கு மேல் போகின்ற பஸ் ரூட்களை அரசாங்கம் எடுத்துக்கொள்ளப் போவதாக இந்த நிதி நிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்பொழுது பஸ் முதலாளிகளெல்லாம் மிகவும் நொந்து பேசிக்கொண்டிருக்

கிறார்கள். காரணம், அவர்கள் ஏராளமான பணம் பஸ்கள் மூலம் சம்பாதித்துக் கொண்டிருந்தவர்கள். இப்பொழுது திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தபின், பஸ்களைத் தேசிய மயமாக்கிக்கொண்டு வருகிறார்களே என்று அவர்களெல்லோரும் மிக்க மன வேதனையுடன் பேசிக்கொண்டு வருகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் காலங்களில் என்ன சொன்னதோ அதை இந்த அரசு, திராவிட முன்னேற்றக் கழக அரசு மெள்ள மெள்ள செய்துகொண்டு வருகிறது என்பதற்காக நான் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

குடிதண்ணீர் திட்டத்தைக் கொண்டுவந்ததற்காக என் சார்பிலும், மக்கள் சார்பிலும், நகர மன்றத்தின் சார்பிலும் இந்த அமைச்சரவைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. எஸ். ராமலிங்கம்: தலைவர் அவர்களே, இந்த ஆண்டு சமர்ப்பித்து இருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றிக் காங்கிரஸ்காரர்கள் மட்டுமல்ல, இந்தத் தமிழ்நாட்டு மக்கள் மட்டுமல்ல, இந்தப் பாரத நாட்டு மக்களே கொஞ்சம் கவனமாக எதிர் பார்த்தார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால், அதைப் பற்றிய விளம்பரம் மிகப் பெரியதாக இருந்தது. குறிப்பாக, "வரியைக் குறைப்போம், வசதியைப் பெருக்குவோம்", "புது மாதிரியான பட்ஜெட்டைக் கொண்டுவரப் போகிறோம்" என்று சொல்லி அவர்கள் விளம்பரப்படுத்தி இருந்தார்கள். அம்மாதிரி யான ஒரு பட்ஜெட்டை எந்த நாட்டிலும், எந்த சர்க்காரும் இது வரையில் தயாரித்ததில்லை. சாதாரண பொருளாதாரம் தெரிந் தவர்கள், அம்மாதிரி பட்ஜெட் வரப்போகிறதோ என்று எதிர் பார்த்தார்கள். அப்படிப்பட்ட ஒரு ரகசியத்தை முதலமைச்சர் அவர்கள் எங்கோ படித்துத்தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்ற முறையில் நாங்களெல்லோரும் எதிர்பார்த்தோம்—காங்கிரஸ்காரர் கள் மட்டுமல்ல; மற்றவர்களும் கூட. ஆனால், இப்பொழுது வந்துள்ள பட்ஜெட்டைப் பார்க்கும்போது, அவர்கள் சொன்னதற்கு மாறாக, 11 சதவிகிதத்தை 12 சதவிகிதமாகவும், 1½ சதவிகிதத்தை 2 சத விகிதமாகவும், 2 சதவிகிதத்தை 3 சதவிகிதமாகவும் வரியை உயர்த்தித்தான் இருக்கிறார்கள். அதைப் பார்த்த பிற்பாடு, பல பேர்கள் சொன்னதுபோல, இதிலே உப்பும் இல்லை, சப்பும் இல்லை, சாதாரண 'ரொமன்' பட்ஜெட் என்கிற மாதிரிதான் எல்லோ ருக்கும் பெரிய ஏமாற்றத்தை கொடுத்திருக்கிறது. அப்படி யிருக்க, அந்தஅளவிற்கு பெரிய விளம்பரத்தைக் கொடுத்திருக்க வேண்டியதில்லை. காங்கிரசே திரும்பி வந்திருந்தால்கூட பட்ஜெட்டிலே ஒரு சில மாற்றம் இருந்திருக்கும். புதிய சர்க்கார்—புதுமாதிரியான கொள்கையுடைய ஒரு சர்க்கார்—வந்திருக்கிறது. அவர்கள் மிக மிக சாதாரண ரொமன் பட்ஜெட்டைத்தான் சமர்ப் பித்துவிட்டு, அதைப்பற்றிக் காங்கிரஸ்காரர்கள் ஏதாவது



சொன்னால், "ஐயையோ, அதைப்பற்றிக் குறை சொல்லுகிறார்களே, குறை சொல்லுகிறார்களே" என்று சொல்லுகிறார்கள். நாங்கள் குறை சொல்லவில்லை. அவ்வளவு பெரிய விளம்பரம் இருந்தது. அந்த விளம்பரத்திற்குத் தகுந்த அளவிற்கு பட்ஜெட்டிற்குள்ளே ஒன்றும் இல்லை.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, விளம்பரம் எப்பொழுது செய்தோம்? எம்மாதிரி பட்ஜெட் வரும் என்று நாங்கள் எந்தப் பத்திரிகையில் விளம்பரம் செய்தோம்? போஸ்டர்கள் அடித்து ஒட்டினோமா? உறுப்பினர் அவர்கள் விளக்கவேண்டும்.

திரு. எஸ். ராமலிங்கம்: தேர்தல் சமயத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர், "வரியைக் குறைப்போம், வசதியைப் பெருக்குவோம்" என்று நாட்டு மக்களிடத்தில் சொன்னார்கள். அந்த முறையில் இந்த பட்ஜெட் அமைந்திருக்கிறதா என்று பார்க்கிறபோது, அவர்கள் அப்பொழுது சொன்னபடி இதில் ஒரு பெரிய மாறுதலோ, புரட்சியோ ஒன்றும் இல்லை என்றுதான் நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அடுத்து, உணவு உற்பத்தியைப்பற்றி இந்த பட்ஜெட்டிலே சொல்லியிருக்கிறார்கள். உணவு உற்பத்தியைப்பற்றி அதிகமான அக்கறை இதிலே காட்டப்பட்டிருக்கிறது. உண்மையிலே அதற் காக பாராட்டுகிறேன். காங்கிரஸ் சர்க்கார் இருந்தபோதுகூட நாங்களும் அதைத்தான் சொன்னோம். எங்களுடைய ஐந்தாண்டுத் திட்டங்களில் கூட, முக்கியமாக உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும், விவசாயத்திற்கு அதிகமான நாட்டத்தைக் கொடுக்க வேண்டும், விவசாயத்திற்காக அதிகமான நிதியை ஒதுக்க வேண்டும் என்ற வகையில்தான் செய்துகொண்டிருந்தோம். தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், குறிப்பாக, கீழ் பவானி அணைக்கட்டுத் திட்டத்திற்கு 11 கோடி ரூபாய் வரையில் செல விட்டு, அதை மிகப் பெரிய அணைக்கட்டாகக் கட்டினோம். சாத்தனூர் அணைகட்டு, வைகை அணைகட்டு, புள்ளம்பாடி வாய்க் கால், கட்டளை வாய்க்கால் என்ற பல திட்டங்களுக்காக கோடிக் கணக்கான ரூபாய் செலவிட்டு, விவசாய அபிவிருத்தி சம்பந்த மான திட்டங்களையெல்லாம் நாங்கள் நிறைவேற்றிக் கொண்டு வந்தோம். இன்று இங்கே ஆளுங்கட்சியாக இருக்கின்ற மதிப்பிற் குரிய திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள் அன்று இங்கே எதிர்க்கட்சிக்காரர்களாக இருந்தார்கள். உணவுப் பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினை என்று நாங்கள் சொன்னபோது, அதைக் குறித்து அவர்கள் நாட்டு மக்களிடம் சென்று, காங்கிரஸ்காரர் களால் சோறு போட வழியில்லை, கையாலாகாத சர்க்கார் என்றெல் லாம் சொல்லி மக்களை திசை திருப்பினார்கள். நாங்கள் அப்பொ ழுது இவர்களைப்பார்த்து என்ன சொன்னோம் என்றால் இதைக் கட்சிப்பிரச்சினையாக ஆக்க வேண்டாம், பிறகு, இதுவே உங்கள்

தலையிலும் விடியும் என்று சொன்னோம். இது கட்சிப்பிரச்சினை அல்ல, விவசாயப் பிரச்சினை, பொதுவான பிரச்சினை சமுதாயப் பிரச்சினை, என்றெல்லாம் நாங்கள் சொல்லிக்கொண்டிருந்தோம். அதற்கான மாற்று யோசனைகளையும் சொல்லிக்கொண்டிருந்தோம். உணவு உற்பத்தியைப் பெருக்குவது மட்டுமல்ல; உணவுப் பழக்க வழக்கங்களையும் மாற்றவேண்டும் என்று சொன்னோம். எத்தனையோ வகைகளில் பழக்கவழக்கங்களை மாற்றிக் கொண்டிருக்கும்போது, உணவுப் பழக்க வழக்கத்தையும் மாற்றிக் கொண்டுதான் ஆக வேண்டும். மற்ற நாடுகளில் மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். நாகரீகம் ஏற்பட்டாலும்கூட அந்தச் சமயத்தில் பல பொருளாதாரச் சிக்கல்கள் ஏற்படுகின்றன. சாதாரண நாகரிக சமுதாய அமைப்பிலே இம்மாதிரி சிக்கல்கள் ஏற்படும் போது உணவுப் பழக்கத்தையும் கட்டாயம் மாற்றவேண்டும்.

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைக் கொண்டுவந்து, ஜனத் தொகையைக் குறைக்கவேண்டும் என்று நாங்கள் முக்கியமாகச் சொல்லிக்கொண்டிருந்தபோது, அதற்காக இலட்சக்கணக்கான ரூபாய்களை நாங்கள் செலவு செய்து விளம்பரம் செய்து வந்த போது, ஒரு பத்திரிகை, அதிகமாக யார் குழந்தை பெறுகிறார்களோ அந்தக் குடும்பத்தவருக்குப் பரிசு வேறு கொடுத்துக்கொண்டிருந்தது. அம்மாதிரி கேலிக் கூத்தாக, பெரிய சமூகத் துரோகச் செயல், நாட்டுக்கே ஒரு பெரிய துரோகமான செயல் இருந்தது. சமுதாயப் பிரச்சினையை அம்மாதிரி கேலிக் கூத்தாக ஆக்கிக்கொண்டிருந்த நேரத்தில், அப்பொழுது எதிர்க்கட்சியில் இருந்தவர்கள் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அவர்கள் என்ன சொன்னார்கள்? இதையெல்லாம் மூடி மறைத்து விட்டு . . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** சுயமரியாதைத் திருமணங்கள் நடைபெறுகிற ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் கலந்துகொண்ட திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் அத்தனை பேரும் குடும்பக் கட்டுப்பாட்டை வலியுறுத்திப் பேசியிருக்கிறார்களே தவிர, யாரும், காங்கிரஸ் ஆட்சியினர் அந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள் என்பதற்காக எதிர்த்துப் பேசவில்லை. இன்னும் சொல்லப்போனால், சுயமரியாதை இயக்கத்திலேயே, எங்கள் கொள்கைகளிலே குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டமும் ஒன்றாகும்.

**திரு. எஸ். ராமலிங்கம்:** நன்றி செலுத்துகிறேன். நீங்கள் அதை எதிர்த்துச் சொன்னதாக நாங்கள் சொல்லவில்லை. எதிர்த்துச் சொன்னவர்களோடு உறவு கொண்டிருக்கிறீர்கள் என்று தான் சொல்லுகிறோம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** எங்களுடன் உறவு கொண்ட பிறகு அவர்கள் அந்தக் கொள்கையை மாற்றிக் கொண்டார்கள்.





**திரு. எஸ். ராமலிங்கம்:** இருவருக்குமே நன்றி.

எனவே, இம்மாதிரியான ஒரு பெரிய பிரச்சினையில் நீங்கள் அப்போதே சொல்லியிருந்தால் உங்களுக்கும் சுலபமாக இருந்திருக்கும். காங்கிரஸ்காரர்கள் ஆட்சி செய்தபோது, மக்கள் மத்தியிலே நீங்கள் எங்களைப் பார்த்துக் குறை சொன்னதை வைத்து இப்பொழுதுள்ள ஆட்சியாளர்களுக்கும் அந்தக் குறை வரத்தானே செய்யும்? என்பதற்காகச் சொல்லுகிறேன். ஏதோ தவறான பாதையிலே ஒரு காலத்தில் போயிருந்தாலும், இப்போதாவது காங்கிரஸ்காரர்களைத் திட்டுவதை விட்டுவிட்டு உருப்படியான வழியிலே ஆக்கபூர்வமான வேலைகளிலே, உணவு, உற்பத்தியை பெருக்கும் வகையிலே, விவசாயத்திற்கு ஆக்கம் அளிக்கும் வழியிலே தயவுசெய்து செல்லவேண்டும் என்று இப்பொழுது ஆளும் கட்சியில் உள்ளவர்களை நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இம்மாதிரி சொல்லும்போது, தொழில் துறையைப்பற்றிக் கடைசியில் ஒன்று சொல்லுகிறேன். சேலம் உருக்காலையைப் பற்றி மிகவும் உருக்கமாக நீங்கள் இந்த அறிக்கையில் சொல்லியிருப்பதை நாங்கள் வரவேற்கிறோம். நாங்கள் ஆட்சியில் இருந்த போது நாங்களும் அம்மாதிரி சொல்லிக்கொண்டிருந்தோம். மதிப்பிற்குரிய முன்னாள் அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்களும் "நாங்களே இதை எப்படியாவது கொண்டுவந்து தீருவோம்", "வாதாடிக் கொண்டுவருவோம்" என்று சொன்னார்கள். அப்பொழுது நீங்கள் அதற்காக ஆதரவு கொடுத்தீர்கள். அம்மாதிரி வாதாடுகின்ற ஒரு வாய்ப்பு இன்றைய தினம் மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்களுக்கு இருக்கிறபோது, போராட்டம், கண்டனம், பதவித் துறப்பு, இம்மாதிரி ஏதாவது ஒன்றைச் சொல்லுவது என்றால் அது எனக்கு என்னவோ நல்லதாகத் தெரியவில்லை.

மக்கள் மத்தியிலே, "ரூபாய்க்கு மூன்று படி அரிசி போடுகிறேன்", என்று அப்பொழுது சொல்லி, பிறகு "ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுகிறோம்" என்று சொல்லி, இப்பொழுது எதையாவது சொல்லித் திசை திருப்பவேண்டுமென்று எங்கோ ஒன்றைக் காட்டி, சேலத்திலே இரும்புத் தொழிற்சாலை வரவில்லை, அதற்காகப் பதவி துறந்து ஓடுகிறோம் என்று சொன்னால், இந்த நாட்டை ஆளுவது யார்? நாங்கள் ஐம்பது பேர்கள்தான் இருக்கிறோம். நீங்கள் ஓடிவிட்டால், நீங்கள் மக்கள் மத்தியில் கொடுத்த வாக்குறுதி என்ன ஆவது? அரிசி போட முடியவில்லை அல்லது விவசாயம் செய்வதற்கு காங்கிரஸ்காரர்கள் இடையூறாக இருக்கிறார்கள் என்றெல்லாம் சொல்லி ஓடினாலும் பாவாயில்லை, பதவி துறந்தாலும் பாவாயில்லை. உங்களுக்கோ செல்வாக்கு இருக்கிறது, மக்கள் மத்தியில். அப்படியிருக்க, எங்கோ இரும்புத் தொழிற்சாலை வரவில்லை, சேலத்தில் வரவில்லை, அதற்காக நாங்கள் பதவி துறக்கிறோம் என்று சொல்வது? நாங்கள் பதவியில் இருந்த

காலத்திலும் சேலம் திட்டத்தைக் குறித்துக் கேட்டுக் கொண்டு தான் இருந்தோம். ஆகவே, இம்மாதிரி தவறான வழியில் செல்லாமல், ஆக்கபூர்வமான வேலைகளில் உங்கள் கவனத்தைச் செலுத்தி, நல்லபடியாகத் தொழில்கள் வளர்ச்சி பெறச் செய்ய வேண்டும். மக்கள் மத்தியில், காங்கிரஸ்காரர்கள் இருபது வருஷமாக ஒன்றுமே செய்யவில்லை, ஒன்றுமே செய்யவில்லை என்ற பிரமையை உண்டு பண்ணவேண்டாம் என்று அவர்களை நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். ஒரு அங்கத்தினர் பேசும்போது, காங்கிரஸ் அரசாங்கம் ஒன்றுமே செய்யவில்லை என்று சொன்னார்கள். நாங்கள் ஒன்றுமே செய்யவில்லை என்று அவர்கள் சொல்லுவது உண்மையென்றால், நாங்கள் கட்டியிருக்கும் அணைகளெல்லாம் என்ன ஆவது? காங்கிரஸ் சர்க்கார் போய்விட்ட பிறகு, காங்கிரஸ்காரர்கள் பதவியை விட்டுப் போன பிற்பாடு, அந்தச் சாவியை அவர்களா கொண்டுபோய்விட்டார்கள்? பொதுப்பணி அமைச்சர் அவர்கள்தான் அந்தச் சாவியை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தச் சாவியை நாங்கள் கொண்டு போய்விடவில்லை. நாங்கள் செய்ததெல்லாம் இருக்கிறது. (**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சாவியைக் கொடுத்த முடியாதே.) இம்மாதிரி ஆக்கபூர்வமான வேலைகளில் அவர்கள் அதிகமா நாட்டத்தைச் செலுத்தவேண்டும். காங்கிரஸ்காரர்கள் மீது இனிமேல் அதிகமாகக் கண்டனம் சொல்லாமல், நல்ல முறையில் அவர்கள் நாட்டை நடத்திச் செல்லவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த பட்ஜெட்டில் ஏமாற்றத்திற்குரிய அம்சங்கள்தான் இருக்கின்றன, பாராட்டுவதற்கு ஒன்றும் இல்லை என்று சொல்லி என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

* **திரு. பெ. சீனிவாசன் :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நாடு போற்ற, ஏடு எழுத, நல்லவர் நெஞ்சம் எல்லாம் வாழ்த்துக் கூற, தமிழ்த்தாயின் தலைமகனாம் அறிஞர் அண்ணா அவர்கள் படைத்திருக்கிற நிதிநிலை அறிக்கையை நான் உளப்பூர்வமாக வரவேற்கிறேன். காங்கிரஸ் நண்பர்கள் இந்த நிதிநிலை அறிக்கையைக் குறித்து ஓரிரு குறைகளைச் சொல்லி வந்தார்கள். "ஆசான் மெச்சிய சீடன் இல்லை", "மாமியார் மெச்சிய மருமகள் இல்லை" என்றுதான் பழமொழி சொல்லி வந்தார்கள். ஆனால், இன்று ஆசான் பெரியார் அவர்களே இந்த நிதிநிலை அறிக்கையை மெச்சி இருக்கிறார்கள். காங்கிரஸ் நண்பர்களுக்கு அவ்வளவு கருணை இவ்வளவு விரைவாக வரவில்லையென்று கருதுகிறேன். காங்கிரஸ் நண்பர்கள் இதைக் குறை சொல்வது அவர்களுடைய நல்ல தன்மையை எடுத்துக் காட்டுகிறது. காங்கிரஸ் அணியின் எதிர்ப்புக்கிடையில், கூட்டணிக் கட்சியின் பாராட்டும், கூட்டுறவு அடிப்படையிலே ஒற்றுமையும் இருக்கிறதென்பதைப் பார்க்கும்போது, இந்த நிதி நிலை அறிக்கைக்கு நல்ல வரவேற்பு இருக்கிறதென்று கூறிக் கொள்கிறேன்.



"இந்தப் பட்ஜெட்டில் நீங்கள் என்ன சாதித்துவிட்டீர்கள்?" என்று காங்கிரஸ் நண்பர்கள் கேட்கிறார்கள். இந்தப் பட்ஜெட் வருவதற்கு முன்னாலே நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் கலைஞர் திரு. மு. கருணாநிதி அவர்கள் பஸ் கட்டணத்தைக் குறைத்தார்கள். அரிசி விலையை அறிஞர் அண்ணா அவர்கள் குறைத்தார்கள். காங்கிரஸ் ஆட்சியிலே இதுவரையில் அவர்கள் ஏதாவது குறைத்தார்களா என்றால், வழக்கமாக நடைபெறும் துப்பாக்கிப் பிரயோகத்தினால் இந்த நாட்டு ஜனத்தொகையைத் தான் குறைத்திருக்கிறார்கள். இவர்கள்தான் இன்று நல்ல திட்டங்களைச் சாதிக்க வருகின்ற புதிய ஆட்சிக்கு குறை சொல்ல வந்திருக்கிறார்கள். 'இந்த வரவு செலவு அறிக்கை மிகவும் மோசமானது' என்று காங்கிரஸ் நண்பர்கள் சொல்கின்ற காரணத்தினாலேயே பொதுமக்கள் நிச்சயமாக நம்ப மாட்டார்கள். காங்கிரஸ்காரர்கள் பாராட்டினால்தான் மக்கள் சந்தேகப் படுவார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் கொண்டு வந்திருக்கிற நிதி நிலை அறிக்கையை பொதுமக்கள் நிச்சயம் வரவேற்பார்கள்.

காங்கிரஸ் நண்பர்களிலே சிலர், "சேரணி தேவையில்லை; அது செங்காவலர் படையாக மாறிவிடுமே" என்று குறிப்பிட்டார்கள் ஆனால், பொதுத் தேர்தலுக்கு முன்னால் இருந்த நிலைமை இன்னும் கிராமப் புறங்களில், கொஞ்சம்கூட மாறாத நிலையில் அப்படியே இருந்து வருகிறது. சில இடங்களில் காங்கிரஸ்காரர்கள் போலீஸ் அதிகாரிகளை பழைய பாணியிலேயே மிரட்டிக் கொண்டு வருகிறார்கள். சில இடங்களில் காங்கிரஸ் வட்டாரத்தைச் சேர்ந்தவர்கள், பதவியை இழந்தவர்கள் தங்களுடைய பழைய அதிகாரத்தை வைத்துக்கொண்டே போலீசாரை மிரட்டியும், ஊருக்கு ஊர் கலவரங்களைத் தூண்டியும் வருகின்றார்கள். என்னுடைய தொகுதியான விருதுநகர் தொகுதியிலும், சாத்தூர் தொகுதியிலும், தேனி தொகுதியிலும் காங்கிரஸ் தலைவர்கள் மிகமிக மோசமான முறையில், பொதுமக்கள் மத்தியில் ஜாதி கலவரங்களைத் தூண்டிக்கொண்டு வருகின்றார்கள். வெங்கடாசலபுரத்தில் காங்கிரஸ்காரர்களைக் கைது செய்த கூட்டத்திலே கல் எறிந்து, வாய்க்கு வந்தபடி கேவலமாகப் பேசி கலவரங்களைத் தூண்டினார்கள். போலீசார் தங்களை ஏதோ அரசியல் தியாகிகளைப்போல கைது செய்துகொண்டு போகவில்லையென்று சொல்கிறார்கள். நமது சட்ட மன்ற உறுப்பினர் திரு. ஏ. ஜி. பாலகிருஷ்ணன் அவர்களைக்கூட மருத்துவமனைக்கு அழைத்துச் சென்ற நேரத்தில் கைவிலங்கோடுதான் அழைத்துச் சென்றார்கள். போலீசார் ரௌடித்தனம் செய்தவர்களைப்போல், கிரிமினல் குற்றத்தைச் செய்தவர்களைப்போல் எங்களை அழைத்துச் சென்றார்கள். அரசியல் காரணத்திற்காக அவ்வாறு அழைத்துச் செல்லப்படுவது காங்கிரஸ் கட்சியின் சட்டதிட்டத்தில் வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாம். 'இண்டியன் பீனல் கோடில்' இல்லை. ஆகவே, போலீசார் இப்பொழுது அத்துமீறி எந்த அதிகாரத்தையும் பயன் படுத்தவில்லை.

[திரு. பெ. சீனிவாசன்] [1967 ஜூன் 26

காங்கிரஸ் நண்பர்கள், இன்றையதினம் ஊருக்கு ஊர், கிராமத்திற்கு கிராமம்—காங்கிரஸின் மிகப் பெரிய தலைவர்கள்கூட—மிகக் கேவலமான முறையில், கேவலமான வழிகளில் பொதுமக்களின் மத்தியில் அராஜகத்தை உருவாக்கிக் கொண்டு வருகிறார்கள். விருதுநகர் தொகுதியில் என்னைக் கொலை செய்வதற்கான முயற்சி இன்னும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. காங்கிரஸ் நண்பர்கள் வீதியிலே நின்றுகொண்டு, "இந்தத் தொகுதியிலே மறு தேர்தல் வருகிறது மறு தேர்தல் வருகிறது" என்று சொல்வதை நான் காதால் கேட்டிருக்கிறேன். ஆகவே, அவர்களின் முயற்சியைக் கெடுத்து, தடுத்து நிறுத்திட எங்கே சீரணி வந்து விடுமோ என்று காங்கிரஸ் நண்பர்கள் குறை சொல்லிப் பேசுகிறார்கள். சமுதாய சேவை செய்யவும், பொது அமைப்பில் போலிசாரோடு சேர்ந்து உதவி செய்வதற்கும் இந்தச் சீரணி பாடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்ட பிற அம்சங்களை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். பொது மக்களிலே அத்தனை சாராரும் மனப்பூர்வமாக இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்கிறார்கள். மத்திய அரசின் பட்ஜெட்டிலே தீப்பெட்டித் தொழிலுக்கு வரி போட்டிருக்கிறார்கள். சிவகாசி சாத்தூர், ஏழாயிரம் பண்ணை, வெங்கிடாசலபுரம், கழுகுமலை போன்ற இடங்களில் ஏராளமான உரிமையாளர்கள் தீப்பெட்டித் தொழிற்சாலையை வைத்திருக்கிறார்கள். ஏ.பி.சி.டி. என்ற பிரிவுகளில் பின்தங்கிய மூன்று பிரிவுகளுக்கு முன்பு வரிவிதிப்பு இல்லாமல் இருந்தது. ஆனால் புதிய மத்திய அரசாங்கத்தின் நிதிநிலை அறிக்கையின் மூலம் இன்று தீப்பெட்டித் தொழிற்சாலையின் அத்தனை பிரிவுகளுக்கும் சமமான வரி விதிப்பு போடப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக உரிமையாளர்கள் தங்களுடைய தொழிற்சாலையை மூடிவிட்டார்கள். பெரிய தொழிலதிபர்களுக்கு வரி விதிப்போமானால் அவர்கள் வரிப்பளுவை தாங்க முடியும். சிறிய தொழிலதிபர்கள் வரிப்பளுவைத் தாங்க முடியாமல் தங்கள் தொழிற்சாலைகளையே மூடிவிடுகிறார்கள். இதனால் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படக்கூடும். எனவே இதை நன்குணர்ந்து தீப்பெட்டித் தொழிலுக்கு உதவும்படி மத்திய அரசைக் கேட்டுக் கொள்ள வேண்டுமென்று மாநில அரசாங்கத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கைத்தறி நெசவாளர்களுடைய குறைகள் இன்னும் சரியாக நீக்கப்பட வேண்டும். நம்முடைய மாநில அரசாங்கம், திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் மக்களுடைய குறைகளை நீக்குவதற்காக, கைத்தறி நெசவாளர்களின் கண்ணீரை துடைப்பதற்காக, 'காதி' இலாகாவை உடனடியாக மூடிவிட்டு, அதன் பணம் முழுவதையும் கைத்தறி நெசவாளர்களுக்காகச் செலவிட வேண்டும். வேலையிழந்த கைத்தறி நெசவாளர்களுக்கு



1967 ஜூன் 26] [திரு. பெ. சீனிவாசன்]

நூற்பாலைகளில் உடனடியாக முதற் சலுகை தந்து அவர்களுக்குரிய அலுவல் தரப்பட வேண்டும். கைத்தறி நெசவாளர்களின் நிலை உயர எல்லா வழிகளிலும் அரசாங்கம் முன்வர வேண்டும்.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்கு உரம் வழங்குவதில் போதிய அக்கறை காட்ட வேண்டும். இராமனுதபுரம் பகுதி வறண்ட பிரதேசம். முதுகளத்தூர் பகுதியில் நல்ல நிலங்கள் நிரம்பக் கிடக்கின்றன. அரசாங்கம் கூட்டுறவு முறையில் கிணறுகளை வெட்டி அந்த நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டுவரலாம்.

(மணியடிக்கப்பட்டது.)

என்னுடைய தொகுதியில் துலுக்கப்பட்டி என்ற பகுதியில் சிமெண்ட் தொழிற்சாலை இருக்கிறது. அங்கே இருக்கிற தொழிலாளர்களை அரசியலின் பெயரால் பழி வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். கடைசியாக ஒன்று கூறிக்கொள்கிறேன். காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் இந்த பட்ஜெட்டில் உப்பு, சப்பு இல்லையென்று குறிப்பிட்டார். பொதுவாக ஜுரம் வந்தால்தான் நாக்கிற்கு உப்பு சப்பு தெரியாது. தேர்தல் ஜுரம் அடித்த வேகத்தில் அவருக்கு இந்த பட்ஜெட்டிலுள்ள உப்பு சப்பு தெரியவில்லை. அடுத்த ஆண்டு பட்ஜெட்டிலாவது அவருக்கு ஜுர வேகம் தெளிந்தவுடன் உப்பு சப்பு தெரியும் என்று கூறிக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. ஆர். கருப்பையா: மாண்புமிகு தலைவர் அவர்களே, பி.ப.
1967-68-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது நானும் என் 5-30
கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பாட்டாளி வர்க்கத்தினரும், உழவர் பெருமக்களும் தங்களுக்கு இந்தத் திட்டத்தில் ஆக்கமும், ஊக்கமும் வரும் என ஏங்கிகிடந்தனர். ஆனால் இந்த அறிக்கையைக் கண்டவுனேயே பெரிதும் ஏமாற்றம் அடைந்தனர். வர்த்தகத் துறையினருக்கு சலுகை காட்ட முன் வந்துள்ள இந்த சர்க்கார் விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பலவிதமான இன்னலுக்கும், துன்பத்திற்கும் ஆளாவார்கள் என்று வருந்துகின்றனர். வியாபாரப் பெருமக்கள் கம்பவுண்டிங் செய்து கொள்ளலாம். ஆனால் அந்தச் சலுகை விவசாயப் பெருமக்களுக்கு கிடையாது என்றால் இவர்களால் எப்படிக் கணக்கு வைத்துக் கொள்ள முடியும்? அதுவும் கிராமப் பகுதியில் எழுத்து வாசனை அறிவு இல்லாத மக்கள் அதிகம் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் இன்றைக்கு கணக்கு வைத்துக்கொள்ள வேண்டுமென்றால் பலவிதமான இன்னலுக்கும், துன்பத்திற்கும் ஆளாவார்கள் என்று நம்புகிறேன். விவசாயப் பெருங்குடி மக்களால்தான் நாடு வாழும், நாட்டு மக்கள் வாழ முடியும் என்று பேசுகின்றோம். ஆனால் யாரும் விவசாயப் பெருமக்களைப் பொறுத்தவரையில் உதவி செய்ய முன்

[திரு. ஆர். கருப்பையா] [1967 ஜூன் 26

வருவதில்லை. இந்த ஆட்சியிலும்கூட அவர்களுக்கு இன்னல் இழைக்கப்பட்டிருப்பதைக் கண்டு உண்மையிலேயே நான் வருந்து கிறேன்.

அடுத்தது, நிலவரி நீக்கம். புஞ்சை நிலங்களுக்கு வரி விலக்கு அளித்துள்ளது போல நஞ்சை நிலங்களுக்கும் வரி விலக்கு அளிக்க முன்வந்தால்தான் நல்ல பலன் ஏற்படும். விவசாயச் செலவுகள் பெருகி வருகின்றன. இன்றைய தினம் உடையார்பாளையம் பகுதி யில் படி அரிசி 1½ ரூபாய், 2 ரூபாய் விற்கிறது. நாள் ஒன்றுக்கு 1¼ ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்க முடியாத ஏழை விவசாய மக்கள் 1½, 2 ரூபாய் கொடுத்து அரிசி வாங்கிச் சாப்பிடுகிறார்கள். ஆனால் நாள் ஒன்று நான்கைந்து ரூபாய்க்கு மேல் வருமானம் பெறக்கூடிய தொழிற்பேட்டைப் பகுதிகளில், தொழில் வளம் உள்ள பகுதிகளில் இந்த அரசு ரூபாய்க்கு ஒரு படி என்று அரிசி கொடுப்பது பாராட்டத்தக்கதாக இல்லை.

அடுத்து, அலுவலர்கள் அடிக்கடி மாற்றப்பட்டு வருகிறார்கள். குறிப்பாக திருச்சிக்கு ஒண்ணரை மாதங்களுக்கு முன்பு போடப் பட்ட கலெக்டர் உடனடியாக மாற்றப்பட்டிருக்கிறார். இப்படி அடிக்கடி அலுவலர்கள் மாற்றப்படுகிற காரணத்தினால் வேலை ஒழுங்காக நடைபெறுவதில்லை. அவர்கள் வேலை செய்வதற்கும் அதிகாரிகளை மாற்றாது இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

அடுத்து, எதற்கெடுத்தாலும் மத்திய சர்க்கார்மீது பழி போடுகிற நிலை வளர்ந்து வருகிறது. அப்படிச் சொல்வது பொருத்தமாகவும் இல்லை. நமது மாநில நிதிக்கேற்ற வகையில் மக்களுக்கு நம்மால் செய்யக்கூடிய காரியங்களை திறம்பட நாம் செய்தாக வேண்டும். அதைவிட்டு மத்திய சர்க்காரின்மீது பழியைப் போட்டுத் தப்பித்துக்கொள்வது அறிவுடைமை ஆகாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். இருபது ஆண்டுகளாக அதைச் செய்யவில்லை, இதைச் செய்யவில்லை என்று குற்றம் சாட்டிக் கொண்டே போவதைவிட நாம் அந்தக் காரியங்களைச் செய்து காட்டவேண்டும். குறிப்பாக ஜெடர்பாளையத் திட்டத்தை எடுத்து நிறைவேற்றியாக வேண்டும். மேலும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. உடனடி யாக அரியலூரில் ஓர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை ஏற்படுத்தியாக வேண்டும் என்று தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

***திரு. பெ. பெரியசாமி:** கனம் சபைத் தலைவர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கையின்மீது பேச சந்தர்ப்பம் அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1967 ஜூன் 26] [திரு. பெ. பெரியசாமி]

அடுத்து, நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சமர்ப் பித்த பட்ஜெட் உரையில் புஞ்சை நிலங்களுக்கு நிலவரியை ரத்து செய்திருப்பதை நான் மிகவும் பாராட்டுகிறேன். காரணம், முந்திய சர்க்கார் இருபது ஆண்டு காலம் ஆண்டபோதிலும் தேர்தல் காலப் பிரச்சாரமாக நிலவரியை ரத்து செய்வோம் என்று கூறினார்கள். அவர்கள் ஆண்ட வரையிலும் ரத்து செய்யவில்லை. நமது சர்க்கார் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன் நமது நிதி நிலைமை மிகவும் நெருக்கடியாக இருந்தபோதிலும் விவசாய மக்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடு புஞ்சை நிலங்களுக் கான வரியை ரத்து செய்திருக்கிறார்கள். இதனால் ஒண்ணரை கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டபோதிலும் ஏழை விவசாயிகளுக்கு நன்மை செய்திருக்கிறார்கள்.

எனது மாவட்டமான சேலம் மாவட்டத்தில் ராசிபுரம் தொகுதி யில் விவசாயம் பெரும்பாலும் கிணறுகளை நம்பியே நடைபெறு கிறது. அங்கு பலவிடங்களில் மேல்மட்டங்களில் பாறை இருப்ப தால் கிணறுகளை ஆழப்படுத்த முடியவில்லை. பாறையைப் பிளந்து கீழே போனால் தண்ணீர் கிடைக்கும். பாறையைப் பிளக்கப் போதிய வசதியின்றி விவசாயிகள் நஷ்டப்படுகிறார்கள். ஆகவே குழாய்க் கிணறுகள் தோண்டக்கூடிய, ஐநூறு அடியில் இருந்து ஆயிரம் அடி வரையிலும் தோண்டக்கூடிய, கருவிகளை விவசாயிகளுக்குச் சர்க்கார் வாங்கித் தரவேண்டும். அப்படிச் செய்தால் ஆயிரக்கணக்கான ஏக்கரா தரிசு நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டுவர முடியும்.

அடுத்து, எனது ராசிபுரம் தொகுதியை எடுத்துக்கொண்டால் தொழில் துறையில் அது பின் தங்கியிருக்கிறது. அங்கு ஏதாவது புதிதாகத் தொழில் ஆரம்பிக்க வேண்டுமென்றாலும் லைசென்சு பெறுவதில் சில கஷ்டங்கள் இருக்கின்றன. எந்தத் தொழிலையும் ஆரம்பிக்க முடிவதில்லை. ஆகவே சுலபமாக லைசென்சு பெறுவதற் குரிய வகையில் சில விதிவிலக்குகள் அளித்தால் நகரம் தொழில் துறையில் வளர்ச்சிகான வாய்ப்பாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, ராசிபுரம் நகரசபை சார்பில் ஓர் உயர்நிலைப் பள்ளி அங்கே நடைபெற்று வருகிறது. மானேஜ்மெண்டு பேரில் போதிய மானியம் கிடைக்காததால் அந்தப் பள்ளியினால் நகரசபைக்கு நஷ்டம் ஏற்படுகிறது. நகரசபை வருமானம் குறைவாக இருப்ப தால் நகரசபை ஒருவித அபிவிருத்தியும் செய்ய முடிய வில்லை. ஆகவே அந்தப் பள்ளியை சர்க்கார் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, எனது தொகுதியில் ஏராளமான உயர்நிலைப் பள்ளிகள் இருந்தும் கல்லூரி இல்லாமையினால் வருடா வருடம் மாணவர்கள் சிரமத்திற்கு ஆளாகிறார்கள். ஆகவே, நமது சர்க்கார் அடுத்த கல்வியாண்டிலாவது எனது தொகுதியில் ஓர் கலைக் கல்லூரியையாவது ஏற்படுத்த வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. பெ. பெரியசாமி] [1967 ஜூன் 26

நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் மிகவும் துணிச்சலாகக் கட்சியின் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்ட திட்டங்களில் ஒன்றான பஸ்களை தேசியமயமாக்கும் திட்டத்தை மேற்கொண்டிருப்பதற்குப் பாராட்டுகிறேன். எழுபத்தைந்து மைல்களுக்கு உட்பட்ட ரூட்டுகளை எடுத்துக்கொள்வதை ஆதரிக்கிறேன். அடுத்து, ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டத்தைக் குறிப்பிட்ட இடங்களில் அமல் நடத்துவதை விஸ்தரிக்க வேண்டும். கிராமப் புறங்களில் நெல் விலை ஏறியிருப்பதனால் நெசவாளர்களின் வாழ்க்கையில் எற்பட்டுள்ள கஷ்டத்திற்கு உடனடியாகப் பரிகாரம் காணுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. எ. பட்டாபி நாயுடு: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தைப் பார்க்கும்போது உள்ளபடியே இது மக்களுக்கு ஓர் ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறதென்று சொல்ல வேண்டியதாய் இருக்கிறது. அதாவது இன்றைய ஆளும் கட்சி இந்த அவையில் எதிர்க்கட்சியாக இருந்த காலத்தில், அன்றைக்கு இருந்த அரசு ஏராளமாக மக்கள் மீது வரி விதித்தது என்றும், அதைத் தாங்கக்கூடிய அளவில் மக்கள் இல்லை என்றும் பேசி வந்தார்கள். அப்படி இருக்க இவர்கள் ஆட்சிக்கு வந்த காலத்து இவர்கள் கொண்டு வருகிற பட்ஜெட்டில் எவ்வித வரி விதிப்பும் இருக்காது என்று மக்கள் நினைத்தார்கள். ஆனால் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் இவர்களும் பல வரிகளை விதித்திருக்கிறார்கள் என்பதனால் மக்கள் பெரிய ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள் என்பதில் எந்த விதமான ஐயப்பாடும் இல்லை என்று சொல்ல வேண்டியதாய் இருக்கிறது. அப்படி இருக்க இன்றைய அரசு பஸ் போக்குவரத்துக்களை ஏற்று நடத்துகிறது என்றால் அது பாராட்டக்கூடிய விஷயம் ஆகும். ஆனால் ஒரு மனிதனுடைய உரிமையைப் பறிக்கக்கூடிய வகையிலே அந்தத் திட்டம் அமைந்திருக்கிறது. பஸ் போக்குவரத்தைத் தேசியமயமாக்குவதை நான் பாராட்டுகிறேன். ஆனால் அதே நேரத்தில் பஸ் முதலாளிகளுக்குப் பெர்மிட் கொடுத்ததினால்தான் அவர்கள் 50 ஆயிரம், 60 ஆயிரம் என்று முதலீட்டைப்போட்டு, பல இடங்களில் கடனோடுகூட பஸ்களை வாங்கியிருக்கலாம். அவர்கள் அந்த பெர்மிட்டை நம்பித்தான் பஸ்களை வாங்கியிருப்பார்களே தவிர, பெர்மிட் இல்லாமல் இருந்தால் வாங்கியிருக்கமாட்டார்கள். பெர்மிட்டைக் கொடுத்துவிட்டு பஸ்ஸை மாத்திரம் விட்டுவிட்டு பெர்மிட்டை மாத்திரம் பறிமுதல் செய்துவிட்டால் அவர்களுடைய நிலைமை என்ன ஆகும்? ஆகவே, ஜீவாதார உரிமையைப் பறிப்பது உகந்தது அல்ல; அது ஜனநாயகத்திற்கும் ஏற்றதல்ல என்று நான் இந்த மன்றத்திலே எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, ஒரு படி அரிசி போடுகிறார்கள். போடுவது எல்லாம் நகர்ப்புறங்களுக்கே, அதாவது கோவையிலும் சென்னையிலும்தான் போடுகிறார்களே தவிர, மற்ற இடங்களில் போடவில்லை. உண்மை



1967 ஜூன் 26] [திரு. எ. பட்டாபி நாயுடு]

யாகவே விவசாயிகளை எல்லாம் இவர்கள் நிலச்சுவான்தார்கள் என்று நம்பிக்கொண்டிருக்கிறார்கள் என்றுதான் நினைக்கிறேன். கிராமங்களிலே இருப்பவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் கூலிக்காரர்களாகத்தான் இருக்கிறார்கள். அவர்கள் உழைத்தால்தான் உற்பத்தி ஏற்படும். விவசாயிகள்தான் முதுகெலும்பு என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். பேச்சிலே மாத்திரம் விவசாயி முதுகெலும்பு என்று சொல்கிறார்களே தவிர, விவசாயிகளுக்கு எந்தவிதமான நன்மையையும் அளிக்கவில்லை இந்த வரவு-செலவுத் திட்டத்திலே. கிராமங்களில் உள்ள விவசாயிகள், கூலியாட்கள் ஏதோ உணவு தானியங்களை அறுவடைக் காலத்திலேதான் பெறுகிறார்கள். மற்ற காலங்களில் அவர்களுக்கு உணவு தானியங்கள் கிடைக்காது. அந்த நேரத்திலே குடும்பக் கார்டு இருந்தால் அதை வைத்துக்கொண்டு மிகக் குறைந்த விலையிலே உணவு தானியங்களை வாங்கிக்கொள்ள ஏதுவாக இருக்கும். அந்த முறையில் இன்று ஒன்றும் செய்யப்படவில்லை. வருவாய் அதிகமாக இருக்கின்ற சென்னையிலும், கோயம்புத்தூரிலும்தான் ஒரு படி அரிசித் திட்டத்தை அமல் செய்திருக்கிறார்களே தவிர மற்ற இடங்களிலே விலை ஏறியிருக்கிறது; அதையெல்லாம் கட்டுப்படுத்தி ஆகவேண்டும்; அங்கேயெல்லாம் ஒரு படி அரிசி போட முன் வராதது வருந்தத்தக்கதாகும். அடுத்தது கடன்களைப்பற்றிச் சொன்னார்கள். அரசு 300 கோடி ரூபாய்க்குக் கடன் வைத்து அதற்காக 14 கோடி ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு வட்டியாகச் செலுத்தப்படுகின்ற நிலையை வைத்துவிட்டது என்று பேசப்படுகிறது. முன்னூறு கோடி ரூபாயை மந்திரி சபையில் உள்ளவர்கள் தங்கள் வீட்டுக்கு எடுத்துச் சென்றுவிட்டார்களா? அல்லது 300 கோடி ரூபாயை அவர்களுடைய சொந்தக்காரர்களுக்கு அள்ளிக் கொடுத்து விட்டார்களா? அல்லது அந்த அரசிலே இடம் பெற்றிருந்த அங்கத்தினர்கள் பங்கு போட்டுக்கொண்டு விட்டார்களா? என்று அவர்கள் தெளிவாகச் சொல்லவில்லை. அவர்கள் சொல்வது எல்லாம் 300 கோடி ரூபாய் கடனை வைத்துவிட்டுச் சென்றுவிட்டார்களே என்பதேயாகும். 300 கோடி ரூபாய் பணத்தை 500 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்தாக வைத்துச் சென்று இருக்கிறார்களே தவிர பாழாக்கவில்லை. ஐந்நூறு கோடி ரூபாய் சொத்தை இந்த அரசிடம் ஒப்படைத்துச் சென்றிருக்கிறார்கள், அதை மக்களுக்கு நல்ல பலனளிக்கக்கூடிய முறையிலே செய்து வைத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்ததாக, விவசாயத்தைப்பற்றி மாத்திரம் இரண்டொரு கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், அன்றைய அரசு செய்ததைவிட இன்றைய அரசு ஒன்றும் தீவிரமாய்ச் செய்யவில்லை. அன்றைக்கு பம்புசெட் கடன், எருக் கடன், எருதுக் கடன், கிணறு வெட்டக் கடன் இவற்றைக் கொடுத்து வந்தார்கள். அதைத்தான் எந்தவிதமான மாறுதலும் இல்லாமல் இவர்கள் செய்கிறார்கள். வேறு எதுவும் செய்யவில்லை. இந்த

[திரு. எ. பட்டாபி நாயுடு] [1967 ஜூன் 26

முறையிலே சென்றால் நமக்கு எந்த விதமான உணவுப் பண்டங்களும் இல்லாமல் போய்விடும். அதற்குப் பல திட்டங்கள் வகுக்க வேண்டும்.

THIRU B. VENKATASWAMY: Mr. Chairman, Sir, as I cannot express my views clearly in English or Tamil, I may be permitted to speak in Telugu.

MR. CHAIRMAN (Thiru P. Malaichamy): The hon. Member can speak in English.

THIRU B. VENKATASWAMY: I cannot express my ideas in English.

MR. CHAIRMAN: The hon. Member can speak in Telugu (Then Thiru B. Venkataswamy spoke in Telugu).

THIRU B. VENKATASWAMY spoke in Telugu.

**திரு. ஆர். என். அரங்கநாதன்:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, விவாதத்தில் இருக்கின்ற நிதிநிலை அறிக்கை, கொள்கை ரீதியாக இருந்து சில முற்போக்கான கருத்துக்களைச் செயல் முறையில் கொண்டுவருகிற சீரிய முயற்சியில் இந்த அரசு இறங்கியிருக்கிறது என்பதைத் தெளிவுபட, எடுத்துக்காட்டுவதாக அமைந்திருக்கிறது குறிப்பாக, முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே மத்திய சர்க்காருடைய மனப் போக்கிலே மாற்றம் இருக்க வேண்டுமென்பதற்காகச் சுட்டிக் காட்டியிருக்கும் காரணங்கள் உடனடியாக, அவசரமாக, அவசியமாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை என்பதை இந்த நாட்டு நலனில், குறிப்பாக பொருளாதார வளர்ச்சியில், அக்கறை கொண்ட யாரும் மறுக்க முடியாது. இதிலே நாம் எவ்வளவுதான் விவாதித்துக்கொண்டிருந்தாலும் மத்திய சர்க்கார் செய்யத் தவறியது, செய்வதற்குத் தங்களுடைய கவனத்தைச் செலுத்தாமல் இருப்பதை எவ்வளவு தான் சுட்டிக் காட்டினாலும்கூட, இந்திய அரசியல் சட்டத்தின் 280-வது பிரிவையும், இந்திய அரசியல் சட்டத்தில் இருக்கும் மூன்று பட்டியல்களான ஸ்டேட் லிஸ்ட், சென்ட்ரல் லிஸ்ட், கன்கரன்ட் லிஸ்ட் ஆகியவற்றிலே சீரிய மாற்றத்தையும் ஏடுபடுத்தினாலொழிய, இன்றையதினம் மாநில சர்க்காருக்கும், மத்திய சர்க்காருக்கும் இடையே உள்ள மனமாச்சரியங்கள் தீர வழி ஏற்பட முடியாது. அதற்காகத்தான், நமது முதலமைச்சர் அவர்கள் நான்காவது நிதிக் குழு ரெகமென்டேஷனை, சிபாரிசை, நன்றாகக் கோடிட்டுக் காட்டி, இந்த நிதிக் குழு ஐந்தாண்டுக்கு ஒரு முறை நியமிக்கப்படுகிற இந்த முறையை மாற்றி, அவ்வப்போது மாநில சர்க்கார்கள் திட்டத்தை அமல் செய்வதிலே ஏற்படுகின்ற மாறுபட்ட அவசியங்களை, தேவைகளைக் கலந்து ஆலோசித்து நிதியை ஒதுக்குகின்ற முறை அனுஷ்டிக்கப்படுவதற்காக நிதிக் குழுவை நிரந்தரமான குழுவாக அமைக்க மத்திய சர்க்கார் முன்வரவேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறார்கள்.



1967 ஜூன் 26] [திரு. ஆர். என். அரங்கநாதன்]

இந்த யோசனையை, இந்தக் கருத்தை, மத்திய சர்க்கார் உடனடியான பிரச்சினையாகக் கருதி, நான்காவது நிதிக் கமிஷன் சிபாரிசு செய்திருக்கின்றபடி, உடனடியாக 'எக்ஸ்பர்ட் பாடி' போட்டு, மாநில சர்க்கார் மீது சுமத்தப்பட்டிருக்கும் கடன் சுமை, வசூலிக்கப்படுகிற வட்டி விகிதங்கள் ஆகியவை மட்டுமல்லாமல், திட்டங்களை அமல் படுத்துவதிலே ஏற்படுகின்ற சிரமங்கள், சங்கடங்கள் பற்றியும் ஆராய்ந்து அறிந்து நல்ல தீர்வு காண்பதற்குரிய முறையில் நிதிக் குழுவை நிரந்தரமானதாக மாற்றவேண்டுமென்பது அவசியமான காரியமாகும்.

அதுமட்டுமல்லாமல், திட்டங்களுக்காக ஒதுக்கப்படுகிற நிதியைப் பரிசீலிப்பதற்குத் திட்டக் குழு தனியாகவும், இந்திய அரசியல் சட்டப்படி நிதிக்குழு தனியாகவும் இயங்கி வருகின்ற காரணத்தால் திட்டத்திற்காக மத்திய சர்க்காருக்குத் தேவைப்படுகின்ற நிதியை இந்திய அரசியல் சட்டத்தின் நிதிக் குழுவில் இருந்து கோர முடியாத துர்ப்பாக்கிய நிலை இருக்கிறது. ஆகவே, மத்திய சர்க்கார், என்னுடைய கருத்தின்படி, நிதிக் குழுவையும் திட்டக் குழுவையும் இணைத்து ஒரே குழுவாக ஜனாதிபதி நியமிக்கும் அதிகாரத்தைக் கொடுக்கும் வகையில், 280-வது பிரிவை மாற்றி, திருத்தியமைத்தால் நல்லது. அரசியல் சட்டத்திற்கு மத்திய சர்க்கார் எவ்வளவோ திருத்தங்களைச் செய்திருக்கிறது. அவசியமில்லாத திருத்தங்களையெல்லாம் அவசரம் அவசரமாகச் செய்திருக்கிறது. அத்தியாவசியமான இந்தத் திருத்தத்தைச் செய்தால் இந்தியக் குடியாட்சி முறை சிறந்த குடியாட்சி முறையாக அமையும்.

அடுத்தபடியாக, என்.ஜி.ஓ.-க்களுக்கு- கெஜட் பதிவு பெறாத சிப்பந்திகளுக்கு—யாதொரு பரிகாரத்தையும் முதலமைச்சர் அவர்களுடைய நிதிநிலை அறிக்கையிலே காணவில்லை என்று குறிப்பிட்டார்கள். இந்த நேரத்திலே, முன்னாள் பிரதம நீதிபதி கஜேந்திர கட்கர் தலைமையில் நியமிக்கப்பட்ட டி.ஏ. கமிஷன் ஒரு ரிப்போர்ட்டைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதிலே 'எவ்வளவு தான் மாநில சர்க்காரானாலும் சரி, மத்திய சர்க்காரானாலும் சரி, பஞ்சப்படியை உயர்த்திக்கொண்டே வருவதால் சிப்பந்திகளுடைய பிரச்சினைகளை, துயரங்களைத் துடைத்து விட்டதாகச் சொல்ல முடியாது. விஷம் போல் ஏறிக்கொண்டிருக்கும் விலைவாசியைக் கட்டுப்படுத்தினாலொழிய பஞ்சப்படி கொடுப்பதிலே அர்த்தம் இருக்க முடியாது. இதை எல்லாச் சர்க்கார்களும் உடனடியான பிரச்சினையாகக் கருத வேண்டும்' என்று கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். ஏற்கனவே கொடுக்கப்பட்ட பஞ்சப்படி உயர்வின் காரணமாக, இந்த ஐந்தாண்டுக் காலத்தில் 45 கோடி ரூபாய்க்கு மேல் சமாளிக்க வேண்டுமென்பதோடு மட்டுமல்லாமல், இன்னும் உடனடியாக ஏதேனும் கொடுத்தால் அழும் பிள்ளைக்கு வாழைப் பழம் கொடுத்தது போல்தான் இருக்குமே தவிர அவர்களுடைய வாழ்க்கையிலே வளத்தைக் காணமுடியாது என்ற காரணத்தால்

[திரு. ஆர். எஸ். அரங்கநாதன்] [1967 ஜூன் 26

தான் விலைவாசியைக் குறைக்க இந்த மாநில சர்க்கார் உடனடிப் பிரச்சினையாக எடுத்துக்கொண்டு அதன் ஆரம்பப் படியாக, ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டத்தினைக் குறிப்பிட்ட நகரங்களில் அமலாக்கியிருக்கிறார்கள். அவ்வாறு ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டத்தை அமலாக்கும் விதத்திலே, விளைச்சலை, உற்பத்தியைப் பெருக்குவதற்காக 5.27 லட்சம் ஏக்கர் நிலங்களில் இன்றையதினம் அதிக உற்பத்தியைக் கொடுக்கும் ரகங்களான ஏ.டி.ட்டி. 27 போன்ற ரகங்களைப் பயிரிடத் திட்டமிட்டிருக்கிறார்கள். வருகின்ற நிதியாண்டில் மேலும் 17 லட்சம் ஏக்கர் நிலங்களில் அதிகப்படியாக விவசாயம் செய்வதற்கான திட்டத்தைக் கூறியிருக்கிறார்கள். இந்த நேரத்தில் ஏ.டி.ட்டி. 27 நெல் ரகத்தைத் தமிழகத்தில் இருக்கும் விவசாயிகள் அவ்வளவு பேரும் வரவேற்கிறார்களா என்பதை விவசாயத்துறை அமைச்சர் அவர்கள் பரிசீலித்துப் பார்க்கவேண்டுமென்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். காரணம் மத்திய சர்க்காரால் கொடுக்கப்பட இருக்கும் 83,000 டன் உரத்தையும் கொடுக்கும்போது கண்டிஷன் போட்டுக் கொடுக்கிறார்கள். 83,000 டன் உரத்தையும் தமிழக மாநிலத்தில் இருக்கும் விவசாயிகள் ஏ.டி.ட்டி. 27-ஐப் போட்டால் தான் விநியோகிக்க வேண்டுமென்ற நிபந்தனையின் பேரில் கொடுக்கும் காரணத்தால் அநேக விவசாயிகள் பாரம்பரியமான ரகத்தை மாற்றி வேறு ரகத்தைப் போடத் தெரியாத காரணத்தால் அந்த உர விநியோகத்திலே மற்றப் பயிர்களுக்கும் தாராளமாகக் கொடுப்பதற்கு வழி செய்யவேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நிலத் தீர்வை விலக்கில் நஞ்சை நிலங்களுக்கு விலக்கு அளிக்கவில்லை என்று காங்கிரஸ் மெம்பர்கள் குறைபட்டுக் கொண்டார்கள். ஆனால் மதிப்பிற்குரிய பக்தவத்சலம் சர்க்கார் நியமித்த—ஸ்பெஷல் ஆபீசர்—விசேஷ அதிகாரியின் ரிப்போர்ட்டின்படி இந்த நிதி ஆண்டில் புஞ்சை நிலங்களுக்கு மட்டும் கொடுத்து நஞ்சை நிலங்களுக்குக் கொடுக்காத காரணத்தை அந்த விசேஷ அதிகாரி கூறுகின்ற நேரத்தில் . . .

Segregation of the basic land revenue from the total assessment is not possible unless simultaneous legislation is brought to fix the water rates on the basis of the sources of irrigation.'

என்ற காரணத்தைக் காட்டித் தண்ணீர் தீர்வை விதிப்பதற்கு ஒரு சட்டத்தை அமல் நடத்தினால்தான் நன்செய் நிலங்களுக்குள்ள தீர்வையை எடுக்க முடியும் என்ற சிக்கலான பிரச்னையை எழுப்பியிருக்கிறார்கள். ஆகவே நிலத் தீர்வை விவகாரத்தில் எல்லோருக்கும் முடியுமளவிற்கு சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. எல்லாத் தரப்பினரும் வரவேற்பு அளிக்கக் கூடிய வகையில் உள்ள அம்சங்கள் இந்த அறிக்கையில் பொருந்தியிருப்பதால் இந்த பட்ஜெட்டை எல்லோரும் மனமார வரவேற்கவேண்டும், வாழ்த்த வேண்டும் என்று கூறி இத்துடன் என் உரையை முடித்துக் கொள்கிறேன்.



1967 ஜூன் 26]

* **திரு. அ. மாரிமுத்து** : அவைத் தலைவர் அவர்களே, 1967-68-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் மீது நானும் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த அவையில் பத்து தினங்களாக நடைபெறும் விவாதத்தைப் பார்க்கும்போது விவசாயம், உணவு பி. ப. 6-00 உற்பத்தி இவைதான் நிறைந்திருக்கின்றன. கவர்னர் பெருமான் உரையிலும், முதல் அமைச்சர் அவர்களின் உரையிலும் கூட உணவு உற்பத்தியைத்தான் பெரியதொரு காரியமாக எடுத்து உரையாற்றி இருக்கிறார்கள். அதில், தஞ்சை மாவட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தும் பேசியிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டம் ஆடுதுறையைச் சார்ந்தவன் என்ற முறையில் நான் என் கருத்துக்களை இந்த அவைமுன் வைக்க விரும்புகிறேன். தஞ்சை மாவட்டம் தென்னாட்டின் நெல் களஞ்சியம் என்றிருந்த போதிலும், அங்கு அதிதீவிர சாகுபடித் திட்டம் அமலில் இருந்தாலும் இரண்டு ஆண்டுகளாக விவசாய வளர்ச்சிக்கு இயற்கைதான் முக்கிய காரணம் என்பதை அறிந்திருக்கிறோம். இரண்டு வருடங்களாக அங்குள்ள விவசாய மக்களுக்கு ஏற்பட்ட இன்னல்களை நீக்குவதற்கு முந்தைய சர்க்கார் பம்புசெட்டுகளுக்காக கடன் உதவி அளித்தும், பாசனத்திற்காக தண்ணீர் இறைக்கவும் பல வசதிகளைச் செய்து கொடுத்திருந்தார்கள். அதை நல்ல முறையில் அங்குள்ள விவசாய மக்கள் பயன்படுத்திப் பலன் அடைந்திருக்கிறார்கள். இறைவைப் பாசனத்திற்காக இயந்திரங்களுக்காக லோன்கள் கொடுக்கப்பட்டும், மின்சார இணைப்பு வசதிகள் கிடைக்காததால் ஒரு சில இயந்திரங்கள் இயங்காமல் இருப்பது வருந்தத் தக்கதாகும். பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் குடந்தைக்கு வருகை தந்தபோது அதுபற்றிக் கருத்தரங்கில் எல்லோரும் ஒருமித்த குரலில் இதுபற்றி எடுத்துரைத்தார்கள். ஆடுதுறைப் பகுதியில் மன்னியாறு, பழவாறு என்றிருக்கின்றன. 'மழை பெய்தால் மன்னியாறு, இல்லாவிட்டால் மண்ணாறு' என்ற குரல் கருத்தரங்கில் எழுப்பப்பட்டதைப் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் அறிந்து கொண்டிருப்பார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : மன்னியாறு பற்றி அங்கேயே உத்தரவிடப்பட்டு வேலைகள் தொடங்குவதற்கான காரியங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன என்பதை உறுப்பினர் அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

**திரு. அ. மாரிமுத்து** : அங்கு, எங்கள் மாவட்டத்தில் இயற்கைக் கோளாறினால் விவசாயிகளுக்கு ஏற்பட்ட இன்னல்கள் பலபல. அந்தச் சமயத்தில் கூட்டுறவு நாணய சங்கம் மூலம் விவசாயிகளுக்கு கடன் கொடுக்கப்பட்டு அவர்கள் அந்தக் கடனைத் திருப்பித் தர முடியாத நிலையில் இருப்பதுபற்றி அமைச்சர் அவர்கள் அந்தக் கருத்தரங்கில் இருந்து அறிந்து கொண்டிருப்பார்கள். ஆகவே, அந்த விவசாய மக்களின் இன்னலைப் போக்குவதற்கு ஒன்றிரண்டு ஆண்டுகள் அந்தக் கடனைத் தள்ளிக் கொடுத்து தவணைக் கடனைக் வசூலிக்கவும், அந்தத் தவணைக் காலக் கடனையும்

[திரு. ஆ. மாரிமுத்து] [1967 ஜூன் 26

சிறிது வட்டி குறைத்து வசூலித்து விவசாயிகளுக்குச் சலுகைகள் காட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 'கெட்டவன் மேலும் கெடுவான்' என்ற பழமொழிக்கேற்ப கடன் பாக்கியுள்ள விவசாயிகள் புது வருடத்தில் கடன் பெறுவதற்கு முடியாதவர்களாக இருக்கிறார்கள், ஆகவே, அவர்களுக்குத் தக்க சலுகைகள் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகள் முன்னேற்ற எண்ணமுடைய தூண்டா மணி விளக்கு என்று முதல் அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆகவே, அந்த விவசாயிகளுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் அரசாங்கம் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகளை மூன்று பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். வீட்டேருக்காரர்கள், மாட்டேருக்காரர்கள், கையேருக்காரர்கள் என்று மூன்று வகை உண்டு. இந்த வீட்டேருக்காரர்கள் நிலப் பட்டாக்காரர்களாக இருப்பவர்கள். மாட்டேருக்காரர்கள் உழுவதற்கு உரிமை பெற்றவர்கள். கையேருக்காரர்கள் நித்தியக் கூலிகள். இந்த கையேருக்காரர்கள்தான் 65 சதவிகிதத்தினராக இருக்கிறார்கள். முந்திய இரண்டு பாத்தியதைக்காரர்களும் பல சலுகைள் பெற்றிருக்கிறார்கள். ஆனால் இந்த கையேருக்காரர்கள் 65 சதவிகிதத்தினரும் ஏழை மக்களாக தினக் கூலிகளாக இருக்கிறார்கள் ஒருவிதச் சலுகையும் பெறாமல். ஆகவே, இந்த தினக் கூலிகளுக்கு கூலி நிர்ணயம் செய்வதும் குடியிருப்புப் பாதுகாப்பு அளிப்பதும் அவசியம். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை இந்த அரசாங்கம் செய்து கொடுப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முன்பு அவர்களுக்கு தானியக் கூலி கிடைத்து வந்தது. தற்போது பணக்கூலி கிடைக்கும் நிலை தான் தஞ்சையில் இருக்கிறது.

*** திரு. எஸ். கே. வடிவேலு :** மன்றத் தலைவர் அவர்களே, இந்த 1967-68-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது என்னைப் பேச அழைத்ததற்கு என் நன்றியையும், வணக்கத்தையும் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். இருபது வருடங்களாக காங்கிரஸ் அரசாங்கம் ஏற்று நடத்திய திட்டங்களைப் போல் இல்லாது புதிய அரசு நல்ல திட்டங்களைக் கொடுத்து விவசாய உற்பத்தி அதிகமானால்தான் மக்கள் நல்ல முறையில் வாழ முடியும் என்று பல நல்ல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். நடுத்தர மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பி.யு.சி. படிப்பை இலவசமாகக் கொடுத்து அவாகள படிதது நல்ல முறையில் முன்னேற வழி செய்திருக்கிறார்கள். நம் மாநிலம் பெரும்பாலும் விவசாயிகளைக் கொண்டிருப்பதால் விவசாயம் முன்னேறினால்தான், விவசாய உற்பத்தி அதிகமானால்தான், மக்கள் நல்ல முறையில் வாழ முடியும் என்று சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் போன்ற திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறது நம் புதிய அரசு. அதற்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன். அதேபோன்று நெசவுத் தொழிலாளர்களுக்கும் கடன் உதவி போன்ற உதவிகளை அளித்து அவர்களுக்கு நல்ல முறையில் தொழில் நடத்த உதவி செய்யவேண்டும்,



1967 ஜூன் 26] [திரு. எஸ். கே. வடிவேலு]

மில்லில் இருந்து வரும் வேஷ்டிகளுக்குத் தடை விதித்து கைத்தறிக்கு அதைத் தந்து கைத்தறி நெசவாளர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் பகுதியில் உள்ள ஜேடர்பாளையம் வாய்க்காலைப்பற்றி அடிக்கடி கூறிக்கொண்டிருக்கிறார்கள். பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் இருக்கும் போதே அதை நன்கு செயல்படும்படிச் செய்தால் 20,000 ஏக்கர் நன்செய்க்கு அது உதவியாக இருக்கும். அதனால் உற்பத்தியும் பெருகும், லாபமும் ஏற்படும் என்று கூறிக்கொண்டு அதையும் நல்ல முறையில் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கொடிக்கால் தொழில் செய்யும் தொழிலாளர்கள் திடீரென்று பயிர்களுக்கு சிக்கு ஏற்பட்டோ, காற்று அடித்தோ ரொம்பவும் பாதிக்கப்படுகிறார்கள். அவர்கள் ஏழை மக்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு பகுதி மானியமாகவும், ஒரு பகுதி கடனாகவும், அவர்களையும் விவசாயிகளாகக் கருதி, அவர்களுக்கு உதவி செய்யவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் பகுதியிலே காட்டுப்புத்தூரில் வாழைகள் அதிகமாக இருக்கின்றன. திடீரென்று அவைகளுக்கு நோய்கள் ஏற்பட்டுப் பல விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். அந்தப் பகுதியில் ஏராளமான விவசாயிகள் இருக்கிற காரணத்தினால் அங்கு ஒரு விவசாய ஆராய்ச்சிப் பண்ணையை ஏற்படுத்தும்படி இந்த மன்றத்தின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த 1967-68-ம் ஆண்டு வரவு-செலவு அறிக்கையை என் தொகுதி மக்கள் சார்பாகவும் என் சார்பாகவும் வரவேற்று, வாழ்த்தி என் உரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

**திரு. தா. விஜயராஜ் :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, 1967-68-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த வரவு-செலவுத் திட்டத்தின் மீதான விவாதத்திலே விவசாயத் துறையைப்பற்றி மிகவும் சிரத்தையாக எல்லா அங்கத்தினர்களும் கருத்துத் தெரிவித்தார்கள். விவசாயத் துறையிலே புன்செய் நிலங்களுக்கு வரி விதிப்பை இந்த சர்க்கார் ரத்து செய்ததை வரவேற்றாலும், அந்த நஷ்டத்தை ஈடு செய்யும் முறையில் மற்ற பணப்பயிர் செய்யும் விவசாயிகளிடமிருந்து வசூல் செய்யும்படியான திட்டத்தைக் கொடுத்தது ஏமாற்றத்தைக் கொடுக்கிறது. காரணம், இன்றைய சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கிற கொள்கை என்ன என்றால் மக்களுக்கு விலைவாசி ஏற்றத்தைக் குறைக்கவேண்டும் என்பதால்தான்.

[திரு. தா. விஜயராஜ்] [1967 ஜூன் 26

அடுத்தபடியாக, ரூபாய்க்கு ஒரு படி அரிசி விதம் தமிழ்நாட்டில் கொடுக்க உறுதி கூறியிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு வேண்டிய சாதனங்கள், உர வகைகள், மற்ற விவசாயக் கருவிகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கும்படி இந்த மன்றத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம் ஆடம்பரப் பொருள்கள் மீது வரியை அதிகரிக்கும் சர்க்கார், விவசாயிகள் உபயோகிக்கும் படியான உர வகைகள், பம்ப் செட்டுகள், மற்றும் பல பொருள்கள் மீது வரிகளைக் குறைத்தால் விவசாயச் செலவு குறைந்து அவர்களுக்கும் உற்சாகம் ஏற்பட்டு விவசாயத்திலே அக்கறை செலுத்துவார்கள். இன்றைக்கு இருக்கும்படியான நிலை என்ன என்றால், கிராம மக்கள் நகரத்தை நாடி வரும்படியான நிலைமையைத்தான் பார்க்கிறோம். காரணம் நகர மக்கள், ஒரு சிறு கடையை வைத்திருந்தாலும், பங்க் கடை வைத்திருந்தாலும் நல்ல முறையில் வாழுகின்றார்கள். பத்து ஏக்கர் நிலம் வைத்திருந்தாலும் பங்க் கடை வைத்திருப்பதன் மூலம் கிடைக்கும் வருவாயைக்கொண்டு அமைத்துக் கொள்ளும் அளவுக்கு வாழ்க்கை நிலையை அமைத்துக் கொள்ள முடியவில்லை என்ற ஏக்கம் கிராம மக்களிடத்தில் இருக்கிறது. இந்தக் குறையைத் தீர்க்க வேண்டுமென்றால், விவசாய வருமான வரி ஏற்கனவே கம்பவுண்டிங்காக இருந்ததைத் தொடர்ந்து நீடிக்கும் முறையில் இந்தச் சர்க்கார், இது எதிர்க்கட்சி வாதம் என்று எடுக்காமல், பரிசிலனை செய்யவேண்டும். இன்று வியாபாரிகள் தங்கள் கணக்குகளைத் தப்பான முறையில் எப்படியோ காண்பிக்க வேண்டும் என்ற நிலைமையானது அவர்கள் மத்தியில் இருக்கிறது. உலகத்திலேயே சுதந்திரமாக இருக்கக் கூடிய ஒரே தொழில் விவசாயத் தொழில். அதிலேயும் களங்கம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

விவசாயிகளுக்கு முக்கியமாக வேண்டியது மின்சார இணைப்பு. என்னுடைய தொகுதியிலே பெண்ணாத்தூர் பிளாக்கில் நூற்றுக் கணக்கான மின்சார பம்ப் செட்டுகளுக்கு இணைப்புகள் கொடுக்காமல் இருப்பதால் விவசாயிகள் வேதனைப்படுகிறார்கள். மேலதிகாரிகளைச் சென்று பார்க்கும்போது, அவர்கள் கம்பங்கள் இல்லை என்று சொல்லுகிறார்கள். இப்போது சிமெண்ட் கண்ட்ரோல் இல்லை. இரும்பு கண்ட்ரோல் இல்லை. இவைகளெல்லாம் நல்ல விதத்தில் கிடைக்கும் சமயத்தில் கிராம மக்கள் வேண்டுமென்று மின்சார இலாகாவுக்கு மனுப் போட்டவுடனேயே இலாகாவினர் மின்சார இணைப்பை வாங்கிக்கொள்ளவேண்டுமென்று வற்புறுத்தும் நிலைமைக்கு வரவேண்டும்.

அடுத்தபடியாக, கல்வியிலே இந்தச் சர்க்கார் காட்டிய அக்கறை வரவேற்கிறேன். என் பகுதியில் சென்ற ஆண்டு ஒரு கலைக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. அது நல்ல முறையில் செயல்பட்டு வந்திருக்கிறது. இந்த ஆண்டு பட்டப்படிப்புக்காக யுனிவர்சிடி கமிஷன் வந்து எல்லாவிதமான சிபாரிசுகளையும் அனுப்பியும் இன்றைய தேதி வரையிலே பட்டப்படிப்புக்கு உத்தரவு வராமல்



1967 ஜூன் 26] [திரு. தா. விஜயராஜ்]

மக்கள் பீதி அடைந்து இரண்டு தினங்களாக சென்னை நகருக்கு வந்துகொண்டிருக்கிறார்கள். நல்ல இடமாக இருந்தும் ஏன் புறக்கணிக்கப்பட்டது என்று தெரியவில்லை. அரசாங்கம் உடனடியாகத் தலையிட்டு இந்த நிலைமையை கவனித்து பட்டப்படிப்புக்காக வசதியைச் செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அதிக அதிகாரங்களை இந்தச் சபை கொடுக்கும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் எந்த விதமான புது அதிகாரங்களும் கொடுத்ததாகத் தெரியவில்லை. ஸ்தல ஸ்தாபனங்களுக்கு உள்ள அதிகாரம் குறைவு. அதிகப்படியான அதிகாரங்களைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் நகரத்திலே பல மருத்துவ மனைகளில் இரண்டு மூன்று ஆண்டுகளாக மருத்துவ அதிகாரிகள் இல்லாத குறை இருப்பதால் அதை உடனடியாக கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. மலைச்சாமி)**: இத்துடன் மன்றத்தின் இன்றைய மாலை நிகழ்ச்சிகள் முடிவடைகின்றன. மறுபடியும் பேரவை நாளை காலை 9-00 மணிக்குக் கூடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது. V211,31 N67 பி.ப. 6-17

## 4. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

N67.2.7

202. *Notification issued with G.O. Ms. No.* 1113, *Public (Tamil Development I), dated 28th April* 1967, *regarding introduction of Tamil in respect of all official communications from certain offices under the Director of Agriculture specified in the notification.* [*Laid on the Table of the House under section* 6 *of the Madras Official Language Act,* 1956. (*Madras Act XXIX of* 1956.)]

### B. Reports, Notifications and Other Papers.

* 50. Annexure to the Madras General Sales Tax (Amendment) Bill, 1967 (L.A. Bill No. 6 of 1967).

† 51. The Madras Motor Vehicles Taxation (Amendment) Bill, 1967 (L.A. Bill No. 7 of 1967).

65005

* Placed on the Table of the House on 24th June [illegible]
† Despatched to Members on 4th June 1967.